
# Social Studies Class-VII







Government of Telangana
Department of Women Development & Child Welfare - Childline Foundation
When abused in or out of school.
To save the children from dangers and problems.
CHILD LINE 1098 NIGHT & DAY
24 HOUR NATIONAL HELPLINE
When the children are denied school and compelled to work.
When the family members or relatives misbehave.
1098 (Ten...Nine...Eight) dial to free service facility.



IN ANY EMERGENCY
DIAL
100
TELANGANA POLICE
www.tspolice.gov.in
@ Telangana State Police

State Council for Educational Research and Training, Telangana, Hyderabad

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

சமூக அறிவியல் வகுப்பு - VII

# Social Studies

# சமூக அறிவியல்

Free

## CLASS VII (TAMIL MEDIUM)



வெளியீடு
தெலங்கானா மாநில அரசு
ஐதராபாத்



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

SCERT TELANGANA

# CHILDREN'S BILL OF RIGHTS

***A child is every person under the age of 18 years. Parents have the primary responsibility for the upbringing and development of the child. The State shall respect and ensure the rights of the child.***

- I have the Right to express my views freely, which should be taken seriously, and everyone has the Responsibility to listen to others. [Article-12,13]
- I have the Right to good health care and everyone has the Responsibility to help others get basic health care and safe water. [Article- 24]
- I have to Right to good education, and everyone has the Responsibility to encourage all children to go to school [Article- 28,29,23]
- I have the Right to be loved and protected from harm and abuse, and everyone has the Responsibility to love and care for others. [Article-19]
- I have the Right to be included whatever my abilities, and everyone has the Responsibility to respect others for their differences. [Article- 23]
- I have the Right to be proud of my heritage and beliefs, and everyone has the Responsibility to respect the culture and belief of others. [Article- 29,30]
- I have the Right to safe and comfortable home and everyone has the Responsibility to make sure all children have homes. [Article- 27]
- I have the Right to make mistakes, and everyone has the Responsibility to accept we can learn from our mistakes. [Article- 28]
- I have the Right to be well fed and everyone has the Responsibility to prevent people starving. [Article- 24]
- I have the Right to a clean environment, and everyone has the Responsibility not to pollute it. [Article- 29]
- I have the Right to live without violence (verbal, physical, emotional), and everyone has the Responsibility not to be violent to others. [Article- 28, 37]
- I have the Right to be protected from economic exploitation, and everyone has the Responsibility to ensure that no child is forced to work and is given a free and secure environment. [Article- 32, 34]

These rights and responsibilities are enshrined in the United Nations Convention on the Rights of the Child, 1989. It contains all the rights which children and young people have all over the world. The Government of India signed this document in 1992.

## கற்றலின் வெளிப்பாடுகள்

**சமூக அறிவியல்**

**ஏழாம் வகுப்பு**

### மாணவர்கள் இவற்றை கற்றுக்கொள்வர்.....

- வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை பேரிடரின்போது மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவரிப்பர். இயற்கை பேரிடருக்கான காரணங்களை விவரிப்பர்.
- காகதீய, முகாலய மற்றும் விஜய நகர மன்னர்களின் ராணுவ மற்றும் நிர்வாக முறைகளை விவரிப்பர்.
- கோவில்கள், மசூதிகள் மற்றும் கல்லறைகள் போன்றவற்றின் கட்டுமானங்களில் பின்பற்றபட்ட தொழில்நுட்பம் மற்றும் பாணிகளில் உண்டான வளர்ச்சிகளை விவரிப்பர்.
- பல்வேறு மத இயக்கங்களின் தோற்றத்திற்கான காரணங்களை பகுத்தறிவர்.
- அவர்களுடைய சட்ட மன்ற தொகுதியை மாநில வரைபடத்தில் குறித்து காட்டுவர்.
- வரைபடங்களை வகைபடுத்தி, அவற்றின் பயன்களை விவரிப்பர்.
- உயரமான தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களின் வேறுபாடுகள் காட்டும் பட்டியலை தயாரிப்பர்.
- நீர் சுழற்சியை குறித்து விவரித்து கூறுவர்.
- மீனவர்களின் வாழ்க்கை நிலைமைகள் குறித்து தங்கள் எண்ணங்களை பிரதிபலிப்பர்.
- ஐரோப்பிய நதிகளின் விவரங்களை சேகரித்து, பட்டியல் தயாரிப்பர்.
- ஆப்பிரிக்க பாலைவனங்களை வரைபடத்தில் குறித்து காட்டுவர். அவற்றை குறித்து விவரித்து கூறுவர்.
- குழந்தை தொழிலாளர் முறை குறித்து கையேடு தயாரிப்பர்.
- தொழிற்புரட்சியால் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களை பகுத்தாய்வு செய்வர்.
- 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள் குறித்து பகுத்தாய்வு செய்வர்.
- மாநில சட்டமன்றத்தின் சட்டங்கள் இயற்றும் போது பின்பற்றபடும் வழிமுறைகளை விவரிப்பர்.
- செங்கல் ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமைகளை விவரித்து கூறுவர்.
- கோவில்கள் இடிக்கப்படுதல் குறித்து தங்களின் மன எண்ணங்களை பிரதிபலிப்பர்.



SCERT TELANGANA

# சமூக அறிவியல்
## ஏழாம் வகுப்பு

# SOCIAL STUDIES
CLASS - 7


### பதிப்பாசிரியர்கள்

திரு.C.N.**சுப்பிரமணியம்,**
ஏகலவ்யா, MP

பேராசிரியர்.G.O.**ஓம்கர்நாத்,**
பொருளாதாரத்துறை, ஐதராபாத்
பல்கலைக்கழகம், ஐதராபாத்

பேராசிரியர்.I.**லட்சுமி,**
வரலாற்றுத்துறை, உஸ்மானியாப்
பல்கலைக்கழகம், ஐதராபாத்.

பேராசிரியர்.S.**பத்மஜா,**
பூகோளத்துறை, உஸ்மானியாப்
பல்கலைக்கழகம், ஐதராபாத்.

Dr.M.V.**சீனிவாசன்,**
உதவிபேராசிரியர், DESSH, NCERT
புதுடில்லி

Dr.K.**நாராயணரெட்டி,**
உதவிபேராசிரியர், பூகோளத்துறை,
உஸ்மானியாப் பல்கலைக்கழகம், ஐதராபாத்

Dr.M.V.S.**பிரசாத்,**
DESSH, NCERT புதுடில்லி

திரு.K.**சுரேஷ்,**
மஞ்சி புஸ்தகம், ஐதராபாத்

Dr. C.**தயாகர் ரெட்டி,**
இணைப்பேராசிரியர், பெண்கள்
பல்கலைக்கல்லூரி, கோடி ஐதராபாத்

திரு.**ராமமூர்த்தி சர்மா,**
கல்வித்துறை, பங்சாப்அரசு

திருமதி.K.**பாக்யலட்சுமி,**
மஞ்சி புஸ்தகம், ஐதராபாத்

திரு.அலெக்ஸ்.M.**ஜியார்ஜ்,**
ஏகலவ்யா, M.P.

### பாடநூல் வளர்ச்சிக் குழு

திருமதி.B.**சேஷுகுமாரி**
இயக்குனர்
SCERT ஐதராபாத்

Dr. N.**உபேந்தர்ரெட்டி**
பேராசிரியர், C&T துறை,
SCERT ஐதராபாத்

திரு.B.**சுதாகர்**
இயக்குனர், அரசுபாடநூல்
அச்சகம், ஐதராபாத்



தெலங்கானா மாநில அரசு வெளியீடு, ஐதராபாத்


சட்டத்தை மதிக்கவும்
உரிமைகளைப் பெறவும்

கல்வியால் உயர்வோம்
மென்மையாய் நடக்கவும்




தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21



SCERT TELANGANA

© Government of Telangana, Hyderabad.

*First Edition 2013*

*New Impressions 2014, 2015, 2016, 2017, 2018, 2019, 2020*

All rights reserved.

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser.

The copy right holder of this book is the Director of School Education, Hyderabad, Telangana.
We have used some photographs which are under creative common licence. They are acknowledge at the end of the book.

This Book has been printed on 70 G.S.M. S.S. Maplitho,
Title Page 200 G.S.M. White Art Card

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21

*Printed in India*
at the Telangana Govt. Text Book Press,
Mint Compound, Hyderabad,
Telangana.

SCERT TELANGANA

## எழுத்தாளர்கள்

Dr. K. **லட்சுமரெட்டி,** விரிவுரையாளர், DIET கரீம்நகர்

திரு. M. **நரசிம்மரெட்டி,** H.M. ZPHS பெத்தசங்கம்பள்ளி, கடப்பா

திரு. K. **லட்சுமிநாராயணா,** விரிவுரையாளர் DIET கிருஷ்ணா

திரு. K. **சுப்பிரமணியம்,** விரிவுரையாளர் DIET கர்நூல்

திருமதி. T.S. **மல்லேஸ்வரி,** விரிவுரையாளர் SIET ஐதராபாத்

திரு. K. **சீனிவாசராவ்,** S.A., M.P.U.P.S. P.R.பள்ளி, ஸ்ரீகாகுளம்

திரு. U. **ஆனந்த்குமார்,** S.A. ZPHS பாத்தபலவஞ்சா, கம்பம்

திரு. B. **சீனிவாசு,** S.A., ZPHS சாவெல், நிஜாமாபாத்

திரு. S. **இரகமதுல்லா,** SA ZPHS பகாராபேட்டா, கடப்பா

திரு. C. **ராதாகிருஷ்ணா,** SA ZPHS வெங்கடாப்புரம், ஸ்ரீகாகுளம்

திருமதி. B . **சரளா,** SA, ZPHS, இந்துகுருபேட், நெல்லூர்

திரு. B. **சங்கர்ராவ்,** SA, ZPHS தேவுப்பள்ளி, விஜயநகரம்

## ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. J. **ராகவுலு,** பேராசிரியர் SCERT ஐதராபாத்

திரு. M. **பாப்பையா,** விரிவுரையாளர் SCERT ஐதராபாத்

திரு. S. **விநாயக்,** பாடநூல் துறை SCERT ஐதராபாத்

திரு. M. **நரசிம்மரெட்டி,** H.M. ZPHS பெத்தசங்கம்பள்ளி, கடப்பா

திரு. K. **சீனிவாசராவ்,** S.A. M.P.U.P.S., P.R. பள்ளி, ஸ்ரீகாகுளம்

## தமிழாக்கம்

### ஒருங்கிணைப்பாளர்

திரு. **கே. சிட்டிபாபு,** முதல்வர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

### மேற்பார்வையாளர்

திரு. **பி.எஸ். தங்கமணி,** விரிவுரையாளர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

### தொகுப்பாளர்

திரு. **டி. ஜான் டல்லஸ்,** SA (S.S), ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

### மொழிபெயர்ப்பாளர்கள்

திரு. **ஆர்.கே.ஏழுமலை,** SA (S.S), PCNGHS, நகரி, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி

திருமதி. **எம்.மீரா,** SA (S.S), ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

திரு. **இ.ஜி.சதாசிவம்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

திரு. **எஸ்.என்.ஆறுமுகம்,** SA (ஆங்கிலம்) ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

திரு. **கே.டி.முருகப்பன்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

திரு. **என்.எஸ்.உலகநாதன்,** SA (ஆங்கிலம்) ZPHS, புத்தூர், புத்தூர் மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

திரு. **D. ராஜசேகரன்,** SA (S.S), ZPHS, சிந்தலபட்டடை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி

SCERT TELANGANA

# மாணவர்களுக்கு ஓர் கடிதம்

“நாள் முழுவதும் வயலிலும், வீட்டிலும் வேலை செய்த களைப்பில் ஓய்வெடுக்கும் தம் தாயைப் பார்த்து, பெண்களுக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் என மனம் வருந்தினேன். சமுதாயத்திலும் பல்வேறு இன மக்களைக் கண்டபோது அவர்களிடையே நிகழும் மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளைக் கண்டு வியந்தேன்.”

“நம் நாட்டு விவசாயிகளின் தன்னம்பிக்கையற்ற நிலையை செய்தித்தாளில் படித்தேன். நகர் புறங்களில் பெரிய கட்டிடங்கள், சாலைகள், கோவில்களைக் கண்டு வியந்தேன். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான குடிசைப்பகுதிகளையும் கண்டேன். அழகிய கட்டிடங்கள் இருக்கின்றபோது ஏன் குடிசைகள் அதிகமாக உள்ளன?”

“பெரியோர்கள் வாக்குரிமை, தேர்தல் முறை, நம்மை ஆளும் தலைவர்கள் ஆகியவற்றைப் பற்றி கலந்துறையாடுவார்கள். இவற்றைக் கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். அக்காலத்தில் புனிதர்களும், கடவுள்களும் அரசர்களோடும் மக்களோடும் ஒன்றாக வாழ்ந்தனர் என்பதை கேட்டு ஆச்சரியப்பட்டேன்.”

“என்னுடைய மனதில் பல வினாக்கள் எழுகின்றன. என்னுடைய சந்தேகங்களுக்கு யாராவது பதில் கூறுவார்களா? நான் எவ்வாறு என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வது? யார் எனக்கு உதவுவர்?”

அன்பார்ந்த நண்பர்களே,

உன்னுடைய மனதில் எழுந்த வினாக்களைப் போல் அனைவருடைய மனதிலும் பல சந்தேகங்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கும் விடை கூறுவது கடினம். இவ்வினாக்களுக்கு பல்வேறு மனிதர்கள் பல்வேறு விதமாக விடை அளிப்பர். சமூக அறிவியல் பாடத்தைப் புரிந்துகொண்டால் உன்னுடைய வினாக்களுக்கு ஓரளவு விடைக்கிட்டும். கல்லூரிகளில் பெண்கள் குறைவாக இருக்க காரணம் என்ன? எனக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பதிலைக் கூறுவர். குடிசைப்பகுதிகள் ஏன் அசுத்தமாக உள்ளன? எனும் வினாவிற்கும் பல பதில்கள் கிடைக்கும். இவற்றிற்கு சமூக அறிவியல் பாடங்கள் பதிலளிக்கும்.

சமூக அறிவியல் பல்வேறு நிலைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் பதிலளிக்கிறது. இவ்வுலகம் பல மாற்றங்களை கண்டு வருகிறது. இவற்றிற்கேற்ப மக்களும் மாறவேண்டும். கல்லூரிகளில் அக்காலத்தில் குறைவான பெண்கள் இருந்தனர். தற்போது அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கல்லூரிகளுக்கு ஏன் அனுப்புவது கிடையாது? சமூக அறிவியல் பல வினாக்களுக்கு பதிலளிக்கும்.

பதிப்பாசிரியர்



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019-20

SCERT TELANGANA

# இந்நூலைப்பற்றி

சமூக அறிவியல் கலைத்திட்டத்தைப் பற்றியும், நீ வாழும் சமூகத்தைப் பற்றியும் இந்நூல் விவரிக்கின்றது. இந்நூல் பல வினாக்களுக்கு விடையளிக்கிறது. நீயும், உன் நண்பர்களும் உன் பள்ளிக்கு வெளியே உள்ள சந்தை, பஞ்சாயத்து அலுவலகம், நகராட்சி அலுவலகம், வயல்வெளிகள், கோயில்கள் மற்றும் அருங்காட்சியங்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். விவசாயிகள் முதலாளிகள், அதிகாரிகள், சாமியார்கள், போன்ற பல்வேறு மக்களுடன் கலந்துரையாடுங்கள்.

உன்னுடைய பல பிரச்சனைகளுக்கு இந்நூல் ஓர் தீர்வாய் அமையும். இந்நூல் முழுமையாய் பதிலளிக்காவிட்டாலும் மறைமுகமாக உதவிபுரியும். உனக்குப் புரியாத பல வினாக்களுக்கு உன்னுடைய நண்பர்கள் அல்லது ஆசிரியர்கள் அல்லது பெரியோர்கள் விடையளிப்பர்.

மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது. மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் தேவைகள். சமத்துவமின்மை வழிபாட்டு முறைகள், கலாசார முறைகள் ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது.

மலைகள், சமவெளிகள், நதிகள், கடல்கள் ஆகிய பாடக்கருத்துகளை இப்பாடநூல் மூலம் கற்கலாம். இந்நூலில் பல செயல்கள் வழங்கப்பட்டுள்ளன. இச் செயல்கள் மூலம் உன்னுடைய வினாக்களுக்கு நீயே பதில் பெறலாம்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பல செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இச் செயல் திட்டங்களைத் தனியாகவோ, குழுவாகவோ செய்வதால் உன்னுடைய திறன்கள் அதிகரிக்கப்படும். இப்பாடநூலை நீ முழுமையாக புரிந்து கொண்டு உன்னுடைய வாழ்வில் சிறக்க வழிவகுத்துள்ளோம்.

திருமதி. சேஷுகுமாரி
இயக்குனர்
SCERT ஐதராபாத்



SCERT TELANGANA

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## முன்னுரை

இந்தியாவின் மக்களாகிய நாங்கள், இந்தியாவை முழு உரிமை கொண்ட, சோஷியலிச, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்க உள்ளார்வமுடன் அனைத்து குடிமக்களுக்கும்;

**நீதி** : சமூக பொருளாதார அரசியல்

**சுதந்திரம்** : எண்ணம், வெளிப்படுத்துதல், நம்பிக்கை வழிபாடு.

**சமத்துவம்** : வாய்ப்பு, நிலை மற்றும் அனைவரிடமும் ஏற்படுத்துதல்.

**சகோதரத்துவம்** : தனிமனிதரிடம் ஏற்படுத்துதல் மற்றும் தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதலுக்காக நம்முடைய அரசியலமைப்பு சட்டத்தின் 1949 நவம்பர், 26-ஆம் நாளாகிய இன்று, இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை ஏற்று, சட்டமியற்றி, எங்களுக்கு நாங்களே அளித்துக் கொள்கின்றோம்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் துணைப்பிரிவு [42வது சட்டத்திருத்தம்] சட்டம், 1976, பிரிவு 2, "முழு உரிமைக் கொண்ட மக்களாட்சி, குடியரசு" (3.1.1977 முதல் நடைமுறைக்கு வந்தது)

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் துணைப்பிரிவு [42வது சட்டத்திருத்தம்] சட்டம், 1976, பிரிவு 2, "நாட்டின் ஒற்றுமைக்காக" (3.1.1977 முதல் நடைமுறைக்கு வந்தது)



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21

## பொருளடக்கம்


| | பக்க எண் | பிரிவேளைகள் | மாதம் |
|---|---|---|---|
| **கருத்து : 1 பூமியில் வேற்றுமைகள்** | | | |
| 1. பல்வேறு வரைபடங்களை படித்தல் | 1-6 | 5 | ஜூன் |
| 2. மழை மற்றும் நதிகள் | 7-21 | 8 | ஜூன் |
| 3. ஏரிகளும் நிலத்தடி நீரும் | 22-32 | 5 | ஜூலை |
| 4. பெருங்கடல்களும் மீன் பிடித்தலும் | 33-41 | 5 | ஜூலை |
| 5. ஐரோப்பா | 42-57 | 8 | ஜூலை |
| 6. ஆப்ரிக்கா | 58-68 | 8 | ஆகஸ்ட |
| **கருத்து – 2 உற்பத்தி பரிமாற்றம் மற்றும் வாழ்வாதாரம்** | | | |
| 7. கைவினைப்பொருட்களும் கைத்தறிகளும் | 69-77 | 7 | ஆகஸ்ட் |
| 8. தொழிற் புரட்சி | 78-85 | 6 | ஆகஸ்ட் |
| 9. தொழிற்சாலையில் உற்பத்தி – ஒரு காகித ஆலை | 86-94 | 5 | செப்டம்பர் |
| 10. போக்குவரத்து அமைப்பின் முக்கியத்துவம் | 95-100 | 5 | செப்டம்பர் |
| **கருத்து – 3 அரசியல் முறைகளும் அரசு நிர்வாகமும்** | | | |
| 11. புதிய அரசர்களும், இராஜ்ஜியங்களும் | 101-109 | 7 | செப்டம்பர் |
| 12. காகதீயர்கள் – வட்டார இராஜ்ஜியங்களின் தோற்றம் | 110-116 | 6 | அக்டோபர் |
| 13. விஜய நகர மன்னர்கள் | 117-125 | 6 | நவம்பர் |
| 14. முகலாயப் பேரரசு | 126-134 | 6 | நவம்பர் |
| 15. இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசு நிறுவப்படுதல் | 135-146 | 6 | நவம்பர் |
| 16. மாநில சட்டமன்றத்தில் சட்டங்களை இயற்றுதல் | 147-157 | 5 | டிசம்பர் |
| 17. சட்டங்களை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துதல் | 158-164 | 4 | டிசம்பர் |
| **கருத்து – 4 சமூக அமைப்பும் சமச்சீரின்மையும்** | | | |
| 18. ஜாதி வேறுபாடு மற்றும் சமத்துவத்திற்கான போராட்டம் | 165-171 | 6 | ஜனவரி |
| 19. நகர்புற தொழிலாளிகளின் வாழ்க்கைமுறை மற்றும் போராட்டம் | 172-180 | 6 | ஜனவரி |
| **கருத்து – 5 மதமும் சமூகமும்** | | | |
| 20. நாட்டுப்புற மதம் | 181-187 | 9 | பிப்ரவரி |
| 21. கடவுளை வழிப்படுவதற்கான பக்தி வழிகள் | 188-196 | 6 | பிப்ரவரி |
| **கருத்து – 6 கலாச்சாரம் மற்றும் தகவல் தொடர்வு** | | | |
| 22. அரசர்களும் கட்டிடங்களும் | 197-207 | 8 | பிப்ரவரி |
| திருப்புதல் | | | மார்ச் |
| ஆண்டுத்தேர்வு | | | |


SCERT TELANGANA

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்த் குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2020-21

SCERT TELANGANA

பாடம்

1

# பல்வேறு வரைபடங்களை படித்தல்

நாம் வாழும் பூமியானது பல வேறுபாடுகளை உடையது. மலைகள், குன்றுகள், கடற்கரைகள், பாலைவனங்கள், காடுகள் மற்றும் பனி மலைகளால் ஆனது. பூமியில் ஏன் இத்தனை வேறுபாடுகள்? இப்பகுதியில் வாழும் மக்கள் மீது ஏன் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன? இவ்வாறான பல விளைவுகளைப் பற்றி தெரிந்துகொள்ள பல வரைபடங்களை கவனிக்க வேண்டும். உயரமான, தாழ்வான பகுதிகளையும், அதிகம் மழை பொழியும் இடத்தையும், குறைவாக மழை பொழியும் இடத்தையும், வெப்பமான பகுதியையும், குளிர் பகுதியையும், விவசாய விளை நிலங்களையும், காடுகளின் வகைகளையும் பல்வேறு வரைபடங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். இவற்றை படிப்பதன் மூலம் பல இடங்களைப் பற்றி அறியலாம்.



படம். 1.1. கர்நாடகாவின் மேற்கு தொடர்ச்சி மலையில் பசுமை மாறாக் காடுகள்



படம் 1.2. தென் அமெரிக்காவின் பிரேஜிலில் உள்ள கோகனா கடற்கரை



படம் 1.3. ஆபிரிக்காவின் லிபியா நாட்டிலுள்ள சகாரா பாலைவனத்தின் பாலைவனச் சோலை



படம் 1.4. பனி படர்ந்த அண்டார்டிகா கண்டம்



SCERT TELANGANA

பள்ளியில் உள்ள வரைபட புத்தகத்தை (Atlas) பாருங்கள். அதில் பல்வேறு வரைபடங்கள் உள்ளன. நீங்கள் படித்து புரிந்துகொள்ளும் பல்வேறு வரைபடங்களை பட்டியலிடுக. சில சராசரி வரை படங்களைப் பற்றி கடந்த வகுப்பில் கண்டோம். இவ்வகுப்பில் வரைபடங்களின் பல்வேறு வகைகளைக் காணலாம். முதலாவதாக, கடந்த ஆண்டு நாம் கற்றதைப் பற்றி நினைவு கூர்வோம்.

- இந்திய வரைபடத்தை வகுப்பறையில் தொங்கவிடுக. அதை கவனித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.
    - i. அனிதா ஐதராபாத்திலிருந்து போபாலுக்குச் சென்றாள் எனில், அவள் எந்த திசையை நோக்கி பயணித்தாள்?
    - ii. அசோக் லக்னோவிலிருந்து சென்னைக்குச் சென்றான் எனில், அவன் எந்த திசையை நோக்கி பயணித்தான்?
    - iii. ரெஜினா மும்பையிலிருந்து புவனேஸ்வர் நோக்கி பயணித்தாள் எனில், அவள் பயணிக்கும் திசை எது?
    - iv. ராமன் கோஹிமாவிலிருந்து ஜெய்பூருக்குச் சென்றான் எனில், அவன் எந்த திசையை நோக்கி பயணித்தான்?
- இவ்வாறு பல வினாக்களைக் கேட்டு பதில் பெறவும்.
- தெலங்கானா வரைபடத்தில் உள்ள குறியீடுகளைக் காண்க. தெலங்கானாவின் எல்லைகளை கண்டுபிடி. எல்லைகளை உங்கள் விரலால் நகர்த்தி குறிப்பிடவும்.
- தெலங்கானாவின் எல்லைகளையும் இந்தியாவின் எல்லைகளையும் குறிப்பிடுக.
- தெலங்கானாவின் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை குறிப்பிடுக.
- அளவுகளை மையமாகக்கொண்டு வரைபடத்தை அளவிடும் முறையை ஆறாம் வகுப்பில் கற்றீர்கள். இப்பொழுது ஐதராபாத்திலிருந்து பல மாநிலங்களின் தலைநகரங்கள் எத்தனை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளன என கணக்கிடவும் (ஐதராபாத்திலிருந்து ஜெய்பூர், இம்பால், காந்திநகர் மற்றும் திருவனந்தபுரம்.)
- நம் நாட்டின் அனைத்து மாநில எல்லைகளை மற்றும் அண்டை நாடுகளின் எல்லைகளையும் குறிப்பிடுக.

## குறியீடுகள் :

**புள்ளி, வரி, பகுதி** : – வரைபடத்தில் பல பகுதிகளைக் காட்ட நாம் குறியீடுகளை பயன்படுத்த வேண்டும் என ஆறாம் வகுப்பில் படித்தோம்.

வரை படத்தில் புதுடில்லியை குறிக்க (●) இக்குறியீட்டை குறிப்பிடவேண்டும். மஞ்சீரா நதியை குறிக்க (〰) வரியிடவேண்டும். இரயில் போக்குவரத்தை குறிக்க ( +++++++ ) குறியிடவேண்டும். தெலங்கானாவின் மெதக், ஐதராபாத் போன்ற மாவட்டத்தை குறிக்க அப்பகுதியை வண்ணமிடவேண்டும். இவ்வாறு வரைபடத்தை குறிக்க குறியீடுகள் மிகவும் அவசியம்.


- வரைபட குறியீட்டின் வகைகளுக்கேற்ப பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| புள்ளி | வரி | பகுதி |
|---|---|---|
| *1. டெல்லி* | *1. நதி* | *1. விளையாட்டு மைதானம்* |
| *2.* | *2.* | *2.* |
| *3.* | *3.* | *3.* |



SCERT TELANGANA

## வரைபடம்-1 : மாநிலங்கள் மற்றும் தலைநகரங்கள்




SCERT TELANGANA


## புவியியல் வரைபடங்கள் :

உங்களது அட்லஸ் புத்தகத்தில் இயற்கை வரைபடங்களை காணலாம். இதில் பூமியின் பலபகுதிகள் பச்சை, மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் இருப்பதைக் காணலாம். இவைகள் பூமியின் பல்வேறு நிலத்தோற்றங்களை (சமவெளி, மலை, பீடபூமி) குறிக்கும், மேலும் உயரமான பகுதிகளையும் காட்டும்.

ஒரு காகிதத்தில் உயரமான பகுதியை எவ்வாறு காட்டுவாய்? கீழ் உள்ளவாறு படத்தில் காட்டலாம்.

இது ஒரு படம் வரைபடமல்ல. இதில் மலைகளுக்கு அடிவாரத்தில் உள்ள கிராமம், மறைந்துள்ளது. ஆனால், வரைபடத்தில் எந்த இடத்தையும் மறைக்காமல் காட்டலாம். வரைபடத்தை இவ்வாறு வரைய முடியுமா?

வரைபடங்களில் வண்ணம் பூசுவதின் மூலம் மலைகளின் உயரத்தை காட்டலாம். இது எவ்வாறு காட்டப்படுகிறது என்பதை காணலாம்.





படம் 1.5. நிம்பூர் கிராம படம்

## நிலத்தின் மீது உயரத்தை அளத்தல் :

நிலத்தின் மீதுள்ள உயரத்தை கடல் மட்டத்திலிருந்து கணக்கிடுவர். உலகில் உள்ள அனைத்து கடல்கள் மற்றும் பெருங்கடல்கள் இணைத்துள்ளதால், அவற்றின் மேல்புறம் சமமாக கணக்கிடப்படுகிறது. கீழே உள்ள நிம்பூர் கிராமத்தின் படத்தைப் பார்த்து இக்கருத்தை புரிந்துகொள்ளுங்கள்.

நிம்பூர் கிராமம் 50 மீட்டர் உயரத்தில் உள்ளது என இப்படத்தின் மூலம் அறியலாம்.

- கடல் மட்டத்திலிருந்து எத்தனை மீட்டர் உயரத்தில் கோயில் அமைந்துள்ளது?
- கடல் மட்டத்திலிருந்து எத்தனை மீட்டர் உயரத்தில் மலையின் உச்சி உள்ளது?




படம் : 1.6 நிம்பூர் கிராமத்தின் உயரம்



SCERT TELANGANA


**வரைபடத்தின் மீது உயரத்தை காட்டுதல் :**

நிம்பூர் கிராம வரைபடத்தின் பகுதிகளை படம் 1.7ல் காண்க.

வரைபடத்தில் மூன்று விதமான உயரத்தை குறிக்கும் மண்டலங்களைக் காணலாம்.

0 லிருந்து 50 மீட்டர் உயரம்
51 லிருந்து 100 மீட்டர் உயரம்
101 லிருந்து 150 மீட்டர் உயரம்.

50 மீட்டருக்கு அதிகமாகவும் 100 மீட்டருக்கு குறைவாகவும் உள்ள உயரமான பகுதியை 51 லிருந்து 100 மீட்டர் வரை குறிப்பர். உயரங்கள் பலவண்ணங்களில் தீட்டி காட்டப்படும்.




படம் 1.7. நிம்பூர் கிராம வரைபடத்தில் உயரத்தை காட்டுதல்

- நிம்பூர் கிராம வரைபடத்தில் உயரத்தை பார்க்கவும். கடலுக்கு அருகில் உள்ள பகுதி எந்த வண்ணத்தால் காட்டப் பட்டுள்ளது?
- இவ்வரைபடத்தில் மிகவும் உயரமானப் பகுதி எந்த வண்ணத்தில் காட்டப் பட்டுள்ளது?

**உயர எல்லைக்கோடுகள் :**

இரு சமமான உயரத்தை குறிக்க வரையப்படும் கோட்டை உயர் எல்லைக்கோடு என்பர். நிம்பூர் கிராமத்தின் வழியே வரையப்பட்டுள்ள கோடு 50 மீட்டர் உயர் எல்லைக்கோடு ஆகும். இந்த உயர் எல்லைக்கோட்டின் மீதுள்ள அனைத்துப் பகுதிகளின் உயரமும் 50 மீட்டராகும். நிலப்பகுதிகளுக்கு ஏற்றவாறு இக்கோடு ஒரே சீராக இருக்காது. இது துண்டு துண்டாய் இருக்காது.


நிலப்பகுதிகளுக்கு ஏற்றவாறு, இரண்டு உயர் எல்லைக்கோடுகளின் உயரம் மாறுபடும். இக்கோட்டின் மூலம் உயரமான மற்றும் தாழ்வானப் பகுதிகளை குறிக்க முடியும்.

**உயரத்தைக் காட்டும் வரைபடத்தின் பயன்கள் :**

இவ்வரைபடத்தின் மூலம் மலையின் உயரம், பள்ளத்தாக்கின் ஆழம் ஆகியவற்றை அறியலாம். தெலங்கானா இயற்கை வரைபடத்தின் மூலம் வங்காள விரிகுடாவின் கடற்கரையின் நீளத்தை அளக்கலாம்.

நீங்கள் மேற்கு புறமாக பயணித்தால், தக்காண பீடபூமியின் குன்றுகளை அடையலாம். அவற்றின் உயரத்தை அளக்கலாம். ஆழமான மற்றும் அகலமான பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தும் கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகள் இத்தக்காண பீடபூமியை பிரிக்கின்றது.

சாலைகள் மற்றும் அணைக்கட்டுகள் காட்ட வரைபட உயரம் மிகவும் அவசியம். அசைவில்லாத நிலப்பகுதிகளுக்கிடையே சாலை




படம் 1.8

SCERT TELANGANA

அமைக்க இவ்வகை வரைபடம் உதவுகிறது. அணைக்கட்டுகளை கட்டும் போது, எவ்வளவு நீர் அப்பகுதியை ஆட்கொள்ளும் என கணக்கிட இவ்வரைபடம் உதவும்.

**சராசரி கடல் மட்டம்**

கடலின் மீது உயர்வான மற்றும் தாழ்வான அலைகள் ஏற்படுகின்றன. கடல் மட்டம் அசையாமல் இருக்காது. கடல் மட்டம் எப்பொழுதும் உயர்ந்து, தாழ்ந்து இருக்கும். இதில் எதை கடல் மட்டம் அல்லது 0 மீட்டர் நிலை எனக்கணக்கிட முடியுமா? அதற்காக, கடல் அலைகளின் உயரத்தை அளந்து, தொடர்ந்து ஏற்படும் ஒரே சீரான உயரம் கணக்கில் கொள்ளப்படும். கடல் அலையின் சராசரி உயரத்தை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கணக்கிட்டு, அதை விஞ்ஞானிகள் சராசரி கடல் மட்டம் (Mean Sea Level) (M.S.L.) எனக் கூறுகின்றனர்.


- ஒரு இரயில் நிலையத்தின் அருகில் நீ வாழ்வதாக இருந்தால், அப்பகுதியின் உயரத்தை கணக்கிடுக. அறிவிப்புப் பலகையில் குறிப்பிடவும். அவ்வுயரத்தை "__________ M.S.L.". எனக் குறிக்கவும்.

இதை உனது குறிப்பு புத்தகத்தில் எழுதிவைக்கவும்.

- 30 மீட்டர் உயரத்திற்கு கடல் நீர் அலை ஏற்பட்டால், நிம்பூர் கிராமம் நீரில் மூழ்குமா என படம் 1.6 மற்றும் 1.7ல் பார்த்துக் கூறவும்.
- கீழுள்ள படம் 1.8-ஐ திசையை பின்வரும் வினாக்களுக்கு விடையளி.
- நதி பாய்ந்தோடும் திசையை குறிக்கவும்.
- குறைந்த நிலப்பகுதியின் உயரம் _____ மீட்டரிலிருந்து _______ மீட்டர் வரை உள்ளது.
- இவ்வரைபடத்தில் இரண்டு உயரமான இடங்கள் உள்ளன. அவைகளின் உயரங்கள் என்ன?

**உனது கற்றலை மேம்படுத்துக :**

1. உலகில் உள்ள அனைத்து கடல்களின் மட்டங்களும் ஏன் சமமாக உள்ளன?(AS1)
2. கடல் மட்டம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?(AS1)
3. உயரத்தைக் காட்டும் வரைபடத்தின் பயன்கள் யாவை?(AS1)
4. உயரமான மற்றும் தாழ்வான நிலப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தின் வேறுபாடுகள் யாவை?(AS1)
5. வரைபடங்கள் மக்களுக்கு எவ்வாறு உதவியாக உள்ளது?(AS6)
6. பக்கம் 5ல் உள்ள எல்லைக் கோடுகள் என்னும் பத்தியை படித்து அதைப் பற்றி உன் கருத்தினை தெரிவி.(AS2)
7. தெலங்கானா வரைபடத்தை பார்த்து 150MSLக்கு கீழ் உள்ளமாவட்டங்களின் பெயர்களை எழுது.(AS5)




SCERT TELANGANA

பாடம் 2

# மழை மற்றும் நதிகள்



பூமியின் மீதுள்ள உயிரினங்கள் வாழ்ந்திட நீரை மிகவும் ஆதாரப்பட்டு உள்ளன. பூமியின் மேற்பரப்பை நீர் 71% சூழ்ந்துள்ளது என்று உங்களுக்கு தெரியும். பயிர்களை விளைவிக்க நாம் நீரை ஆதாரபட்டு இருக்கிறோம். ஆனால், ஆண்டு முழுவதும் ஒரே விதமாக நாம் நீரை பெறுவதில்லை. ஒரே மாதிரியான அளவு நீர் பூமியின் எல்லா பகுதிகளிலும் இல்லை. எல்லா இடங்களிலும் தரமான நீர் கிடைப்பதில்லை.

எந்தெந்த மாதங்களில் நாம் மழைப் பொழிவை பெறுகிறோம்? உங்கள் கிராமம் (அ) நகரத்தின் எந்த பகுதியில் அதிக நீர் பெறுகிறோம் எந்த பகுதியில் குறைவான அளவு நீரை பெறுகிறோம்? எந்த பகுதியில் நல்ல குடிநீரை பெறுகிறோம்? எங்கு உப்பு நீர் அல்லது கடின நீரை பெறுகிறோம்? என்பவற்றை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடுங்கள். அடுத்து வரும் பாடங்களில் நாம் நீர் கிடைத்தலில் உள்ள வேறுபாடுகள், அவற்றின் தொடர் விளைவுகள் குறித்து நாம் படிக்க உள்ளோம்.

## பிரிவு - I

### சூரியன், மேகங்கள் மற்றும் மழைப்பொழிவு

தாங்க முடியாத கோடைக் காலமான ஏப்ரல், மே, ஜுன் மாதத்திற்கு பிறகு மழைக்காலம் வருகிறது. இது சில மாதங்கள் இருக்கும். மழை எவ்வாறு பொழிகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? மழை தரும் கருமேகங்கள் எங்கிருந்து வருகின்றன என்று உங்களுக்கு தெரியுமா? வகுப்பறையில் இவை குறித்து உங்களுக்கு தெரிந்த அம்சங்கள் குறித்து கலந்துரையாடுங்கள். அல்லது யோசித்து பாருங்கள்.

**நீராவியாதல் :**

செல்வி சூரியன் உதிப்பதற்கு முன்பே எழுந்தாள். வெந்நீரில் குளித்திட, அடுப்பு பற்ற வைத்து ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி சூடாக்கினாள்.

பாத்திரத்தில் உள்ள நீர் சூடாகி, நீராவி பாத்திரத்தின் மேலே உள்ள மூடியை தொட்டது. வெளிப்புறத்தில் உள்ள குளிர்ச்சியான காற்றின் விளைவால் அது நீர்த்துளிகளாக மாறி, மூடியின் அடிப்பாகத்தில் ஒட்டியிருந்தது. அவள் மூடியை அகற்றிய போது, சில நீர்த்துளிகள் பாத்திரத்தில் விழுந்தது. இதை பரிசீலித்து பார்த்ததில் இருந்து. தண்ணீரை சூடாக்கினால் நீர் ஆவியாகிறது என்றும், நீராவி குளிர்ச்சி அடைந்தால் நீராக மாறுகிறது என்றும் தெரிந்து கொண்டாள்.


மழைப் பொழிவின் கதை நீர் ஆவியாவதில் இருந்து துவங்குகிறது. நீராவி என்றால் என்ன? நீங்கள் ஈரமான ஆடைகளை திறந்த வெளியில் உலர வைக்கும் போது சிறிது நேரத்தில் நீர்

மறைந்து, ஆடை முழுவதும் உலர்ந்து விடுகிறது. அதைப் போலவே, ஒரு தட்டில் சிறிதளவு நீரை ஊற்றி வெயிலில் வைத்தால் இரண்டு நாட்களில் முழுவதும் ஆவியாகிவிடும். ஆடையில் உள்ள தண்ணீரும் தட்டில் உள்ள தண்ணீரும் நீராவியாக மாறுகிறது. இது காற்றில் கலக்கிறது. இம்முறையை நீராவியாதல் என்பர். எனவே நீரை கொதிக்க வைக்காமலும் நீர் ஆவியாகி விடுகிறது.

பூமியின் புறப்பரப்பின் மீது பெருங்கடல்கள், நதிகள், ஏரிகள் முதலிய பல்வேறு நீர் பகுதிகள் உள்ளன. இந்நீர் நிலைளில் இருந்து தண்ணீர் நிலையாக ஆவியாகி கொண்டே இருக்கும். ஈரமான துணி உலர்வது போன்று எங்கெல்லாம் ஈரம் உள்ளதோ அங்கெல்லாம் நீராவியாதல் நிகழும். நம் உடலில் இருந்தும் மரங்கள் மற்றும் தாவரங்கள் மற்றும் மண்ணில் இருந்தும் ஆவியாதல் நிகழ்கிறது. வெப்ப நிலை அதிகரிக்கும் போது ஆவியாதலின் வேகம் அதிகரிக்கும்.

* எந்த பருவ காலத்தில் ஆவியாதல் அதிகமாக இருக்கும்? கோடைக்காலத்திலா? அல்லது குளிர்காலத்திலா?
* பகல் நேரத்தில் அதிகமாக நீராவியாதல் நடைபெறுகிறது என்று கருதுகிறாயா?
* படம் 2.1 கவனித்து, தாவரங்கள், நதிகள், பெருங்கடல்கள் மற்றும் மண் ஆகியவற்றில் மிக அதிக அளவு நீராவியாதல் எங்கு நடக்கிறது என்பதை பட்டியலிட்டு காட்டுக.
* இவற்றில் அதிகமாக எங்கு நீராவியாதல் நடைபெறுகிறது?

  கடல், தாவரங்கள், நதிகள், மண்




குளத்தில் இருந்து *படம் 2.1 நீராவியாதல்*

**மேகங்கள் மற்றும் மழை உருவாகும் விதம் :**


வெப்பத்தால் நீர் ஆவியாகி வானத்தில் மேலே சென்று அடைகிறது. அது படிப்படியாக குளிர்ச்சியடையும். பூமியின் மேல் பரப்பில் இருந்து மேலே செல்லும் போது நீராவி குளிர்ச்சி அடைகிறது. குளிர்ச்சி அடைந்த நீராவி சிறு நீர்த்துளிகளாக மாற்றம் அடைகிறது. இந்நீர்த்துளிகள் அவற்றை சுற்றிலும் உள்ள நுண்ணிய தூசுதுகள்கள் அல்லது புகை துணுக்குகளோடு கலந்து படிப்படியாக அவற்றின் அளவு பெருகும். இச்சிறு நீர் துளிகள் மேகங்களாக மாறுகின்றன.

* மேற்கண்ட கட்டத்துக்குள் நீராவி எவ்வாறு மேகங்களாக மாற்றமடைகிறது என்பதை விளக்கும் படம் வரைக. நீங்கள் வரையும் படத்தில் பூமி, ஆகாயம், மேலே செல்லும் நீராவி, குளிர்ச்சி, தூசுகள், நீர்த்துளிகள், மேகங்கள் என்னும் சொற்களால் குறித்து காட்டுக.

SCERT TELANGANA

மேகங்கள் தொடர்ந்து மேல்நோக்கி செல்லும் போது அவை குளிர்ச்சி அடைந்து அதிக அளவில் நீர்த்துளிகள் உருவாகின்றன. இந்நீர்த்துளிகள் ஒன்றோடு ஒனறு சேர்ந்து பெரும் நீர்த்துளிகளாக ஆகும். அவை பெரியவனவாக உருவாகும் போது காற்றில் இருக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே அவை கீழ்நோக்கி மழைத்துளிகளாக பொழிகின்றன.

* மழை பொழிய மேகங்கள் மேல் நோக்கி செல்ல வேண்டிய அவசியம் உள்ளது என நீங்கள் கருதுகிறீர்களா?
* பனித் துளியை நீங்கள் எப்போதாவது கவனித்தீர்களா? அது எங்கு உருவாகிறது?
* ஒரு நாளின் எந்த நேரத்தில் பனி மூட்டத்தை நீங்கள் காண முடியும்?
* எப்பருவ காலத்தில் அதிகமான பனிமூட்டம் கொண்ட நாட்களை நீங்கள் காண முடியும்?
* நீங்கள் பனிப் பொழிவை எப்போதாவது பார்த்தீர்களா? அது மழைப்பொழிவில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
* ஆலங்கட்டி மழையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?



*படம் 2.2 நீர் சுழற்சி*

**சில முக்கியமான கலைச் சொற்கள் :**

**நீராவியாதல் :** நீர் ஆவியாக மாறுவதை நீராவியாதல் என்று அழைப்பர், நீராவி தண்ணீராக மாறுவதை திரவமாதல் என்பர். காற்றின் மேல் பாகத்தில் மிதக்கும் நீர் துளிகளின் கூட்டத்தை மேகங்கள் என்பர்.

**நீர் சுழற்சி :** பெருங்கடல்களில் இருந்து நீர் ஆவியாகி, ஆகாயத்தில் மேகங்களாக உருவாகி, குளிர்ந்த காற்று பட்டவுடன் கீழ்நோக்கி மழையாக பொழிகிறது. அந்நீர் பள்ளமான பகுதிகள் நோக்கி நதிகளாக பாய்ந்து மறுபடியும் கடலோடு கலக்கின்றன. இதனையே நாம் நீர் சுழற்சி என்கிறோம்.

**ஈரம் வடிதல் :** காற்றில் உள்ள ஈரப்பதம் பல்வேறு வடிவங்களில் பூமியின் மீது விழுவதை ஈரம் வடிதல் என்பர். இவை பனிப்பொழிவு, மழை, மூடுபனி, பனித்துளி, ஆலங்கட்டி மழை போன்ற வடிவங்களில் காணப்படும்.

**ஈரப்பதம் :** காற்று மண்டலத்தில் உள்ள கண்ணுக்கு புலப்படாத நீராவியின் அளவை ஈரப்பதம் என்பர். வெப்பநிலையும், ஈரப்பதமும், மாறுபட்டு இருக்கும் போது நாம் அதிக புழுக்கத்தை உணர்கிறோம். வியர்வை விரைவாக ஆவியாவதால் நாம் பிசுபிசுப்பான நிலையை உணருகிறோம். அப்படிப்பட்ட வானிலையை புழுக்கமான நிலை என்று அழைப்பர்.

**வீசும் காற்றுகளும், மேகங்களும் :**


பூமியின் மேற்பரப்பில் எல்லா பகுதிளிலும் நீர் நீராவியாக மாறி மேகங்கள் உருவாகின்றன. இருப்பினும் பெருங்கடல்களின் மேற்பரப்பில் நீர் மிகுந்த அளவு ஆவியாகி மேகங்கள் உருவாகுதல் நிகழ்கிறது. பெருங்கடல்கள் சில ஆயிரம் கிலோ மீட்டர்கள் வரை நீரால் பரவி உள்ளது.

SCERT TELANGANA

இதன் விளைவாக பெருங்கடல்களின் மீது மிக அதிக அளவு மழை பொழிகிறது. மேகங்கள் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் பயணம் செய்து உள்நிலப்பகுதிகளில் மழையை தருகின்றன. மேகங்களை அவ்வாறு உள்நிலம் பகுதிகளுக்கு எது கொண்டு வருகிறது என்று உனக்கு தெரியுமா?

**மழைக்காலத்தில் வீசும் காற்று எந்த திசையில் இருந்து வீசுகிறது?**

இவ்வீசும் காற்றுகள் அரபிக்கடலில் இருந்து வங்காள விரிகுடாகடல் மீதாக பாய்கிறது. இவை மழையைத் தரும் மேகங்களை கொண்டு செல்கின்றன. அவை பருவக்காற்றுகள் எனப்படும். இவை தென் மேற்கு திசையில் இருந்து பாய்வதால் தென்மேற்கு பருவக் காற்றுகள் என்றழைக்கபடுகிறது. இப்பருவக் காற்றுகள் கோடைப் பருவத்தின் இறுதியில் வீசுகின்றன.




**வரைபடம் 1 : இந்தியாவில் பருவக் காற்றுகள்**

SCERT TELANGANA

இப்பருவக்காற்றுள் இரண்டு வகைப்படும். முதலாவது அரபிக்கடலில் இருந்து வீசுகின்ற பருவக் காற்றுகள். இரண்டாவதாக வங்காள விரிகுடாக் கடலில் இருந்து வீசும் பருவக் காற்றுகள் ஆகும். இந்திய வரைபடம் (1) பருவக்காற்றுகளின் வீசும் திசையை காட்டுகின்றன.

* வங்காள விரிகுடாவில் உருவான மேகங்களை வீசும் காற்றுகள் நாட்டின் எந்த பகுதிகளுக்கு எடுத்து செல்கின்றன?
* அரபிக்கடலில் உருவான மேகங்களை வீசும் காற்றுகள் நாட்டின் எந்த பகுதிகளுக்கு எடுத்துச் செல்கின்றன?
* பருவக் காற்றுகள் மேற்கு வங்காளம் டில்லி, லக்னோ பகுதிகளுக்கு பருவக்காற்று மழையை எந்த திசையில் இருந்து எடுத்துச் செல்கின்றன?
* பருவக் காற்றுகள் மும்பை, ஐதராபாத், பெங்களூர் பகுதிளுக்கு பருவகாற்று மழைகளை எத்திசையிலிருந்து எடுத்துச் செல்கின்றன?

**தெலங்கானாவில் மழைப் பொழிவு :**

* உங்கள் பகுதியில் எந்த மாதங்களில் அதிக மழை பொழியும். அதிக மழை பொழிவு கொண்ட மூன்று மாதங்களை பட்டியலிடு.
* உங்கள் பகுதியில் மிக குறைவான மழைப்பொழிவு கொண்ட மாதங்கள் யாவை? மிக குறைவான மழை தரும் மூன்று மாதங்களை பட்டியலிடு.
* ஒவ்வொரு ஆண்டும் உங்கள் பகுதியில் சாதாரண மழை பொழிகிறதா? அல்லது அது ஒவ்வொரு ஆண்டும் வேறுபடுகிறதா?
* உங்கள் பகுதியில் வறட்சி எப்போதாவது ஏற்பட்டதா? எந்த ஆண்டில் மழைப் பொழிவு குறைவாக காணப்பட்டது?
* அதிக மழை பொழிந்து வெள்ளப்பெருக்கு உண்டான ஆண்டுகள் உங்கள் பகுதியில் எப்போதாவது ஏற்பட்டதா?

தெலங்கானாவில் தென்மேற்கு பருவக்காற்று மார்ச் மற்றும் ஜுன் மாதம் துவக்கத்தில் வீசத் துவங்குகிறது. இப்பருவக்காற்றுகள் வரைபடம்(1)ல் காட்டியபடி ராயலசீமா மாவட்டங்களான சித்தூர், கர்னூல் பகுதிகளுக்கு முதலில் சேருகின்றன.

இருப்பினும் அவை மிக குறைந்த அளவு மழையை கொண்டு வருகின்றன. மேகங்களில் உள்ள ஈரப்பதம் மழையாக மேற்கு தொடர்ச்சி மலைகளில் பொழிந்து விடுவதால் உலர்ந்த மேகங்கள் மற்றும் வீசும் காற்றுகள் ராயலசீமா பகுதியை வந்தடைகின்றன.

மேற்கு தொடர்ச்சிமலைகள் போன்ற மலைத் தொடர்கள் வீசும் காற்றுகளின் பாதையில் உள்ளன. இவை தடுப்பதால் காற்று மேல் நோக்கி உயர்ந்து செல்கின்றன. உயர்ந்து செல்லும் காற்று குளிர்ந்து அதிலுள்ள நீராவி விரைவாக திரவ நிலையை அடைகிறது. அதற்கும் மேலே செல்லும் போது மழை பொழிவு உண்டாகிறது. இவ்வகை மழைப் பொழிவு மலைப்பகுதிகளில் பொதுவாக காணப்படும்.

மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை வங்காள விரிகுடாக்கடலில் புயல்கள் உண்டாகின்றன. குறைந்த காற்றழுத்த மண்டலத்தால் சுழன்று பாயும் புயலால் ஏற்படும் மழைப் பொழிவை புயல் மழைப் பொழிவு என்பர். இப்புயல்கள் கடல் பகுதிகளில் மிகவும் அதிக வெப்பநிலை, கோடை பருவங்களில் உண்டாவதால் ஏற்படுகின்றன. புயல் காற்றின் போது எல்லா திசைகளில் இருந்தும் மையத்தை நோக்கி காற்று வேகத்துடன் வீசுகின்றன. மையப்பகுதி அடைந்தவுடன் சுழன்று, மேல் எழும்பி செல்வதால் குளிர்ந்த மழையை தருகின்றன. புயல் காற்றின் மையப்பகுதி, வீசும் காற்றுடன் இணைந்து வேகமாக நகர்ந்து, கடலோர பகுதிகளில் மோதி கன மழை பெய்விக்கின்றன. வேகத்துடன் கூடிய காற்றையும் வீசுகின்றன இவை கடலோர பகுதிகளில் மழை தந்தாலும், மிகுந்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

அக்டோபர் மாத்திற்கு பிறகு வீசும் காற்றின் திசை மாறி, வங்காள விரிகுடாவில் இருந்து தென் மேற்கு பக்கமாகி வீசத் தொடங்கும். இதனால் மிதமான மழைப் பொழிவை தெலுங்கானா பகுதிகளிலும் தருகிறது. இதனை வடகிழக்கு பருவக்காற்று அல்லது பின்வாங்கும் பருகூ காற்றுகள் என்றழைப்பர்.

**சிரிசில்லா நகரின் 10 ஆண்டுகால மழைப்பொழிவு:**


| ஆண்டு | மழைப்பொழிவு in M.M | ஆண்டு | மழைப்பொழிவு in M.M |
|---|---|---|---|
| 1996 | 933 | 2001 | 763 |
| 1997 | 695 | 2002 | 605 |
| 1998 | 926 | 2003 | 819 |
| 1999 | 823 | 2004 | 619 |
| 2000 | 895 | 2005 | 891 |

Source: Tahasildar office, Sircilla

- சிரிசில்லா நகரின் சராசரி மழைப்பொழிவு என்ன?
- மேலுள்ள அட்டவணையை கவனித்து சிரிசில்லா எந்த ஆண்டில் குறைந்த மற்றும் அதிக மழைப்பொழிவை பெற்றது?
- எந்த இரு ஆண்டுகளில் அது அதிக மழைப்பொழிவை பெற்றது?



SCERT TELANGANA




வரைபடம் (2) ஆந்திர பிரதேசத்தின் ஆண்டு மழைப் பொழிவின் பங்கீடு

SCERT TELANGANA

* தெலங்கானாவின் பல்வேறு பகுதிகளில் பெறப்படும் மழைப்பொழிவை காட்டும் மேலே உள்ள வரைபடத்தை பார்த்து அறிந்து கொள்.

i. உங்களுடைய மாவட்டம் குறைந்த மழைபொழிவு (அ) மிதமான (அ) மிக குறைந்த மழை பொழிவு ஆகியவற்றில் எதை பெறுகிறது?

ii. ஒங்கோல், அனந்தபூர், அதிலாபாத், மசூலிபட்டினம், ஐதராபாத்-இந்நகரங்களில் எது மிக அதிக மழையை பெறுகிறது? எது மிக குறைந்த மழையை பெறுகிறது?

iii. இது போன்ற கேள்விகளை உருவாக்கும் படி ஒருவரை ஒருவர் கேளுங்கள்.

* உங்களது உலக பட புத்தகத்தில் இந்திய புவியியல் வரைபடத்தில் மேற்கு தொடர்ச்சி மலைகள், கிழக்கு தொடர்ச்சி மலைகளை குறித்து காட்டுங்கள்.

* மேற்கு தொடர்ச்சி மலைகள் பரவியுள்ள மாநிலங்கள் ...................

* கிழக்கு தொடர்ச்சி மலைகள் பரவியுள்ள மாநிலங்கள் ...................

* மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் எப்பகுதியில் இணைகின்றன?

* இந்திய வரைபடத்தை உன் நோட்டு புத்தகத்தில் வரைந்திடு. பிறகு கிழக்கு தொடர்ச்சி மலைகள், மேற்கு தொடர்ச்சி மலைகளை வரைக. ராயலசீமா மற்றும் தெலுங்கானாவின் பகுதிகளை குறித்து காட்டுக. அப்பகுதிகளில் எந்தெந்த மாதங்களில் மழை பொழியும் என்பதை எழுதி காட்டுக.

**மழைமானி**

மழைப் பொழிவை அளந்திடும் கருவியை மழைமானி என்பர். ஒரு பகுதியில் பெய்யும் மழையை சென்டிமீட்டர்களில் அளக்கப்படுகிறது. மழையின் அளவை எவ்வாறு அளக்கிறோம்? நிஜாமாபாத்தில் அதிக மழையா? (அ) ரங்காரெட்டியில் அதிக மழையா? என்பதை நாம் எவ்வாறு கண்டு கொள்ள முடியும்?

**உன்னுடைய சொந்தமான மழைமானியை தாயாரித்து கொள்**



*படம் 1*

*மழைமானி தயாரிக்க மேலே காட்டப்பட்ட பொருட்களை சேகரி.*



*படம் 2*

*பாட்டிலில் மேல் பகுதியை படத்தில் உள்ளபடி வெட்டு. இதனால் பாட்டிலின் மேல் பாகமும் கீழ்பாகமும் சமமாக இருக்க வேண்டும்.*



*படம் 3*

*பாட்டிலின் மேல் பாகத்தை தலைகீழாக பிடித்து பாட்டிலில் அமர்த்துக*

*படம் 4*

*பாட்டிலை மணல் மற்றும் நீரால் நீங்கள் குறித்து காட்டிய பூஜ்ஜியம் உள்ளது வரை நிரப்புக. பாட்டிலின் அடிப்பகுதி சமமாக இருப்பின் நீரை நிரப்பத் தேவையில்லை*

இப்பாட்டிலை வெளியே காலியாக உள்ள இடத்தில் வையுங்கள். மழைநீர் பாட்டிலுக்குள் விழும் போது எதுவும் தடுக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மரங்களோ அல்லது சுவர்களோ பாட்டிலுக்குள் விழும் மழை நீரை தடுக்காமல் பார்த்து கொள்ள வேண்டும். அளவு கோலை கொண்டு நீரின் மட்டத்தை அளக்கலாம். பாட்டிலை சில நாட்கள் அப்படியே திறந்த வெளியில் வைத்திருந்தால், ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் எவ்வளவு மழை பொழிந்தது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

மழை பொழியும் போது மழைமானியில் உள்ள நீரின் மட்டம் உயரும். அளவு கோலின் உதவியுடன் நீரின் மட்டத்தை அளந்திடு. மழை மானியை எத்தனை நாட்கள் நீங்கள் வைத்திருந்தீர்களோ, அத்தனை நாட்களில் உங்கள் பகுதியில் பெய்த மழை அளவை சென்டிமீட்டரில் அளந்து தெரிந்து கொள்ளலாம்.



SCERT TELANGANA

# பிரிவு -II

**நதிகளின் நீரோட்டம் :**

மழையாக பொழிந்த நீர் பூமியை அடைந்த பிறகு தண்ணீர் என்னவாகிறது? இதில் சிறிதளவு பாகம் பூமிக்குள் ஊறுகிறது. சிறிதளவு பாகம் பூமியின் மேற்பரப்பில் பாய்கின்றன. மீதமுள்ள நீர் ஆவியாகி காற்றில் கலந்து விடுகிறது. பூமிக்குள் நிலத்தடி நீராக ஊறும் நீர் குறித்து அடுத்து வரும் பாடத்தில் நீங்கள் படிக்கப் போகிறீர்கள். இப்பாடத்தில் நாம் பூமியின் மேற்பரப்பில் பாய்கின்ற நீரை குறித்து விவரமாக கற்க உள்ளோம்.

**நதிகள் :**

நீங்கள் எப்போதாவது சாய்வான நிலப்பகுதிகளில் மழைநீர், நீரோடைகளாக பாய்வதை பார்த்திருக்கிறீர்களா? மழைக் காலங்களில் மழை நீர், சாய்வான நிலப்பகுதிகளில் இருந்து சிறு நீரோடைகளாக கீழ் நோக்கி பாய்கின்றன. இந்நீரோடைகள் சில காலம் வற்றிவிடும். மலைகள் மீது பாயும் நீர் கால்வாய்களாக ஏற்படாது.


மறுபடியும் மழை பொழியும் போது நீர் அக்கால்வாய்கள் வழியே கீழ் நோக்கி பாயும். இவ்விதமாக நதியின் மார்கங்கள், நதிப் பள்ளத்தாக்குகள் ஏற்படுகின்றன. இது ஏற்படும் விதத்தை படம் 2.3ல் கவனித்து அறியலாம்.

> பாடத்தை கவனித்து, கேள்விகளுக்கு விடையளி.
>
> * நதிநீரோட்டத்தின் திசையை அம்புக் குறிகளால் குறித்து காட்டுக.
> * நிலச்சாய்வின் திசையினை அம்புக் குறிகளால் குறித்துக் காட்டுக.
> * நிலத்தின் சாய்வு திசையிலேயே நதியும் பாய்கிறதா?

**நீரோடை அகலமான நதியாக மாற்றம் அடைதல் :**

சிறு நீரோடைகள் நதிகளின் மூலாதாரம் ஆகும். துவக்கத்தில் எந்த ஒரு நதியும் மெலிதான நீரோடைகளாக இருக்கும். பல நீரோடைகள் பாய்ந்து ஒன்றாகி பெரிதாக, அகலமாக உருவெடுக்கும். இவ்வாறாக பல்வேறு சிறிய நீரோடைகள் பெரிய நதிகளோடு கலக்கின்றன. இவற்றை கிளை நதிகள் என்பர்.

நதி பெரியதாக அகலமானதாக ஏற்பட்ட பிறகு, அதன் நீரோட்டத்தின் வேகம் குறையும். இது தன்னுடன் அடித்துக் கொண்டு வந்த மணல், வண்டல் மண் முதலியவற்றை கரையோரங்களில் சேர்த்திடும். நதியின் அடிப்பகுதிகளுக்கும் சென்று சேர்கின்றன. கரையோரங்களில் சேரும் வண்டல்மண் மற்றும் மணல் படிப்படியாக மைதானங்களாக மாறுகின்றன. சென்ற வருடம் நதிச் சமவெளி மீது அமைந்திருந்த கிராமங்களை பற்றி படித்தது நினைவிருக்கின்றதா?




*படம் 2.3 சாய்வான நிலப்பகுதியும் நதிகள் உருவாகுதலும்*

SCERT TELANGANA

நதி கடலுக்கு அருகில் வரும் போது மிகவும் மெதுவாக பாயும். மணல் மற்றும் சேற்று மண்ணை அடித்துச் செல்ல முடியாது. இவை எல்லாம் அப்பகுதியில் தங்கி விடும். ஆனால் வெள்ளப் பெருக்கு நீர் வரும் போது, அது புதுப் பாதையை ஏற்படுத்திக் கொண்டு கடலில் கலக்கும். இவ்வாறு நதி தன் பயணத்தின் இறுதியில் கடலில் கலக்கும் இடத்தில் டெல்டாக்களை ஏற்படுத்துகின்றன. நம் மாநிலத்தில் இரண்டு முக்கிய டெல்டா பகுதிகள் உள்ளன. அவை கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளில் பரந்த டெல்டா பகுதிகளாகும். மாநில வரைபடத்தில் அவற்றை கவனி.

நம் மாநிலத்தல் கிருஷ்ணா, கோதாவரி என்னும் நீளமான பெரிய நதிகள் பாய்கின்றன. இவை இரண்டும் ஜீவநதிகள் ஆகும். அதாவது ஆண்டு முழுவதும் நீரை கொண்ட நதிகளாகும். இவற்றைத் தவிர மழைக் காலங்களில் மட்டும் பாயும் பல்வேறு நதிகள் உள்ளன. ஏன் இவ்வாற நிகழ்கிறது?

கிருஷ்ணா நதியும், கோதாவரி நதியும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் பிறக்கின்றன. இப்பகுதிகள் பெருமளவு மழையை பெறுபவை ஆகும். இம் மழைநீர் மெதுவாக பூமிக்குள் ஊறும். அவ்வாறு வருடம் முழுவதும் நதிகளாக பாய்கின்றன. மற்றபடி பல்வேறு நதிகள் ராயலசீமா பகுதிகளில் பிறக்கின்றன. இவற்றில் நீரோட்டம் மிக குறைவு. பென்னா நதி இது போன்றதே. மழை காலத்தின் நீரால் நீரோட்டம் கொண்டது.




SCERT TELANGANA

கிழக்கு தொடர்ச்சி மலைகளில் பிறக்கும் நதிகளும் மிதமான மழை பொழிவை பெறுகின்றன. இவற்றின் நீர் விரைவாக பாய்ந்து, கடலில் கலக்கின்றன. ஆகையால், இந்நதிகள் வற்றிவிடுகின்றன.

* வரைபடம்-3ஐ பரிசீலித்து, எந்தெந்த நதிகள், எங்கெங்கு பிறக்கின்றன என்பதை பட்டியலிட்டு எழுதுக?

| **மாவட்டம்** | **ஓடையின் பெயர்** | **இணைக்கும் நதிகள்** |
|---|---|---|
| | | |

* தெலங்கானா வரைபடத்தில் நிலச்சாய்வின் திசை எவ்வாறு உள்ளது என்று கவனி. வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாய்ந்துள்ளதா? கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாய்ந்துள்ளதா? மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சாய்ந்துள்ளதா? என விடையளி.

SCERT TELANGANA

**வெள்ள சமவெளிகள் மற்றும் வெள்ளப் பெருக்கு :**


எந்த ஒரு நதியிலும் ஆண்டு முழுவதும் ஒரே விதமான நீரோட்ட அளவு இருக்காது. மழைக் காலங்களில் நதி நீரால் நிறைந்து காணப்படும். கோடைக் காலங்களில் நீரோட்ட அளவு குறைந்து விடுகிறது. படம் 2.4 மற்றும் படம் 2.5 படங்களை பரிசீலித்து பார். நதி மிகவும் அகலமாகவும், உயரமான கரைகளையும் கொண்டுள்ளது. இந்த பள்ளதாக்கு பகுதி மணல் மற்றும் சரளை கற்களால் நிரம்பி உள்ளது. இவற்றின் நடுவே நதி, சிறு நீரோடை போன்று பாய்கிறது. இப்பகுதிகளில் மரங்கள் இல்லை என்பதை நீ கவனிக்கலாம். ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும், அதிக மழைபொழிவால் நதிப்பள்ளத்தாக்குகள் நீரால் நிரம்பி இருக்கும். சிறு செடிகளை நடுவதற்கும், பெரிய மரங்கள் இல்லாத இப்பகுதியை வெள்ளப் பெருக்கு சமவெளி என்பர். எல்லா பெரிய நதிகளுக்கும் வெள்ளப் பெருக்கு சமவெளி உள்ளன.

நமது நாட்டில் சிலப் பகுதிகளில் அதிக மழைப்பொழிவால் வெள்ளங்கள் ஏற்படுவதை பற்றி நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். கிருஷ்ணா, கோதாவரி, பிரம்மபுத்திரா, கங்கை போன்ற நதிகளில் வெள்ளப் பெருக்குகள் வழக்கமாக காணப்படுகின்றன.


படம் 2.5 வெள்ளப்பெருக்கு நிலைமையை விளக்குகிறது. அதை கவனமாக பார்த்து அறிந்து, கீழ்கண்ட கேள்விகளுக்கு விடையளி :

* நதியின் நீர் வெள்ளபெருக்கு மைதானத்தை முழுவதுமாக ஆக்கிரமித்துள்ளதா? அல்லது மழை இல்லாத காலங்களில் பாயும் சிறு கால்வாய் போன்று மட்டும் பாய்கிறதா?
* நதியின் நீர் வெள்ளபெருக்கு மைதானத்திற்கு மட்டும் உட்பட்டுள்ளதா? அல்லது நதிக்கரைகள் மீதும் பொங்கி பாய்கிறதா?
* கிராமங்கள், விவசாய நிலங்கள் மற்றும் மரங்கள் போன்றவற்றை நதி நீரின் வெள்ளப்பெருக்கு எந்த விதங்களில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது?
* வெள்ளப் பெருக்கு விவசாய நிலங்களுக்கு லாபகரமானது. வெள்ளப் பெருக்கு எவ்வாறு லாபகரமானது என்று நீ கூற முடியுமா?

நமது நாட்டில் வெள்ளப் பெருக்குகள் பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளன. நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சிலப் பகுதிகள் மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்குகளுக்கு உள்ளாகி பாதிக்கப்படுகின்றன. வெள்ளப் பெருக்கு




படம் : 2.4 வெள்ளச் சமவெளிகள்




படம் : 2.5 வெள்ளம்

மக்களுக்கும், பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் மோசமான அளவில் சேதத்தை உண்டாக்குகின்றன. வெள்ளப்பெருக்க ஏற்படாத படி எப்படிப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து அறிந்து கொண்டு, நம்மால் முடிந்த அளவு பங்காற்ற வேண்டும்.

பூமியின் மீது மரங்கள், தாவரங்கள், புற்கள் முதலியவற்றை வளர்ப்பதன் மூலம் மழை நீரின் வேகத்தை குறைக்க முடியும். இதனால் மழை நீர் மண்ணுக்குள் ஊறுவதற்கு வழி ஏற்படுகிறது. நதியில் திடீரென சேரும் அதிகப் படியான நீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட காரணமாகிறது. தாவரங்கள் நீரோட்டத்தின் வேகத்தை குறைத்து, மெதுவாக நதிக்குள் சேருமாறு செய்கின்றன. இவ்வாறாக திடீரென ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்கின்றன. அத்துடன் மழையின் நீர் அதிக அளவு மண்ணுக்குள் ஊறுமாறு செய்து உதவுகின்றன.

தாவரங்கள் வெள்ளப்பெருக்கை தடுப்பதில் மற்றொரு விதத்திலும் உதவுகின்றன. தாவரங்கள் மழை நீரால் ஏற்படும் மண் அரிப்பை குறைக்கின்றன. தாவரங்கள் மிக குறைவாகவோ (அ) இல்லாமலோ இருந்தால், மழை நீர் நிலத்தின் மேல் அடுக்கு மண்ணை தன்னுடன் அடித்துச் சென்றுவிடும். இம் மண் நதியின் அடிப்பகுதியில் படிப்படியாக சென்று சேர்ந்து விடும். இதனால் நதியின் கொள்ளளவு திறன் குறைந்து, சிறிதளவு மழை பெய்தாலும் நதிகளில் வெள்ளப் பெருக்கு உண்டாகி கரைளை தாண்டி பாய்ந்து பெருஞ் சேதத்தை ஏற்படுத்துகின்றன. நிலத்தின் மேற்பகுதி தாவரத்தால் மூடப்பட்டிருக்கம் போது, மண் அரிப்பு பெருமளவு குறைந்திடும்.

### பெருமளவில் மரம் நடுதல்

காட்டு பரப்புகள் குறைதலை தடுக்க பசுமை என்னும் பெயரால் அரசாங்கம் பல திட்டங்களை கொண்டுவந்து மண் அரிப்பை தடுக்க வழிவகுக்கிறது. தெலங்கான அரசாங்கம் பெருமளவில் மரம் நடுத-ல் முத-டம் வகிக்கிறது.

மாநிலம் முழுவதும் சுமார் 230 கோடிக்கும் மேற்பட்ட செடிகளை நட அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. மேலும் ஒவ்வொரு வருடமும் 40 லட்சம் செடிகளை ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும், சுமார் 40,000 செடிகளை ஒவ்வொரு கிராமத்திலும் நடுவதற்கு முடிவெடுத்துள்ளது. சாலையோரங்களிலும், மலைச் சரிவுகளிலும், ஏரிக்கரைகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும், அரசு நிலங்களிலும் பெருமளவில் மரங்களை நட கிராமப்புற மக்கள், அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் பங்குபெற்று வெற்றிகரமாக இந்நிகழ்ச்சியை நிறைவுசெய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது.

### மண் அரிப்பை தடுத்தல்

காடுகள் மண் அரிப்பையும், வெள்ளப்பெருக்கையும் தடுக்க உதவுகின்றன. தாவரங்களின் வேர்கள் மண்ணில் புதைந்திருப்பதால் வெள்ளப்பெருக்கின்போது உண்டாகும் நிலச்சரிவுகளை தடுக்க உதவுகின்றன. சாலைகளை அமைக்கும் போது சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலான மரங்கள் வெட்டப்படுகின்றன. எனவே மரம் நடுதல் என்பது தவிர்க்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகிறது.

இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடைமுறைப்படுத்தவும், தாவரங்களை பாதுகாக்கவும், மரங்களை நடவும் பஞ்சாயத்து தலைவர் தலைமையில் கிராமங்களில் ஹரிதரக்ஷா கமிட்டிக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சில கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- உங்கள் பள்ளியில் மரம் நட மேற்கொள்ளப்பட்ட செயல்முறைகள் சிலவற்றை கூறு?
- பெருமளவில் மரங்களை நடவேண்டிய அவசியம் என்ன?




SCERT TELANGANA

எடுத்துக்காட்டாக, கங்கை நதியை எடுத்துக் கொள்வோம். முன் காலங்களில் இமயமலை பகுதிகளில் அடர்ந்த காடுகள் இருந்தன. இங்கிருந்து தான் கங்கையும், அதன் கிளை நதிகளும் தோன்றி பாய்கின்றன. தற்போதைய காலங்களில் மரங்கள் பெருமளவு வெட்டப்பட்டதால், இமயமலையின் காட்டுப் பரப்பு மிகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக அதிக மழைப் பொழிவு ஏற்படும் சமயங்களில் மழைநீர் வெகு விரைவாக மலையின் சாய்வுப் பகுதிகள் வழியாக பாய்ந்து, வெள்ளப் பெருக்கு மைதானங்களை ஏற்டுத்துகின்றன. இம் மழைநீர் அதிக அளவில் சேற்று மண்ணை அடித்துக் கொண்டு வந்து, கங்கை நதியின் அடித்தளத்தில் சேர்த்து விடுகின்றன. இதனால் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கு நதியோர பகுதியில் வாழும் மக்களின் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பெருத்த சேதத்தை ஏற்படுத்துகிறது. இவை அனைத்தும் நமக்கு உணர்த்துவது என்னவென்றால், நாம் காடுகளை பாதுகாத்திட வேண்டும். அத்துடன் நிலப்பகுதிகளில் தாவரங்களின் பரப்பை அதிகரித்துகொள்ள வேண்டும்.

* காடுகள் மற்றும் தாவரப்பரப்புகள் எவ்வாறு வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் தடுக்க உதவுகின்றன என்பதை உன்னால் விவரித்து கூற முடியுமா?
* காடுகள் மற்றும் தாவரப்பரப்புகள் குறைந்த மழையால் ஏற்படும் வறட்சியின் பாதிப்புகளை குறைக்க முடியுமா?

**புயல்கள் மற்றும் வெள்ளப்பெருக்குகளின் போது எதிர்கொள்ளும் சவால்கள் :**

நம் மாநிலத்திற்கு நீண்ட கடலோரப்பகுதி உள்ளது. இதனால் அடிக்கடி பேரழிவை ஏற்படுத்தும் புயல்களை சந்தித்து வருகிறது. கடல் பகுதியில் இருந்து வீசும் காற்றுகள் நிலப்பகுதிகளில் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. உயரமான கடல் அலைகள் கடலோர பகுதிகளுக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன. இவை ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் நிகழக்கின்றன. நமது மாநிலத்தில் 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பயங்கர புயல் தாக்கியது. இந்திய கடலோர பகுதிகளை தாக்கிய புயல்களில் இது மிகவும் மோசமானதாக கருதப்படுகிறது. ஆறுமீட்டர் உயரமுள்ள கடல் அலைகள். கடலோரப் பகுதியில் இருந்து 100 கிராமங்களை அடியோடு நாசமாக்கியது. 9941 பேரை பலியாக்கியது. ஆகாயத்தில் இருந்து அப்பகுதிகளை பார்த்த போது. அப்பகுதிகள் வெள்ள நீரில் மிதப்பது போல் காட்சி அளித்தது. பாபட்லா என்னும் நகரில், வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்புக்காக புகலிடம் தேடி ஒரு கட்டிடத்தில் தங்கியிருந்த 100 பேர் அக்கட்டிடம் இடிந்து விழந்ததால் உயிர் இழந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கிருஷ்ணா மாவட்டத்தை சேர்ந்த தேவீசீமா என்ற பகுதியை சேர்ந்தவர்களாவர்.



படம் 2.6 வங்காள விரிகுடாவில் சூறாவளி

புயல்கள் உருவாகுதல் ஒரு இயற்கைச் செயல். இவற்றின் மீது மனித இனம் எந்தவித கட்டுப்பாடும் விதிக்க இயலாது. இது போன்ற இயற்கை பேரழிவுகளின் தாக்கம் அதிகமாவதோ (அ) குறைவதோ நமது சமுதாயம் எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதையும், இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ள தயாராகும் நிலையையும் ஆதாரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, புயல்கள் அதிகமாக நிகழும் கடலோர பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு, இவற்றை எதிர்கொள்ளும் சாதனங்கள், சாமர்த்தியம் மிக குறைவாக உள்ளது. இக்கடலோர பகுதிகளில் வாழும் மீனவர்களின் குடிசைகள் புயல் காற்றால் சிதறடிக்க படுகின்றன. நகரங்கள் மற்றும் கிராம புறங்களின் பள்ளமான பகுதிகளில் வாழும் குடிசை வாழ்பகுதி ஏழை மக்கள் புயலால் உண்டாகும் வெள்ளப் பெருக்குகளால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். சிமெண்ட் கான்கிரீட் கட்டிடங்களில் வசிப்போர் தேவையான உணவு, குடிநீர் போன்றவற்றை பல நாட்க க்கு பயன்படும் அளவு சேமித்து வைத்து கொள்ள முடியும். இவ்வாறாக பார்க்கும் போது இயற்கை சீற்றங்களால் மிகுந்த அளவு ஏழை மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. வெள்ளப் பெருக்கு வடிய தொடங்கிய பிறகு, குடிநீர் வளங்கள் அனைத்தும் மாசடைந்து குடிப்பதற்கு பயன்படாமல் போய்விடுகிறது. ஆனால் ஏழை மக்கள் தவிர்க்க முடியாத நிலைமைகளால், மாசடைந்த நீரை குடிப்பதால் காலரா, வயிற்றுப் போக்கு, மஞ்சள் காமாலை போன்ற தொற்று நோய்களுக்கு ஆளாகின்றனர். சிலருக்கு மட்டுமே சுத்திகரிக்கப்பட்ட

SCERT TELANGANA

நீரை குடிக்கும் வாய்ப்பு உள்ளது. பாதுகாக்கப்பட்ட பாட்டிலில் அடைக்கப்பட்ட நீரை ஏற்பாடு செய்து கொண்டு சிலர் பயன்படுத்துகின்றனர். அதிக மழை பொழிவால் சாலைகள் சேதமடைந்து விடும். அவற்றை சீரமைப்பது அவ்வளவு எளிதான வேலை அல்ல. புயல் நிவாரண ஏற்பாடுகள் செய்வதும் கடினமானதாக இருக்கும். இப்படிப்பட்ட பகுதிகளில் வசிப்போர் தங்களை காப்பாற்றிக் கொள்ள, அவர்களின் சொந்த வளங்களை மட்டுமே ஆதாரபட வேண்டி உள்ளது.

புயல்களால் ஏற்படும் உடனடி சேதங்கள் பெருமளவில் இருக்கும். உயிர் சேதம், பயிர்கள் நாசமடைதல், வீடுகள் அடித்துச் செல்லப்படுதல் அதிக அளவில் ஏற்படும். இவை நீண்ட கால சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக, ஏழை மக்கள் தங்கள் வாழ்க்கை தேவைகளுக்காக வீடுகளில் சேமித்து வைத்த உணவு பொருட்கள், கருவிகள், கால்நடைகள், சிறிய கடைகள், வாகனங்கள், படகுகள், வலைகள், முதலியவை நாசமாகின்றன. இவர்கள் மறுபடியும் வேலைக்குச் செல்லும் போது இவற்றை எல்லாம் பணம் கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. பல்வேறு குடும்பங்கள் அவர்களின் வேலை செய்யும் உறுப்பினர்களை இழக்க நேரிடுகிறது. தினக்கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டு முடிந்து சகஜ நிலை ஏற்படும் வரை பல வாரங்களுக்கு வேலையை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. வாழத் தேவையான வருவாய் சம்பாதிக்க அவர்களால் முடியாது. விவசாயிகளுக்கு பயிர் நஷ்டம் மட்டுமின்றி அவர்களின் விளை நிலங்களுக்கு நிரந்தரமான சேதமும் ஏற்படும்.

**புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை சீற்றங்களை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் :**

அரசாங்கங்கள் தயாரிக்கும் நீண்ட கால திட்டங்கள், மக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பு முதலியவை இவ்வகையான இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ளும் முறையை ஆதாரப்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் அமைப்புகளை அரசாங்கம் நிறுவுவதன் மூலம், தற்போது ஊகித்து சொல்வது மிகவும் கடினமானது இல்லை. புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் வாய்ப்பு உள்ள பகுதிகளில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இயற்சை சீற்றங்களால் நிகழ்ந்த சம்பவங்கள், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முதலிய அம்சங்களை மக்களுக்கு தெரியபடுத்த வேண்டும்.

மக்கள் அனைவருக்கும் நீண்ட காலம் பாதுகாப்பு அளிக்கும் உறுதியான வீடுகளை கட்டித் தருதல் அரசாங்கங்களின் பொறுப்பு. இயற்கைச் சீற்றங்களை தாங்கிக் கொள்ளும் அளவிலான உறுதியான சாலைகள் அமைக்க வேண்டும். கடலோரம், ஆற்றங்கரை, தாழ்வான நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் போது உணவு, பாதுகாக்கபட்ட குடிநீர், அவசர மருத்துவ சிகிச்சை தரும் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள மக்கள் எவ்வாறு தயாராக வேண்டும்?**

1. புயல்கள் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்றவை பருவகாலங்களுக்கு ஏற்றபடி நிகழ்கின்ற சம்பவங்கள் ஆகும். புயல்காற்று, வெள்ளப்பெருக்கு குறித்து வானொலி, தொலைக்காட்சி மூலம் வானிலை அறிக்கையை கூறி, மக்களை எச்சரிக்கையுடன் இருக்கச் செய்ய வேண்டும். வழக்கமாக இதை ஒலிபெருக்கி மூலம் வீடு வீடாக சென்று சொல்லி எச்சரிக்கையாக இருக்கச் செய்ய வேண்டும்.

2. ஒவ்வொரு வீட்டிலும் அவசரகால பெட்டி இருக்க வேண்டும். இப்பெட்டியில் முக்கியமான பத்திரங்கள், காகிதங்கள் மற்றும் உணவுப் பொருட்கள், பணம், அவசர காலங்களில் தொடர்பு கொள்ள உதவும் தொலை பேசி எண்கள் இருக்க வேண்டும்.

3. புயல் வீசும் காலங்களில் அருகில் உள்ள புயல் நிவாரண மையத்தை முன் கூட்டியே தெரிந்துக் கொள்ள வேண்டும்.

4. எங்கெல்லாம் தேவையோ அவ்விடங்களில் வீட்டுச் சுவர்கள், வீட்டு கூரைகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் உறுதியாக இருக்குமாறு ஏற்பாடு செய்துக்கொள்ள வேண்டும்.

5. புயல் பற்றிய எச்சரிக்கை தெரிந்தவுடன் குடிநீர், உணவு தானியங்களை நீர் புகாத பிளாஸ்டிக் பைகளில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

6. புயல் பற்றிய எச்சரிக்கை ஒலி கிடைத்த பிறகு வெளியே செல்லக் கூடாது. முக்கியமாக கடலோர பகுதிகளுக்கும், கடலுக்கு உள்ளேயும் செல்லக்கூடாது.

7. வீட்டின் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடி உள்ளேயே இருக்க வேண்டும்.

SCERT TELANGANA

8. உங்களுடைய வீடு பாதுகாப்பானது கதவுளை மூடி உள்ளேயே இருக்க வேண்டும்.

9. நீங்கள் வாகனங்களில் மீதிருக்கும் போது புயல் ஏற்பட்டால் வாகனங்களை நிறுத்திடுங்கள். கடற்கரை, மரங்கள், மின்சார கம்பங்கள் மற்றும் காற்று வீசினால் கீழே விழும் பொருட்களி அருகே செல்லுதல் கூடாது, இல்லையெனில் அவை உங்கள் மீது விழ வாய்ப்புள்ளது.

10. புயல்காற்று திடீரென நின்றால், உடனே வெளியே வரக்கூடாது. அதிகாரிகள் அது குறித்து பிரகடனம் செய்த பிறகே வெளியே வர வேண்டும்.

11. எச்சரிக்கை பிரகடனங்கள், அறிவுரைகள் பின்பற்ற வேண்டிய ஜாக்கிரதைகள் குறித்து வானொலியில் கூறும் போது கவனமாய் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

12. புயல் அபாயம் நீங்கியது என்று தெரிந்தவுடன், அவரவர் வீடுகளுக்கு திரும்பி செல்லும் போது (அ) வீட்டை வெளியே வரும் போது எச்சரிக்கையுடன் சாலைகள் மீது விழுந்துள்ள மரங்கள் அல்லது மின்சார கம்பங்களை கவனித்து நடக்க வேண்டும்.

13. பாம்புகள் புற்றுகளில் இருந்து வெளியே வரலாம். எனவே, கவனமாய் பார்த்துக் கொண்டே நடக்க வேண்டும்.

14. வெள்ளப் பெருக்கு நீரின் உள்ளே செல்லக்கூடாது. அவை மிகவும் ஆழமாக இருக்கலாம்.

15. மாணவ-மாணவியராகிய நீங்கள் மேற்கூறப்பட்ட முன்னெச்சரிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

**இயற்கைச் சீற்றத்தால் - வீட்டை காலி செய்ய வேண்டி இருந்தால் :**

1. ஆடைகள், அவசியமான மருந்துகள், விலை மதிப்புள்ள பொருட்கள் முதலியவற்றை ஈரம் புகாத பிளாஸ்டிக் பைகளில் வைத்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும்.

2. பாத்திரங்கள், ஆடைகள், படுக்கைகள், மின்சார பொருட்கள் போன்றவற்றை உயரமான நாற்காலி, மேஜை மீது அமர்த்தி வைத்திட வேண்டும்.

3. மின் ஓட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.

4. நீங்கள் வீட்டுக்குள் இருந்தாலும், வெளியே சென்றாலும் கழிப்பறை கிண்ணத்தை மணல் மூட்டைகளால் மூடிவைக்க வேண்டும். சாக்கடை மறுபடியும் வீட்டுக்குள் வராதபடி ஓட்டைளை அடைக்க வேண்டும்.

5. வீட்டுக்குள் பூட்டு போட்டு விடடு, பாதுகாப்பான (அ) அறிவுறுத்தபட்ட பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

6. ஆழம் தெரியாத நீரோட்டத்திற்குள் அல்லது பள்ளங்களுக்குள் செல்லக்கூடாது.

**வெள்ளப் பெருக்கு ஏற்படும் சமயங்களில் :**

1. காய்ச்சிய நீரை குடிக்க வேண்டும்.

2. நீங்கள் உண்ணும் உணவுப் பொருட்கள் மீது மூடி வைத்திருக்க வேண்டும். அதிக உணவு சாப்பிடக் கூடாது.

3. வயிற்றுப் போக்கு பரவும் சமயங்களில் தேநீர், கஞ்சி, இளநீர் குடிக்க வேண்டும்.

4. குழந்தைகளை வெறும் வயிற்றோடு வைத்திருக்க கூடாது.

5. வியாதிகள் பரவாமல் இருக்க வீட்டின் சுற்றுப்புறங்களில் பிளீச்சிங்பவுடர் மற்றும் சுண்ணாம்பை தூவ வேண்டும்.

6. வெள்ளப் பெருக்கு நீரில் இறங்க கூடாது. ஒரு வேலை செல்ல வேண்டி இருந்தால், உங்கள் பாதங்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்படுத்தி கொண்டு, நீண்ட கொம்பால் ஆழம் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து மதிப்பீடு செய்து முழங்கால் ஆழம் வரை மட்டுமே செல்ல வேண்டும்.

7. வெள்ளப் பெருக்கு நீரால் நனைந்த ஈரமான உணவு பொருட்களை சாப்பிடக் கூடாது.

8. கிராமப்புறங்களில் குழாய் நீரை, குடிக்கும் முன் நன்கு காய்ச்சிட வேண்டும். நீரை சுத்தப்படுத்த ஹாலோஜென் மாத்திரைகளை பயன்படுத்த வேண்டும். கிராம உடல் நல ஊழியரை அணுகி, விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

9. வெள்ளப் பெருக்கு சமயங்களில் பாம்புகள் குறித்து ஜாக்கிரதையாய் இரு. இச் சமயங்களில் பாம்புக் கடி சாதாரணமாக காணப்படும்.

SCERT TELANGANA

**முக்கியச் சொற்கள்**

1. நதிகள் மற்றும் கிளை நதிகள் 2. திரவமாதல் 3. ஆண்டு மழைப் பொழிவு 4. வெள்ளப் பெருக்குச் சமவெளிகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. நீர் எவ்வாறு நீராவியாகிறது என்பதையும், நீராவியில் இருந்து மேகங்கள் எவ்வாறு உருவாகிறது என்பதையும் விவரி.(AS1)
2. எவ்விடத்தில் நீராவியாதல் மற்றும் மேகங்கள் உருவாகுதல் பெருமளவில் நிகழ்கிறது?(AS1)
3. நிலப்பரப்பின் உள்ளிடங்களுக்கு மேகங்கள் எவ்வாறு சேருகின்றன?(AS1)
4. அதிக மழை எங்கு பொழிகிறது? சரியான விடையை தேர்ந்தெடு :(AS1)

   அ) வீசும் காற்றுகளின் திசையில் உள்ள கடலோரப் பகுதிகள்.

   ஆ) வீசும் காற்றுகளின் திசையில் உள்ள மலைப் பகுதிகள்.

   இ) கடலில் இருந்து வெகு தொலைவில் உள்ள நிலங்கள்.
5. கோதாவரி நதி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி பாய்கிறது. ஏன்?(AS1)
6. நீர் சுழற்சியின் முக்கிய படிகளை விவரியுங்கள். (AS1)
7. இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள மக்கள் எவ்வாறு தயாராக வேண்டும்?(AS4)
8. புயல் மற்றும் வெள்ளப் பெருக்கைக் காட்டும் படங்களை சேகரித்து படத்தொகுப்பை தயாரிக்கவும்.(AS3)
9. உங்களது கிராமம் அல்லது நகரத்தின் அருகே நீரோடைகள், ஆறுகள் அல்லது நதிகள் இருக்கலாம். அவற்றைப் பற்றி தெரிந்து கொண்டு கீழ்காணும் பட்டியலை நிரப்புக:(AS3)

| வ. எண் | ஆறு/நதியின் பெயர் | பிறப்பிடம் | இது கலக்கும் நதியின் பெயர் | இது கலக்கும் கடலின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. உங்கள் பகுதியில் உள்ள நதியில் ஆண்டு முழுவதும் நீர் இருக்கிறதா? முன்பு காலத்தில் அதிக நீர் இருந்ததா என்பதை உங்களின் பெற்றோரிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.(AS3)
11. வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பெருஞ்சேதத்தை காட்டும் சுவரொட்டியை தயாரிக்கவும்.(AS6)

**செயல்திட்டம் :**

**உன் வீட்டு சுற்றுப்புற நகரங்களில் எங்கே அதிகமாக தண்ணீர் வீணாக்கப்படுகிறது. இதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று விவரி. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் எழுதவும்.**

| வ.எண் | எங்கே அதிகமாக தண்ணீர் செலவழிக்க படுகிறது | ஏன் | **கட்டுப்படுத்த வழிகள்**<br>**தண்ணீரை சேமிக்க வழிகள்** |
|---|---|---|---|
| | | | |

பாடம் 3

# ஏரிகளும் நிலத்தடி நீரும்

## பகுதி - I


### ஏரிகள் :

ஆயிரம் ஆண்டுகளாக நம்முன்னோர்கள் ஏரிகளைக்கட்டி மழைநீரைப் பயன்படுத்த முயற்சி செய்தனர். பெருங்கற்கால காலத்திலிருந்தே ஏரிகளைக் கட்டி விவசாயத்திற்கு பயன்படுத்திய சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன. காகதீய மற்றும் விஜயநகர அரசர்களும் நாயக்கர்களும் தெலுங்கானாவிலும் இராயலசீமையிலும் அதிக அளவில் ஏரிகளைக் கட்டினர் என்பதை நீங்கள் படிப்பீர்கள். இதனால் இப்பகுதிகளில் விவசாயம் விரிவுபடுத்தப்பட்டது. இன்று இப்பகுதியிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு பெரிய ஏரிகள் உள்ளன.

### ஏரிகள் எவ்வாறு கட்டப்பட்டன ?

ஏரிகள் சாதாரணமாக கற்களையும், மண்ணையும் கொண்டு ஒரு உறுதியான சுவரை ஒரு சிற்றோடையின் குறுக்கே கட்டப்படும். ஒரு பெரிய ஏரியின் ஒரு புறத்தில் மட்டும் சுவர் இருக்கும்படி அமைக்கப்படும். கீழேஉள்ள படத்தைப் பார்.

ஏரிகள் சில நேரங்களில் அரசராலும் சில நேரங்களில் இராணுவத் தலைவர்களாலும் அல்லது நாயக்கர்களாலும் அல்லது அவ்வப்போது ஊரிலுள்ள மக்களாலேயே கட்டப்படும். சாதாரணமாக ஒவ்வொரு கிராமமும் ஏரிகளைக் கட்டுவதற்குப் பொறுப்பானவர்களின் பெயர்களை கதைகள் அல்லது கோயில்கள் அல்லது பண்டிகைகள் மூலம் பாதுகாப்பர். ஏரியை அமைக்கும் போது ஊரிலுள்ள ஒவ்வொருவரும் செலவுகளுக்கும், கூலியாட்களுக்கும் பணத்தை அளித்து உதவுவர். ஊரில் உள்ள அனைத்து மக்களும் ஏரிக்கரையை பழுதுசெய்தல் அல்லது ஏரிப்படுகையிலிருந்து சேற்றுப் படிவை நீக்கியும், ஏரியை ஒன்று சேர்த்து நிர்வகிப்பர். அதோடு மட்டுமின்றி யாரும் நீரை அசுத்தபடுத்தவோ, ஏரியில் நீர் புகுவதை நிறுத்தவோ செய்யாதவாறு எச்சரிக்கையையும் அவர்கள் மேற்கொண்டனர். ஏரியிலிருந்து நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தவும் அவர்கள் ஒருவரை நியமித்தனர்.



படம் 3.1(a) ஏரி மற்றும் வயல்கள்

SCERT TELANGANA

### ஏரிகள் எவ்வாறு உதவின?

ஏரிகள் மக்களுக்கும் அவர்களுடைய விலங்குகளுக்கும் குடிப்பதற்கு நீரை அளித்ததோடு மட்டுமின்றி அவர்களின் வயல்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கியதால் வறட்சிக் காலங்களிலும் மக்கள் குறைந்தது ஒரு பயிரையாவது பயிரிட பயன்பட்டது. ஏரிகள் அவற்றின் அருகிலிருந்து கிணறுகளின் நீர்மட்டம் உயரவும் உதவியாய் இருந்தன.

மழைநின்றுவிட்ட பின்னரும் ஏரியின் நீர் குறைந்துவிட்ட பின்னரும், ஏரியின் அடிப்பகுதி சில பயிர்களைப் பயிரிட உதவியது. மழை வெள்ளநீரைத் தடுத்தலும், மண்களின் மேற்பகுதி அரிக்கப்படாமல் காத்தல் ஆகியவை ஏரியால் விளைந்த மிக முக்கியமான பயன்களாகும். ஒவ்வொராண்டும் மக்கள் ஏரியின் அடிப்பகுதியில் தேங்கிய சேற்று வண்டலை எடுத்து தங்களின் வயல்களின் மண்வளத்தைப் பெருக்கப் பயன்படுத்தின.

ஏரிகள் எந்தவொரு தனிமனிதனுக்கும் சொந்தமானதல்ல என்பதையும் அவை கிராம மக்கள் அனைவருக்கும் பொதுவானவை என்பதை நாம் இங்கு நினைவுகூர வேண்டும். இவ்வாறு அவை ஓரிரண்டு மக்களுக்கு மட்டும் பயன்படாமல் ஊரில் உள்ள அனைத்து மக்களுக்கும் பயன்பட்டது.

### தற்போது ஏரிகளின் குறைபாடு :

கடந்த 20 அல்லது 30 ஆண்டுகளில் ஏரிகள் பராமரிக்கப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டு உடைக்கப்படவும், அனுமதிக்கப்பட்டு வருகின்றன. ஏரிகளை பழுதுபார்த்தல், சேற்று வண்டலை எடுத்தல் போன்றவை, மக்களும் படிப்படியாக ஏரியின் நிலத்தை வீடுகள் கட்டவும், அல்லது விவசாயம் செய்யவும் எடுத்துக் கொண்டனர். இதன் விளைவாக மாநிலத்தில் ஏறக்குறைய ஒவ்வொரு பகுதியிலும் கவனிப்பாரின்றிக் கிடக்கும் உலர்ந்த ஏரியின் சோகக்காட்சியையே நம்மால் காணமுடிகிறது. ஏரிகளை கவனிப்பதற்குப் பதில் நாம் ஆழ்துளை கிணறுகளைத் தோண்ட அதிக அளவில் பணத்தை செலவு செய்து வருகிறோம். ஆனால் அவை சிலருக்கு மட்டுமே பயன்படுவதாக இருப்பதோடு நாளடைவில் நீர்மூலங்களையும் அழித்துவிடுகின்றன. மாறாக ஏரிகள் அனைவருக்கும் பயனளிக்கின்றன.



படம் 3.1(b) இராமப்பா ஏரி - ஜெயசங்கர் மாவட்டம்

**செயல் திட்டம் :**

* உங்கள் கிராமத்திலோ அல்லது நகரத்திலோ உள்ள ஏரியைப் பற்றிய விவரங்களை கண்டறிந்து அந்த ஏரியைப் பற்றி ஒரு புத்தகத்தை தயார் செய்.
* ஏரியையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் காட்டும் ஒரு வரைபடத்தைத் தயார் செய்.
* ஏரிக்கு நீர் எங்கிருந்து வருகிறது என்பதையும் அதிகப்படியான நீர் எங்கு செல்கிறது என்பதையும் கண்டுபிடி.
* எந்த நதி அல்லது நீரோடையின் குறுக்கே அது கட்டப்பட்டுள்ளது அல்லது எந்த மலைகளுக்கு அருகே அது கட்டப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடி.
* ஏரியின் கரைச் சுவர் எதனால் உருவாக்கப்படுகிறது? அதை நிர்வகிப்பவர் யார்?
  * ஏரியைக் கட்டியவர் யார் என்பதையும் அது எப்போது கட்டப்பட்டது என்பதையும் கண்டுபிடி.
  * ஏரியைப் பற்றிய கதை ஏதேனும் இருப்பின் அதை எழுது.
  * எந்த பயிர்கள் வளர்க்கப்படுகின்றன? நீர்ப் பாசனத்தை கட்டுப்படுத்துபவர் யார்? அது எவ்வாறு ஒழுங்குப்படுத்தப்படுகிறது? என்பவற்றை கண்டறிந்து குறிப்பு எழுதுக

SCERT TELANGANA

## காகதீய திட்டம் (அ) இயக்கம்

புதிய மாநிலம் அமைந்த பிறகு தெலுங்கான அரசாங்கம் சிறிய ஏரி நீர்பாசன திட்டங்களை மாநிலம் முழுக்க செயல்படுத்தியது. அதன பெயரே காகதீய திட்டம், நமது ஊர் – நமது ஏரி இதன் முக்கிய நோக்கம் மாநிலம் முழுக்க உள்ள ஏறக்குறைய 4700 ஏரிகளில் தூர்வாருதல், சிறிய பராமரிப்பு பணிகள் மற்றும் அதன் கட்டமைப்பை வலுப்படுத்துவதாகும்.

உங்கள் பகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை பார்வையிடுங்கள், இத்திட்டத் தால் எத்தனை ஏரிகள் மேம்படுத்தப்பட்டது, எவ்வளவு மக்கள் பயனடைந்தனர் என்பதை அறியுங்கள்.

MISSION KAKATIYA

## ஏரிகளில் மீன்பிடிப்பு :

ஏரிகள் குடிநீர் மற்றும் பாசனத்திற்காக மட்டுமல்லாமல் மீனவர்களுக்கு வாழ்வாதார மாகவும் பயன்படுகிறது. பழங்காலம் முதல் நிறைய மீனவ இனமக்கள் உதாரணமாக பேஸ்டா (கங்கபுத்திரா), கூண்ட்லா மற்றும் முடிராஜ் (தெனுகு) முதலானோர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஏரிகள் (ம) ஆறுகளை சார்ந்துள்ளனர். மேலும் அவர்களைப் பற்றி அறிய சூரியபேட்டா மாவட்டத்தில் உள்ள கிராமத்தை பார்வையிட்டு தெரிந்துக் கொள்வோம்.


படம் 3-1 (d)

### பெதவோலு கிராமம் :

இந்த கிராமம் சூரியாபேட்டைக்கு அருகிலுள்ள கொடடாவிலிருந்து 16 கி.மீ தொலைவில் உள்ளது.

கிராமப் பெரியோர்களின் கருத்துப்படி பெதவோலு என்ற பெயர் பெதல ரெட்டி என்பதிலிருந்து வந்தது. இவர் காகதீயர் களுக்கு கீழ் அடிபணிந்திருந்தார்.


படம் 3-1 (c)

இவர் தனது மனைவியான வீராலதேவி பெயரில் ஏரியை கட்டினார். அதனால் இந்த ஏரியை வீதால தேவி ஏரி அல்லது எர்லதேவி ஏரி எனகின்றரன். இதன் பாசன அளவு 3000 ஏக்கர் என இருந்தபோதும் தற்பொழுது 1900 ஏக்கர் பரப்பளவிற்கு பாசன வசதி அளிக்கிறது. சட்டவிரோத செயல்களாலும், தூர்வாராததாலும் பாசன பரப்பளவு குறைந்து விட்டது.

இதன் கரையில் கட்ட மைசம்மா மற்றும் கங்கம்மா கோயில் உள்ளது. இந்த ஏரியை மேற்சொன்ன கடவுள்கள் காப்பதாக கருதுகின்றனர். மீனவர்கள், மற்ற கிராமத்தினர் இந்த கோயிலை மீன் பிடிப்பதற்கு முன்பு வணங்குவர். மேலும் பண்டிகைகளையும் கொண்டாடுவர்.

பெதவோலு கிராமத்தில் ஏறக்குறைய

SCERT TELANGANA







600-க்குடி உட்பட்ட பெஸ்தா (கங்கபுத்திரா) மற்றும் முடிராஜ் வகுப்பைச் சார்ந்த குடும்பத்தினர் உள்ளனர். இவர்களில் 60-70 குடும்பத்தினர். மீன்பிடித்தலையே தொழிலாக கொண்டுள்ளனர். இருந்த போதிலும் அவர்கள் மார்ச்-ஏப்ரல் மாதங்களிலேயே மீன்பிடிப்பர். மற்றைய காலங்களில் அவர்கள் குறுவிவசாயி களாகவோ அல்லது கூலிகளாகவோ வேலை செய்வர்.

**ஏரிகளில் உள்ள மீன்கள் :**

இதற்கு முன்பு புட்டபரக்காலு, ஜெல்லலூ, கோடிபேலு, சந்தமாமாலு, குண்டுமுக்குலு, புலிஷாலு, இசுக தொண்டுலு, பபேராலு, கண்ட்ரபரகாலு, சூரியோபில்லலு, கோரமீனுலு, வலுகாலு போன்ற வகையான மீன்கள் ஓடைகள், சிறிய ஆறுகள், மற்றும் கால்வாய்களில் காணப்பட்டன. இவற்றிலுள்ள நீரானது ஏரிகளில் பாயும் போது மீன்களும் சென்றுவிடும். ஆனால் இன்று விவசாய நிலங்களில் பயன்படுத்தப்படும் அளவுக்கதி கமான பூச்சிக்கொல்லி மருந்துகள் (ம்) செயற்கை உரங்களால் இவற்றின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டன. எனவே இன்று செயற்கையான முறைகளில் மீன் பண்ணைகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு ஏரிகளில் விடப்படுகிறது. அவை வர்ந்தது.

பெரியதானதும் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும். இந்த முறையில் மெரிஜ், ரவ்வு, போச்சே (கட்லா) மற்றும் பங்காரு தீகா மீன்கள் வளர்க்கப் படுகின்றன. இவ்வகையான மீன்கள் சந்தைகளில் தாராளமாக தற்பொழுது கிடைக்கின்றன. ஒவ்வொரு மீனுக்கும் ஒரு சுவை உள்ளது. நீங்கள் எப்பொழுதாவது மேற்கூறிய மீன்களை சாப்பிட்டுள்ளீர்களா?

- ஏன் நாம் குறிப்பிட்ட மீன் வகைகளையே உண்கிறோம்?
- பூனை மீன் (cat fish) ஏன் தடைசெய்யப்பட்டது?

**வலை வகைகள் :**

மீனவர்கள் மீன்களை பிடிக்க பலவகையான வலைகளை பயன்படுத்து கின்றனர். சிறிய வகை வலைகளில் 30 கண்களும் (துளைகள்) பெரியவகை வலைகளில் 60 கண்டுகளும் (துளைகள்) காணப்படும். இந்த வலைகள், மெல்லிய வலை மற்றும் கனவலை என்றழைக்கப் படும். மெல்லியவலை எடை குறைவானது. இதன்மூலம் மீன்கள் மற்றும் இறலால்களை பிடிக்க முடியும். கன வலைகள் மூலம் 100 கிராமிலிருந்து 5 கிலோ எடை வரையுள்ள மீன்களை பிடிக்க முடியும். கனவலை அதிக எடை இருக்கும். எதற்கு என்று யோசியுங்கள். இந்த வகையான வலைகளில் இரும்பு அல்லது ஈயத்தால் ஆன சிறுமணிகள் இருக்கும்.

- உங்களது பகுதியிலுள்ள மீனவர் களின் குடும்பங்களை பார்வையிட்டு அவர்கள் எவ்வாறு மீன் பிடிக்கின்றனர் என்பதை கவனி.
- உங்களது பகுதியில் எவ்வகையான வலைகளை பயன்படுத்துகின்றனர் என்பதை கவனித்து வகுப்பறையில விவாதி.

மீனர்கள் மீன்களை பிடிக்க இரண்டு

SCERT TELANGANA

முறைகளை கையாளுகின்றனர். ஒன்று ஆழம் குறைவான தண்ணீரில் இரண்டு ஆழமான தண்ணீரில், ஏரிகளில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது விசிறி வலைகள் பயன்படுத்தப்படும். கச்சுவலை எடைகுறைவானது. மீனவர்கள் நீண்ட தூரம் நிலையான தண்ணீரில் சென்று கச்சு வலைகளை வீசுவார். இவை பெரும்பாலும் ஆழமான நீர்ப்பகுதிகளில் பயன்படுத்தப்படும்.

- ஏன் நீரின் ஆழ அளவைப் பொறுத்து வலைகள் பயன்படுத்தப்படுகிறது என்பதை விவாதி.

**மீன்பிடித்தல் :**

மீனவர்கள் அதிகாலையிலேயே மீன்பிடிக்க தொடங்குவர். சிலர் ஆழமில்லாத நீர்ப்பகுதிகளில் விசிறி வலைகளை பயன்படுத்துவர். சிலர் தெர்மகோலால் ஆன சிறிய படகின் மூலம் ஆழமான பகுதிக்கு சென்று கச்சு வலைகளை வீசுவர். மீன்பிடித்தல் ஒருநாளைக்கு இருமுறை நடக்கிறது. அவர்கள் அதிகாலை 4 மணி முதல் 8 மணி வரை மீன் பிடித்து அவற்றை சந்தைக்கு கொண்டு செல்வர். மறுபடியும் அவர்கள் மதியம் 1 மணியிலிருந்து 4 மணி வரை மீன் பிடித்து சந்தைக்கு கொண்டு செல்வர். அவர்கள் வெயில் மனித, குளிர் என்று எதைப் பற்றியும் பாராமல் மீன் பிடிப்பார். விற்பனைக்கு பின்னர் மீதமுள்ள மீன்களை நன்றாக கழுவி வெயிலில் காயவைப்பர். சிறிய அளவில் மீன்கள் கிடைக்கும் போது அவற்றை கோடாட் அல்லது சூரியா பேட்டைக்கு கொண்டு செல்வர். அதிக அளவில் கிடைக்கும் போது ஹைதராபாத் போன்ற நகரங்களுக்கு கொண்டு செல்வர். பொதுவாக ஆண்கள் மீன்களை பிடிப்பர். பெண்கள் அவற்றை சந்தைகளில் விற்பனை செய்வர். படத்தைதப் பார் 3-1 (g)

**மீனவர்களின் கூட்டுறவு சங்கங்கள் :**

ஒரு குடும்பம் மீன்பிடிக்க இந்த கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். ஆயக்காட் பொறுத்து இதன் உறுப்பினர் தகுதி அளிக்கப்படும். பொதுவாக இந்த சங்கங்கள் ஒரு ஹெக்டாருக்கு (இரண்டரை ஏக்கர்) ஒரு உறுப்பினரை எடுத்துக்கொள்ளும். இன்று 339 உறுப்பினர்கள் இந்த சங்கத்தில் உள்ளனர். இந்த சங்கமானது ஏரியில் மீன்பிடிக்க ரூ,2,35,000/-ஐ மீன்பிடி



படம் 3-1 (g)

துறைக்கு செலுத்துகிறது. இந்த சங்கங்கள் மீன்குஞ்சுகளை வாங்கி அவற்றை ஏரிகளில் விடும். அவற்றை நன்கு பாதுகாத்து வளர்த்து கிடைக்கக்கூடிய வருவாயை உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்துக்கொள்வர்.

- உனது கிராமத்திலுள்ள கூட்டுறவு சங்க உறுப்பினர்களை சந்தித்து அவற்றின் செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்.
- மீனவர்கள் எதற்காக மீன் வளத்துறைக்கு பணம் செலுத்து கின்றனர் என்பதைப் பற்றி யோசி.

தற்போது ஏரிகளில் மீன் பிடிக்க புதிய முறைகள் கையாளப்படுவதை பார்க்கிறோம். மீனவர்கள் மிகவும் ஏழைகளாகவும், வாழ்க்கையை நடத்துவதற்கு கடன் தேவை உள்வர்களாகவும் உள்ளர். அவர்களால் மீன் பண்ணைகளில் இருந்து மீன் குஞ்சு களை வாங்க முடிவதில்லை. இதனால் வர்த்தகர்களிடமிருந்து கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். வர்த்தகர் களும் ஒரு தொகையை முன்பணமாக கொடுத்து மீன்குஞ்சுகளை விடுதல், வளர்த்தல் போன்ற பணிகளை பொறுப்பாக்கிக் கொள்கின்றனர். இப்பொழுது மீனவர்கள் உற்பத்தி செய்த மீன்களை அவர்களிடமிருந்து 10 முதல் 20 சதவீதம் சந்தை விலையை குறைத்துக் கொண்டு வர்த்தகர்கள் பெற்றுக்கொள் கின்றனர். இந்த முறையில் வர்த்தகர்கள் அதிக லாபம் அடைகின்றனர். ஒருவேளை வங்கிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு கடனளித்தால் மீனவர்களானவர்கள் வர்த்தகர்கள், ஒப்பந்ததாரர்களிடமிருந்து சுதந்திரமாக இருப்பர்.

- வங்கிகள் எதற்காக மீனவர்களுக்கு கடன் தருவதில்லை என்பதை யோசியுங்கள்.



SCERT TELANGANA

# பகுதி - II


## நிலத்தடி நீர்

மழைநீர் நீரோடைகள் அல்லது நதிகளில் பாய்ந்தோடுவது மட்டுமின்றி மண்ணிலும் மெதுவாக கீழே செல்கிறது. இப்படிச் செல்லும் நீர் நிலத்திற்குக் கீழே பாறைகள், கூழாங்கற்கள், மணல் போன்றவற்றினிடையேயுள்ள இடைவெளிகளில் குவிகிறது. இதுவே நாம் கிணறுகள் மற்றும் குழாய்கிணறுகள் மூலமாக பெறும் நிலத்தடி நீராகும்.

பிளவுகள் அல்லது நுண்துளைகளைக் கொண்ட பாறைகள் நீரைப் பெற்றிருக்கும். அவற்றை ஊடுருவு பாறைகள் என்பர். ஆந்திரப்பிரதேசத்தில் மணற்கற்கள் போன்ற பாறைகள் கொண்ட கம்மம் போன்ற சில மாவட்டங்கள் உள்ளன. கிரானைட், கடப்பாகல் சுண்ணாம்புகல் போன்ற சில பாறைகள் மிகவும் நெருக்கமானவை. ஆதலால் அவற்றில் நுண்துளைகள் இருக்காது. அவற்றுள் நீர் நுழையாது. நிலத்தடி நீர் பொதுவாக அதுபோன்ற பாறைகளுக்கு மேற்புறத்தில் தேங்கும். நீரானது அவற்றின் கீழ் செல்லமுடியாது என்பதால் அவற்றை ஊடுருவாப்பாறைகள் என்பர். நம் மாநிலத்தில் மண்ணுக்குக் கீழே உள்ள பாறைகள் பெரும்பாலும் இவ்வகையைச் சேர்ந்தவை. நம் மாநிலத்தில் ஆறுகளுக்கு அருகில் உள்ள ஒரு சிறு பகுதி மணல், மண் மற்றும் கூழாங்கற்கள் கொண்ட ஆழமான அடுக்குகளை கொண்டுள்ளது. இவ்வடுக்குகளிலும் நீர் தேங்கியுள்ளது.

பாறைகளுக்கிடையே நிலத்திற்கு கீழ் தேங்கிய நீரின் அடுக்கு பாறைநீர்ப் பகுதி எனப்படுகிறது. இந்த பாறைநீர்ப் பகுதியின் பருமன் அப்பகுதியில் நிலத்தடி நீர் கிடைப்பதை உறுதிபடுத்துகிறது.

உங்கள் பகுதியில் உள்ள கிணறுகளுக்குச் சென்று நிலத்திற்குத் கீழ் எத்தனை அடியில் நீர் மட்டம் உள்ளது என்பதைக் கண்டுபிடி. அதன் கீழ் ஏதேனும் பாறை உள்ளதா எனவும் இருப்பின் அவை எவ்வகையான பாறை என்பதையும் கண்டுபிடி. கிணற்றைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் இணைத்து ஒரு சிறு புத்தகம் தயாரிக்கவும்.




படம் 3.2 பாறைகளும் நிலத்தடிக்கும் கீழ் உள்ள நீரும்

* ஊடுருவாப் பாறைகள் இல்லாவிட்டால் நிலத்தடி நீர் தேங்குமா?
* ஊடுருவுப் பாறைகள் ஊடுருவாப் பாறைகளுக்குக் கீழ் இருந்தால் என்ன நிகழும்? நிலத்தடி நீர் எங்கு தேங்கும்?

SCERT TELANGANA

### நீர் அட்டவணை அல்லது நிலத்தடி நீர் மட்டம்


கீழே உள்ள படம் 3.3ல் காட்டியுள்ள கிணறுகளை நன்றாக கவனி. அவை அனைத்திலும் நீர்மட்டம் ஒரே அளவில் உள்ளது. இது மழைக்குப் பிறகு ஏற்பட்ட நீர்மட்டம். இந்த அனைத்து கிணறுகளிலும் 5மீட்டர் ஆழத்திலேயே நீர் கிடைக்கிறது. அதாவது இப்பகுதியில் நீங்கள் ஒரு கிணறு தோண்டினால் இதே ஆழத்தில் நீரை நீங்கள் காணமுடியும். இதுவே நிலத்தடி நீர் மட்டம் எனவும் நீர் அட்டவணை எனவும் அழைக்கப்படுகிறது.

நீர்மட்டம் எப்போதும் நிலையாக இருக்காது. இது கோடை மாதங்களில் ஆழத்திற்குச் சென்றுவிடும். பருவமழைக்குப் பிறகு மேலே வரும்.

i. நிலத்தடி நீர் நிலத்திற்கு கீழ்............... மீட்டர் ஆழத்தில் உள்ளது.

ii. கோடையில் 10 மீட்டருக்கும் கீழே நீர் மட்டம் குறைந்தால் இந்த நான்கு கிணறுகளில் எது உலர்ந்து விடும்?

iii. எந்த கிணற்றில் அதிக அளவு நீர் கிடைக்கும்?




படம் 3.3 நிலத்தடி நீர் மட்டம்

### தெலங்கானாவில் பாறைகளும் நிலத்தடி நீரும்


தெலங்கானாவில் மண்களுக்குக் கீழே உள்ள பெரும்பாலான பாறைகள் கடினமான, நீர்ப் புகாத்தன்மையைக் கொண்ட கிரானைட்டுகளைக் கொண்டுள்ளன. இருப்பினும் இப்பாறைகளின் மேல் பகுதி (சுமார் 20மீட்டர்கள்) உடைக்கப்பட்டு (சிதைக்கப்பட்டு) நீரைத் தாங்குகிறது. இப்பாறைகளில் பெரும்பாலானவை 50 அல்லது 100 மீட்டர் ஆழத்திற்கும் மேலான பிளவுகளைப் பெற்றுள்ளன. இப்பிளவுகளிலும் நீர் உள்ளது. சாதாரணமாக நாம் தோண்டும் கிணறுகளில் இந்த சிதைக்கப்பட்ட மேல் அடுக்கிலிருந்தே நீரைப் பெறுகிறோம். துளையிடும் கருவிகளின் உதவியால் தோண்டப்படும் குழாய் கிணறுகள் ஆழமான பிளவுகளை அடைந்து அவற்றிலிருந்து நீரை இழுத்து வருகிறது.

படம் 3.4ஐப் பார்த்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி :

* ஊடுருவாப் பாறைகளுக்கு கீழே நீர் எவ்வாறு நுழைந்தது என்பதையும் பாறைகளுக்குக் கீழே உள்ள பிளவுகளை எவ்வாறு அடைந்தது எனவும் கண்டறி.
* கோடைக்காலத்தில் எந்த கிணறு முதலில் உலர்ந்து விடும்? உன் காரணங்களைக் கூறு.
* பாறையில் பிளவு இல்லையென்றாலும் கிணற்றில் நீர் இருக்குமா?



SCERT TELANGANA




*படம் 3.4 பாறைகளும் நிலத்தின் மட்டத்திற்கும் கீழ் உள்ள நீரும்*

பல மண்டலங்களில் காணப்படும் பாறைகள் கிரானைட்டுகள் அல்ல. ஆனால் கடப்பாவில் சுண்ணாம்புக்கல் வகையான பாறைகள் கடினமானவை. ஆனால் மேல்பாகம் அதிகளவில் சிதைக்கப்படுவதால் அதிகமான நீரைத் தேக்கிவைக்கும். இப்பாறைகளில் நிலமட்டத்திற்குக்கீழ் 3 முதல் 15 மீட்டர் ஆழத்தில் சாதாரணமாக நீர் காணப்படும். எனவே 16 மீட்டர் ஆழத்திற்கு கிணறுகள் தோண்டப்படுகின்றன.

கிருஷ்ணா, கோதாவரி போன்ற பெரிய ஆறுகளின் அருகே உள்ள பகுதிகளில் மணல் மற்றும் சேற்று வண்டலின் ஆழமான அடுக்குகள் உள்ளன. இங்கு நீர்மட்டம் ஆற்றின் நீர்மட்டத்தின் மேல் ஆதாரப்பட்டுள்ளது. சாதாரணமாக அதிக அளவில் நீர் இருக்கும். அது சுமார் 5 முதல் 7 மீட்டர் ஆழத்திலேயே இருப்பதால் அப்பகுதிகளில் கிணறுகள் தோண்டுவது மிகவும் எளிது.

* நீங்கள் ஆறாம் வகுப்பில் கற்ற கிராம புறங்களான பெனமகூரு மற்றும் சலகம் செருவில் உள்ள கிணறுகளையும் குழாய் கிணறுகளையும் நினைவுபடுத்திக் கூறமுடியுமா?

## நிலத்தடி நீரை புதுப்பித்தல்

திறந்த தட்டையான நிலத்தின் மீது நீரானது வேகமாக பாய்ந்தோடிவிடும். ஏனெனில் அவற்றின் பாய்தலைத் தடுக்க மரங்களோ புற்களோ எதுவும் இல்லாமல் இருக்கும். எனினும் மழைநீர் பாய்வது தாவரங்கள் அல்லது கரைகளால் தடுக்கப்பட்டால் நீரானது மண்ணிற்குள் புகுந்து நிலத்தடி நீருடன் இணையும். மலைச்சரிவுகளில் நீரோடைப் பாயத் தொடங்குமிடங்களில் புற்களை நட்டும், சிறுதடுப்பு அணைகளை அவற்றின் குறுக்கே கட்டுவதாலும் நீண்ட காலத்திற்கு நீரை சேமிக்க முடியும்.

எனினும் நம் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் நீர் புதுபிக்கப்படும் விகிதத்தைக் காட்டிலும் எடுக்கப்படும் அளவே அதிகமாக உள்ளது. அதாவது நிலத்தடி நீரை நாம் அளவுக்கு அதிகமாக பயன்படுத்துகிறோம். காடுகளை வெட்டுவதால் மண்ணில் புகும்நீரின் அளவும் குறைந்துவிட்டது. இதன் விளைவால் நீர் அட்டவணை அல்லது நீர்மட்டம் ஒவ்வோராண்டும் அரை முதல் இரண்டு மீட்டர் வரை வேகமாக குறைந்துள்ளது.

SCERT TELANGANA

கீழே புகும் அளவைவிட நாம் அதிகமான அளவு நீரை எடுத்தால் காலப் போக்கில் நிலத்தடி நீர் குறைந்துவிடும். இறுதியில் நிலத்தடி நீர் மிகச்சிறு அளவிலேயே நமக்கு கிடைக்கும். இந்நிலை கடந்த சில ஆண்டுகளாக இருந்து வருகிறது.

* நிலத்தடி நீரை வீணடிக்காமல் பயன்படுத்தும் வழிமுறைகளை உன்னால் கூற இயலுமா?

நாட்டின் நாம் வசிக்கும் பகுதியில் மூன்று அல்லது நான்கு மாதங்கள் மட்டுமே மழை பெய்கிறது. ஆண்டின் எஞ்சிய மாதங்களில் நாம் நிலத்தடி நீரின் மீது ஆதாரப்பட்டுள்ளோம். இந்த நிலத்தடி நீர் மூலங்களிலிருந்தே ஆறுகள், கிணறுகள் மற்றும் குளங்கள் எல்லாம் நீரைப் பெறுகின்றன.

நீர் வேகமாக நீரோடைகளுக்கும் ஆறுகளுக்கும் பாய்ந்து விடுகிறது. இருப்பினும் மழைநீரை தாவரங்கள் அல்லது கரைகளைக் கொண்டு தடுத்தால் நீரானது மண்ணில் புகுந்து நிலத்தடி நீருடன் இணையும்.

இதனால் இயற்கைத் தாவரங்களான மரங்களும் புற்களும் மற்றும் கரைகள் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த பயன்படுகின்றன. இந்த வழி முறைகளைக் கொண்டு கடந்த சில ஆண்டுகளாக மழைநீர் சேமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் பொதுவாக ஒரு நீரோடை அல்லது ஆற்றுக்காக எடுக்கப்படும். இது போன்ற முயற்சிகளை 'நதிநீர் முன்னேற்றத்திட்டங்கள்' என்பர். இத்திட்டங்களின் கீழ் மலைச்சரிவுகளில் நீரோடை தொடங்கும் பகுதிகளில் மரங்களையும் புற்களையும் நட்டு நீர்பாய்வதைத் தடுக்க நீரோடைகளின் குறுக்கே சிறு கரைகளை கட்டுவர். சிறு தடுப்பு அணைகளையும் ஆறுகளின் குறுக்கே கட்டி நீரை நீண்டகாலம் வரை சேமிப்பர்.

* உங்கள் பகுதியில் நதிநீர்முன்னேற்ற திட்டங்கள் எவையேனும் உள்ளனவா? அந்த இடத்திற்குச் சென்று அது எவ்வாறு நடைபெற்றது என்பதை தெரிந்துகொள்ள முயற்சி செய். அந்த திட்டப் பகுதியைக் காட்டும் வரைபடத்தை வரை.

**நிலத்தடி நீரின் தரம்** :

நிலத்தடி நீரில் பொதுவாக பல தாதுஉப்புக்கள் கலந்துள்ளன. சில நேரங்களில் நீரானது உப்பு கரிப்பதாகவும் சில நேரங்களில் இனிமையாகவும் இருக்கும்.

* தோண்டப்பட்ட கிணறு அல்லது ஆழ்துளை கிணறு, ஏரி அல்லது குளம் போன்ற இடங்களிலிருந்து நீரைச் சேகரி. சில கிணறுகளில் நீரின் சுவை இனிமையாகவும் மேலும் சிலவற்றில் உப்பாகவும் அல்லது உவர்ப்பாகவும் இருப்பதன் காரணத்தை உன்னால் விளக்க முடியுமா?

நிலத்தடி நீரில் கரைந்துள்ள தாது உப்புக்களே இந்த வேறுபாட்டிற்குக் காணரமாகும். இந்த தாது உப்புக்கள் பூமிக்கடியில் உள்ள பாறைகள் மற்றும் மண்களிலிருந்து வருகின்றன. எனவே தாது உப்புக்கள் நீரில் கலப்பதை ஆதாரமாகக் கொண்டு நீரின் தன்மையும் சுவையும் மாறுபடுகிறது. நம் மாநிலத்தின் பல மண்டலங்களில் குறிப்பிட்ட சில தாது உப்புக்களான சோடியம், புளோரைடு, குளோரைடு, இரும்பு, நைட்ரேட் ஆகியவற்றின் அளவு அதிகமாக உள்ளது. அது போன்ற நீரைக் குடிப்பது நம் உடல் நலத்திற்கு நல்லதல்ல. அதனால் நம் எலும்புகளும் பற்களும் பாதிக்கப்படும். பல நோய்கள் ஏற்படுகின்றன (படம் 3.5). இது போன்ற சூழ்நிலைகளில் தாது உப்புகளை நீக்குவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பல சமயங்களில் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அல்லது மோசமான கழிவுநீர்க் கால்வாய் அமைப்பதாலும் நீர் மாசடைகிறது. நாம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் பெரும்பாலான கிணறுகள் அல்லது நதிநீர் விரைவிலேயே பாதுகாப்பற்றதாக மாறி குடிப்பதற்கு அல்லது குளிப்பதற்கும் கூட பயனற்றதாகிவிடும்.

SCERT TELANGANA



*படம் 3.5 குடிநீரில் அதிகளவில் கலந்துள்ள புளோரைடால் பாதிக்கப்பட்ட நபர்*

### நிலத்தடி நீரை பயன்படுத்துதல் :

நிலங்களைப் பெற்றிருப்பவர்களுக்கு மட்டுமின்றி அனைத்து மக்களுக்கும் நிலத்தடி நீரின் பொதுவான மூலமாக நதிகள் உள்ளன. இருப்பினும் அது போன்ற நிலங்களைப் பெற்றிருப்பவர்களாலேயே அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பாறைநீர்ப்பகுதிகளில் நிலங்களைப் பெற்றிருப்பவர்கள் அளவுக்கதிகமாக நீரைப் பயன்டுத்தவதால் சுற்றுப்புறத்திலுள்ள மக்களுக்கும் நீர் அட்டவணை குறைந்து விட்டது. அவர்களில் சிலர் ஆழமான குழாய் கிணறுகளைத் தோண்டுவதால் நீர்மட்டம் மேலும் குறைந்து விடுகிறது.

இதன் விளைவால் சுற்றுப்புறங்களில் உள்ள கிணறுகள் உலர்ந்துவிடுகின்றன. நிலத்தடிநீரை பொதுவான நீர்மூலமாகவும் அதைக் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் பயன்படுத்தாமலும் இருந்தால் அவற்றின் மூலம் நாம் ஒவ்வொருவரும் நன்மை அடைய முடியும் என்று உறுதியாககூறமுடியுமா? உண்மையில் இன்னும் சில ஆண்டுகளில் ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுபவர்களுக்கு கூட தங்கள் பம்புகளுக்கு நீரேற்ற நீர்கிடைக்காது.

* உங்கள் கிராமத்தில் நிலமற்றவர்களும் உள்ளடக்கிய அனைத்து குடும்பங்களும் சமமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் ஒரு வழிமுறையை உன்னால் கூற முடியுமா? அது போன்ற திட்டங்களை தீட்ட உன்வகுப்பில் விவாதி.

ஒரு புனிதமான சொத்தாக நீரை இன்றைய தலைமுறையினர் கடந்த காலத்திலிருந்து பெற்றனர். அதை நாம் தற்போது பெறுதைபோல் எதிர்கால தலைமுறையினருக்கும் அளிக்க வேண்டும் நாம் நீரை நல்ல முறையில் பயன்படுத்தவும், பாதுகாக்கவும் தேவையான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். இல்லையெனில் எதிர்கால தலைமுறையினர் நீருக்காக பல அழிவு தரக்கூடிய போர்களில் ஈடுபடுவர். நாம் அதற்கு பொறுப்பாளிகளாக இருப்போம்.

### முக்கியச் சொற்கள் :

1. ஊடுருவுப் பாறைகள்
2. ஊடுருவாப் பாறைகள்
3. இயற்கைத் தாவரம்
4. பாறைநீர்ப் பகுதி
5. பெரிய கற்காலம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. தவறான வாக்கியங்களை சரி செய்.(AS1)

அ) நீரானது சமவெளிகளிலிருந்து பீடபூமிகளுக்குப் பாயும்.


ஆ) மணல் மற்றும் சரளைக்கற்கள் சமவெளிகளில் அடர்த்தியாக இருக்கும்.

இ) நிலத்தடி நீர் எப்போதும் வறண்டு விடாது.


ஈ) இராஜமுந்திரியில் கிணறுகளை எளிமையாகத் தோண்டலாம்.

SCERT TELANGANA

2. படத்தில் காட்டப்பட்டுள்ள கிணறுகள் கோதாவரி ஆற்றின் சமவெளிகளில் அமைந்துள்ளன. இப்படத்தில் ஒரு தவறு உள்ளது. அதை உன்னால் சரிப்படுத்தமுடியுமா?(AS1)




3. இவற்றில் எந்த இடங்களில் அதிக அளவில் மண்ணில் நீர் புகும்தன்மை இருக்கும்.(AS1)




4. பல்லர்லாவில் சில கிணற்று உரிமையாளர்கள் கிணறுகளிலிருந்து நீர் எடுக்க உயர்மின் மோட்டார்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். மற்ற கிணறுகளின் உரிமையாளர்கள் தங்களது கிணறுகள் உலர்ந்துவிடுவதை உணர்ந்துள்ளனர். இப்பிரச்சனைக்கு தகுந்த தீர்வினை விவாதி.(AS4)

5. நிலத்தடி நீர் குறைபாடு உள்ள பகுதிகளில் குழாய்கிணறுகளைத் தோண்டுவதைக் கட்டுப்படுத்த வேண்டுமா? ஏன்?(AS4)

6. உங்கள் பகுதியில் நிலத்தடி நீரை மீட்பதைப்பற்றிய வழிமுறைகளைக் கூறு.(AS4)

7. படம் 3.1(a) ஐ கவனி. உங்களுடைய பகுதியில் உள்ளவற்றோடு ஒப்பிடு.(AS1)

8. உங்கள் கிராமத்தின் வரைபடத்தை வரைந்து அங்குள்ள நீர் வளங்களை குறிக்கவும்.(AS5)

9. பக்கம் 30ல் உள்ள நிலத்தடி நீரின் தரம் என்னும் பகுதியைப் படித்து, அதைப் பற்றி உன் கருத்தினை எழுதுக.(AS2)

**செயல்திட்டம் :**

ஏரிகள்/குளங்கள் பற்றிய தகவலை கீழ்காணும் பட்டியலில் நிரப்பு.

| வ. எண் | குளம்/ஏரி | ஆயக்கட்டு (in acres) | | ஏரிகளின் பிற பயன்கள் | பழுதுபார்க்காததன் காரணங்கள் | சரிசெய்தால் நன்மைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | முன்பு | தற்போது | | | |
| | | | | | | |



SCERT TELANGANA

பாடம் 4

# பெருங்கடல்களும் மீன்பிடித்தலும்

## பகுதி - I

பூமி ஒரு நீர்க்கோளம் எனப்படுவதன் காரணம் இதில் மட்டுமே அதிக அளவில் நீர் நிரம்பியுள்ளது. ஏறக்குறைய பூமியில் 71% கடல்களாலும், பெருங்கடல்களாலும் சூழப்பட்டுள்ளது. ஒரு கடல் அல்லது பெருங்கடல் எனக்கூறியதும் உன் நினைவுக்கு வருவது என்ன? கடல்களையும், பெருங்கடல்களையும் பற்றி என்னவெல்லாம் கண்டும் கேட்டும் இருக்கிறாய்? பூமியின் மீது உப்பு நீர் பரப்பின் விரிவினை நாம் கடல் என்கிறோம். பெரிய கடல் பகுதிகளை பெருங்கடல் என்கிறோம். பெருங்கடல்கள் என்பவை கண்டங்களால் வேறுபடுத்தப்படும் பெரிய நீர்பரப்புகள் ஆகும்.


* உங்கள் பகுதியில் காணப்படும் நீர் உப்பானதா அல்லது தூய்மையானதா? அது கிராம/நகரத்தின் பல்வேறு பகுதிகளில் வேறுபட்டு உள்ளதா?
* பல்வேறு நீர்பகுதிகளைக் எந்த பெயரிட்டு நீ அழைக்கிறாய்? சிறிய மற்றும் பெரிய நீர் பரப்புகளுக்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளனவா?
* உலகப் புறவரிப்படத்தில் அல்லது உலக உருண்டையின் மீது ஐந்து கடல்கள் மற்றும் ஐந்து பெருங்கடல்களின் பெயர்களையும் கண்டறி. அவை அடங்கும் பகுதிகள் மீது உன் கைகளை நகர்த்து.

நீரின் கீழ் என்ன உள்ளது என்பதை கற்பது மிகவும் ஆவலாக இருக்கும். நீரின் மேற்பரப்பு அதன் கீழ்பகுதியில் என்ன உள்ளது என்பது பற்றி நமக்குத் தெரிவிக்காது. ஓர் ஆறு, அல்லது நீரோடை அல்லது குளத்தின் அடிப்பகுதி எவ்வாறு இருக்கும் என்பதைக் காணவோ அல்லது உணரவோ உங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

* நீர்ப் பரப்புகளின் அடிப்பகுதியில் நீ கண்டவற்றை அல்லது உணர்ந்தவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்.
* நீ கண்ட நீர்ப்பரப்புகளின் ஆழம் எத்தனை மீட்டர்கள்?

### பெருங்கடல் அமைப்புகள் :

பெருங்கடல் தரை என்பது பூமியின் புறப்பரப்பினைப் போன்றதே ஆகும். பெருங்கடலின் அடிப்பாகம் ஒரு தட்டையான புறப்பரப்பு அல்ல. அதில் குன்றுகள், மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் அகழிகள் போன்றவை இருக்கும். பெருங்கடல் அமைப்பில் உள்ள அகழிகள் மிகவும் ஆழமானவை. எவரெஸ்ட் சிகரத்தை அதனுள்ளே புகுத்தினாலும் அது முழுமையாக மூழ்கடிக்கப்பட்டுவிடும்.





படம் 4.1 பெருங்கடலின் பகுதிகளைக் காட்டும் படம்

SCERT TELANGANA

பெங்கடல் தரையின் பெரும் பகுதி கடல் மடடத்திலிருந்து சுமார் 3-6 கி.மீ கீழே இருக்கும்.

படம் 4.1ல் பெருங்கடல் பரப்பின் கீழ் காணப்படும் நிலவடிவங்களின் வகைகளைக் காட்டுகிறது. மேலும் படம் 4.2 நம்நாட்டைச் சுற்றி பெருங்கடல் பரப்பின் கீழ் அமைந்து உள்ள நிலவியல் அம்சங்கள்.




படம் 4.2 இந்தியப் பெருங்கடலில் நிலவியல் அம்சங்கள்

படம் 4.2ல் இந்தியாவின் நிலப்பொருண்மையை கவனித்தபின் வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல்களின் கரையைப்பார். பெருங்கடல் தரையில் என்னவெல்லாம் குன்றுகள், சமவெளிகள் மற்றும் அகழிகள் போன்று காணப்படுகின்றனவோ அவற்றைச் சுட்டிக்காட்டு.

பெருங்கடலின் நீர் எப்போதும் ஒரே இடத்தில் நகராமல் இருக்காது. அவற்றில் பல்வேறு வகையான இயக்கங்கள் உள்ளன.

* ஒரு ஆற்றில் நீரின் வேறுபட்ட இயக்கங்களை நீ பார்த்திருக்கிறாயா? அலைகள், நீரோட்டங்கள் பற்றியும், வெள்ளங்கள் வருவதும் பின்வாங்குவது பற்றியும் நீங்கள் அறிந்திருக்கலாம். இந்த அனுபவங்களை வகுப்பறையில் விவாதியுங்கள்.

பெருங்கடல் நீருக்கு மூன்று இயக்கங்கள் உள்ளன. அவை :

**1) அலைகள்** : பெருங்கடலின் புறப்பரப்பில் உள்ள நீர் எழுவதையும் வீழ்வதையும் அலைகள் என்பர். பெருங்கடல் புறப்பரப்பை காற்றுகள் தள்ளும் போது அவை உருவாகின்றன. காற்று வேகமாக வீசினால் அலைகள் பெரியதாக இருக்கும்.

**2) நீரோட்டங்கள் :** பெருங்கடல்களில் நீரானது பெரிய ஓடைகள் போல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நகர்ந்துக் கொண்டே இருக்கும். பெருங்கடல் பரப்பின் மீது ஒரு குறிப்பிட்ட திசையில் நிலையாக ஓடிக் கொண்டிருக்கும் இந்த நீரோடைகளை கடல் நீரோட்டங்கள் என்பர். இந்த கடல் நீரோட்டங்கள் இரண்டு வகைப்படும். வெப்ப நீரோட்டங்கள் மற்றும் குளிர் நீரோட்டங்கள். வெப்ப நீரோட்டங்கள் பூமத்திய ரேகைப் பகுதியிலிருந்து துருவங்களை நோக்கி பாய்கின்றன. குளிர் நீரோட்டங்கள் துருவப் பகுதியிலிருந்து பூமத்திய ரேகைப் பகுதியை நோக்கிப் பாய்கின்றன. இவை முக்கியமாக தலக்காற்றுகளாலும், வெப்பநிலை மாற்றங்களாலும், பெருங்கடல் நீரின் உப்புத்தன்மை ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

**3) ஏற்ற வற்றங்கள்** : சூரியன், பூமி மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையால் ஒவ்வொரு நாளும் பெருங்கடலில் நீரானது சீராக எழுவதையும், வீழ்வதையுமே ஏற்றவற்றங்கள் என்பர். கடற்கரையின் அனைத்து இடங்களிலும் சில மணிநேரங்கள் குறைந்த அலையையும், சில மணிநேரங்கள் உயர்ந்த அலையையும் ஏற்படுகின்றன. அலைகள் ஒவ்வொரு நாளும் ஒரே அளவிலான உயரத்தைக் கொண்டிருக்காது. அலையானது உயர்வாக இருக்கும்போது கடற்கரையின் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை மேல்நோக்கிவரும். பிறகு குறைவான அலை தொடங்கும்போது நீர் நிலத்திலிருந்து பின்னோக்கிச் செல்லும். ஏற்றவற்றங்கள் மீன் பிடித்தலுக்குப் பெரிதும் உதவுகின்றன. ஏற்றவற்றங்கள் சில இடங்களில் நதிகளால் கொண்டுவரப்பட்ட மண்ணை எடுத்துச் செல்வதன் மூலம் வண்டல் மண் குவிவதைத் தடுக்கிறது.

SCERT TELANGANA

# பகுதி - II



## கடற்கரைச் சமவெளிகளில் மீன்பிடிக்கும் கிராமம் :

பெருங்கடல் நீர் எப்போதும் உப்பாக இருக்கும். அதில் பல தாது உப்புக்கள் கரைந்துள்ளன. மழைபெய்வதற்கு முக்கிய மூலங்களாக இருப்பவை பெருங்கடல்களே. பெருங்கடல்களில் மீன்கள் மற்றும் பிற கடல் உணவுகளுக்கு பிறப்பிடமாக உள்ளது. உப்புக்களுக்கு முக்கிய மூலமாக அவை உள்ளன. சர்வதேச வியாபாரத்திற்கும் இயற்கை நெடுஞ்சாலைகளை பெருங்கடல்கள் வழங்குகின்றன. ஆந்திரப்பிரதேசத்தின் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள பாவனபாடு என்னும் மீன்பிடிக்கும் கிராமத்திற்குச் செல்வோம். பெருங்கடலுக்கு அருகில் வாழும் அம்மக்களின் வாழ்க்கையைப் பற்றி கற்போம்.

* ஆந்திரபிரதேச புறவரிப்படத்தில் கடற்கரை கவனித்து அங்கு அமைந்துள்ள மாவட்டங்களை கண்டுபிடி.
* பாவனபாடு கிராமம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது என்பதைக் கண்டுபிடி.
* அடுத்த பக்கத்தில் அமைந்துள்ள பாவனபாடு கிராமத்தைப் பார்த்து கீழ்கண்டவற்றை கண்டுபிடி.

i) படத்தில் நீர் நிலைகளை அடையாளம் காட்டு.

ii) இந்த கிராமத்தில் விவசாயம் சாராத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிலத்தை அடையாளம் காட்டு. எந்த நோக்கத்திற்காக?

## மீன் பிடித்தல் :

காலையில் 4 மணி இருக்கும். அப்பல கொண்டாவின் மனைவி அவரை எழுப்பி அவருக்கு 5.00 மணிக்கு பழைய சோற்றுக் கஞ்சியை சாப்பிடக் கொடுத்தார். அப்பல கொண்டா கடலுக்குப் புறப்பட தயாரானார். அவருடைய நண்பர்கள் கடற்கரையில் அவருக்காக காத்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் மீன்பிடிக்கும் ஏழைகள். அவர்களிடம் சொந்தமாக எந்த படகும் அல்லது வலைகளும் இல்லை. அவர்கள் அனைவரும் தாத்தாராவ் என்பவரின் இயந்திர படகில் வேலை செய்கின்றனர். தாத்தாராவும் அவர்களுடன் இணைந்து வேலை செய்கிறார். படகு, தேவையான பொருட்களை சுமை ஏற்றிக் கொண்டு விடிவதற்குள்ளாகவே புறப்பட தயாரானது.

படம் 4.3 பாவனபாடு கிராமக் குடியிருப்பு



SCERT TELANGANA



*படம் 4.4 மேலிருந்து எடுக்கப்பட்ட பவனபாடு கிராமக் குடியிருப்பின் காட்சி*

கடலில் செலுத்துவதற்கு முன் அவர்கள் எஞ்சினையும், இழுக்கும் கயிறு, கூடுதலான டீசல் சேமிப்பு ஆகியவற்றை சரிபார்த்துக் கொண்டனர். தங்கள் உணவுப் பொட்டலங்களையும் கீழே வைத்துக் கொண்டனர். தாங்கள் உறுதியாக நம்பும் அம்மனை வணங்கினர்.

தாத்தாராவ் இந்த இயந்திர படகிற்கு உரிமையாளர். அதை இவர் ஓடிஸாவிலுள்ள மார்கொண்டாவிலிருந்து வாங்கிவந்தார். அதன் விலை ரூ.6 லட்சம். அவர் பணத்தை கடன் வழங்கும் தனியாரிடம் இருந்து அதிக வட்டிக்கு வாங்கினார். அவருக்கு அசையா சொத்துகள் ஏதும் இல்லாததால் அவரால் வங்கிக் கடனை பெறமுடியவில்லை. தினசரி மீன்பிடிப்பிற்கும் அவர் இடைத்தரகர்களிடமிருந்து முன்பணம் வாங்குகிறார். அவர் குறைந்தது ஒரு பயணத்திற்கு ரூ.5000ஐ டீசல், கூலி மற்றும் இதர செலவுகளுக்காக முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இடைத்தரகரிடமிருந்து கடன் வாங்குவதால் அவர் தரகரால் உறுதி செய்யும் விலைக்கே தன்னுடைய ஒரு நாளைய மீன்பிடிப்பினையும் விற்க வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் படகு புறப்பட தயார் நிலையில் உள்ளது. அனைத்து 20 உறுப்பினர்களும் படகில் உள்ளனர்.

அவர்கள் கடலில் 15 முதல் 20 கி.மீ வரை செல்வர்.

அப்பல கொண்டாவின் மனைவியான தனம்மா, அவர் வேலைக்குச் சென்றதும் தம் வீட்டு வேலைகளை காலை 9.00 மணிக்குள் முடித்துவிடுவார். பிறகு, அவர் உப்பங்கழியில் வேலைக்குச் செல்வார். சிலநேரங்களில் அவர் விவசாய வேலைக்கும் செல்வது உண்டு. அவர்களுக்கு சொந்தமாக விவசாய நிலமோ அல்லது உப்பங்கழியோ இல்லாததால் அவர்களுடைய குடும்பம் அவர்கள் பெறும் தினக்கூலி மீதே ஆதாரப்பட்டுள்ளது. உப்பங்கழியில் தனம்மா வேலை செய்து கொண்டிருக்கும் போது தன்னுடைய கணவரின் தொலைபேசி அழைப்பிற்காக எதிர்பார்ப்பார். தன் கணவரின் பாதுகாப்பிற்காகவும், மீன் பிடிப்பதைப்பற்றியும் கவலையுடன் காத்திருப்பார். மீன் அதிகமாக பிடிக்கப்பட்டால் தங்கள் குடும்பத்திற்கு அதிகமான பணம் அவர்களுக்குக் கிடைக்கும்.

மீனவர்கள் மதியம் 1.00 முதல் இரவு 8.00 மணிக்குள்ளாக அல்லது சில நேரங்களில் இரவில் மிகவும் நேரம் கழித்தும் வீடு திரும்புவர் ஒரு நாள் நாங்கள் அங்கிருந்த போது அவர்கள் ‘பாரா’ என்னும் புதுவகை மீன்களை அதிக அளவில் பிடித்துக் கொண்டு மாலை 3.00 மணி அளவில் வீடு திரும்பினர்.

SCERT TELANGANA







படம் 4.5 மீன்வேட்டைக்கு ஆயத்தமாக உள்ள படகு

படம் 4.6 படகின் இயந்திரம் உணவு தாங்கிகள், டீசல் கேன்கள் மற்றும் அம்மன் படம்

சில இடைத்தரகர்கள் மீன்களை வேறுபடுத்தி அவற்றை குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து கொல்கத்தா, பெங்களூரு, சென்னை, ஐதராபாத் போன்ற தூரப்பகுதிகளுக்கு அனுப்புகின்றனர். மீன்பிடிப்பவர்களைக் காட்டிலும் இவர்களுக்கு 4 மடங்கு வருமானம் கிடைக்கிறது. உள்ளூர் இடைத்தரகர் போதையா அட்டாவின் படங்களைக் கவனி.

- மீனவர்களைக் காட்டிலும் இடைத்தரகர்களுக்கு அதிக வருமானம் வருவதற்கான காரணங்கள் யாவை?
- இடைத்தரகர்களின் அட்டாவில் தர்மாக்கோல் பெட்டிகளை படத்தில் காணலாம். அவை எதற்காக வைக்கப்பட்டுள்ளன?

இதுவரைப் பெரிய மீன்வியாபாரம் பற்றி விவாதித்தோம். கிராமங்களில் சிறிய மீன் வியாபாரங்களும் நடக்கின்றன. உள்ளூரில் தயாரித்த கட்டை தெப்பங்களின் மீது பெருங்கடலில் 5கி.மீ வரைசென்று சிறிய அளவில் மீன்களை பிடிப்பர். இவற்றை மீனவர்களின் மனைவியர் அருகிலுள்ள நகரங்களான நௌபடா, தெக்கலி, பூண்டி, பலாசா போன்ற இடங்களில் விற்பர். இவர்களை 'பேர அணங்குகள்' என்பர்.

கட்டைத் தெப்பங்களுக்கு ஒப்பிடும்போது இயந்திரப்படகில் வாழ்க்கையானது மிகவும் பயம் நிறைந்ததாக உள்ளது. ஏனெனில் அவை கடலில் தூரமான இடங்களுக்குச் செல்வதால், ஆபத்து நேரிடும் காலத்தில் நீந்தி தப்பிப்பது கடினம், பெரிய படகுகளில் முதலுதவிப் பெட்டியும், பாதுகாப்புக் கவசங்களும் இல்லாதது வருத்தம் தரக்கூடியதாக உள்ளது. மீன்பிடித்தல் உயிரைப்பணயம் வைக்கக்கூடியதாகவும், சாகசம் நிறைந்ததாகவும் உள்ளது.







படம் 4.7 ஏலம் போடும் வளாகத்திற்கு மீன்களைக் கொண்டு செல்லுதல்

படம் 4.8 ஏலம் போடும் வளாகத்தில் ஆயத்தமாக இருக்கும் மீன்கள் – அங்கு காத்திருக்கும் இடைத்தரகர்கள்

SCERT TELANGANA



படம் 4.9 இடைத்தரகர்கள் மீன்களை பாதுகாக்கும் அட்டை பெட்டிகள்



படம் 4.10 இடைத்தரகர்களின் மீன் பெட்டிகளை நகரங்களில் விற்பதற்கு வாகனங்களில் சுமையேற்றும் காட்சி.

## வலைகள் :

வீட்டிற்குத் திரும்பிய அப்பலகொண்டா மதிய உணவை முடித்துக் கொண்டு கிழிந்த வலைகளை எடுத்துக் கொண்டு புயல் முகாமிற்குச் சென்று பழுதுபார்க்கத் தொடங்கினார். பாவனபாடு கிராமத்தில் பல இடங்களில் இது சாதாரணமாக நடைபெறும் செயல். நூல் கட்டைகள் (வலை பழுதுபார்க்கும் இடுக்கி) (படம் 4.12) நூல் கண்டை (கயிறு) மற்றும் தட்டையானக் கட்டை போன்ற கருவிகளைக் கொண்ட சிறப்புக்கருவிப் பெட்டி ஒன்றை ஒவ்வொரு மீனவரும் வைத்திருப்பார்.


வலைகள் வேறுப்பட்ட வளையங்களின் அளவின் அடிப்படையில் பல வகைப்படும். அண்மையில் புதியதாக வந்த வளைய வலைகளை அதிக அளவில் மீன்களைப் பிடிப்பதற்கு மீனவர்கள் பயன்படுத்துகின்றனர்.

அவற்றால் கிராமத்தின் குடிபெயர்ப்பு குறைந்தது. முன்பெல்லாம் நூலால் தயாரிக்கப்பட்ட வலைகள் இருந்தன. தற்போது அவற்றுக்குப் பதில் பிளாஸ்டிக், நைலான், மற்றும் பிற செயற்கை இழைகளாலான வலைகள் வந்துள்ளன. ஒரு வலை 4,5 வருடங்கள் நல்லநிலையில் இருக்கும். இவ்வலைகளை வளையங்களின் வகைகளைப் பொறுத்து எடைக்கு வாங்குவர்.



படம் : 4.11 சிறுமீன் வியாபாரிகள் தங்களுடைய தட்டில் மீன்களை அருகிலுள்ள நகரங்களில் விற்பதற்காக வாகனங்களில் சுமையேற்ற தங்கள் முறைக்காக காத்திருத்தல்.

SCERT TELANGANA




*படம் 4.12 (A) வலைகளை பழுதுபார்த்தல் (B) மீனவர் வலையை தைத்தல் (C) நூல்குச்சிகள் (D) நீரில் மிதக்கும் ஈயமணிகள் (E) நீரில் மிதக்கும் பிளாஸ்டிக் மணிகள்*

வளைய வலையின் எடை கிலோ 250-300 ரூபாய்க்கு இடையில் இருக்கும். வளைய வலை எடை சுமார் 500கிலோ இருக்கும். இப்பகுதியிலுள்ள மீனவர்கள் பொதுவாக ஒடிசாவிலுள்ள பர்ஹம்பூர் என்னும் ஊரில் இருந்து வலைகளை வாங்குவர்.

### விவசாயமும் கால்நடை வளர்ப்பும் :

பாவனபாடு கிராமத்தில் மீன்பிடிப்பது மட்டுமே தொழில் அல்ல. இவர்கள் விவசாயம் செய்து பயிர்களை வளர்ப்பது, பசுக்கள், பறவைகள் வளர்ப்பது போன்ற பிற தொழில்களையும் செய்கின்றனர். இக்கிராமத்தில் உள்ள மண்கள் முக்கியமாக களிமண் வகையைச் சேர்ந்தது. மணலுடன் சரளைக் கற்களைக் கொண்டது. நெல் முக்கியப் பயிர். ஒருசில ஏக்கரில் மட்டுமே நீர்ப்பாசனவசதி உள்ளது. வம்சதாரா ஆற்று கால்வாயின் முடிவுப் பகுதியில் இந்த பாவனபாடு அமைந்துள்ளது இந்த கிராமத்திற்கு அருகிலுள்ள மர்ரிபாடு கிராமத்தின் நீர்ப்பாசனத் தேவைகள் நிறைவேற்றிய பிறகே நீர் வரும். எனவே விவசாயம் பெரும்பாலும் மழையை நம்பியே நடக்கிறது.

இக்கிராமத்தில் எந்த நிலச் சுவாந்தார்களும் இல்லை. பாவனபாடு கிராமத்தின் பெருமளவிலான விவசாயிகள் சிறுவிவசாயிகளே. அவர்கள் பணப்பயிர்கள் எதையும் விளைவிப்பதில்லை. இருப்பினும் சிலர் பசுக்களையும் எருமைகளையும் வளர்க்கின்றனர். இக்கிராமத்தில் இலாபம் தரும் இரண்டு கோழிப்பண்ணைகள் உள்ளன. அரிசி உற்பத்தி அவர்களின் தேவைகளுக்குப் போதுமான அளவில் இல்லாததால் தங்கள் வெள்ளை அட்டைகள் மூலம் நியாயவிலைக் கடைகளிலிருந்து அரிசியை பெறுகிறார்கள். சில நேரங்களில் சந்தைகளிலிருந்து அரிசியை வாங்குகின்றனர்.

### உப்புத் தன்மையும் குடிநீரும்

கிராமத்திலுள்ள நீர் உவர்ப்பானது. கடற்கரை அருகே 8 அல்லது 10 அடிகள் வரை தோண்டினால் குடிநீரைப் பெறலாம். ஆனால் கோடைக்காலத்தில் இக்கிணறுகள் வறண்டு விடும். மேலும் அக்கிணறுகள் நிரம்ப நீண்ட காலம் பிடிக்கும். ஒரு மணிநேரம் காத்திருந்தால் ஒரு குடம் நீர் கிடைக்கும். குடிநீருக்காக மகளிர் 2கி.மீ தூரம் நடந்துச் செல்லவேண்டியுள்ளது.

SCERT TELANGANA





படம் 4.13, 4.14 உப்பளங்களை சமன்படுத்தும் பணியான வரப்பிடுதலை மேற்கொண்டு நீர் ஊடுருவாத நிலமாக மாற்றுதல்



படம் 4.15 மூதாட்டி ஒருவர் தொலைதூரத்திலிருந்து நீர் கொண்டு வருகிறாள்.

அரசாங்கம் இந்த கிராமத்திற்கு ஒரு பாதுகாப்பான குடிநீர்த்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு அருகிலுள்ள சூர்யமணிபுரத்திலிருந்து குழாய்கள் மூலம் நீரை அனுப்புவர். இது சில காலத்திற்கு ஆறுதல் அளித்தது. ஆனால் தலைமை நீர்த்தேக்கத் தொட்டியை சுத்தம் செய்தல், தொடர்ந்து மோட்டார் பம்புகளை பழுதுபார்த்தல் போன்றவை தடையாக உள்ளன. சில காலங்களுக்கு ஒரு இளைஞர் நற்பணிமன்றம் இந்த நீர்திட்டத்தை சுறுசுறுப்பாக வைக்க உதவியது. ஆனால் தற்போது இது பணியாற்றுவதில்லை.

**சமூக வாழ்க்கை :**

பாவனபாடுவின் பெரும்பாலான மக்கள் கங்கையம்மன், கௌரி மற்றும் சிவனை வணங்குகின்றார்கள். அவர்களின் படகுகளுக்கும் வலைகளுக்கும் பூஜை நடந்துகின்றனர். இவர்களின் முக்கிய திருவிழா கௌரிபூர்ணிமா. இவர்கள் கிராமத்தின் பொதுநிதி (கூட்டு சொத்து)யிலிருந்து இத்திருவிழாவிற்கு தேவையான செலவுகளை செய்வர். அருகிலுள்ள படத்தைக் கவனி. அப்பலகொண்டாவைப் போன்ற பெரும்பாலான ஆண்கள் பச்சைகுத்தி கொள்வர்.




படம் 4.16 மக்கள் ஏன் பச்சை குத்திக் கொள்கின்றனர்? அப்பலகொண்டாவின் கையில் காணப்படும் அடையாளக்குறி என்ன? அது எதைக் காட்டுகிறது?

இக்கிராமத்தில் ஒரு திறந்த அரங்கம் ஒன்றுள்ளது. இதில் நாடகங்கள், புராணக்கதைகள், ஹரிகதைகள் மற்றும் இசைக்கூத்து ஆகியவை நடத்தப்படும். இந்த நடவடிக்கைகள் அனைத்து பிள்ளைகள் என்னும் இனத்தலைவர்களால் நடத்தப்படும். அவர்கள் மக்களின் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை முடிவு செய்வர், அவர்கள் சச்சரவுகளை தீர்த்து வைத்து அபராதங்களையும் விதிப்பர். இப்பணம் கிராமப் பொது நலநிதிக்குச் செல்கிறது.

SCERT TELANGANA

**முக்கியச் சொற்கள் :**

1. கருவிப்பெட்டி 2. *பெருங்கடல் அமைப்பு* 3. புர்ர கதைகள் 4. இயந்திரப்படகு


## உமது கற்றலை மேம்படுத்துக

1. பாவனபாடு கிராமம் நீங்கள் வசிக்குமிடத்தைப் போல் உள்ளதா? வேற்றுமை ஒற்றுமைகள் யாவை? கீழ்காணும் அம்சங்களின் மீது அவற்றை ஒப்பிடு.(AS1)
   (அ) வாழ்க்கைத்தரத்தின் ஆதாரம் (ஆ) வேலைவாய்ப்பு வகை
   (இ) நீர் மூலங்கள் (ஈ) விவசாய நடைமுறைகள்
2. பெருங்கடல் இயக்கங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றில் எது மீனவர்களுக்குப் பயன்படுகிறது?(AS1)
3. இயந்திரப்படகுகளில் மீன் பிடிப்பதற்கும், கட்டுமரங்களில் மீன் பிடிப்பதற்கும் உள்ள வேறுபாடு யாது?(AS1)
4. இயந்திரப் படகில் மீன் பிடிக்க ஆயத்தமாகும் முறையை எழுது.(AS1)
5. மீனவர்களின் கருவிப் பெட்டியில் அடங்கியுள்ளவை யாவை?(AS1)
6. பூமியின் மேற்பரப்பிற்கும், கடலின் அடிப்பகுதிக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் யாவை?(AS1)
7. உங்கள் கிராமம் / நகரத்தின் நீர்ப் பகுதியைப் பற்றிய தகவலைச் சேகரித்து அட்டவணையை நிரப்பு. நன்மைகளை ஆராய்க.(AS3)


| வ.எண். | நீர்ப்பகுதியின் பெயர் | பயன்கள் | குறைகள் |
|---|---|---|---|
| | | | |

8. மீனவர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் படங்களைச் சேகரித்து ஒரு ஆல்பத்தை தயார் செய்க(AS3).
9. இடைத்தரகர்களின் பணத்தின் மீது ஆதாரப்படாமல் இருக்க மீனவர்களுக்கு நீ கூறும் தீர்வுகள் என்ன?(AS4)
10. மீனவர்களின் வாழ்க்கை கடல்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்னும் கூற்றை எவ்வாறு ஆதரிப்பாய்?(AS3)
11. பக்கம் 32ல் உள்ள கடற்கரைச் சமவெளிகளில் மீன் பிடிக்கும் கிராமம் என்னும் பகுதியை படித்து, அதனைக் குறித்து உன் கருத்தை தெரிவி.(AS6)
12. கடந்த நான்கு பாடங்களில் நீரைக்குறித்து பல கருத்துக்களை நாம் கற்றோம். நம் பூமி மீது நீர் கிடைப்பதைப் பற்றிய அதிகமான தகவல்கள் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றை கூர்ந்து கவனித்து நம் வாழ்க்கைக்கு நீரின் முக்கியம், பூமியின் மீதுள்ள நீர் குறித்து விளக்குக.(AS2)


**தூய்மையான நீர் பாகம்**




**பூமி மீது நீர்ப் பரப்பு**




**பூமியின் மேற்பரப்பில் தூய்மையான நீரின் பரப்பு**




SCERT TELANGANA

பாடம் 5

# ஐரோப்பா

முதன் முதலில் தொழிற்புரட்சி ஐரோப்பாவில் துவங்கியது. தொழிற்சாலைகளின் மூலமாக உற்பத்தியை பெருக்கிக் கொண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் உலகத்தின் பல நாடுகள் மற்றும் கண்டங்களின் மேல் தங்களது ஆதிக்கத்தை காட்டின. ஆப்பிரிக்காவில் இருந்த இயற்கை வளங்களையும், சுற்றுப்புறங்களையும் ஐரோப்பியர்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டனர் என்பதை இந்த பாடத்தின் வழியே தெரிந்துக் கொள்ள முயற்சிக்கலாம்.

## ஐரோப்பா இருப்பிடம் :

ஐரோப்பா இருப்பிடத்தையும், இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு உள்ள தூரத்தையும் தெரிந்துக் கொள்வதற்கு உங்களுக்கு உலக உருண்டை அல்லது அட்லாஸ் தேவைப்படுகிறது. படம்-1ல் ஐரோப்பாவை வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது. ஐரோப்பா கண்டத்தின் எல்லைகளை குறிப்பிடவும். ஐரோப்பாவின் வடக்கில் கடல் உள்ளது. அதை குறிப்பிடவும். இந்த கடல் ஆண்டு முழுவதும் உறைந்த நிலையில் இருக்கும்.

* ஐரோப்பா கண்டத்தின் மேற்கே உள்ள கடலின் பெயர் என்ன?


இந்த பெருங்கடல் ஐரோப்பாவை வட அமெரிக்கா கண்டத்திலிருந்து பிரிக்கிறது. 500 வருடங்களுக்கு முன்பு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு கடல் வழியை கண்டுபிடித்தார்கள். இலட்சக்கணக்கான ஐரோப்பிய மக்கள் அமெரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

* ஐரோப்பாவிற்கு தெற்கிலுள்ள கடலின் பெயரை அட்லாஸை பார்த்து குறிப்பிடவும்.

இந்த கடலுக்கு வடக்கில் ஐரோப்பாவும், தெற்கில் ஆப்பிரிக்காவும் உள்ளது.இந்த கடலுக்கு மத்திய தரைக்கடல் என்ற பெயர் ஏன் வந்தது தெரியுமா?

உலகத்தின் மையப்பகுதியில் இந்த கடல் இருப்பதினால் இதற்கு இப்பெயர் வந்தது. ஆதிகாலத்தில் ஐரோப்பியர்களுக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பிற கண்டங்களைப் பற்றித் தெரியாது. ஐரோப்பா, மேற்கு ஆசியா, ஆப்பிரிக்காவின் வட பகுதி போன்றவை மட்டுமே தெரிந்திருந்தது. இந்த பகுதிகள் அனைத்தும் மத்திய தரைகடலை சுற்றியே அமைந்து உள்ளன. அதனால் ஐரோப்பியர்கள் உலகத்தின் மத்தியில் கடல் உள்ளது என நினைத்திருந்தனர். எனவே தான் தற்போது கூட இப்பெயர் நிலைத்துள்ளது.

* ஐரோப்பாவிற்கு கிழக்கே உள்ள மலையின் பெயரை குறிப்பிடு.




*Map 1:* ஐரோப்பாவின் இருப்பிடம்

SCERT TELANGANA

ஐரோப்பாவின் கிழக்கே யூரல் மலைகள் உள்ளன. இவை மிக உயரமான மலைகள் அல்ல. இவை ஐரோப்பாவிற்கு கிழக்கு எல்லையாக அமைந்துள்ளன. இந்த மலைகளுக்கு கிழக்கே ஆசியாவும், மேற்கே ஐரோப்பாவும் அமைந்துள்ளன. உண்மையில் ஆசியாவும், ஐரோப்பாவும் கலந்தே உள்ளன. எனவே ஐரோப்பாவையும், ஆசியாவையும் சேர்த்து யூரேஷியா என அழைக்கப்படுகிறது.

* இப்போது ஐரோப்பாவின் இருப்பிடம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஐரோப்பாவில் உள்ள நாடுகளின் பெயர்களை வரைபடம்-2ல் பார்த்து எழுதவும். நீங்கள் எப்போதாவது இந்த நாடுகளின் பெயர்களை கேட்டிருக்கிறீர்களா?
* கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி வரைபடத்தில் ஐரோப்பிய நாடுகளை வண்ணமிடவும். அருகருகே உள்ள நாடுகளுக்கு ஒரே நிறத்தில் வண்ணமிடாதே.

**மலைகள், சமவெளிகள் மற்றும் நதிகள்** :

நாம் இப்போது வரைபடம்-3ன் மூலமாக ஐரோப்பாவில் உள்ள மலைகள், சமவெளிகள், நதிகள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்துக் கொள்ளலாம். ஐரோப்பாவில் அதிக பனியால் மூடப்பட்டு இருக்கும் பனிமலைகள் உள்ளன. படத்தில் ஆல்ப்ஸ், பைரினீஸ் போன்ற மலைகளை கவனிக்கவும். ஆல்ப்ஸ் மலைகள் மிக முக்கியமானவை. இவை வருடம் முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும்.

* ஆல்ப்ஸ் மலைத் தொடர் பரவியுள்ள பல்வேறு நாடுகளை படம்-2மற்றும்4ஐ ஒப்பிட்டு அந்த நாடுகளை குறிக்கவும்.
* ஆல்ப்ஸ் மலைத்தொடரிலிருந்து உற்பத்தியாகும் இரண்டு நதிகளின் பெயர்களை எழுதுக.
* பைரினீஸ் மலைத்தொடர்களுக்கு ஒட்டியுள்ள எல்லை நாடுகளின் பெயர்களை எழுதுக.
* கிழக்கு ஐரோப்பிய எல்லையில் உள்ள மலைத்தொடர்கள் யாவை?
* ஐரோப்பாவிலுள்ள பிறமலைகளைக் கண்டறிந்து ஓர் அட்டவணையைத் தயாரிக்கவும்.




*படம் : 5.1 கிழக்கு ஐரோப்பாவில் டேன்யூப் நதிக்கரையில் உள்ள ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட்*

தெற்கு ஐரோப்பிய கண்டத்தின் எல்லையில் காஸ்பியன் கடலுக்கும், கருங்கடலுக்கும் மத்தியில் காகசஸ் மலைகள் உள்ளன. இந்த மலைகள் மிகவும் உயரமானவை. இவை ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும். இவை ஐரோப்பா, ஆசியா கண்டங்களுக்கிடையே உள்ள பிரிவினையை இவை தெரிவிக்கின்றது. ஆசியாவில் பரந்த பீடபூமிகள் உள்ளன. ஆனால் ஐரோப்பாவில் இதுபோன்ற பீடபூமிகள் இல்லை. ஆனால் ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் சிறிய சிறிய பீடபூமிகள் உள்ளன. ஐரோப்பாவில் பரந்த சமவெளிகள் உள்ளன. இவை கிழக்கு பகுதிகளில் ரஷ்யா, உக்ரைன், போலந்து, பைலோரஷ்யா போன்ற ஆசிய நாடுகள் வரை பரவியுள்ளன. இந்த பீடபூமிகள் அதிகமாக பனியால் மூடப்பட்டுள்ளதினால் குளிர் காலத்தில் அதிக குளிர் காற்று வீசுகிறது. கோடையில் பனி உருகி சிறிய கால்வாய்களாக உருவாகி பெரிய நதிகளாக உருவெடுக்கின்றன. ஐரோப்பாவில் உற்பத்தியாகின்ற பெரிய நதிகள் நைபர், வோல்கா போன்றவை மிக நீளமானவை.

SCERT TELANGANA


வரைபடம் 2: ஐரோப்பா அரசியல்




SCERT TELANGANA




SCERT TELANGANA




வரைபடம் 3 : ஐரோப்பா இயற்கை அமைப்பு

SCERT TELANGANA

ஐரோப்பாவிலுள்ள நதிகள் விவசாயத்திற்கு மட்டுமின்றி கப்பல் மற்றும் போக்குவரத்திற்கும் பயன்படுகின்றன. கப்பல் படகுகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சரக்குகள் மற்றும் மனிதர்களை ஏற்றிச்செல்கின்றன. இந்த நதிகள் குளிர் காலத்தில் அநேக நாடுகளோடு போக்குவரத்துவசதிகளை ஏற்படுத்துகின்றன. இவை பன்னாட்டு வியாபாரத்திற்கு அனுகூலமாக இருந்து அட்லாண்டிக் பெருங்கடலோடு கலக்கின்றன. இந்த நதிக்கரையில் பெரும் தொழிற்சாலைகள், கனிசுரங்கங்கள் மற்றும் நகரங்கள் உள்ளன. பன்னாட்டு வியாபாரம், ரைன் நதியின் மூலமாக பல நாடுகளோடு நடைபெறுகிறது. அவ்வாறே வோல்கா நதி, காஸ்பியன் கடலில் கலக்கிறது. இது ஒரு பெரிய ஏரியாகும். வோல்கா நதியின் மூலமாக வியாபாரம் செய்வது கடினம். எனவே இந்த நதியின் வழியே கண்டப்போக்குவரத்து அதிகம் நடைபெறுவதில்லை.


* 2,3 பாடங்களின் உதவியால் கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.
* ரைன் நதி எந்தெந்த நாடுகளின் வழியே பாய்கிறது?
  1....... 2....... 3....... 4....... 5.......
* டேன்யூப் நதி எந்தெந்தநாடுகளின் வழியே பாய்கிறது.
  1....... 2....... 3....... 4....... 5.......
* ஹங்கேரி சமவெளிப்பகுதி எல்லைகளில் உள்ள இரண்டு மலைத்தொடர்களை குறிப்பிடுக.
  1................. 2............
* கருங்கடலை சுற்றியுள்ள நாடுகள் யாவை?
  1....... 2....... 3....... 4....... 5.......
* கீழே குறிப்பிட்ட நதிகள் கலக்கும் கடல் அல்லது பெருங்கடல் எது?

| நதிகள் | | கடல்/பெருங்கடல் |
|---|---|---|
| 1. | சீன் | |
| 2. | ரைன் | |
| 3. | ஓடர் | |
| 4. | போ | |
| 5. | டேன்யூப் | |
| 6. | விஸ்டுலா | |
| 7. | வோல்கா | |
| 8. | நைபர் | |
| 9. | டான் | |
| 10. | டிவைனா | |

**தீபகற்பங்கள், தீவுகள் மற்றும் விரிகுடாக்கள்**

படத்தில் ஐரோப்பா கடற்கரையை பார்த்தால் கடற்கரை ஓரம் ஒழுங்காக இல்லை. அநேக இடங்களில் கடற்கரைப் பகுதிகள், நிலப்பகுதிக்குள் ஆழமாக பால்டிக்கடல் போன்று உள்ளே நுழைந்து கொண்டிருக்கும். இத்தாலி கடலின் உட்பகுதிக்குள் அதிக பகுதி நுழைந்துள்ளது.

இத்தாலியின் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. இத்தாலி ஒரு தீபகற்ப நாடாகும். ஒரு நாட்டின் மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்டு ஒரு பக்கம் நிலத்தால் சூழப்பட்டிருந்தால் அந்த நாட்டை தீபகற்ப நாடு என்பர். (படம்.5.2) நார்வே மற்றும் ஸ்வீடன் ஆகியவை தீபகற்ப நாடுகளாகும். இதனை படம் பார்த்து அறிந்துகொள்ளுங்கள். இந்த தீபகற்பத்தை ஸ்கான்டிநேவியா தீபகற்பம் என அழைப்பர்.




*படம் 5.2 வளைகுடா மற்றும் தீபகற்பம்*

* இவற்றில் எந்த நாடு தீபகற்பம்? – கிரீஸ் அல்லது பிரான்ஸ்.
* ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாடுகள் தீபகற்பங்களா?
* ஸ்கான்டிநேவியா தீபகற்பத்தில் உள்ள மலைத்தொடர்கள் யாவை?

ஐரோப்பிய நாடுகளில் மூன்று பக்கங்களில் நீரால் சூழப்பட்ட நாடுகள் தவிர நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட நாடுகளும் உள்ளன. இவை தீவுகள் என்று அழைக்கப்படும். இங்கிலாந்து நாடு ஒரு தீவு ஆகும்.


SCERT TELANGANA

* ஐரோப்பாவில் உள்ள பிற தீவு நாடுகளை குறிக்கவும், பட்டியலிடவும்.

பழங்காலத்திலிருந்து கடல்கள், தீபகற்பங்கள், தீவுகள் ஆகியவை மக்கள் வாழ்க்கை முறையை வளர்ச்சியடையச் செய்தது. மத்திய, தென் ஐரோப்பாவில் அதிக பாகம் மலைப்பகுதிகளாக இருப்பதால் போக்குவரத்து மிகவும் கடினமாகவும் செலவு அதிகமானதாகவும் இருக்கிறது. இதனோடு ஒப்பிட்டால் கடற்பயணம் சுலபமானதாகும். போக்குவரத்து செலவு கூட குறைவு. ஆகவே பழங்காலத்தில் ஐரோப்பியர்கள் கடல் வழியையே அதிகமாக பயன்படுத்தினர்.

அதிக அளவில் உள்ள ஆழமான விரிகுடாக்கள் மற்றும் வளைகுடாக்கள் கடல் போக்குவரத்திற்கு சாதகமாக இருந்தன. இவை மூன்று பக்கமும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கும். விரிகுடாவின் முகத்துவாரம் வங்காள விரிகுடாவைப் போல் அகலமாக இருக்கும். வளைகுடாவின் முகத்துவாரம் அதிக குறுகலாக இருக்கும். பால்டிக்கடலை படத்தில் பார்த்தால் பெரிய வளைகுடா பகுதியாக நாம் அடையாளம் காணலாம். வளைகுடா மற்றும் விரிகுடா பகுதிகள் இருப்பதினால் கடல் புயலிலிருந்து துறைமுகங்கள் காக்கப்படுகின்றன. சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் படகுகள் ஓரிடத்தில் நிற்பதற்கும் இவை பயன்படுகின்றன. துறை முகங்களை அமைப்பதற்கும் கப்பல்கள் நிற்பதற்கும் ஆழமான விரிகுடா அல்லது வளைகுடா தேர்ந்தெடுக்கப்படுகிறது. கப்பல்களின் அடிபாகம் தரை தட்டாமல் இருக்க ஆழம் நிறைந்த பகுதி அவசியம்.

* படம் -3ஐ பார்த்து பால்டிக் கடலின் மூன்று பக்கமும் உள்ள நாடுகளின் பெயர்களை எழுதுக.

**காலநிலை**

ஐரோப்பாவின் காலநிலை நம் நாட்டை விட குளிராக இருக்கும். அநேக நாடுகளில் பனிப்பொழிவும், கோடைக் காலமும் நம் நாட்டின் காலநிலை போன்று இருப்பதில்லை.

* ஐரோப்பாவின் காலநிலை நம்நாட்டின் கால நிலையிலிருந்து வேறுபட்டுள்ளது என நீ ஏன் எண்ணுகிறாய்? இதனைப் பற்றி உன் வகுப்பறையில் விவாதி.

**பூமத்திய ரேகையிலிருந்து தூரம்** :

பூமத்திய ரேகைப் பகுதியிலிருந்து நாம் வடதிசை அல்லது தென்திசையை நோக்கி வெகுதூரம் செல்லும் போது அந்த பகுதிகளில் ஆண்டு முழுவதும் குளிராக இருக்கும். உண்மையில் துருவங்கள் அருகே ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும்.

* வட ஐரோப்பா பூமத்தியரேகையிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என உலக உருண்டையைப் பார்த்து தெரிந்துகொள்.
* வட ஐரோப்பா இந்தியாவை விட மிக தூரத்தில் உள்ளதா?
* இத்தாலியை விட நார்வேயில் வெப்பநிலை அதிகமாக இருக்கிறதா?ஏன்?

**அட்லாண்டிக் பெருங்கடல்** :

பூமத்திய ரேகையிலிருந்து ஐரோப்பா அமைந்திருக்கும் இருப்பிடத்தினால் மட்டுமின்றி அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் அங்கிருந்து வீசும் காற்று போன்ற பிற காரணிகளாலும் ஐரோப்பாவின் காலநிலை மாற்றமடைகிறது. இதனால் ஐரோப்பாவில் உட்பகுதியை விட அட்லாண்டிக் பெருங்கடலின் கடல் பகுதிகள் பெரிதும் மாற்றமடைகின்றன.

* அட்லாண்டிக் பெருங்கடல் ஓரத்தில் உள்ள ஐரோப்பிய பகுதிகளை குறித்திடு. அவை கிழக்கு திசையில் உள்ளனவா? மேற்கு திசையில் உள்ளனவா? என்பதை குறிப்பிடவும்.

குளிர்காலத்தில் மேற்கு ஐரோப்பாவில் குளிராகவும், கிழக்கு ஐரோப்பாவில் அதிக குளிராகவும் இருக்கும். அதனால் போலந்து, ரஷ்யாவில் தீவிரமான குளிர் இருக்கும். பிரான்சிலும் இங்கிலாந்திலும் குறைந்த வெப்பம் இருக்கும். அவற்றை விட ரஷ்யாவில் குளிர் காலத்தில் அதிகக் குளிராக இருந்து நதிகளும் கடல்களும் உறைநிலையை அடைகின்றன. எது எவ்வாறு இருப்பினும் மேற்கு ஐரோப்பாவில் கடலோர பகுதிகளுக்கு இந்த நிலை இருக்காது.

SCERT TELANGANA

* ஸ்பெயின் அல்லது ஸ்லோவேக்கியா ஆகிய எந்த நாட்டில் வெதுவெதுப்பான காலநிலை உள்ளது என படத்தைப் பார்த்துக் குறி.

மேற்கு ஐரோப்பா அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அருகில் இருப்பதினால் அங்குள்ள கால நிலையை யூகித்திருப்பீர்கள். இந்தப் பெருங்கடல் ஐரோப்பாவின் காலநிலையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இங்கு கவனிக்கலாம்.

**மேல்காற்றுகள் :**

ஆண்டு முழுவதும் அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து இவை ஐரோப்பாவை நோக்கி வீசுகின்றன. மேற்கு திசையிலிருந்து வீசும் இந்த காற்றுகள் மேற்கு மேல்காற்று என அழைக்கப்படுகிறது (உண்மையில் இந்த காற்றுகள் தென்மேற்கிலிருந்து வடகிழக்கு திசைக்கு வீசுகின்றன). இது பூமியின் வெப்பத்தை விட அதிகமான வெப்பத்தையும் ஈரத்தையும் பெற்றிருக்கும். இது ஆண்டு முழுவதும் வீசிக் கொண்டிருப்பதால் மேற்கு ஐரோப்பாவின் காலநிலையானது இந்த வெதுவெதுப்பான ஈரக்காற்றால் பாதிப்படைகின்றது.

* ஐரோப்பாவின் மீது மேற்குமேல் காற்றின் பாதிப்பு என்ன என்பதை உன்னால் ஊகிக்க முடியுமா?


**வெப்ப கடல் நீரோட்டம்:**

கடல்நீர் எப்போதும் நிலையாக இருக்காது. அவை ஒருஇடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கண்டங்களுக்கிடையே பாய்கிறது. இதையே கடல் நீரோட்டம் என்கிறோம். இது 1000கி.மீ தூரம்வரை நதிகளை போலச் செல்கின்றது.


அப்படிப்பட்ட கடல் நீரோட்டங்கள் அட்லாண்டிக் பெருங்கடலில் தென்படுகின்றன. ஆண்டு முழுவதும் வெப்பமாக உள்ள பூமத்திய ரேகை பகுதியிலிருந்து இந்த நீரோட்டம் உருவாகிறது. இது மேற்கில் வட அமெரிக்காவை நோக்கி செல்கிறது. அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதிகள் மேற்குமேல் காற்றினால் பாதிப்படைகின்றது.

அதன் பிறகு ஐரோப்பாவை நோக்கி வீசுகிறது. இந்த நீரோட்டங்கள் ஐரோப்பாவின் மேற்கு கடலோரங்களை தாக்குகின்றன. இதனை அமெரிக்காவில் வளைகுடா நீரோட்டம் எனவும், ஐரோப்பாவில் வட அட்லாண்டிக் பிளவு நீரோட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.

வளைகுடா நீரோட்டங்கள்காரணமாக வடஅமெரிக்காவில் கிழக்கு கடலோர நீர்ப்பகுதிகள், ஐரோப்பாவிலுள்ள மேற்கு கடலோர நீர்நிலைகள் உறைநிலை அடையாது. அதனால் படகுகள் குளிர்காலத்தில் கூட கடலோர துறைமுகங்களுக்கு செல்கின்றன.




*Map 4:* மேற்கு மேல் காற்றுகள்




*Map 5:* வளைகுடா நீரோட்டம்

SCERT TELANGANA

* வெப்பநீரோட்டங்கள் ஐரோப்பாவை தீவிரமாக பாதிக்கவில்லை என நீ எவ்வாறு எண்ணுகிறாய்?

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

* பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள நீர் .............ஆக இருக்கும். (வெப்பம்/ குளிர்ச்சி / அதிக குளிர்ச்சி)
* பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள வெப்ப நீரோட்டங்கள் .............. நோக்கி அமெரிக்க கடலோர பகுதிகளுக்கு செல்கின்றன. (கிழக்கு/மேற்கு / வடக்கு)
* வெப்பநீரோட்டங்கள் ...............லிருந்து தொடங்குகின்றன. (அட்லாண்டிக் பெருங்கடல்/ மத்திய தரைகடல் / கருங்கடல்)
* ஐரோப்பா கடலோர பகுதிகளை ............ கடல் நீரோட்டங்கள் தொடுகின்றன. (குளிர்ந்த / வெப்ப / பனிநிலை)
* மேற்கு மேல் காற்றுகள் அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து ஐரோப்பாவை நோக்கி ............... வீசுகின்றன. (குளிர்க்காலத்தில் / கோடைக்காலத்தில் / ஆண்டுமுழுதும் )
* இந்தக் காற்றுகள் ............ (உலர்ந்தது / ஈரமானது / குளிர்ச்சியானது)

**மேற்கு ஐரோப்பா: ஆண்டு முழுவதும் பொழியும் மழைத்தூறல்**

வட ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா பகுதிகளில் தென்மேற்கு பருவக்காற்றுகள் அதிகமான ஈரத்தை நிரப்புகின்றன. இந்தக் காற்றுகள் ஆண்டு முழுவதும் ஈரத்தை வைத்துக்கொண்டு மழைப் பொழிய காரணமாகிறது. இந்த இரு பகுதிகளும் ஆண்டு முழுவதும் மழைபெறுகின்றன. ஆனால் நம்நாட்டில் சில மாதங்கள் மட்டுமே மழைபொழியும். மேற்கு ஐரோப்பாவில் ஆண்டு முழுவதும் சிறுதூறல்கள் இருக்கும். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஆனால் நம் நாட்டில் அது போன்ற சிறு தூறல்களுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். மேற்கு ஐரோப்பாவில் சூரிய வெளிச்சத்திற்காக எதிர்நோக்கியிருப்பர்.

* இந்தியாவின் காலநிலைக்கும், ஐரோப்பாவின் காலநிலைக்கும் உள்ள வேறுப்பாட்டைக் கூறுக.

மேற்கு ஐரோப்பிய பகுதிகள் வெப்ப நீரோட்டங்களினால் நன்மை பெறுகின்றன. மீன் வளர்ப்பிற்கு வெதுவெதுப்பான நீரோட்டம் அவசியமானது. மீன்களுக்கு தேவையான உணவும் இதிலிருந்து கிடைக்கிறது. இங்கிலாந்திற்கு அருகிலிருக்கும் வட கடலின் அருகிலுள்ள பகுதியில் மீன் தொழிற்சாலை வளர்ச்சியடைந்துள்ளது. இந்தப்பகுதியை டாகர் கரை என்றழைப்பர். ஐரோப்பிய மக்களுக்கு மீன் ஒரு முதன்மையான உணவாகும். எனவே இங்கு மீன்பிடித்தல் முக்கியமான தொழிலாகும்.

* டாகர்கரை மூலமாக எத்தனை நாடுகள் நன்மை பெறுகின்றன?

**தென்ஐரோப்பாவில் மத்தியதரைகடல் சீதோஷ்ணநிலை:**

நாம் தென் ஐரோப்பிய நாடுகளை கவனித்தால் அதன் தென் திசையில் மத்திய தரைகடல் உள்ளது எனத் தெரியும். அதனால் அவற்றை மத்திய தரைகடல் நாடுகள் என அழைப்பர். அங்கு குறிப்பிட்ட காலநிலை இருப்பதினால் அதைமத்திய தரைகடல் சீதோஷ்ண நிலை என்றழைப்பர்.

* படம்-2ஐப் பார்த்து மத்தியத் தரை கடல் நாடுகள் நான்கினை எழுதுக.

மத்திய தரைகடல் நாடுகள் ஐரோப்பாவில் அதிகமாக தெற்கு பகுதியில் உள்ளன. குளிர்காலத்தில் இங்கு குளிர் அதிகம். ஆனால் கோடைகாலத்தில் இதமாக இருக்கும். இங்கு ஆண்டு முழுவதும் மேற்கு ஐரோப்பாவில் மழை இருக்காது. மேற்குமேல் காற்றுகள் குளிர்காலத்தில் மட்டுமே வீசுகின்றன. இந்த காற்றுகள் மத்திய தரைகடல் நாடுகளுக்கு மழையை தருகின்றன. அதாவது குளிர்காலத்தில் மட்டுமே மழைபொழியும். இது போன்றமழையோடு கூடிய குளிர்காலமும், உலர்ந்த கோடைகாலமும் மத்திய தரைகடல் சீதோஷ்ண நிலை ஆகும்.

* மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களை பார்த்து எந்தெந்த காலநிலை என்று கண்டுபிடிப்பாயா?

நம் நாட்டில் இரண்டு வகையான விவசாய முறையுள்ளன. அவை ரபி(பனி),கரிப்(மழைக்கால). இவை வளர்வதற்கு 9-10 மாதங்கள் ஆகும்.

இலையுதிர் காலம் ஏற்படுவது செப்டம்பர், அக்டோபர். இந்த காலத்தில் இலைகள் சிவப்பு, மஞ்சள் நிறமாக மாறும்.

மற்ற கண்டங்களிலும் அநேக பகுதிகளில் மத்தியதரை கடல் சீதோஷ்ணநிலைக் காணப்படுகிறது. இந்தசீதோஷ்ண நிலை பழத்தோட்டங்கள் மற்றும் பயிர்செய்வதற்கு சாதகமாக உள்ளது. திராட்சை, ஆலிவ்பழம், அத்திப்பழம், ஆரஞ்சு பழம் போன்ற பழத்தோட்டங்கள் தென் ஐரோப்பாவில் அதிகமாக காணப்படுகின்றன.

* மத்திய தரைகடல் மற்றும் ஆந்திரமாநில சீதோஷ்ண நிலைகளை கீழ்கண்ட

அம்சங்களில் ஒப்பிடுக.
பருவங்கள், மழைப்பொழிவு.

* உங்கள் மாநிலத்தில் மழைப்பொழிவு எந்த பருவ காலத்தில் அதிகமாகப் பொழிகிறது?
கோடைகாலம் குளிர்காலம்,
* உங்கள் பகுதியில் குளிர் காலத்தில் தூறல்கள் இருந்தால் அவற்றை வட்டார மொழியில் என்னவென்று அழைப்பர்?
* மீன் பிடித்தலுக்கு உகந்த இடம்............
* பழத்தோட்டங்கள் அதிகம் வளர்க்கப்படும் பகுதி ..............

### நான்கு பருவங்கள்

நம் நாட்டில் மூன்று பருவங்கள் உள்ளன. அவை குளிர்காலம், கோடை காலம், மழைகாலம் ஆனால் அதிகப் படியான ஐரோப்பிய நாடுகள் நான்கு முக்கிய பருவ காலங்களை கொண்டுள்ளன. அவை குளிர்காலம், வசந்த காலம், கோடை காலம் மற்றம் இலையுதிர் காலம், பருவ காலங்களுக்கு ஏற்ப நிலத்தின் தன்மையும், விவசாயமும் மாற்றமடைகிறது. பருவகாலங் களால் இடங்களில் ஏற்படும் மாற்றத்தை குறித்த படங்களை அடுத்த பக்கத்தில் பார்க்கலாம்.

**குளிர்காலம் :**

நவம்பர் மாதம் தொடங்கும் போதே குளிர் ஆரம்பமாகிறது. டிசம்பர் மாத்திலிருந்தே அதிக குளிரும் மற்றும் பனிப்பொழிவும் ஏற்படுகிறது. இந்த பனிப்பொழிவு அதிகமாக மலைகளின் மீதும் குறைவாக சமவெளிகளிலும் இருக்கும் The Sun Shines once in a while சூரிய உதயம் தினமும் மிக தாமதமாக 9 (அல்லது) 10 மணிக்கு தொடங்கியது. மதியம் 4 மணிக்கு சூரிய மறைவு ஏற்படுகிறது. மேகமூட்டத்துடன் இருக்கும் வானம் கருமையாக காட்சியளிக்கும். குளிர் காலத்தில் மரங்கள் இலைகளை உதிர்த்து இலைகள் அற்று காணப்படும்.

**வசந்தகாலம் :**

மார்ச் மாதம் வந்தவுடன் நிலத்தின் இயற்கை காட்சிகள் மாற்றமடையத் தொடங்கும். பகற்பொழுது அதிகமாகவும், இரவு குறைவாகவும் இருக்கும். பனி உருகுதலும் இளம் தளிர்கள் மரங்களிலும் உருவாகும். புதிய பச்சை இலைகளும், வண்ண வண்ண மலர்களும், எல்லா இடங்களிலும் காட்சியளிக்கும் மேய்ச்சல் நிலங்களில் பசுமையான பச்சை புற்கள் வளர்ந்திருக்கும்.

வசந்த காலங்களில் நிலங்கள் உழுது, விதைகள் விதைப்பர் கோதுமை, கம்பு, பார்லி, சோளம், சர்க்கரை-வள்ளிக்கிழங்கு மற்றும் ஓட்ஸ் போன்றவை முதன்மையான விளைச்சல்கள்

◆ மேற்கண்ட பயிர்களில் நம்மாநிலத்தில் விளைவது எது? எங்கு?

**கோடைக்காலம் :**

கோடைக்காலம் ஜுன் முதல் ஆகஸ்ட் வரை நீண்டது இக்காலத்தில் மழை போதுமானதாக இல்லாமலும், சூரிய வெப்பம் அதிகமாகவும் இருக்கும். பகல்பொழுது நம் நாட்டை விட மிக அதிகமாக இருக்கும். சூரிய உதயம் காலை 4 மணிக்கும், சூரிய மறைவு மாலை 8 மணிக்கும் ஏற்படும். இன்னும் கூறவேண்டுமானால், வடக்கே உள்ள நாபான ஸ்வீடன் நாட்டில் சூரிய மறைவு என்பதே இல்லை.


இந்த நாடுகளை நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு (Lands of Midnight sun) என்று அழைப்பர். இருப்பினும் வெப்பத்தின் அளவு குறைவாகவே இருக்கும். இது ஏனென்றால் சூரிய உதயம் மிக உயர்த்தில் ஏற்படாமல் அடிவானத்தில் ஏற்படுகிறது. அதாவது பூமியும், வானமும் ஒன்ற சேர்வது போல் காணுமிடத்தில்

ஐரோப்பிய கண்டத்தில் கோடக்காலம் தான் விவசாயத்திற்கு ஏற்றது. பாசனத்திற்கு நீர் தேவையில்லை அடிக்கடி பொழியும் மழையே பயிர்களுக்கு போதுமானது. கோடைக்கால முடிவில் பயிர்கள் அனைத்தும் அறுவடைக்கு தயராக இருக்கும்.

◆ மேலே உள்ள படததை கவனமாக பார்க்கவும். அவைகள் பல்வேறு பருவகாலங்களுக்கான படங்களாகும் அவற்றில் உன்னால் என்ன வேறுபாடுகளை காணமுடிகிறது

நம் நாட்டில் இரண்டு வகையான விவசாய பருவாலங்கள் உள்ளன அவை ராபி மற்றும் கரிஃப் (குளிர்காலம் மற்றும்

SCERT TELANGANA




பருவகாலம்) அதனால், பயிர்கள், ஒரு வடத்தில் 8 முதல் 10 மாதங்கள் வரை நன்கு வளர வாய்ப்புகள் உள்ளன அதே சமயத்தில் பிரான்ஸ்போன்ற ஐரோப்பிய நாடுகள் விளைச்சலுக்கு வெறும் 6 முதல் 7 மாதங்கள் மட்டுமேமே உள்ளன.

**இலையுதிர் காலம் :**

வானிலை மாற்றம் மறுபடியும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் ஏற்படுகிறது. மரங்களின் இலைகள் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்திற்கு மாறி கீழே விழ ஆரம்பிக்கிறது. விவசாய வேலைகள் நிறுத்தப்படுகிறது வெட்டப்பட்ட வைக்கோல் கள் பண்ணை விலங்குகளுக்கு உணவாக குளிர்காலங்களில் கொடுக்கப் படுகிறது. திராட்சை மற்றும்பிற பழங்கள் பறிக்கப்பட்டு மது, ஜாம், பழச்சாறு தயாரிக்க பல்வேறு நிலைகளில் சேமிக்கப்படுகின்றன.

**நிலம், காலநிலை மற்றும் விவசாயம் :**

ஐரோப்பாவில் உள்ள சமவெளிகள், நதிப் பள்ளத்தாக்குகள், மிகவும் வளமுடையது. ஆண்டு முழுவதும் மழை பொழிவதினால் நதிகள் வற்றாது. எல்லா காலங்களிலும், நதிகள் பாய்கின்றன. சமவெளிநிலங்கள் விவசாயத்திற்கு ஏற்றதாக உள்ளது. இருப்பினும் ஐரோப்பாவிலுள்ள மலையோர நிலங்கள் விவசாயத்திற்கு பயன்படாது. சில நாடுகளில் குறைந்த விவசாய பூமி உள்ளன. நார்வேயில் 3%, இங்கிலாந்தில் 30%, ஜெர்மனியில் 40% நிலம் உள்ளது. இது நம் நாட்டிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. இந்தியாவில் ஏறக்குறைய 55% விவசாய நிலம் உள்ளது.

ஹாலந்தில் (டச்சு) விவசாயத்திற்கு பயன்படும் நிலங்கள் இல்லை. இவர்களுக்கு விவசாய பூமி பற்றாக்குறையாக உள்ளது. இவர்கள் கடல் தண்ணீரால் நிரம்பியுள்ள பகுதிகளில் தண்ணீரை பின்னுக்கு தள்ளி குறுக்கே சுவர்களைக்கட்டி அணையாக்கி அப்பகுதியில் விவசாயம் செய்கின்றனர். இது போல்டர் விவசாயம் என அழைக்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் குளிர் காலத்தில் அதிக குளிர் இருப்பதால் விவசாயம் செய்வது கடினம். இந்தப்பகுதிகள் ஆறு மாதங்கள் வரை பனியால் மூடப்பட்டிருக்கும். இளவேனிர் காலத்தில் பனி உருகுவதினால் பயிர்கள் பக்குவமடைய சரியான சமயமாக இருக்காது. கோடை காலத்தில் பயிர் பக்குவமடைந்து இலையுதிர் காலத்தில் அறுவடைக்கு தயாராக இருக்கும். இதன் விளைவாக வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே பயிர் செய்கிறார்கள். தென் ஐரோப்பாவில் ஆண்டுக்கு இருமுறை பயிர் செய்யப்படுகிறது.

* மத்திய தரைகடல் நாடுகளில் இரண்டு பருவ பயிர்கள் செய்வதற்கான காரணங்களை உன்னால் சொல்ல முடியுமா?

ஐரோப்பா சமவெளிகளின் முக்கிய பயிர் கோதுமை. இதனை பிரான்ஸ், ஜெர்மனி, இரஷ்யா, உக்ரைன், போலந்து, இத்தாலி கிரீஸ் முதலிய நாடுகளில் அதிகமாக பயிர் செய்கிறார்கள். ஐரோப்பா, திராட்சைப் பழத்

SCERT TELANGANA

தோட்டங்களுக்கு பெயர் பெற்றது. திராட்சை பழங்களிலிருந்து மது தயாரிக்கப்படுகிறது. இந்த திராட்சை மதுவிற்கு மத்திய தரைக்கடல் நாடுகளான போர்ச்சுக்கல், ஸ்பெயின், இத்தாலி தென் பிரான்சு ஆகிய நாடுகளில் புகழ்பெற்றது.

ஐரோப்பாவில் பார்லி, ஓட்ஸ், ரை எனும் தானியம் பீட்ரூட், உருளைக்கிழங்கு ஆகியவை முக்கிய பயிர்களாகும். இரஷ்யா, உக்ரைய்ன் ஜெர்மனி ஆகிய நாடுகள் பீட்ரூடிலிருந்து சர்க்கரையை தயார் செய்கின்றன.

**விவசாயப் புரட்சி :**

ஐரோப்பா, ஆசியாவைப் போன்றே சிறு விசாயிகளையும், நில உரிமையாளர் களையும் கொண்டுள்ள கண்டமாகும். ஆனாலும், கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்த முறையில் கடுமையான மாற்றம் ஏற்பட்டு குறைந்த அளவு மக்களே விவசாயத் தொழிலை செய்கின்றன. மேலும் இந்தியாவில் சிறுவிவசாயிகள் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்ட புரட்சியே ஆகும். இதனால் விவசாயிகள் அதிகப்படியான நிலங்களை குறைந்த தொழிலாளிகளை கொண்டு விவசாயம் செய்ய முற்பட்டனர். இயந்திரங்கள், வேதியியல் உரங்களின பயன்பாடு அதிகமாக விவசாயத்தில் கொண்டு வரப்பட்டு, விவசாய விளைப்பொருட்களின விற்பனையே முதன்மையாக்கப்பட்டது. அதே நேரத்தில் அதிகப்படியான பெரிய நில உரிமையாளர் களும், முதலீட்டாளர்களும் பயிரிடாத விளைநிலங்களை பெற்றும் கொண்டனர். விவசாயிகள் வேலைக்காக பெரிய நகரங்களில் உள்ள தொழிறசாலை களுக்கும் மற்றும் பிற வேலைகளுக்கும் மற்றும் பிற வேலைகளுக்கும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



படம் 5.3 அறுவடைக்குப் பிறகு வைக்கோல் கட்டுகள், குளிர் காலத்திற்காக மாட்டுத்தீவனமாக பயன்படுத்தப்படும்

**இன்றைய ஐரோப்பியன் பண்ணைகள் :**

ஐரோப்பாவில் அதிகப்படியான விவசாயம் பண்ணைகளில் நடைபெறுகிறது. பரப்பளவில் 50 to 100 ஏக்கர் அளவுகளில் பண்கைள் இருக்கும். பொதுவாக, விவசாயிகள் தங்களுடைய வீடுகளை தங்களின் பண்கைளிலேயே அமைத்துக் கொள்வர். பண்ணைவீடுகள் அளவில் மிகப்பெரியதாகவும், அதிக எண்ணிக்கையில் அறைகள் கொண்டதாகவும்ட பல்வேறுவித மான பயன்பாட்டிற்காகவும் கட்டுவர். அவை விலங்குகள் தங்குவதற்கு என தனி அறைகளும், உணவு தானியங்களை சேமிக்கும் கிடங்குகளும் Coops and sties for poultny and pigs.

இந்த பெரிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் வேலை செய்ய வேளையாட்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்வர். அவர்கள் கனரக வாகனங்களாக டிராக்டர் மற்றும் அறுவடைக்கருவிகள் போன்றவற்றை பயன்படுத்துவர். ஏறக்குறைய அவர்கள் அனைத்து விளை பொருட்களையும் சந்தையில் விற்பர். சில சமயங்களில் விவசாயிகள் இயந்திரங்களை வாடகைக்கு கூட்டுறவு சங்கங்கள் (Co-oprative societies) மூலமாகவும் பெறுவர்.

- உங்கள் பகுதியில் உள்ள விசாயிகளின் சராசரி நில அளவை கண்டுபிடி?
- உங்கள் பகுதியில் உள்ள விசாயிகள் வாடகைக்கு டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்களை பெறுகின்றனரா?

அதிக நிலகுத்தகை காலம் மற்றும் இயந்திர மயமாக்கப்பட்ட விவசாய கருவிகள் ஐரோப்பிய விவசாயிகளை நல்ல வருமானம் ஈட்டச் செய்கிறது. அவர்கள் வசதியான வீட்டில் வாழவும், புதிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது. அவர்கள் கேஸ்

SCERT TELANGANA

மற்றும் மின்சார அடுப்புகளை சமைப்பதற்காக பயன்படுத்துகின்றனர். ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய விவசாயிகள் தங்களுக்கு தேவையான ரொட்டிகளை தயார் செய்தனர். தற்போது அவர்கள் தங்களுடைய விளைச்சல் அனைத்தும் விற்றுவிடுகின்றனர் மற்றும் தங்களுக்கு தேவையான ரொட்டிகளை கடைகள் மூலமாக தினமும் வாங்குகின்றனர். பலவிதமான ரொட்டி மற்றும் கேக்குகள் அருகில் உள்ள நகரங்களில் கிடைக்கின்றன. புதிய இறைச்சி என்பது பிரெஞ்சு உணவு முறையில் மிகவும் முக்கியமானது. இந்த இறைச்சி கோழிகள், கால்நடைகள் மற்றும் பன்றி போன்ற பண்ணை விலங்குகளிடமிருந்து பெறப்படுகின்றன. இறைச்சி புகை முட்டுதல், உலர்த்துதல், குளிரூட்டுதல் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

அனைத்து வீடுகளிலும் உணவுப் பொருட்களை சேமிக்கும் அறைகளும், நிலவறைகளும் இருக்கும். இவற்றில் இறைச்சி, பாலாடைக்கட்டி மற்றும் மது போன்றவை சேமிக்கப்படுகிறது. தற்போது அவர்கள் இவற்றை சேமிக்க பெரிய குளிர் அறைகளை பயன்படுத்துகின்றனர்.

விவசாயிகள் தங்களுக்கு தேவையான பொருட்களை அருகில் உள்ள நகரங்களின் மூலம் பெறுகின்றனர். மேலும் ரொட்டிகள் மற்றும் பிற உணவுப்பொருட்கள், விவசாய கருவிகள், இயந்திரங்களை கூட அருகில் உள்ள நகரங்கள் மூலமாகவே பெறுகின்றனர்.

### நவீன விவசாயம்

ஐரோப்பாவில் விவசாயம் வணிக ரீதியாக ஒரு தொழில் துறையை போன்றே பின்பற்றப்படுகிறது. விவசாயிகள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையானதையும் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களையும் சந்தைகள் மூலமாகவே செய்கின்றனர். விவசாய தொழில் நுட்ப முறையில் அவர்கள் கலப்பின விதைகளையும், வேதியியல் உரங்களையும், பூச்சி கொல்லிகள் முதலியவைகளை பயன் படுத்துகின்றனர்.

எப்படி இருந்தாலும் நம் நாட்டுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பாவில் மிக குறைந்த மக்களே விவசாயத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளார். அதிகமான மக்கள் தொழில் துறையிலும் மற்றும் வங்கி, போக்குவரத்து முதலிய சேவைத் துறையிலும் உள்ளனர். இவ்வாறு இருந்த போதிலும் விவசாயத்தை நம்பியுள்ள மக்கள்களுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கி பண்ணைகளை உருவாக்க உதவுகிறது. இது இவர்களுக்கு மற்ற தொழிலுடன் பார்க்கும்போது குறைந்த வருமானத்தை தருகிறது. கிராமங்களில் விவசாயத்தை ஏற்படுத்த இந்த மக்கள்களுக்கு அரசாங்கம் பணத்தை வழங்கி வருகிறது.

**கடல் வழிகளைக் கண்டுபிடித்தல் :**

மேற்கு ஐரோப்பாவில் எந்த இடமும் கடலுக்கு தூரத்தில் இல்லை. ஆனால் ஆசியாவில் பல நாடுகள் கடலுக்கு பல ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில்உள்ளன.

* வகுப்பறையில் வரைபடம் அல்லது அட்லாஸைப் பார்த்து ஐரோப்பா கடற்கரை ஓரத்தில் இருக்கும் ஏதேனும் ஆறு மாநகரங்களின் பெயர்களை எழுதுக.


பல நூற்றாண்டுகளாக மக்கள் கடலோரங்களில் ஆயிரக்கணக்கான குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு, கடலில் கிடைக்கும் வளங்களை சேகரித்து அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

ஐரோப்பிய மாலுமிகள் பல நூற்றாண்டுகளாக கடல் பயண அனுபவமும், தைரியமும் இருப்பதோடு படகுகள், கப்பல்கள் தயாரிப்பதில் திறமை பெற்றவர்களாகவும் இருந்தனர். முதலில் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கான படகுகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் கப்பல்களை பன்னாட்டு வியாபாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

பழங்காலத்திலிருந்து ஐரோப்பிய நாட்டவர்கள் இந்தியாவிலும் மற்ற ஆசிய நாடுகளாக சீனா இந்தோனேஷியாவோடு வாணிகம் செய்தனர். அதிகமாக பருத்தி, பட்டு இரத்தினங்கள், தந்தப் பொருட்கள், இலவங்கம், பட்டை மிளகு போன்ற வாசனை திரவியங்களை ஐரோப்பாவில் கிடைக்காத காரணத்தினால் வெள்ளி மற்றும் தங்கத்தை பண்ட மாற்றம்செய்துக் கொண்டு ஐரோப்பாவிற்கு கொண்டு சென்றனர்.

இந்தோனேஷியாவிலிருந்தும்,

SCERT TELANGANA



வரைபடம் - 6 வாணிப வழிகள்

சீனாவிலிருந்தும் இவற்றை எவ்வழியில் ஐரோப்பாவிற்கு கொண்டு சென்றனர் என்பது உனக்குத் தெரியுமா? படம்-6ல் இரண்டு முக்கியமான கடல் வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவது மத்திய கிழக்குப்பகுதிகள், ஈரான், ஆப்கானிஸ்தான், நிலவழி, இரண்டாவது செங்கடல், அரேபியா கடல் மூலமாக வாணிகம்நடைபெற்றது.

ஐநூறு வருடங்களுக்கு முன்பு மேற்கு ஐரோப்பிய மாலுமிகள், வியாபாரிகள் இந்தியாவிற்கு புதிய கடல்வழிகளை கண்டுபிடிக்க தொடங்கினர். அரபு நாடுகள் அடிக்கடி ஐரோப்பியர்களோடு போர் செய்ததினால் அவர்களுக்கு புதிய கடல்வழிகளை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மத்திய தரைகடலின் மீது இத்தாலி வியாபாரிகள் தடை விதித்ததினால் மற்ற நாடுகளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அதனால் மற்ற நாட்டு மாலுமிகள் இந்தியாவிற்கு புதிய கடல்வழிகளை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் மத்திய தரைகடலின் மீது ஆதிக்கம் கொண்ட இத்தாலியர்கள் மற்றும் அரேபியர்கள் பல இன்னல்களை கொடுத்ததினால் புதிய வழிகளுக்கான தேடல் தொடங்கியது.

* படம் 6ஐ பார்த்து புதிய கடல்வழி எது என்பதை குறிப்பிட முடியுமா?

இப்படிப்பட்ட படங்கள் பழைய காலத்தில் இல்லை. பூமி உருண்டையாக இருக்கிறது என்றும், தட்டையாக இல்லை எனவும் ஐரோப்பிய மாலுமிகள் நினைத்தனர். இத்தாலி மாலுமி கிரிஸ்டோபர் கொலம்பஸ் பூமி உருண்டையாக இருப்பதால் மேற்கு திசையில் பயணம் செய்து இந்தியாவை அடையாளம் என நினைத்தார். ஒரு வேளை அட்லாண்டிக் பெருங்கடலின் மீது மேற்கு திசையாக பயணம் செய்தால் சீனாவிற்கு அல்லது இந்தியாவிற்கு முன்போ அல்லது பின்போ சேரலாம் என நினைத்தார்.

* உலக உருண்டை அல்லது அட்லாஸை பார்த்து கொலம்பஸின் எண்ணம் சரியானதா? எனக் கூறுக.

1492ல் கொலம்பஸ் அட்லாண்டிக் பெருங்கடலை கடக்க மூன்று கப்பல்களோடு புறப்பட்டார். 3 மாதங்கள் பயணம் செய்த பிறகு அவர் நிலப்பகுதியை சென்றடைந்தார். இந்தப்பகுதி இந்தியா என எண்ணினார். உண்மையில் அவர் இந்தியாவிற்கு வெகு தொலைவில் இருந்தார். அவர் சேர்ந்த நிலப்பகுதி மேற்கிந்திய தீவுகள். இது அமெரிக்காவிற்கு அருகிலுள்ள எண்ணற்ற தீவுக்கூட்டங்கள் ஆகும்.

கொலம்பஸிற்கு முன்பு ஐரோப்பியர்களுக்கு அமெரிக்காவைப் பற்றி தெரியாது. கொலம்பஸ் சென்றடைந்தது இந்தியா இல்லை என்றும், அவர் ஒரு புதிய கண்டத்தை சென்று அடைந்தார் என்றும் ஐரோப்பியர் தெரிந்துக் கொண்டனர். அதன்பிறகு அநேக ஐரோப்பிய வணிகர்கள் வியாபாரத்திற்காக அமெரிக்கா சென்று அந்நாட்டு மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தி நிரந்தர குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.

SCERT TELANGANA

அந்தக் காலத்தில் பருவக்காற்றுகளை பயன்படுத்தி கப்பல்களை கடலில் செலுத்த தெரிந்து வைத்திருந்தனர். மேற்கு திசையில் அமெரிக்கா நோக்கி வீசும் காற்றின் மூலம் கப்பல் பயணம் செய்தனர். இது மேற்கு பருவக்காற்று இல்லை. இது ஐரோப்பாவை நோக்கி வீசக்கூடிய காற்றுகள் இல்லை. இது ஒரு தனிப்பட்ட ஆண்டு முழுவதும் வீசிக்கொண்டிருக்கும் காற்று ஆகும். தென்மேற்கு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையோரம் வீசும் காற்றுகளை வியாபாரக் காற்றுகள் என்பர் (படம்6)

அவ்வாறே மேற்கு மேல் காற்றுகள் தென்மேற்கிலிருந்து வடகிழக்கிற்கும், வட கிழக்கிலிருந்து தென் மேற்கிற்கும் வீசுகின்றன. (இந்த இருவகையான காற்று ஆண்டு முழுவதும் எதிரெதிர் திசைகள் வீசுகின்றன. இந்த இரண்டு விதமான காற்றுகள் படம்-6ல் காட்டப்பட்டுள்ளது) இந்தக் காற்றுகளே ஐரோப்பியர்களுக்கு அமெரிக்க போக்குவரத்திற்கு உதவியாக இருந்தது. அவர்கள் இந்த வியாபார காற்றை அமெரிக்கா செல்வதற்கு பயன்படுத்திக் கொண்டனர்.

* படம்6ஐ பார்த்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.
* ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா செல்வதற்கு மாலுமிகள் எந்தக் காற்றை பயன்படுத்தினர்?
* ஐரோப்பாவிற்கு திரும்பி வருவதற்கு வியாபார காற்றுகளை பயன்படுத்திக் கொண்டார்களா? காரணம் கூறுக.

கொலம்பசுக்கு அடுத்து ஐரோப்பியர்கள் பல கடல் வழிகளை கண்டுபிடித்தனர். அமெரிக்கா மட்டுமின்றி ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் பல வழிகளை கண்டறிந்தனர். இந்த நாடுகளோடு வியாபாரம் செய்து அளவில்லாத செல்வத்தை கொண்டு சென்றனர். இந்த செல்வங்கள் ஐரோப்பிய தொழிற்சாலைகளுக்கு பயன்பட்டன.

### ஐரோப்பாவில் தொழிற்புரட்சி

தொழிற்புரட்சி 1750ல் இங்கிலாந்தில் தொடங்கி பிரான்ஸ், போலந்து, ஜெர்மனி, ஸ்பெயின், ரஷ்யா முதலிய நாடுகளுக்கு பரவியது. நிலக்கரி சுரங்கங்கள் அதிகம் உள்ள இங்கிலாந்து, ஜெர்மனி நாடுகள் புதிய தொழிற்சாலைகள் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தன. பிறகு ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய சொந்த கனிம வளங்களை குறைவாக பயன்படுத்திக் கொண்டு மற்ற நாடுகளின் இறக்குமதியின் மீது ஆதாரப்பட்டிருந்தது. பழைய சுரங்கங்கள், பழைய தொழிற்சாலைகள் மூடப்பட்டு புதிய இடங்களில் புதிய தொழிற்சாலைகளை ஏற்பாடு செய்து வளர்ந்துக்கொண்டனர். தொழிற்புரட்சியினால் ஐரோப்பியநாடுகள், விவசாய உற்பத்திக்காக பிற நாடுகளை ஆதாரப்பட்டனர். ஐரோப்பிய நாடுகள் உணவுப் பொருள்களின் தேவைக்காகவும், கச்சா பொருள்களுக்காகவும் தங்கள் நாட்டின் விவசாய, சுரங்கத்தின் மேல் குறைவாக ஆதாரப்பட்டனர். அதனால் ஐரோப்பிய நாடுகள் வாணிகத்திற்காக அதிகமாக பிற நாடுகளின் மீது ஆதாரப்பட்டிருந்தனர். முதலில் இவர்களின் வியாபாரம் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா கண்டங்களில் இவர்களுடைய குடியேற்ற நாடுகளோடு நடைபெற்றது. இந்த குடியேற்றங்கள் சுதந்திரத்தைப் பெற்று ஐரோப்பிய நாடுகளோடு வியாபாரம் செய்வதற்கு புதிய வியாபார வழிகளை வகுத்துக்கொண்டன.

### முக்கியச் சொற்கள்

1. தீபகற்பம்
2. தீவு
3. விரிகுடா
4. நீரோட்டங்கள்
5. **வளைகுடா**
6. **காலநிலை**

SCERT TELANGANA

## உமது கற்றலை மேம்படுத்துக

1. ஐரோப்பியர்களின் வாழ்க்கை முறை மற்றும் காலநிலையின் மீது அட்லாண்டிக் பெருங்கடலின் தாக்கம் உள்ளது. இதற்கு சம்மந்தப்பட்ட ஆதாரங்களைக் கூறி ஒரு கட்டுரை வரைக.(AS1)
2. பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக்கொண்டு கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி.(AS5)
   * கீழ்கண்டவற்றில் சுற்றிலும் நிலப்பகுதிகள் கொண்ட நாடு எது?
   (ஹங்கேரி / ருமேனியா / போலந்து / சுவிட்சர்லாந்து)
   * காஸ்பியன் கடலுக்கும், கருங்கடலுக்கும் இடையே எந்த மலைகள் உள்ளது?
   (ஆல்பீஸ் / காகசஸ் )
   * ஆர்க்டிக் கடலோரத்தில் உள்ள நாடுகள் யாவை?
   (ரஷ்யா / ஜெர்மனி / ஸ்வீடன் / நார்வே)
   * கருங்கடலிலிருந்து அட்லாண்டிக் பெருங்கடலுக்கு படகில் செல்ல முடியுமா? முடிந்தால், அந்த கடல்வழியைபடத்தில் குறிக்கவும்.
3. துறைமுகங்களை ஆழமான கடல் பகுதியிலும் விரிகுடாக்களிலும் ஏன் அமைக்கிறார்கள்?(AS1)
4. கிழக்கு ஐரோப்பாவை விட மேற்கு ஐரோப்பாவில் குளிர்காலம் தீவிரம் ஏன் குறைந்து காணப்படுகிறது?(AS1)
5. கருங்கடலை சுற்றியுள்ள நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.(AS1)
6. மேற்கு ஐரோப்பிய மக்களுக்கு, மேற்கு மேல்காற்றுகள் எவ்வாறு பயனளிக்கின்றன?(AS1)
7. மத்திய தரைகடல் காலநிலையில் பண்புகள் யாவை? இந்த பகுதியில் உள்ள நாடுகளின் பெயர்களை எழுதுக.(AS1)
8. ஐரோப்பிய விவசாயத்தை கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?(AS1)
9. தெற்கு ஐரோப்பாவின் விளையும் முக்கிய பயிர்கள் யாவை?(AS1)
10. ஐரோப்பிய மாலுமிகளால் புதிய கடல் மார்கங்கள் கண்டுபிடிக்கபட்டதால் நாடுகளிடையே வாணிபம் மற்றும் கலாச்சார தொடர்புகள் மேம்பட்டன. என்று நீங்கள் எவ்வாறு கூறுவீர்கள்?(AS6)
11. இப்பாடத்தின் கடைசி பத்தியை படித்து உன் கருத்தை தெரிவி.(AS2)
12. நம் நாட்டில் ஐரோப்பிய விவசாய முறை எவ்வாறு இருக்கும் வேறுபாடு எழுது.(AS1)

SCERT TELANGANA

பாடம் 6

# ஆப்பிரிக்கா

இந்தியாவின் மேற்குப் பகுதியில் ஒரு பெரிய கண்டம் உள்ளது. இந்த கண்டத்தில் மிகப் பெரிய பாலைவனங்கள், அடர்ந்த காடுகள், மிக நீளமான மற்றும் அகலமான நதிகள் கணக்கிலடங்கா பெரிய ஏரிகள் பரந்த புல்வெளி நிலங்கள் பல்லாயிரம் மைல்களுக்கு பரவியுள்ளது. நம் நாட்டில் இல்லாத அநேக வகை விலங்குகள் இக்கண்டத்தில் உள்ளன. உலகிலேயே மிகப் பெரிய தங்கம் மற்றும் வைர சுரங்கங்கள் இக்கண்டத்தில் உள்ளன. இக் கண்டத்தின் பெயர் ஆப்ரிக்கா ஆகும். ஒரு விந்தையான செய்தி என்னவெனில் ஆப்பிரிக்கா மனித இனத்தின் பிறப்பிடமாகும். மனித சந்ததி முதலில் இந்தக் கண்டத்தில் தான் தோன்றியது. பிறகு இங்கிருந்து பிற கண்டங்களுக்கு பரவியது.


படம் 7.1 பூமத்திய ரேகைக் காடுகள் - உகாண்டா


படம் 7.2 கென்யாவின் சவன்னா புல்வெளி


படம் 7.3 நைல் நதிக்கரையில் உள்ள எகிப்தின் கெய்ரோ நகரம்

SCERT TELANGANA

- ஆப்பிரிக்கா கண்டத்தை உலகப் படத்தில் பார்த்து பரிசீலனைச் செய்து அதனைச் சுற்றிலும் உள்ள பெருங்கடல்களின் பெயர்களை எழுது. இந்த கண்டத்தை சுற்றியுள்ள கண்டங்களின் பெயர் களையும் எழுதுக.

| நதி | நாடு | பெருங்கடல் |
|---|---|---|
| 1. நைல் | | |
| 2. நைஜர் | | |
| 3. காங்கோ | | |
| 4. ஜாம்பேஜி | | |

## ஆப்பிரிக்கா பரந்த பீடபூமி :

ஆப்ரிக்காவின் இயற்கை அமைப்பு படத்தை கவனி. இக்கண்டத்தில் பெரிய சமவெளிகள் இருப்பதை கவனித்தீர்களா? கடற்கரை ஓரத்தில் குறுகலான சமவெளிகள் இருக்கின்றனவா? மற்ற கண்டம் முழுவதும் பரவலான பீடபூமி உண்டு. நீங்கள் படத்தை நன்றாக கவனித்தால் இந்த பீடபூமியின் உயரம் சமமற்று காணப்படுவதை நீங்கள் கவனிக்கலாம். நைல், காங்கோ நதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளை கவனி. இந்த பீடபூமியின் மேல் அநேக மலைத்தொடர்கள் உண்டு. ஆப்பிரிக்காவிலேயே மிக உயரமான மலைச்சிகரம், தான்ஜானியாவில் உள்ள கிளிமாஞ்சரோ மலை ஆகும்.

உயரமான பீட பூமிகளில் மிக நீளமான குறுகிய பள்ளத்தாக்குகள் உள்ளன. இந்த பள்ளத்தாக்குகளில் ஏரிகள் நிறைந்து உள்ளன.

- ஆப்பிரிக்காவில் விக்டோரியா ஏரியைத் தவிர்த்து மற்ற இரண்டு ஏரிகளை குறித்து அவற்றின் பெயர்களை எழுதுக.
- ஆப்பிரிக்கா படத்தில் கீழேகுறிப்பிட்ட நதிகளைக் குறிப்பிடவும். படம் 7ஐ பயன்படுத்தி ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளைக் குறிக்கவும். எந்த நாட்டின் வழியாக கீழே கொடுக்கப்பட்ட நதிகள் பாய்கின்றன? அவ்வாறே எந்த கடலில் நதிகள் கலக்கின்றன என்பதை குறிக்கவும்.

படம் - 1ஐப் பார்த்து கீழுள்ள கேள்விகளுக்கு விடையளி.

- குறுகிய கடற்கரை சமவெளியின் சராசரி உயரம் எவ்வளவு?
- அதிக பகுதியை ஆக்கிரமித்துள்ள பீட பூமியின் உயரம் எவ்வளவு?
- ஆப்பிரிக்காவில் தெற்கு கிழக்கு பாகங்களில் உள்ள பீட பூமிகளின் உயரம் ..................
- வடக்கில்........... மலைகள் உள்ளது.

ஆப்ரிக்காவின் புறவரிப்படம்



இந்த கண்டத்தின் வடபகுதியில் எந்த நதிகளும் இல்லை. இந்த பகுதியின் பெயர் சஹாரா பாலைவனம் ஆகும். இங்கு மழைப்பொழிவு மிகவும் குறைவு. ஒரு நதி மட்டும் இந்த பாலைவனத்தின் வழியே பாய்கிறது.

பீட பூமியில் பரந்த ஏரிகள் இருப்பதை கவனியுங்கள். ஆப்ரிக்காவில் உள்ள ஏரிகள் அனைத்திலும் பெரியது விக்டோரியா ஏரி ஆகும். இது உலகிலேயே நன்னீர் கிடைக்கக்கூடிய பெரிய ஏரிகளில் ஒன்று. இந்த ஏரியிலிருந்து நைல் நதி உருவாகிறது.

இந்த நதி பிறப்பிடத்தில் அதிக மழைப்பொழிவு இருப்பதினால் அதிகமான நீர் சஹாராபாலைவனத்தின் வழியாகப் பாய்ந்து மத்திய தரைகடலை அடைகிறது. நைல் நதி எகிப்து வழியாகப் பாய்கிறது. எகிப்தின் அதிக பாகம் பாலைவனத்தால் நிரம்பி உள்ளது.

நைல் நதி நாகரிகத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. எகிப்து நாகரிகம் மிகப் பழைமையானது ஆகும். பல ஆயிரம் ஆண்டு காலத்திலிருந்து நைல் நதியின் உதவியால் எகிப்தில் விவசாயம் செய்யப்படுகிறது. (படம்-3) ஐப் பாருங்கள்.

**காலநிலை :**




ஆப்பிரிக்கா கண்டத்தை உலக உருண்டையில் கவனித்தால் பூமத்திய ரேகை இந்த கண்டத்தின் மத்தியில் செல்வதை கவனிக்கலாம். இந்த ரேகை ஆப்ரிக்காவை வட மற்றும் தென் பாகங்களாக பிரிக்கிறது.

- ஆப்பிரிக்கா படத்தை பரிசீலனை செய்து கடக ரேகையைக் படம் 2ல் குறிக்கவும். பூமத்திய ரேகைக்கு தெற்கு திசையின் மகர ரேகை உள்ளது. இந்த ரேகையை வரை படத்தில் குறிக்கவும்.
- பூமத்திய ரேகை மற்ற கண்டங்களின் வழியாகச் செல்கின்றதா?

கடக ரேகை மற்றும் மகர ரேகைக்கு இடையில் உள்ள பகுதியில் வெப்பமாக இருக்கும். உலகிலேயே இது அதிக வெப்ப மண்டல பகுதியாகும். இங்கு குளிர் இருக்காது. இந்தப் பகுதியை பூமத்திய ரேகை மண்டலம் என்பர்.


- ஆப்பிரிக்கா படத்தில் இந்தப் பகுதியைக் குறித்து அங்கு வெப்ப மண்டலமாக எழுதி பூமத்திய ரேகைக்கு வடக்கில் உள்ள பகுதியை ஒரு நிறத்தாலும் தெற்கில் உள்ள பகுதியை வேறு நிறத்தாலும் வண்ணமிடவும்.

இந்த வெப்ப மண்டலத்திற்கு தெற்கு மற்றும் வடக்கில் உள்ள பகுதிகளில் கோடைகாலம் மற்றும் குளிர்காலம் இருக்கும். இதனை மித வெப்ப மண்டலம் என்று அழைப்பர்.

இதுவரையில் நாம் கோடைகாலம் மற்றும் குளிர்காலம் பற்றி பார்த்தோம். ஆனால் இந்த பகுதிகளுக்கு அதிக வெப்பம் இருந்தாலும் மழை பொழிவும் இருக்கும். மற்றொரு பகுதியில் இதே காலநிலை இருந்தாலும் குறைந்த மழை பொழிவு இருக்கும்.


SCERT TELANGANA

படம் 3
ஆப்பிரிக்காவில்
மழைப் பொழிவின்
பங்கீடு




படம் 4
ஆப்பிரிக்காவில்
இயற்கைத் தாவரங்கள்

பூமத்திய ரேகைக் காடுகள்
அகன்ற இலைக்காடுகள், புல்வெளிகள்
சவன்னா
உயரமான பீட பூமிகளில் மிருதுவான புல்
மலைப்பாங்கான இயற்கைத் தாவரம்
பாலைவன தாவரம்



SCERT TELANGANA

## அதிக மழைப்பொழிவுள்ள பகுதிகள் :

ஆப்பிரிக்காவில் பூமத்திய ரேகையின் இரு பக்கங்களிலும் அநேக பகுதிகளில் அதிக மழை பொழிவு இருக்கும். படம்-3ல் அதிக மழை பொழிவு உள்ள இடங்களை குறிப்பிடவும், ஆப்ரிக்காவின் மேற்கு பாகத்திலும், மத்திய பாகத்திலும் இந்தப் பகுதிகள் உள்ளன. அதிக மழைப் பொழிவு மற்றும் வெப்ப கால நிலையினால் இங்கு அடர்ந்த காடுகள் உள்ளன.

## மிதமான மற்றும் குறைந்த மழைப்பொழிவு உள்ள இடங்கள் :

படம்-3ஐக் கவனித்து மிதமான மழைபொழிவு பதிவாகும் பகுதிகளைக் குறிக்கவும். குறைந்த மழைப்பொழிவு பதிவாகும் பகுதிகள், அதிக மழை பொழிவு பதிவாகும் இடங்களை ஒட்டியிருக்கும் மிதமான மழைப்பொழிவுகள் பதிவாகும் பகுதிகளில் கோடைக்காலங்களிலேயே மழை பொழியும். ஆனால் பூமத்திய ரேகைப்பகுதியில் ஆண்டு முழுவதும் மழைப் பொழியும். நம் நாட்டைப் போலவே ஆப்ரிக்காவில் மிதமான மழைப்பொழியும் பகுதிகளில் உலர்ந்த மற்றும் ஈரத்தோடுகூடிய காலநிலை இருக்கும். இந்த பகுதிகளில் இவ்வகையான மழைப்பொழிவினால் மிக உயரமான புல் வளரும். இந்த புல் யானையைக் கூட மறைக்கும் அளவிற்கு உயரமாக வளரும். இவற்றை சவன்னா புல்வெளிகள் என்பர். படம்-4ஐ பரிசீலித்தால் எத்தனையோ வகையான காட்டு விலங்குகள் இந்தப் பகுதியில் உள்ளன. இதைப் பற்றி பின் கற்பீர்கள்.

ஆப்பிரிக்காவில் அதிக நிலப்பகுதி குறைந்த மழை பொழிவு அல்லது பல வருடங்கள் மழையே இல்லாத பகுதிகள் அனைத்தும் வறட்சியாக காணப்படும்.

படம்-3ல் இந்த வறட்சிப்பகுதிகளைக் குறி

ஆப்பிரிக்காவில் வட பகுதியில் பாதி பாகம் இதுபோன்ற வறட்சியானதாகும். இந்த பகுதியை சஹாராபாலைவனம் என்பர். இந்த பாலைவனத்தில் முட்புதர்கள், சிறிய புல்வெளிகள் வளர்கின்றன. மற்றப் பகுதிகள் முழுவதும் மணல், குன்றுகள், மலைகள், சிறிய கற்கள், பாறைகள் நிரம்பி இருக்கும். தெற்கு பகுதியில் உஷ்ண மண்டல பகுதி உண்டு. இதனை கலஹாரி பாலைவனம் என்பர்.

- படம்-2 மற்றும் 4ஐ ஒப்பிட்டுப்பார். கீழ்கண்டவற்றிற்கு விடையளி.
- அதிக மழைபொழிவு உள்ள பகுதிகளில் ............ செடிகள் இருக்கின்றன.
- மிதமான மழைபொழிவு உள்ள பகுதிகளில்..........செடிகள் உள்ளன.
- மழைபொழிவு இல்லாத இடங்களில் ............ செடிகள் உள்ளன.

இந்த பாடத்தின் தொடக்கத்தில் ஆப்ரிக்காவின் பல்வேறு பகுதிகளைக் காட்டக்கூடிய படம் உள்ளது. இந்தப்படத்தில் சில இடங்களில் அடர்ந்த காடுகள் உள்ளன. மற்றொருபுறம் செடிகள், புல் வளர்ச்சி, சில இடங்களில் முட்புதர்கள், சில இடங்களில் எவ்விதமான செடிகளோ, மரங்களோ கிடையாது.

## ஆப்பிரிக்காவின் மக்கள் :

பல்வேறு மொழிகளைப் பேசக்கூடிய மக்கள் அநேக வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்களோடு வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்றனர். பழங்காலத்திலிருந்து இங்கு மக்கள் பழங்குடி இனங்களாக இருந்து விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடை வளர்ப்பு, விவசாயம் செய்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் உயரமான பீட பூமியில் உள்ள சவன்னா புல்வெளிகளில் தங்களுடைய விலங்குகளை மேய வைத்தனர். நதிக்கரையோர பகுதிகளில் உள்ள காடுகளின் ஓரங்களில் விவசாயம் செய்கின்றனர். கடற்கரை ஓரங்களில் அநேக நகரங்கள் இருந்தன. பல வியாபாரிகள் தொலை தூரத்திலிருந்து வந்து இந்த நகரங்களில் வியாபாரம் செய்து வந்தனர்.



படம் 7.4
போபாப் மரம்

SCERT TELANGANA

## ஆப்பிரிக்கா, ஐரோப்பா, மற்றும் ஆசியா

நீண்ட நாட்கள் வரை மற்ற கண்டங்களில் இருப்பவர்களுக்கு ஆப்ரிக்காவைப் பற்றித் தெரியாது. ஐரோப்பியர்களுக்கு வடக்கு கடற்கரையின் ஒரு சில பகுதிகள் தெரிந்திருந்தது. இந்தியர்களுக்கும், ஆசிய வியாபாரிகளுக்கும் கிழக்கு கடற்கரை ஓரத்தைப் பற்றி தெரிந்து வைத்திருந்தனர்.

- படத்தை பரிசீலனை செய்து ஐரோப்பியர்கள், ஆப்ரிக்காவில் வட கடலோரப் பகுதியை எவ்வாறு சென்றடைந்தனர் என்பதை யூகியுங்கள்.
- ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்கா செல்ல எந்த வழியாகச் செல்ல வேண்டும்? செல்லும் போது வழியில் எந்த கடலைக் கடக்க வேண்டும்?

இந்த கடற்கரை பகுதிகள் தவிர ஐரோப்பியர்களுக்கு, இந்திய அல்லது அரபு வியாபாரிகளுக்கு ஆப்ரிக்காவின் மற்ற பகுதிகள் பற்றித் தெரியாது.

500 வருடங்களுக்கு முன்பு ஐரோப்பியர்கள் கடல் வழியாக இந்தியாவை சேர்வதற்கு ஆப்ரிக்காவைச் சுற்றிக் கொண்டு வருவார்கள். அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து செயிண்ட் மதிரா, அஜோர்ஸ் தீவுகளில் தங்குவார்கள். இந்த தீவுகளில் இருந்து தெற்கு திசையில் பயணம் செய்ய இவர்கள் அச்சப்பட்டார்கள். ஏனெனில் அங்கு அதிக வெப்பம் இருக்கும். கடல் வழியாகக் கூட நீரின் வெப்பநிலை அதிகமாக இருக்கும் என நினைத்தார்கள். அடுத்து கி,பி,1498ஆம் வருடம் போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா. ஆப்பிரிக்காவின் தெற்கு முனைக்குச் சென்று, அங்கிருந்து இந்தியாவை அடைந்தார்.



*படம் 7.5 தென் ஆப்ரிக்காவின் நன்னம்பிக்கை முனை*

- படத்தை பரிசீலித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளி
- ஆப்ரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வரவேண்டுமெனில் எந்த வழியாக வரவேண்டும்? எந்த கடலை கடக்க வேண்டும்?
- ஆசியா மற்றும் ஆப்ரிக்கா கண்டங்களில் நிலப்பகுதிகள் இணைந்துள்ளதா?

## ஆப்பிரிக்கா கடலோரப் பகுதிகள் :

ஐரோப்பாவைப் பற்றி நீ கற்கும் போது கடலோரம் துண்டுகளாக இருந்ததை கண்டிருப்பாய். கடற்கரை ஓரத்தில் துருத்திக்கொண்டு வந்த நிலப்பகுதிகளான விரிகுடாக்களைப் பற்றி நீ படித்தாய் அல்லவா! இவை ஐரோப்பிய மக்களின் கடல் பயணத்திற்கு எவ்விதம் பயன்பட்டது என்பதை நினைவுக்கூர்.

- ஆப்பிரிக்கா கண்ட கடலோர பகுதியைப் பாருங்கள். துண்டுகளாகப் பிரிந்த கடலோரம் உங்களுக்குத் தெரிகிறதா?
- ஐரோப்பாவைப் போல விரிகுடாக்கள், கடலோரப்பகுதிகள் உள்ளனவா? ஆப்ரிக்காவில் உள்ள ஒரு விரிகுடா மற்றும் கடலை, படம்-6ஐ பரிசீலித்து குறிப்பிடவும்.


ஐரோப்பியர்கள் முதலில் ஆப்பிரிக்காவின் உள்ளே செல்ல முயற்சித்த போது, ஆப்ரிக்க இனத்தவர் அவர்களோடு போர் செய்தனர். ஐரோப்பியர்கள் வியாபாரத்தில் ஆப்ரிக்கர்களை ஏமாற்றி அவர்களை அடிமைகளாக்கி பிற நாடுகளில் விற்றனர். ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவில் தங்களுடைய ஆட்சியை ஏற்படுத்தி அங்குள்ள வளங்களையும், செல்வத்தையும் சுரண்டிக்கொள்ள எண்ணினர். அதனால் ஆப்ரிக்க மக்கள் அவர்கள் முயற்சிகளைத் தடுத்து அவர்களை தங்களுடைய நிலப்பகுதிக்கு வராமல் தடுத்தனர்.

## அடிமை வியாபாரம் :

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேறினர். அங்கு நிலங்களில் விவசாயம் செய்தனர். அங்கு அதிக அளவு பூமி இருந்தும் வேலை செய்ய மக்கள் போதுமான அளவு இல்லை. இந்த தேவையை தீர்த்துக்கொள்ள ஆப்ரிக்காவிலிருந்து அடிமை வியாபாரம் தொடங்கியது.

SCERT TELANGANA

ஐரோப்பியர்கள் கினியாவின் கடலோர பகுதிகளையும், கிழக்கு ஆப்ரிக்காவையும் கைப்பற்றியதோடு அம்மக்களையும் அடிமைகளாக ஆக்கிக்கொண்டனர். இவ்வாறு பிடித்துக் கொண்டவர்களை கடலோரத்திற்கு அழைத்துச் சென்று ஐரோப்பியர்களுக்கு விற்றுவிட்டனர். அதற்கு பதிலாக ஆப்ரிக்காவில் சில இனப்பெரியவர்கள் ஐரோப்பியரிடம் இருந்து துப்பாக்கிகள், இரும்பு ஆயுதங்கள், மது, துணி வகைகளைப் பெற்றனர்.



படம் 7.6 அடிமை

இவ்வாறு அடிமைகளாக இருந்தவர்களை பல துன்பங்களுக்கு ஆளாக்கினர். கடலோரத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லும் வழியில் அவர்கள் கொடுக்கும் துன்பங்களால் சிலர் இறந்து விடுவர். கப்பல்கள் முழுவதும் அடிமைகளே இருப்பார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், மருந்துகள் அவர்களிடம் இருக்காது. அந்த நாளில் ஆப்ரிக்காவில் இருந்து அமெரிக்காவிற்குச் செல்ல பல மாதங்கள் ஆகும்.

அதனால் அடிமைகள் பலர் உடல் நலிவுற்று, சரியான உணவின்றி, செல்லும் வழியிலேயே இறந்துவிடுவார்கள்.

அமெரிக்காவிலும் அவர்களை மனிதத்தன்மை அற்ற முறையில் நடத்தினர். அவர்களிடம் எல்லா வேலைகளையும் செய்து கொண்டு, தேவையான உணவு, இடவசதி செய்து தரவில்லை. இவ்வாறு ஆப்ரிக்காவிலிருந்து பல இலட்சம் பேர் அடிமைகளாக அமெரிக்காவின் வட தென் பகுதிகளுக்கும், தீவுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பலர் இறந்து விட்டனர். 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் நிறைய தொழிலகங்கள் இந்த அடிமை நிர்வாகம் செய்தனர். 19-ம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் முடிவு பெற்றது. அமெரிக்காவில் இவ்வாறு வந்த அடிமைகள் சுதந்திர அமெரிக்க குடி மக்களாக 1860ல் அறிவிக்கப்பட்டனர்.

## ஐரோப்பியர் குடியேற்றங்கள் :

இதற்கு முன்பு ஐரோப்பியர்கள் இந்தியாவை சேர்வதற்கு ஆப்ரிக்காவை சுற்றிக்கொண்டு வந்தார்கள் என்பதை தெரிந்துக் கொண்டோம். அவ்வப்போது ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவின் துறை முகங்களில் தங்கத் தொடங்கினர். மெதுவாக போர்ச்சுகீசியர்கள், டச்சுக் காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மனியர்கள் பல இடங்களில் நுழைந்து குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். 19ம் நூற்றாண்டின் ஆப்ரிக்கா அரசியல் படத்தைப் பாருங்கள். படம் 5-ல் ஐரோப்பியர்கள் குடியேற்றங்களை ஏற்படுத்திக்கொண்டனர்

**படம் 5 1913ல் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியரின் குடியேற்றப் பகுதிகள்**




◆ ஆப்ரிக்காவில் குடியேற்றங்கள் ஏற்படுத்திக் கொண்ட ஐரோப்பா நாடுகளை படத்தில் உங்களால் குறிக்க முடியுமா?

◆ சூடான் மற்றும் ஜைரேவில் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் யாவை?

SCERT TELANGANA

- குடியேற்றம் ஏற்படாத ஆப்ரிக்க பகுதி ஏதேனும் ஒன்றை காட்ட முடியுமா?

ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவில் குடியேற்றங் களை ஏற்படுத்திக்கொண்டு கண்டத்தின் உட்பகுதிக்குச் சென்றனர். அவர்கள் நைல் நதியின் பிறப்பிடம் வரை தெற்கு நோக்கி சென்றனர். மேற்குப் பகுதியில் நைசர் பள்ளத்தாக்கை பிடித்துக் கொண்டனர். தெற்கு திசையில் நன்னம்பிக்கை முனை வரை சென்று ஜாம்பேஜி நதியின் சுற்றுப்புற பகுதிகளை கைப்பற்றினர்.

ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவிலுள்ள மரங்கள் மற்றும் கனிமவளங்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்தனர். உண்மையில் ஆப்ரிக்கா கண்டத்தின் தெற்குப் பகுதியிலுள்ள தங்க வைர சுரங்கங்கள் இந்நாளிலும் ஐரோப்பியரின் தொழிலகங்கள் கீழ் உள்ளது. ஜாம்பியா, ஜிம்பாபேயில் விலை மதிக்க முடியாத செம்பு சுரங்கங்கள் உள்ளன. நீண்ட நாட்களாக அவர்களுக்கு இந்த கனிமவளங்கள் முக்கிய ஏற்றுமதிகளாக உள்ளன. ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவிலிருந்து வளங்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்தவில்லை. அவர்கள் தேயிலை, காபி, ரப்பர், புகையிலை போன்ற தோட்டங்களை வளர்த்து, அவற்றை ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்து வந்தனர்.

## நைஜீரியாவின் தோட்டக்கலை

உனக்கு சாக்லேட்டுகள் சாப்பிடுவ தென்றால் மிகவும் பிடிக்கும் அல்லவா, இவை நைஜீரியாவில் உற்பத்தி செய்யப்படும் கோ–கோ வினால் தயாரிக்கப்படுகிறது. தென் நைஜீரியாவில் கோ–கோ–வை தவிர ரப்பர் மற்றும் பாமாயில் தரும் பனை மரங்களும் காணப்படுகின்றன. பனை மரத்தின் பழங்களில் இருந்து, எண்ணெய் எடுக்கப்படுகிறது. இப்பழங்களை பறிக்க, நைஜர் நதியை படகில் கடந்து செல்ல வேண்டும். இதற்கு முன்பு இம்மரங்கள் அடர்ந்த வனப்பகுதிகளில் காணப்பட்டன. இவற்றின் தேவை பெருகியதன் மூலம், அடர்ந்த வனப்பகுதிகள் சீரமைக்கப்பட்டு, இவ்வகை மரங்கள் பயிரிடப்பட்டன. கோகோ, ரப்பர், பனை, பாமாயில் ஆகியவை நைஜீரியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

- நைஜீரியா வரைபடத்தில் இவ்வகை பயிர்கள் விளையும் இடங்களை குறிப்பிட்டு காட்டுக. (Map 4)

இத்தோட்டக்கலை ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது. ஆனால் இக்காடுகளில் விளையும் விளைபொருட்களின் அளவு அவர்களை திருப்பதிபடுத்தவில்லை. மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவிற்கு உற்பத்தியை பெருக்க வேண்டும் எனற நினைத்தனர்.

இத்தோட்டக்கலை இவர்களுக்கு மிகவும் எளிதானதாக இருந்தது. இம்மரங்கள் ஒரே இடங்களில் இருப்பதால், இவற்றை காட்டுக்குள் சென்று இடமறியவதும், அவற்றை அறுவடை செய்யும் முறையும் எளிமையாகனதாக இருந்தது. ஆதலால் உற்பத்தியும் அதிகமானது. ஆங்கிலேயர்கள் மேற்பார்வையாளர் மேலாளர்களாகவும், நைஜீரியன் மக்கள் தோட்டக்கலையில் பணியாளர்களாகவும் வேலைக்கு சேர்ந்தனர். இதனால் நைஜீரியாவில் பனை, கோகோ மற்றும் ரப்பர் வாணிபம் உருவானது.

இவை மட்டுமல்லாது, இத்தோட்ட கலையின் மற்றொரு பகுதியாக, கோகோ பழத்தின் இருந்து விதையை பிரித்தல், உயர வைத்தல், பனை பழத்தில் இருந்து எண்ணெயை பிரித்தெடுத்தல், ரப்பர் மரத்தில் இருந்து மாலை பிரித்தெடுத்தல் என பல செயல்முறைகள் உருவாக்கப்பட்டன.

பனை, கோகோ, மற்றும் ரப்பர் வாணிபம் மூலம் ஆங்கிலேயர்கள் லாபமடைந்தனர்.

அத்தோட்டங்களில் நைஜீரியன் மக்கள் விவசாய கூலிகளாகவே இருந்தனர். நமது இந்தியாவிலும் தேநீர் மற்றும் காபி தோட்டக்கலை வியாபார ரீதியிலேயே உருவாக்கப்பட்டது. 1960ல் நைஜீரியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. அதன்பின் தோட்டக்கலை மற்றும் அற்றால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வாணிபம் மெல்ல மெல்ல இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதன் மூலம் இவர்கள் பயனடைந்தனர்.

SCERT TELANGANA

## சுதந்திர ஆப்பிரிக்கா :

ஆப்ரிக்கா நாடுகள் ஐரோப்பியரின் ஆட்சிய லிருந்து கடைசி நூற்றாண்டில் சுதந்திரம் பெற்றுள்ளது. புதிய நாடுகளின் தோற்றம் ஏற்பட்டு அங்கிருந்த மக்கள் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டனர். ஆனால் எத்தனையோ ஐரோப்பியர்கள் நிரந்தரமாக குடியேறினர். ஆனால் ஆப்ரிக்கர்கள் மெதுவாக தங்கள் நாடு, காடுகள், சுரங்கங்கள், மற்றும் விவசாய உற்பத்தியின் மீது ஆதிக்கம் செலுத்தினர்.

### ஆப்பிரிக்காவின் கனிம வளம் :

ஆப்பிரிக்க கண்டம். நிலக்கிரி, செம்பு, தகரம் போன்ற கனிம வளம் நிறைந்த பகுதியாக விளங்குகிறது. இதைத்தவிர விலை மதிப்புமிக்க தங்கம் மற்றும் வைரத்தை உற்பத்தி செய்யும் நாடாகவும் விளங்குகிறது. இவ்வளங்களை அந்நாட்டினரையே அடிமை கூலிகளாக கொண்டு சுரண்டுவதையே ஐரோப்பியர்கள் முக்கிய குறிக்கோளாக கொண்டு உள்ளனர். பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்கள் இன்றும் சுதந்திர ஆப்பிரிக்காவின் கனிம வளங்களை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளன.

உதாரணமாக, பெட்ரோலியம் நைஜிரியாவின் மிக முக்கிய கனிம வளமாகும். இங்கு டச்சு நிறுவனம் ஒன்று பெட்ரோலிய பொருட்களை எடுத்தல், மற்றும் சுத்திகரிப்பு செய்யும் வேலையை செய்து வருகிறது. நைஜீரியாவில் 1958 இருந்து, இத்தாது எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஹார்கோர்ட் மற்றும் வாரிபோர்ட் துறைமுகங்களில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படுள்ளன.

இத்தொழிற்சாலைகள் இன்னும் பல வெளிநாட்டு நிறுகூனங்களின் கைவசமே உள்ளன. நைஜீரிய அரசு ஒரு சிறு பங்குதாரராக மட்டுமே செயல்படுகிறது. இந்நிலையே ஆப்பிரிக்காவின் பல கனிம சுரங்களிலும் காணப்படுகிறது.

சுரங்க மற்றும் சுத்திகரிப்பு செயல்முறைகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் பல புதிய தொழில் நுட்ப முறைகளையும், முதலீடுகளையும் புகுத்துவதால் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு எளிதாக கிடைக்கிறது. இவர்களை பயன்படுத்தி, அந்நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்டுகின்றன. இவை அங்குள்ள இயற்கை சுற்றுசூழலை பெரிதும் பாதிக்கும் என்ற போதிலும் இந்நிறுவனங்கள் அவற்றை பெரிதாக கண்டு கொள்வதில்லை. இது மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கின்றன.

### முக்கியச் சொற்கள்

1. குடியேற்றங்கள்
2. அடிமை
3. பீடபூமி

- ஆப்ரிக்கா நாடுகளை தெரிந்துக் கொண்டு அவற்றை படம் 7-ல் வண்ணங்களை தீட்டி நாடுகளின் பெயர்களை எழுதுக.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஐரோப்பாவிலிருந்து ஆப்ரிக்காவின் வட பாகத்தை சேர வேண்டுமென்றால் எந்த கடலை தாண்டிச் செல்ல வேண்டும்?(AS5)
2. ஐரோப்பியர்கள் ஆப்ரிக்காவின் உள்பகுதிகளில் சென்றபொழுது அவர்கள் எதிர்கொண்ட மூன்று சிக்கல்கள் யாவை?(AS1)
3. ஆப்ரிக்காவின் இரண்டு பெரிய பாலைவனங்கள் யாவை?(AS1)
4. இந்த பாடத்தில் ஆப்ரிக்காவிற்கு சம்பந்தப்பட்ட இரண்டு படங்களை கொடுத்துள்ளோம். அந்த இரண்டு படங்களை பரிசீலித்து நைஜீரியா. ஜிம்பாப்வே நாடுகள் எந்த ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தில் உள்ளது என குறிப்பிடவும்.(AS5)
5. ஆப்ரிக்காவில் பூமத்திய ரேகைப் பகுதியில் அதிகக் காடுகள் உள்ள இரண்டு நாடுகளை குறிக்கவும்.(AS5)
6. ஆப்ரிக்காவில் ஐரோப்பியர்கள் எந்த பொருட்களை வியாபாரம் செய்தனர்? அவர்கள் வியாபாரத்திற்காக எந்த வகையான விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தனர்?(AS1)
7. அடிமை வியாபாரத்தில் லாபம் பெற்றவர்கள் யார்? அமெரிக்கர்களுக்கு ஏன் அடிமைகள் தேவைப்பட்டனர்?(AS1)
8. அடிமை வியாபாரம் மிகவும் துன்பத்தை விளைவிக்க கூடியது என்று நீ எவ்வாறு கருதுகிறாய்?(AS6)
9. இப்பாடத்தின் கடைசி பத்தியை படித்து அது குறித்து உன் கருத்தை எழுதுக.(AS2)

SCERT TELANGANA

வரைபடம் 6 : ஆப்பிரிக்க நாடுகள்



படம் 6ல் உள்ள வரைபடத்தை பார்த்து நாடுகளை குறிப்பிடவும். அனைத்து நாடுகளுக்கும் வண்ணமிடவும்.

வரைபடம் 6 : ஆப்பிரிக்க நாடுகள்



SCERT TELANGANA

பாடம் 7

# கைவினைப் பொருட்களும் கைத்தறிகளும்

Part - I

SCERT TELANGANA

## அந்துகுலாவில் கூடை செய்பவர்:

தேவன் என்பவர் ஒரு கூடை செய்பவர். அவர் மகபூப்நகர் மாவட்டத்தில் கல்வகுர்த்தி பகுதியில் உள்ள அந்துகுலா எனும் கிராமத்தில் வசிப்பவர். அவரின் வயது 35 ஆண்டுகள். அவர் எருகுண எனும் மலையினத்தை சார்ந்தவர். தேவனின் குடும்பத்தினர் பல தலைமுறைகளாக கூடைகள் செய்து வருகின்றனர் அவருடைய மனைவியான தேவி என்பவரும், கூடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார். அவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். தேவனின் தந்தையார் மற்ற 25 குடும்பங்களுடன் 30 ஆண்டுகளுக்குமுன் நகரத்திற்கு வந்தார். கூடைகளுக்கான தேவை அவர்களின் சொந்த ஊரில் குறைந்ததால் அவர் நகரத்திற்கு வந்தார். அவர் தற்போது சாதர் காட்டு நடைபாதையில் கூடை விற்கிறார். தேவன் ஈச்சமர இலைகளின் முட்களை பயன்படுத்துகிறார். கத்தியை பயன்படுத்தி இலைகளை செதுக்கி அவற்றை சூரிய ஒளியில் உலர்த்துவதற்காக வைத்திருப்பார். கூடைகள் செய்வதற்கு தேவையான மூலப்பொருட்களான பேரீச்சமர கோரைகளை தனது சொந்த கிராமமான அந்துகுலத்தில் இருந்து கட்டுகட்டாக கொண்டு வருவார். அந்துகுலத்தில் உள்ள அவரது உறவினர்கள் தங்களது கிராமத்தை ஒட்டிய புதர்களிலிருந்து முட்களை சேகரிப்பர். அவற்றை தேவன் போன்ற கூடைசெய்பவர்களுக்கு விற்பர் அந்துகுலம் ஐதராபாத்திலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ளது.

- கூடை முடைவதற்கு பயன்படும் மூலப்பொருள் யாது? அவற்றை யார் சேகரிப்பர்?

- கூடை முடைபவர்களால் பயன்படுத்தப் படும் கருவிகள் யாவை?

பேரிச்சம்பழ கோரைகளின் கட்டு ஒவ்வொன்றும் ரூ.120 விலைக்கு விற்கப்படும். தேவனும், மற்ற கூடை செய்பவர்களும் மாதத்திற்கு 10 கட்டுகள் கொண்டு வருவர். தேவனின் குடும்பம் ஒரு கட்டுக்கொண்டு 25 கூடைகளை பின்னுவர். பத்துக் கட்டு கோரைகள் மூலம் 250 கூடைகளை அவர்களால் செய்யப்படும். ஒரு கூடை செய்ய 30 நிமிடம் ஆகும். அவர் காலை 10 முதல் மாலை 5 வரை சில நேரம் ஓய்வு எடுக்கவும், சாப்பிடவும் இடைவெளிவிட்டு கூடைகளை செய்வார்.



பாடம் : 7.1 மூங்கில் உற்பத்திப் பொருட்கள் கொண்ட கடை

தேவன் ஒவ்வொரு கூடையையும் ரூ 20க்கு விற்கிறார். சில நேரங்களில் வாடிக்கையாளர்கள் குடும்ப சடங்குகளுக்காக பெரிய பெரிய கூடைகளை கேட்பர். அவர் ஆண்டு முழுவதும் கூடை விற்கிறார். இரு மாதங்களில்



பாடம் : 7.2 கூடை முடைதல்

அவர் ரூ.5000 மதிப்புள்ள கூடைகளை விற்பார். அதற்காக ஆகும் செலவு, போக்குவரத்து செலவு ரூ.100 உடன் ரூ. 1200 எனவே இரண்டு மாதங்களில் அவர் குடும்பத்திற்கு வருவாய் ரூ.3500/- ஆகும். தன்னுடைய குடும்ப செலவை சந்திக்க தேவையான வருவாயை அவரால் ஈடுகட்ட முடியவில்லை. தேவன் தன்னுடைய வருமானத்தை கூட்டுவதற்காக மூங்கில் உற்பத்திகளான தூக்கிகள் மற்றும் நிறுத்திகள் ஆகியவற்றை வாங்கி விற்கிறார்.

கூடை தயாரிப்பு ஒரு கைவினை தொழில். இதில் பேரிச்சம்பழ கோரைகளும், குச்சிகளும், மூங்கில்களும் பயனபடுத்தப்படுகின்றன. பெரிய தொழிற்சாலைகளுக்கு அதிக அளவில் காடுகளை பயன்படுத்துவதால் அவை அழிந்து வருகின்றன. இதனால் பாரம்பரியமாக காடுகளின் மேல் ஆதாரப்பட்டு வரும் மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகிறது. மேலும் அதுபோன்ற உற்பத்திகளுக்கு கனிசமான அளவில் தேவை குறைந்து விட்டது. இதனால் அவர்கள் கிராமப் பகுதிகளிலிருந்து நகரப்பகுதிகளுக்கு உயிர்வாழும் பொருட்டு குடிபெயர்ந்து போக நேரிடுகிறது. பாரம்பரிய செயல்களில் ஈடுபடும் பலருக்கு இது உண்மை என்பது தெரியும்.

எனினும் அவர்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் நகர்புற பகுதிகளில் வாழ நேரிடுகிறது.

## நகரத்து ஒதுக்குப்பகுதி:

தேவன் ஒரு ஒதுக்கப்பட்ட பகுதியில் வசிக்கிறார். அங்கு தகுந்த கழிவுநீர் கால்வாய் இல்லை, அதிலிருந்து கெட்ட நாற்றம் வெளிவருவதால் கொசுக்களும், ஈக்களும் பெருகின. மின்சார இணைப்பு (அ) பாதுகாப்பான குடிநீர் அங்கு இல்லை. தேவனின் குடிசை மூங்கில். பாய்கள், புதுப்பிக்கப்பட்ட பிளாஸ்டிக் பைகள், மற்றும் தார் ஆடைகள் ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ளது. மழைக் காலத்தின்போது அவர்களின் கூடாரக் கூரை நீர் வழிந்து, வீட்டில் வெள்ளம் புகுந்து ஓடும். நகராட்சி கழக அலுவலர்கள் சிலநேரங்களில் தேவன் மற்றும் பிற கூடை செய்யும் குடும்பங்களை அப்புறப்படுத்துவர். ஆயினும் அவர்கள் மறுபடியும் சரிசெய்துக்கொள்வர்.

கடும் போராட்டங்களிலும் தேவன் போன்ற மக்கள் நகராட்சிகளில் ஓட்டு உரிமையின்றி மறுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எந்த அடையாளமோ, அல்லது குடியிருப்பதற்கான சான்றுகளோ இல்லாததால் அவர்களுக்கு குடும்ப அட்டைகளும் மறுக்கப்படுகின்றன. எனவே அவர்களால் நகரத்தின் ஜனநாயக வழிமுறைகளில் கலந்துக்கொள்ள முடிவதில்லை அல்லது ஏழை எளியோருக்கான சலுகைகளும் பெற முடிவதில்லை.

## கூடை செய்பவர்:

எருகுலா இனத்தவர் பொதுவாக கூடைசெய்வதில் ஈடுபட்டு ஆந்திரத்தின் பல பகுதிகளில் வாழ்கின்றனர். அவர்கள் எருகுலத்தோர் என அழைக்கப்பட காரணம்



பாடம் : 7.3 கூடை முடைதல்

SCERT TELANGANA

என்னவென்றால் அவர்கள் குலத்தில் பெண்கள் “ஜோதிடம்” சொல்வது அவர்களின் குலதோழிலாகும். இந்த இனங்கள் எருகுலத்து மொழியை பேசுகின்றனர். தெலுங்கு, தமிழ் மற்றும் கன்னட மொழிகளின் சொற்கள் இம்மொழியில் பயன்படுத்தப் படுகின்றன.

சரியான விடையை தேர்ந்தெடு:

- காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்ட காரணம் யாது?
  கூடை பின்னுபவர்கள்/ பெரிய தொழிற்சாலைகள்
- தேவன் மூங்கில் பொருட்களை மண்டியில் / அந்துகுல காட்டில் இருந்து வாங்குகிறார்.
- மூலப்பொருட்களுக்கு ஆகும் செலவுகளும், உற்பத்தியில் இருந்து கிடைக்கும் வருவாயை அட்டவணையிட்டு காட்டு.

- தேவன் போன்ற மக்களுக்கு குடும்ப அட்டைகள் தரப்பட வேண்டுமென்றும், ஐதராபாத்தில் விலக்களிக்க அனுமதிக்க படவேண்டுமென்றும் நீ கருதுகிறாயா?

இதுவரை நீங்கள் மூங்கில் மற்றும் ஈச்சமர கோரைகளால் செய்யப்படும் கூடைகள் போன்ற பொருட்களை இயற்கை வளங்கள் கொண்டு தயாரிக்கப்படுவதை அறிந்தீர்கள். மேலும் சில பொருட்களுக்கு சிக்கலான கருவிகள் கொண்டு சிக்கலான முறையில் உருவாக்க மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன. அதுபோன்ற பொருட்களுக்கு உதாரணங்கள் பருத்தி / பட்டு போன்றவற்றால் தயாரான ஆடைகள். தற்போது துணிகள் கைத்தறிகளிலும், விசைத்தறிகளிலும் அல்லது பெரிய ஆலைகளிலும் தயாரிக்கப்படுகின்றன. நாம் அவை எவ்வாறு கைத்தறி நெசவாளர்களால் உருவாக்கப்படுகிறது என்பதை பார்ப்போம்.

SCERT TELANGANA

# பகுதி - II

## போச்சம்பள்ளி கைத்தறி நெசவாளர்கள்:

போச்சம்பள்ளி என்பது ஆந்திர மாநிலத்தில் உள்ள நல்கொண்டா பகுதியில் உள்ள ஒரு சிறு நகரம் ஆகும். இங்குள்ள நெசவாளர்கள் ‘இக்கட்’ புடவைகள் வகைகளை தயாரிக்கின்றனர். அவை உலக புகழ் பெற்றவை. ‘இக்கட்’ எனும் சொல் ஒரு குறிப்பிட்ட நெசவு முறைக்காக பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் துணிகள் சாயமிடப்பட்டு பந்தினி, போச்சம்பள்ளி என்றும் அடிக்கடி அழைக்கப்படுகிறது. அவை இயல்பான வடிவியல் அமைப்புகள் கொண்டு உயர்ரக பட்டுசேலைகளாக மூன்று வண்ணங்களிலும், கரைகளைக்கொண்டும் கிடைக்கின்றன. ஏறக்குறைய 100 கிராமங்களில் இத்தொழில் செய்யும் 10000 நெசவுக் குடும்பங்கள் உள்ளன.

போச்சம்பள்ளி சேலைகள் ஒரு சிறப்பான வடிவத்தையும், வண்ணத்தையும் கொண்டு மற்ற பட்டு சேலைகளிலிருந்து வேறுப்பட்டுள்ளது. இதுவே இந்தியாவிலேயே முதன் முதலாக காப் புரிமை பெற்ற முதல் கைத்தறி ஆடையாகும். இதன் பொருட்டு உலகில் வேறுயாரும் போச்சம்பள்ளி இக்கட் சேலைகள் எனும் பெயரில் கைத்தறி சேலைகளை உற்பத்திச் செய்யமுடியாது. போச்சம்பள்ளியிலும், அதன் சுற்றுபுறங்களிலும் உற்பத்தியாகும் சேலைகள் மட்டுமே முத்திரையை கொண்டசேலைகளாக விற்கமுடியும். இந்த சேலைகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. பட்டு சேலைகளை தயாரிக்க மூலப்பொருட்களான பட்டு இழை, வண்ணங்கள், பருத்தி நூல் போன்றவை தேவை. இவை நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அவற்றை அவர்கள் சந்தைகளிலிருந்து வாங்கி வரவேண்டும். பட்டுஇழைகள் பட்டு புழுக்களி லிருந்து உருவாக்கப்படுகின்றன. பட்டு புழு வளர்ப்பு சிறு விவசாயிகளால் மேற்கொள்ளப் படுகின்றன. பருத்தி பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை நூல்களாக தொழிற்சாலைகளிலோ (அ) வீடுகளிலோ உருவாக்கப்படுகின்றன. வண்ணங்கள் தொழிற் சாலைகளில் அடிக்கடி தயாரிக்கப்படுகின்றன. நெசவாளர்கள் நூல்களையும், சாயங்களையும் சந்தைகளிலிருந்து வாங்குகின்றனர்.

**கருவிகள்** : நெசவாளர்கள் நெசவு செய்வதற்கு முக்கிய கருவியான கைத்தறிகளை சொந்தமாக வைத்திருப்பர். இவைகளுடன் அவர்கள் சிறு சிறு கத்திகளையும் பயன்படுத்துவர். நெசவாளர்களுக்கு சேலைகளை தயாரிப்பதில் வடிவமைப்பை தெரிந்துக்கொள்ள இது முக்கியமானது. சேலைகள் பார்த்தால் அதன் மீது பல நெருக்கமான வடிவங்கள் இருப்பதைக் காணலாம். இந்த அமைப்புகள் சிறப்பான குறிப்புகளுடன் காகித தாள்களின் மீது தெளிவாக வடிவமைக்கப்பட்டிருக்கும். நெசவாளர்கள் எந்தவொரு தவறுமின்றி இதைக் கடைபிடிப்பர். அதிக அனுபவங்களால் அவர்கள் புதுபுது வடிவங்களோடு தயாரிப்பர்.

◆ ஒரு சேலையில் வரையப்பட்ட ஏதாவதொரு வடிவத்தை கீழ் காணும் அட்டவணையில் வரைக?

## சேலைகள் நெய்திடும் நிலைகள்:

சேலைகள் தயாரிப்பதில் பல நிலைகள் உள்ளன. இதன் முதல் நிலையில் நூல் தயாரிக்கப்படுகின்றது. பட்டு நூல் ஒரு உருளையில் நூற்கப்படுகிறது. அதன்பிறகு இந்த நூல் வடிவங்களால் வண்ணமிடப்படுகிறது. இந்த வடிவ அமைப்புகள் எந்த வண்ணங்களில் நூல்கள் சாயமிடப்படவேண்டும் என்று அடையாளம் காண உதவுகின்றது. நூலை சாயமிடுதல் என்பது ஒரு நீண்ட, திரும்ப திரும்ப செய்யும் செயல்முறையாகும்.


ஒவ்வொரு வண்ணமும் தனித்தனியாக செய்யப்படவேண்டும். ஒன்றன்பின் ஒன்றாக உலர்த்தப்படவேண்டும். வண்ணமிடுதல் முடிந்தபிறகு மட்டுமே நூல் நெசவுக்கு பயன்படுத்த முடியும்.

### நூல் சாயமிடுதல்:

சாயமிடுவதற்காக பட்டு நூல் எடுக்கப்பட்டு, அது உலர்த்தப்பட்டப் பிறகு அது மீண்டும் விரிக்கப்பட்டு, பாதியளவு திறக்கப்பட்டு மற்றும் சாயமிடுவதற்கு கட்டப்படுகின்றது, இவ்வாறாக திரும்ப திரும்ப பலமுறை செய்யப்படுகின்றது. பல்வேறு வண்ணங்களிலும், கரைகளிலும் சேலைகளை தயாரிக்க சாயமிடுதலின் பலமுறைகள் பின்பற்றப்படுகிறது. வெண்மை மற்றும் கருப்பு நிறங்களுக்கு இடையில் சிவப்பு மற்றும் கருஞ்சிவப்பு கரைகளை பெறுவதற்கு அளிசரின் சாயங்களை பயன்படுத்துவர். இதற்காக நூலை முதலில் விளக்கெண்ணை மற்றும் அளிசரின் கலவையில் ஊரவைப்பர். பிறகு உலர்த்தி மீண்டும் நனைத்து அளிசரின் கூழில் துவைத்து இறுதியில் சிவப்பு நிறம் பெறும் வரை வேகவைப்பர். கருஞ்சிவப்பு கரைகளை பெறுவதற்காக வண்ணத்துடன் இரும்பு துணுக்குகளை சேர்ப்பர். வினிகரில் இரும்புத் துகள்கள் கரைந்து கருப்பு நிறத்தை தரும்.

**பாவும் ஊடையும்:**

துணிகளில் நூல்கள் மேலும் கீழும் மற்றும் பக்கவாட்டில் நுழைந்து இருப்பதை நீங்கள் கவனியுங்கள். பாவு என்பது மேலிருந்து கீழாக செல்வது மற்றும் ஊடை என்பது இடதுபுறமும் வலதுபுறமும் செல்வதாக அமையும்.




SCERT TELANGANA

மேலும் இப்போது போச்சம் பள்ளி கிராமத்திலுள்ள நெசவாளியின் குடும்பத்துக்கு சென்று இக்கட் என்னும் சேலை வகைப்பற்றி மேலும் தெரிந்துக்கொள்வோம். ஜகத்தையா என்பவர் போச்சம்பள்ளியில் வசிக்கும் நெசவாளி. அவர், அவருடைய மனைவி, மகன், மருமகள் ஆகிய அனைவரும் நெசவு வேலை செய்பவர்களே. நாங்கள் அவர்கள் வீட்டிற்குச் சென்றபோது குடும்பத்தினர் அனைவரும் நெசவு வேலைகளில் ஈடு பட்டிருந்தனர். ஜகத்தையா நூல் நூற்கும் வேலையில் ஈடு பட்டிருந்தார். அதே சமயத்தில் அவருடைய மகன் முரளி கைத்தறியில் துணி நெய்து கொண்டிருந்தார். இக்கட் சேலைகளை தயாரிக்க சித்காசு, அச்சு, இழைகள், ரப்பர் குழாய்கள் போன்றவை பயன்படுத்தப்படுகிறது. சித்காசு என்பது ஊடை நூலின் பொந்துகளில் கட்டுக்கட்டு கடாரி சாயமிடப் பயன்படுத்தப்படும் கருவியாகும். நெசவு நெய்தலில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கருவிகள் மரக்கட்டைகளால் செய்யப்பட்டவையாகும். ஜகத்தையா முதியவர் என்பதால் நூல் நூற்கும் வேலையை மட்டும் செய்கிறார். அவருடைய மகன் கைத்தறியில் துணியை நெசவு செய்கிறார்.

ஜகத்தையாவின் மனைவியும், மருமகளும் பாபினில் நூல் நூற்கிறார்கள் பாபின் என்பது மரக்கட்டையால் உருண்டை வடிவத்தில் செய்யப் படும் நூல் நூற்கும் கருவியாகும். ஜகத்தையாவின் பேரக் குழந்தைகள் பள்ளிகளில் படிக் கின்றனர். பாவு வேலைகள் அனைத்தும் தெருவில், நெசவாளிகள் பலரால் கூட்டாக செய்யப்படுகின்றன.



படம் 7.4 கைத்தறியில் சேலை நெசவு செய்யப்படும காட்சி




படம் 7.5 நூல் நூற்றல்

SCERT TELANGANA

கொண்டுவருகிறார். எட்டு சேலைகளை நெசவு செய்யத் தேவையான மூலப் பொருட்கள் ஒரே நேரத்தில் கொண்டு வரப்படுகின்றன, இந்த எட்டு சேலைகள் நெசவு செய்யப்பட மொத்த குடும்பமும் நாள் ஒன்றுக்கு 12லிருந்து 15 மணி நேரம் வரை ஐம்பது நாட்களுக்கு வேலை செய்ய வேண்டும். அவர்கள் ஒரு சேலை நெசவு செய்யக் கூலியாக சுமார் ரூ.1200 பெறுகிறார். நெசவுத் தொழில் பரம்பரையாக செய்யக்கூடிய தொழிலாகும், நெசவு மூலம் ஜகத்தையாவின் குடும்பத்துக்கு கிடைக்கும் வருமானம் குடும்பத்தை நடத்த போதுமானதாக இல்லை,



படம் 7.6 பாபினில் நூல் நூற்றல்

ஜகத்தையாவின் மகன் முரளி, நெசவுக்குத் தேவையான மூலப்பொருட்களான சாயமிடப் பட்ட பட்டு நூல், ஜரிகை, துணியின் வண்ண வடிவமைப்பு மாதிரிகள் போன்றவற்றை முதலாளிகளிடமிருந்து கொண்டு வருகிறார். சில சமயங்களில் தான் உறுப்பினராக உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் இருந்தும்.



படம் 7.7 வடிவமைத்தல்

மார்ச் முதல் மே வரையிலான காலங்களில் அதிகமான வெயில் இருப்பதால் நூல் இழைகள் அடிக்கடி அறுந்து விடுகின்றன. ஆகவே இக்காலங்களில் ஜகத்தையாவின் குடும்பம் சில மணி நேரங்களே வேலை செய்ய முடிகின்றது. இது போன்ற காலங்களில் ஜகத்தையாவின் குடும்பம் மதியம் வரை மட்டுமே வேலை செய்ய முடிகிறது. இவரது குடும்ப பெண்கள் சமைத்தல், குடிநீர் கொண்டு வருதல், குழந்தைகளை பள்ளிக்கு தயார்படுத்துதல் போன்ற வேலைகளோடு நெசவு வேலைகளையும் செய்வதால் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர்,

இதற்கு முன்பு ஜகத்தையாவின் குடும்பம் கூட்டுறவு சங்கத்தில் மூலப்பொருட்களை கொண்டு வந்து நெசவு செய்து வந்தது, எதிர்பாராத இறப்பு அல்லது நோயால் பாதிக்கப்படுதல் போன்றவற்றிற்கு கூட்டுறவு சங்கம் நிதி உதவி அளிக்கிறது. இது தவிர காப்பீடும் வழங்கி வருகிறது. வீடு கட்டவும் இச்சங்கம் கடனுதவி செய்து வருகிறது, ஆனால் இக்காலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் நெசவு மூலப்பொருட்களைத் தருவதில்லை, ஆனால் போச்சம்பள்ளியிலுள்ள நெசவாளர் முதலாளி ஜகத்தையாவின் குடும்பத்துக்கு வேலைதர இசைந்தார்.

ஜகத்தய்யாவும், அவருடைய குடும்பமும் நெசவாளர் முதலாளி தந்த வடிவமைப்புபடி இக்கட் வகை சேலைகள் நெய்து வருகின்றனர். ஜகத்தய்யாவிற்கு நெசவாளர் கூட்டுறவு சங்கம் உறுப்பினத்துவம் தரவில்லை. வருங்காலங்களில் இச்சங்கம் தனது வேலைகளை மேம்படுத்திக் கொள்ளும் என்னும் நம்பிக்கை உள்ளது. கூட்டுறவு சங்கம் மூலம் தனக்கு வேலைவாய்ப்பு

கிடைக்கும் என்ற நம்பிக்கை ஜகத்தய்யாவிற்கு உள்ளது.

**கைத்தறி நெசவாளர்களின் பிரச்சனைகளும் கூட்டுறவு சங்கங்களும்:**

ஆந்திரப் பிரதேசம் நாட்டிலேயே இரண்டாவது அதிக கைத்தறிகளை கொண்ட மாநிலமாக உள்ளது. மேற்கு வங்காள மாநிலம் கைத்தறி எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் கடும் பிரச்சனையை எதிர் கொண்டுள்ளனர். விசைத்தறி மற்றும் துணி ஆலை தயாரிப்புகளிடம் இருந்து கடும் போட்டியை கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. விசைத்தறிகள் மூலம் தயாரிக்கப்படும் துணிகள் மலிவானவை. அதுமட்டுமன்றி செயற்கை இழைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பருத்தி மற்றும் பட்டு இழைகளை விட மிகவும் மலிவானவை. போச்சம்பள்ளி சேலைகள், உயர்ந்த தரத்திற்கும், அழகிற்கும், பிரசித்தி பெற்றிருப்பினும், அதிக விலையுடையவை. இடைத்தரகர்களின் தலையீட்டால் நெசவாளர்கள் தாங்கள் பெற வேண்டிய விலையை பெற முடியவில்லை.

அவற்றை கொள்முதல் செய்வோர் உலகம் முழுவதும் உள்ளனர். ஆனால் இந்நெசவாளர்களுடன் அவர்களின் நேரடி தொடர்பு இல்லை. மாநகரங்களில் உள்ள மக்களின் ஆடை அணியும் ரசனை விரைவாக மாறி வருகிறது. ஆனால் நெசவாளர்களுக்கு மக்களுக்கு தேவையான ஆடை வடிவமைப்புகள் குறித்து உடனே தெரிய முடிவதில்லை. எனவே, அவர்கள் நடைமுறையில் உள்ள வடிவமைப்புகள் குறித்து அறிய இடைத்தரர்களை சார்ந்துள்ளனர். அவர்களிடம் இருந்து அறியும் விவரங்களின்படி தங்கள் ஆடைகளின் வடிவமைப்பு மாற்றிக்கொண்டு நெசவு செய்கின்றனர். நெசவாளர்கள் தங்களுக்கு தேவையான கச்சாப் பொருட்களான பருத்தி, பட்டு நூலிழை போன்றவற்றிக்காக இடைத்தரகர்களை நம்பியிருக்க வேண்டி உள்ளது. இவை இவர்களுடைய இடங்களில் இருந்து மிகவும் தொலைவிடங்களில் உள்ள மையங்களில் உற்பத்தியாகின்றன.



படம் 7.8 துணி நெசவு நடந்துகொண்டிருக்கிறது.

இதனால் கைத்தறி துறையில் இடைத் தரகர்களின் நிலை மிக முக்கியமானதாக விளங்குகிறது. இவர்கள் சேலைகளை வாங்குவோர் செலுத்தும் தொகையில் இருந்து பெரும் பங்கை பெற முயற்சிக்கின்றனர்.



படம் 7.9 பாவு வேலை செய்யும் ஆட்கள்.

SCERT TELANGANA

இப்பிரச்சனைகளில் இருந்து மீள்வதற்கு கூட்டுறவு சங்கங்களை அமைத்து கொள்ள ஊக்கப்படுத்தப்பட்டனர். கைத்தறி கூட்டுறவு சங்கங்கள். கச்சாப் பொருட்களை மலிவான விலைகளுக்கு விற்பனை செய்யும், சந்தை ஏற்பாடு செய்தல் முதலிய பணிகளை செய்கிறது. இதனால் நெசவாளர்கள் இடைத்தரகர்கள் மற்றும் வணிகர்களை சார்ந்து இருக்கும் நிலையை மிகவும் குறைந்துள்ளது, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நெசவாளர்கள் புதிய வடிவமைப்புகள்படி நெசவு செய்திட பயிற்சி அளிக்க வேண்டும்,

தற்காலத்தில். ஆந்திர பிரதேசத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெரும்பாலான நெசவாளர் களுக்கு தேவையான வேலை கிடைப்பதில்லை. சில கூட்டுறவு சங்கங்களில் கச்சாப் பொருட்களை வாங்குதல், நெசவு செய்யப்பட்ட துணிகளை விற்றல், சம்பந்தப்பட்ட முடிவு எடுத்தல் போன்ற வற்றில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர் களுக்கு எந்தவித பங்கும் தரப்படுவது இல்லை. நுகர்வோர் ரசனைக்கு ஏற்றபடி துணி களின் நெசவு வடிவமைப்பை மாற்றி அமைத்திடும் வாய்ப்பை இச்சங்கங்கள் தருவதில்லை, இதனால் நெசவாளர்கள் மறுபடியும் இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகளின் பிடியில் சிக்கி தவிக்கும் நிலை உண்டாகிறது,



படம் 7.10 இக்கட்சேலை அழகாக மடிக்கப்படும் தோற்றம்,

ஆந்திரப்பிரதேசத்தில் பெருமளவு கைத்தறி துணி பொருட்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவை முதலாளிகள் மற்றும் வியாபாரிகளால் செய்யப்படுகின்றன. நெசவாளர் முதலாளிகள் மற்றும் வியாபாரிகள் எல்லா வகையான கச்சாப் பொருட்களையும் கொள்முதல் செய்து. நெசவாளிகளுக்கு விநியோகம் செய்து. நெசவு செய்யப்பட்ட துணிகளை பெற்றுக்கொள்வர். அதனை அவர்கள் மொத்த துணி வியாபாரிகளுக்கு விற்பர். நெசவு வேலைக்கு ஒரு குறிப்பிட்ட குறைவான தொகையை நெசவாளிகளுக்கு செலுத்து கின்றனர். நெசவாளர் முதலாளிகள் நெசவு கருவிகள், இதர பொருட்கள் வாங்கிட கடனுதவி செய்கின்றனர். வேறு எந்த நெசவாளர் முதலாளிக்கும் நெசவு செய்யக்கூடாது என்றும் கட்டுப்பாடு விதிக்கின்றனர். நெசவாளருக்கு செலுத்தவேண்டிய ஊதியத்தையும் அவர்கள் தான் நிர்ணயம் செய்கின்றனர். இயற்கையாகவே, தங்கள் வருவாயை அதிகரிக்க விரும்புவதால், குறைந்த கூலியை நெசவாளர்களுக்கு நெசவாளர் முதலாளிகள் செலுத்துகின்றனர். விரக்தியடைந்து வாழ்ந்து வரும் நெசவாளர் குடும்பங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேலைகள் கொடுத்து நெசவாளர் முதலாளி களிடமிருந்து காப்பாற்ற வேண்டியுள்ளது.

- இக்கட் புடவைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்களை பட்டியலிடுக,
- முதலாளிக்காக ஜகத்தையாவின் குடும்பம் ஏன் இக்கட் சேலையை நெசவு செய்திட தொடங்கியது?

**முக்கியச் சொற்கள்**

1. கச்சாப் பொருட்கள்
2. இக்கட்
3. காப்புரிமை (Patent)
4. கட்டுதல் மற்றும் சாயமிடுதல்
5. பாவு ஊடைள
6. கூட்டுறவுச் சங்கங்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மக்கள் கூடைபின்னுதல் மற்றும் நெசவுத் தொழில் மூலம் தேவையான பணத்தை சம்பாதிப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?(AS1)
2. கூடைக்கு மாற்றாக மக்கள் பயன்படுத்தும் பொருட்களை உனது பெற்றோரிடம் கேட்டு பட்டியலிடுக.(AS3)
3. கைவினைப் பொருட்களுக்கு பதில் பலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகள் எங்கு தயாரிக்கப்படுகின்றன என கண்டறி. இது கைவினை கலைஞர்களை எவ்வகையில் பாதிக்கும்?(AS4)
4. போலையாவின் குடும்பம் ஏன் ஐதராபாத் வந்தது? போலையாவிற்கு ஐதராபாத்தில் ஏன் ஓட்டுரிமை இல்லை?(AS1)
5. கூடை அல்லாமல் மற்ற பொருட்களை தயாரிக்கும் போலையா போன்ற மற்ற கைவினைக் கலைஞர்களை கண்டறி. அவர்களில் இருவரை சந்தித்து பின்வரும் தகவல்களை சேகரித்து வகுப்பறையில் விவாதிக்கவும். ஒரு உதாரணம் கீழே வழங்கப்பட்டுள்ளது.(AS3)

| வ. எண் | கைவினை கலைஞர் | உற்பத்தி செய்யப்பட்ட பொருள் | பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களில் சில | மூலப் பொருட்களின் ஆதாரம் |
|---|---|---|---|---|
| 1 | போலையா | கூடைகள் | பனைஓலைக்கீற்று | அந்துகுலா கிராமம் |
| 2 | | | | |
| 3 | | | | |

6. போச்சம்பள்ளி கிராம நெசவாளர்களுக்கு போச்சம்பள்ளி இக்கத் புடவைகளின் காப்புரிமை வழங்குவது பயனுள்ளதாக இருக்கும் என நீ, நினைக்கின்றாயா?(AS4)
7. நெசவாளர்கள் இக்கத் புடவைகளின் மூலப் பொருட்களைப் பெற்று மக்களுக்கு நேரடியாக விற்க வேண்டுமா? இவற்றில் உள்ள சவால்கள் என்ன?(AS1)
8. கூடை முடைதல் மற்றும் கைத்தறி ஆலைப்பற்றி ஒரு பரவல் சார்டை (flow chart) தயாரிக்கவும்.(AS3)
9. கூடை முடைதல் மற்றும் இக்கத் புடவை நெய்வதில் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை ஆராய்ந்து பின்வரும் அட்டவணையை நிரப்புக.(AS1)

| வேலை | பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள் | பயன்படுத்தப்பட்ட கருவிகள் | பொருட்கள் விற்கப்படும் முறை |
|---|---|---|---|
| கூடை முடைதல் | | | |
| கைத்தறி நெசவு | | | |

10. தெலங்கானாவில் செய்யப்படும் பல்வேறு கைவினைத் தொழில்கள் மற்றும் இடத்தை பட்டியலிடுக.(AS3)

**கலந்துரையாடல்:** ஒரு கைவினை கலைஞரை அழைத்து அவர் தொழில் குறித்து உரையாடவும்.

**செயல்திட்டம் :**

1. கைவினை கலைஞர் வேலைசெய்யும் இடத்திற்கு சென்று இவர் தயாரிக்கும் பொருட்களின் உற்பத்தி செயல்முறையை காட்டும் சுவரொட்டியை தயார் செய்க.
2. அட்டவணையை நிரப்பி வகுப்பறையில் விவாதிக்கவும்.

| வ.எண் | கைவினைஞர் பெயர் | கலை | தற்போது செய்கிறாரா? | இல்லை எனில் ஏன்? | ஆம் எனில் ஏன்? |
|---|---|---|---|---|---|
| | | | | | |



SCERT TELANGANA

பாடம் 8

# தொழிற்புரட்சி

முந்தைய பாடத்தில் கைவினை கலைஞர்களால் பல்றோ வழிகளில் செய்யப்பட்ட பொருட்களை பற்றி படித்தோம். இயந்திரங்களால் அல்லது தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களோடு நாம் போட்டியிட முடியவில்லை என்றும் படித்தோம். ஆகவே மக்கள் அவர்களுடைய கைத்தொழில் செய்வதை நிறுத்தியதால் வேலை வாய்ப்பை இழந்தார்கள். இப்பாடத்தில் இயந்திரங்கள் எப்படி ஆதிக்கம் செலுத்தியது என்பதைப் பற்றியும், அங்கு தயாரிக்கப்பட்ட பொருட்கள் மனித சமுதாயத்தில் உள்ள மக்களுக்கு எப்படி பாதிப்பை நிகழ்த்தியது என்பதை பற்றியும் காண்போம்.

SCERT TELANGANA

**வணிகர் வளர்ச்சியை தடுத்து நிறுத்தல் :**

கி.பி.1500 முதல் 1800வரை, ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளுக்கிடையே பல வழிகளில் வணிகம் வளர்ச்சியடைந்தது. துணி வர்த்தகம் கூட வளர்ச்சியடைய துவங்கியது. ஐரோப்பிய வர்த்தகர்கள், துணி தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், கைதொழில் செய்பவர்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் முன்பணம் கொடுப்பார்கள். இக்காலத்தில் விவசாயத்திலிருந்து வரும் வருமானம் குறைந்ததால் பெரும்பாலானோர் விவசாய தொழிலாளர்கள் நஷ்டம் அடைந்தனர். ஆகவே அவர்கள் விளை நிலத்தை கால்நடைகளை மேய்ப்பதற்கு பயன்படுத்தினர். இதனால் இவர்கள் வாழ்க்கைக்கு தேவையான வருமானம், துணி தொழிற்சாலையில் வேலை செய்வதன் மூலம் கிடைத்தது.

முன்பணம் தரும் திட்டத்தின் கீழ் ஒரு துணிவர்த்தகர் கச்சா பருத்தியை வாங்கி நூல் நூற்பவரிடம் அதை கொடுத்து நூலாக மாற்றிய பிறகு நெசவுத்தொழில் செய்பவரிடம் எடுத்துச் செல்லுவார்கள். பிறகு அந்த துணியை தூய்மைப்படுத்தும் இயந்திரம் கொண்டு சென்று சாயப்பட்டறைக்கு எடுத்து செல்லப்பட்டு வண்ணமிடுவதோடு அனைத்து வேலைகளும் முடியும். இவ்வேலைகள்யாவும் நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் நடக்கும்.

பருத்தி ஆடை சரக்குகள் உற்பத்தியில் அதிகளவு உற்பத்தியாளர்கள், உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் வணிகர்களால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இங்கு தொழிற்சாலை அமைப்பு இல்லை. பல்வேறு வகையான உற்பத்திப்பொருட்கள் பல்வேறு வீடுகளில் நடக்கும். ஒவ்வொரு உற்பத்தி முறைக்கும் 20 முதல் 25 கைவினை கலைஞர்கள் ஈடுபடுவார்கள்.


சில நேரங்களில் எல்லா கைவினை கலைஞர்களையும், வணிகர்கள் ஒரே இடத்தில் அழைத்து வந்து ஒவ்வொருவருக்கும் தேவையானவற்றை விவரிப்பார்கள். செய்பொருள் தொழிற்சாலை என அழைக்கப்படும். சிறுபணிமனையையும் அமைத்தனர். வணிகரால் கொடுக்கப்படும் மூலப்பொருட்கள் மற்றும் கைவினை கலைஞர்களால் கொண்டு வரப்படும் கருவிகள் மூலம் வேலை செய்தனர். பிறகு வணிகர் அந்த உற்பத்தியை சந்தைகளில் விற்பனை செய்தனர். இம்முறையின் மூலம் வணிகர்கள் கட்டுப்படுத்தப்பட்டு கைவினை கலைஞர்கள் அதிகரிக்கப்பட்டது. இம்முறை பழைய தொழிற் வளர்ச்சி காலம் என அழைக்கப்பட்டது. இம்முறையில் அநேக மக்கள் கைவினை உற்பத்தியில் ஈடுப்பட்டனர். வணிகர்கள் தொழிலாளர்களை கட்டுப்படுத்தினர். உலகம் முழுவதும் கைவினை உற்பத்தி சந்தை வளர்ச்சி அடைந்தது.

**கி.பி. 1750-1850ல் தொழிற்புரட்சி ஆரம்பம் :**

இக்காலத்தில் பலமாற்றங்கள் நடந்தன. சரக்குகளை உற்பத்தி செய்ய 1750ஆம் ஆண்டில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான மக்கள் கிராமங்களிலிருந்து குடிபெயர்ந்து நகரங்கள், மாநகரங்களில் வேலைக்காக குடியேறினர். அன்றாட வாழ்க்கையில் நாம் பல இயந்திரங்களை இன்று பயன்படுத்துகிறோம். இதை இங்கிலாந்தில் இயந்திர காலத்தின் தொடக்கம் என்பர்.

துணிகளின் தேவை பல வழிகளில் அதிகரித்த போது பல கைவினையாளர்கள் தற்போதுள்ள தேவைகேற்ப எப்படி உற்பத்தி செய்ய முடியும் என அவர்கள் நினைத்தனர். அந்த நேரங்களில் துணியின் தேவை அதிகரித்தது. ஆனால் தேவைகேற்ப துணியை அவர்களால் உற்பத்தி செய்யமுடியவில்லை. மேலும் நம் தறிகளில் தயாரிக்கப்படும் துணி விலை மிக அதிகம்.

நாம் இயந்திரத்தை உருவாக்கினால் அது விரைவாக நூற்கவும், நெய்யவும், மிக குறைந்த விலைக்கு நமக்கு துணி உற்பத்தி செய்து தர முடியும். பெரும்பாலான மக்கள் அதிக அளவில் துணிகளை சந்தையில் வாங்கினால் அதிகபணம் சம்பாதிக்க முடியும் என நம்பினர்.




படம் 8.1 நூல் நூற்கும் ஜென்னி நூல் நூற்கும் புதிய இயந்திரம்.

அதன் விளைவாக நெசவு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில் விரைந்து நூற்கும் பேரளவு நூல் நூற்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அந்த இயந்திரங்கள் மிக பெரியது என்று கலைஞர்கள் எண்ணினார்கள் கை கால்கள் பயன்படுத்தாமல் தானாகவே இயங்க வேண்டும் என எண்ணினர். அவர்களுடைய கனவு நினைவில் உருவானது தான் ஜேம்ஸ்வாட் உருவாக்கிய புகழ்பெற்ற கண்டுபிடிப்பு நீராவி என்ஜின் ஆகும்.

**ஜேம்ஸ்வாட்டின் கண்டுபிடிப்பு :**

ஜேம்ஸ்வாட் என்ற ஆங்கிலகைவினை கலைஞர் நீராவி என்ஜினை உருவாக்கினார். நீராவியால் பெரிய எடையும், சக்தியையும் பெற முடியும் என அறிந்தார். எனவே அவர் உருவாக்கிய இயந்திரம் நீராவி சக்தி உதவியால் மனிதன் இல்லாமல் இயக்கக்கூடிய இயந்திரம், அவர் மனத்திற்கு எட்டியது.

அவர் உருவாக்கியதை பௌல்டன் எனும் தொழிலதிபரிடம் காட்டினார். இருவரும் ஒன்று சேர்ந்து ஒரு இயந்திரத்தை உருவாக்கினர். பௌல்டன் அதற்கு தேவையான பணஉதவி, வாட்சனின் சம்பளம் உட்பட அனைத்தையும் கொடுத்து நீராவி என்ஜினை உருவாக்கினார். அதில் மூன்றில் இரண்டு பங்கு பௌல்டன் உடையது. மூன்றில் ஒன்று ஜேம்ஸ்வாட் உடையது ஆகும்.




படம் 8.2 ஜேம்ஸ்வாட் என்பரால் உருவாக்கப்பட்ட நீராவி என்ஜின் இயந்திரங்களில் ஒன்று. நீராவியிலிருந்து வரும் அழுத்தம் கீழே உள்ள பிஸ்டனை அழுத்தி அங்குள்ள இரும்புகம்பி மேலும் கீழுமாக நகர்த்தி சக்கரத்தினை சுற்றச் செய்யும்.

SCERT TELANGANA

அதில் அவர்களுக்கு பெருத்த லாபம் கிடைத்தது. நீராவியால் இயங்கக் கூடிய இவ்வகை இயந்திரங்கள் எல்லா வகையான வேலைகளை செய்யும். அதாவது நூல் நூற்றல், நெசவு நெய்தல், இரும்பு கருவிகளை தயார் செய்தல், கப்பல்களை கட்டுதல் போன்றவற்றிற்கு பயன்படுகின்றன.

- இங்கிலாந்தில் தானாக இயங்கக்கூடிய இயந்திரங்கள் எப்படி நடைமுறைக்கு வந்தது?
- முதலாளிக்கும் அறிவியல் கண்டுபிடிப்பாளருக்கும் இடையே நடந்த ஒப்பந்தம் ஓர் எடுத்துக்காட்டாக காட்டுகிறது. இது வெறும் ஒப்பந்தம் என்று நீ நினைக்கிறாயா?

**தொழில் சார்ந்த உற்பத்தி முறை :**

1750-1850ஆம் ஆண்டு காலத்தில், தொழிற்சாலை திட்டம் என்று அழைக்கப்படும் புதிய திட்டம் அமுலுக்கு வந்தது. மனித சக்தி பயன்படுத்தப்படும் இடத்தில் பெரிய இயந்திரங்கள் எளிய கருவிகள் பயன்படுத்தப்பட்டது. உற்பத்தி செய்யும் இடத்தை தற்போது தொழிற்சாலை என அழைக்கப்படுகிறது. இதற்கு முன்னர் உற்பத்திகள் வீடுகளில் நடந்தது. தொழிற்சாலைகளில் பலநூற்று கணக்கான தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்கின்றனர். இவை பெரும் தொழிற்சாலைகள் எனப்படும். சிறிய கருவிகள், கைத்தறிகளுக்கு பதிலாக பெரிய இயந்திரங்கள் முக்கியத்துவம் பெற்றது. அவர்கள் பெரியளவில் சரக்குகளை உற்பத்தி செய்தனர்.

உற்பத்தி செய்யப்படும் எல்லாவற்றையும் தனிப்பட்ட முறையில் நிர்வாகம் செய்பவரை முதலாளி என்று அழைப்பர். அவர்கள் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், தொழிலாளர்கள் கொண்டுவர முதலீடு செய்பவர்கள். தொழிற்சாலைகளில் உள்ள அனைத்தும் முதலாளிக்கே சொந்தம். தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் சரக்குகள் தொழிற்சங்கத்திற்கு அப்பால் அவர்களுக்கு சொந்தம் இல்லை அவர்கள் வேலை செய்வது சம்பளம் பெறுவதற்கு ஆகும். இதற்கு முன்னர் தொழிற்சாலைகள் வேலை செய்வதற்கு ஆபத்தான இடங்கள் என்று கருதப்பட்டன.

**19-வது நூற்றாண்டுக்கு முந்தைய தொழிலாளியின் அனுபவம் :**

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உள்ள தொழிலாளர்கள் பல துன்பங்களை சந்தித்து வந்தனர். நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்த குழந்தை தொழிலாளியின் அனுபவத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

நான் நான்கு வயதிலிருந்து சுரங்க வேலைகளில் வேலை செய்து கொண்டு வந்தேன். தொழிலாளர்கள் கூர்மையான மண்கொத்தியை பயன்படுத்தி சுரங்கத்திலிருந்து நிலக்கரியை தோண்டி சரக்கு வண்டிகளில் நிரப்புவார்கள். அச்சரக்கு வண்டிகளை குதிரைகள் அல்லது கோவேரு கழுதைகள் இழுத்து செல்லும். அச்சரக்கு வண்டிகளை பின்னாலிருந்து முன்னால் தள்ளுவது எங்களது வேலை. இச்சரக்கு வண்டிகள் தண்ணீர் மற்றும் சேறு நிறைந்த உயரமான இடங்களின் மேல் போவதால் நாங்கள் விரைவில் சோர்வு அடைந்து விடுவோம். ஒரு நாளைக்கு 12மணி நேரம் வேலை செய்து சோர்ந்து போவதால் வீட்டுக்கு சென்றதும் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் கூட இருக்காது. நேற்று நான் வீட்டுக்கு செல்லும் பாதையின் நடுவிலேயே தூங்கி விட்டேன். எனது தாய் இடையில் வந்து என்னை வீட்டிற்கு அழைத்து சென்றார்.



*படம் : 8.3 நிலக்கரி சுரங்கத்திலிருந்து குழந்தைகள் வண்டியை தள்ளுதல்*

SCERT TELANGANA

தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் வேலை செய்யும் குழந்தை தொழிலாளர்களை கட்டுப்படுத்த பலவித போராட்டங்கள் தொடங்கப்பட்டன. அப்போராட்டங்களின் விளைவாக குழந்தை தொழிலாளர்கள் முறை முற்றிலும் தடைசெய்யப்பட்டது. இது ஐரோப்பிய நாடுகளில் கடந்த காலத்தில் குழந்தை தொழிலாளர்களின் வெற்றிக்காக திகழ்கிறது.

**ஆரம்பத் தொழிற்சாலையின் உள்ளமைப்பு :**

நவீன இயந்திரங்களின் வருகையால் தொழிற்சாலைகளில் பெரிய மாற்றங்கள் நடந்தது. திறமையற்ற தொழிலாளர்கள் கூட இயந்திரங்களை இயக்கினார்கள். இவ்வாறு திறமையுள்ள தொழிலாளர்கள் தேவையில்லாமல் போனது. அவ்விடத்தில் பெரிய அளவிலான பெண்கள், குழந்தைகள் குறைந்த சம்பளத்தில் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

இயந்திரங்களை தயாரிக்க ஆகும் செலவு அதிகமாக இருப்பதால் சாதாரண கைவினை கலைஞர்கள் அதை ஏற்கும் சக்தி இல்லை. வசதிபடைத்த வணிகர்கள் மட்டும் இயந்திரங்களை பயன்படுத்தி தொழிற்சாலைகளை நடத்தினார்கள்.


இது அக்கால தொழிலாளர்கள் துயரத்தை தெரிவிக்கிறது.

நாங்கள் அன்றாடம் தொழிற்சாலையில் காலை 6 மணியிலிருந்து மாலை 8.30மணிவரை வேலை செய்வோம். இடையில் ஒரு மணிநேரம் மதிய உணவிற்காக ஓய்வு அளிக்கப்படுகிறது.

மாலை நேரத்தில் சோர்வடைந்த நிலையில் வேலை செய்ய முடியாது இருக்கும் போது முதலாளி எங்களை வேலைசெய்ய வற்புறுத்துவார்.


தற்காலத்தில் பல புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலானோர் செய்யக்கூடிய வேலைகளை இயந்திரங்கள் செய்வதால், தொழிலாளர்கள் அவசியம் குறைந்தது ஒவ்வொரு முறையும் புதிய இயந்திரங்கள் வருவதால் எங்களில் சில பேர் வேலைவாய்ப்பை இழக்கின்றனர்.


இத்தொழிலாளர்கள் தங்கள் விவசாய வேலைகளிலிருந்து வெளியேறி தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள். தற்போது புதிய இயந்திரங்களின் வருகையால் இந்த வேலை வாய்ப்பையும் இழந்து வேலையின்றி தவித்தனர். சிறு கைவினை கலைஞர்கள் அவர்களின் வேலைவாய்ப்பை இழக்க நேரிட்டது. படிப்படியாக தொழிற்சாலை மற்றும் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கென்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதிகப்படியான வேலை நேரம் உள்ளிட்ட பல கொடுமைகளை எதிர்த்து போராடினார்கள். தொடக்க காலத்தில் இவர்களின் கோரிக்கை என்னவெனில், வேலை நேரத்தை 12 மணியிலிருந்து 10 அல்லது 8 மணிநேரமாக குறைக்க வேண்டும். 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்தக்கூடாது போன்றவையாகும். தொழிலாளர்களின் போராட்டத்தின் விளைவாக அவர்கள் நிலைமைகள் மாறியது.




படம் 8.4 தொழிற்சாலையில் துணிகளுக்கு வண்ணமிடுதல்

SCERT TELANGANA







படம் 8.5 8.6 & 8.7

* தொழிற்புரட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளின் படங்களைப் பாருங்கள்.
* இப்படத்தில் நீ என்ன கவனிக்கிறாய்? இத்தொழிற் சாலையைப் பற்றி விவரிக்கவும்.

* இயந்திரங்களை கையாள யாருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது?
* உனக்கு அருகில் உள்ள ஏதாவது தொழிற்சாலைகளை பற்றி தெரியுமா? இத்தொழிற் சாலைகளின் வேலை நிலவரத்திற்கும், 150ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் உள்ள தொழிற்சாலைகள் வேலை நிலவரத்தை ஒப்பிடுக.

தற்போது தொழிற்சாலைகள் கூட மாறிவிட்டது. தற்போது எல்லா வேலைகளும் கணினியின் உதவியால் வேலை செய்யப்படுகிறது. இவற்றின் நிர்வாகத்திற்கு குறைந்த தொழிலாளர்கள் சக்தி தேவைப்படுகிறது.

**தொழிற்வளர்ச்சியும் சக்தியின் மூலமும் :**

தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் இயங்குவதற்கு எரிபொருள் அவசியம். நிலக்கரி, மின்சாரம், பெட்ரோல் முதலியவற்றிலிருந்து எரிசக்தி கிடைக்கின்றன. முதன் முதலில் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு நிலக்கரி மற்றும் நீராவி சக்திமேல் ஆதாரப்பட்டிருந்தது. தற்போது நீர், மின்சாரம், பெட்ரோல், டீசல், எரிவாயு, அணுசக்தி, சூரியசக்தி முதலியன பயன்படுத்தப்படுகின்றன.

**போக்குவரத்து புரட்சி :**

நீராவி எஞ்சின் கண்டுபிடிப்பு கப்பல் தொழிற்சாலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது. சாலை போக்குவரத்தை விட நீர்போக்குவரத்து மூன்றில் ஒரு பங்கு செலவை குறைத்தது. இருப்பினும் மிக நல்ல போக்குவரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அசையும் இயந்திரத்திற்கு நீராவி எஞ்ஜினை இணைத்ததால் போக்குவரத்து துறையில் பெருமாற்றம் வந்தது. ஜார்ஜ்ஸ்டீவன்சன்னுடைய கண்டுபிடிப்பான இரயில் எஞ்சின் இயந்திரம் லிவர்பூரிலிருந்து மான்செஸ்டர் வரை 64கி.மீ தூரத்தை மணிக்கு 46கி.மீ வேகத்தில் பெரியஎடை சுமந்து சென்றது. இதுவே உலகின் முதல் இரயில் ஓட்டமாகும்.

1840-ல் ஜான் லௌடன் மேக் ஆதம் என்பவர் ஜல்லிகற்களை பயன்படுத்தி சாலைகளை அமைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இம்முறையில் சாலைகளை அமைப்பது கண்டுபிடிப்பின் ஒரு மைல்கல்லாகும். மற்றொரு நூற்றாண்டில் நாம் காணும் தார்சாலைகள் அமைக்கப்பட்டது. இவ்வாறான சாலைகள் மோட்டார் வாகன ஓட்டுனர்களுக்கு உபயோகமானவையாக இருந்தன.

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்தால் ஆகாய வழிமுக்கிய போக்குவரத்து வழியாக மாறியது.

**தொழிற்சாலை உற்பத்திகள் - வர்த்தகம் :**

தொழிற்சாலை உற்பத்தி பெருமளவு அதிகரித்ததால் தம் சொந்த நாடுகளில் உற்பத்தியினை விற்க முடியில்லை. தொழிலதிபர்கள் அதிகரித்த உற்பத்திகளை மற்ற நாடுகளுக்கு விற்க தொடங்கினர் இயந்திர தயாரிப்பு பொருட்கள் மலிவானது. தரமுடையதாக இருந்ததால் இவற்றிற்கு உலக அளவில் தேவை அதிகரித்தது. இதனால் இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் தொழிற் சாலைகளுக்கு உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்கள் கிடைக்கவில்லை. (எ.கா) துணிகள் தயாரிப்புக்கு தேவையான பருத்தி இந்தியாவிலிருந்தும், இதர நாடுகளிலிருந்தும் வாங்கி தொழிலதிபர்களுக்கு விற்பார்கள் பிறகு தயாரான உற்பத்திப் பொருட்களை வாங்கி இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விற்பார்கள்.

தம்முடைய வாணிப வளர்ச்சிக்கு தேவையான மூலப் பொருள் கிடைக்கும் நாடுகளை ஐரோப்பியர்கள் ஆக்கிரமித்தனர். இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், பெல்ஜியம், ஹாலாந்து போன்ற ஐரோப்பியா நாடுகள் ஆசியா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா கண்டங்களில் உள்ள நாடுகளில் குடியேற்றங்களை அமைத்தார்கள்.


SCERT TELANGANA

ஐரோப்பிய நாடுகள் இதர கண்டங்களில் இருக்கும் குடியேற்ற நாடுகளை கொள்ளையடித்து செல்வ நாடுகளாக மாறின.

**நகரமயமாதலும் குடிசைவாழ்பகுதிகளும் :**

தொழிற்புரட்சியால் மக்கள் படிப்படியாக கிராமங்களிலிருந்து நகரத்திற்கு குடியேறினார்கள். தொழிற்சாலைகளும் மற்ற நகர நடவடிக்கைகளும் மக்களுக்கு வாழ்க்கைத்தரம் அளித்தது, புதியதாக ஏற்பட்ட நகரங்களுக்கு மக்கள் அதிகமாக குடியேறியதால் அவர்களின் வீடு, குடிசைகள் போதுமான இடம் இல்லாததால் சுகாதாரமற்ற வசதிகளுக்கு தடை ஏற்பட்டது. அதன் விளைவாக விபத்துகளும் தொற்றுநோய்களும் பரவின. பெரும்பாலான குடியிருப்புகள், வெளிச்சம், ஆரோக்கியம், சுற்றுப்புற சுத்தம் இல்லாமல் இருந்தது.

தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்களுக்கு அருகில் குடிசை வாழ்பகுதிகள் இருப்பது சாதாரணமான ஒன்று. இந்நகரத்திலேயே செல்வந்தர்களுக்காக அகன்ற சாலைகளும் மின்சார வசதி சுற்றுப்புற சுகாதாரத்தோடு கூடிய நல்ல குடிநீர் வசதிகளுடன் கூடிய வாழ்விடங்கள் அமைக்கப்பட்டது. படிப்படியாக மக்கள் தங்கள் குடியுரிமைகள், தொழில்களின் நிலைமைகள், நலன்கள் மற்றும் குடியிருப்பு வளர்ச்சி குறித்து மெதுவாக போராட்டங்கள் நடத்தினர்




வரைபடம் -1 : உலக வரைபடத்தில் கி.பி.1800ல் இருந்த ஐரோப்பிய காலனி நாடுகள்

**முக்கியச் சொற்கள் :**

1. புரட்சி
2. உற்பத்தி
3. தொழிற்சாலை
4. அமைப்பு
5. அணுசக்தி
6. நகர் மயமாதல்
7. குழந்தை தொழிலாளர்
8. நகர குடிசைப்பகுதிகள்

SCERT TELANGANA

# உனது கற்றலை மேம்படுத்துக

1. தவறான வாக்கியங்களை சரிசெய்க :(AS1)

   *அ) நூல் நூற்பவர் நெசவாளர்களுக்கு பருத்தி எடுத்து செல்கிறார்.*

   *ஆ) வர்த்தக சங்கத்தின் சார்பில் இல்லாமல் எது உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை வர்த்தகர்கள் நிர்ணயிப்பார்கள்.*

   *இ) ஒரு குழு மக்களால் எல்லா வேலைகளும் செய்யப்படுகின்றன.*

   *ஈ) சிறு விவசாயிகளுக்கு நெசவுத்தொழில் கற்றுக் கொள்ள வர்த்தகர்சங்கம் அனுமதிக்கப்பட்டது.*

   *உ) நெசவாளர்கள் உற்பத்தியின் தரம், மற்றும் விலைகளை நிர்ணயிப்பார்கள்.*

2. உற்பத்தி செய்பவரிடமிருந்து மூலப் பொருட்களை வாங்கி தொழில் செய்பவரிடம் நேரடியாக சேர்க்கும் முறை தொழிற்சாலைகளில் துணி உற்பத்திசெய்யப்படுவதை விட நல்லது. இதை நீ ஒப்புக்கொள்கிறாயா? காரணங்களைக் கூறுக.(AS1)

3. ஆங்கிலேய ஆட்சியாளர்களால் போடப்பட்ட இருப்புப்பாதைகள் மக்கள் நலனுக்காவே என்று கிருத்திகா வாதாடினாள். அதை எதிர்த்து நீ எப்படி பதில் கூறுவாய்?(AS4)

4. தொழிற்சாலை உற்பத்தியால் தொழிலாளர்களின் ஊதியம் எப்படி அதிகரித்து இருக்கும்?(AS1)

5. அதிகநேரம் வேலை செய்யும் ஊழியர்களுக்கு தொழிலதிபர்கள் குறைந்த ஊதியம் அளித்தார்கள் ஏன்?(AS1)

6. தற்போதைய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் நிலைமை வளர்ச்சியடைந்துள்ளதாக நீ கருதுகிறாயா?(AS4)

7. தொழில் நிலைமைகளை மேம்படுத்த அரசு தேவையான சட்டங்களை ஏன் கொண்டுவரவேண்டும்?(AS1)

8. குழந்தைகள் ஏன் தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை?(AS6)

9. போக்குவரத்து திட்டம் தொழிற்சாலைக்கு உதவின? தொழில் மயமாக்கும் நோக்கத்தில் இக்கூற்றை நியாயப்படுத்துவாயா?(AS6)

10. கீழ்காணும் நாடுகளை உலக புறவரிப்படத்தில் குறிக்கவும்.(AS5)

    (அ) இங்கிலாந்து (ஆ) போர்ச்சுகள் (இ) பிரான்ஸ் (ஈ) ஸ்பெயின்

11. பக்கம் 84ல் உள்ள நகரமயமாதலும், குடிசை வாழ் பகுதிகளும் என்னும் தலைப்பிலுள்ள பத்தியை படித்து உன் கருத்தைக் தெரிவி.(AS2)

**செயல்திட்டம் :**

1. நாம் ஆறாம் வகுப்பில் விவசாயம் மற்றும் ஏற்றுமதி பாடம் படித்துள்ளோம். நம் தெலுங்கானாவிலுள்ள விவசாயிகளின் ஏற்றுமதியையும் பிரிட்டன், ஐரோப்பாவிலுள்ள விவசாய ஏற்றுமதிகளையும் ஒப்பிட்டு அட்டவணைப்படுத்துக.

2. உங்கள் அருகில் உள்ள தொழிற்சாலைகள் அல்லது கடைகளில் குழந்தை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்களா என்று உனக்கு தெரியுமா? அவர்களை கண்டால் என்ன செய்வாய்?

SCERT TELANGANA

பாடம் 9

# தொழிற்சாலை உற்பத்தி காகித ஆலை

சிறிய குடும்பங்களில் சில சிறுகருவிகளைக் கொண்டு வீட்டிலேயே கைவேலையால் பொருட்களை தயாரிக்கின்றனர். இதற்கு மாறாக பெரிய அளவில் பொருட்களை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கின்றனர். இந்த தொழிற்சாலைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்தி பல தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பார்ப்போம்.

- நீங்கள் எப்பொழுதாவது ஏதேனும் தொழிற்சாலையைப் பார்த்தீர்களா?
- உங்கள் கற்பனையைப் பயன்படுத்தி நீங்கள் கண்ட தொழிற்சாலையின் படத்தை வரையுங்கள். அந்தத் தொழிற்சாலையில் என்ன நடக்கிறது என்பதை 300 சொற்களில் விளக்குங்கள்.

நாம் காகிதத்தை அதிக அளவில் பயன்படுத்துகிறோம். நூல்கள், பதிவேடுகள், முன்னேற்ற அறிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்று தெரியுமா? நம் ஆந்திரப்பிரதேசத்தில் நான்கு காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன. சிர்பூர் காகஜ்நகர் (அதிலாபாத் மாவட்டம்) இராஜமந்திரி (கிழக்கு கோதாவரி மாவட்டம்) கர்னூல் மற்றும் பத்ராச்சலம் (கம்மம் மாவட்டம்)

- ஆந்திரப்பிரதேசத்தின் புறவரிப்படத்தில் காகித ஆலைகள் உள்ள மாவட்டத்தைக் குறி. அவை ஏன் அங்கு அமைந்துள்ளன?

## மூலப்பொருட்கள்

ஒருபொருளை உற்பத்தி செய்யத் தேவையான பொருட்களை மூலப்பொருள்கள் என்பர்.



*படம் 9.1 தொழிற்சாலையின் வெளித்தோற்றம்.*

SCERT TELANGANA



*படம் 9.2 மூங்கில் சுமைகளோடு காத்திருக்கும் லாரிகள்*

தொழிற்சாலைகளுக்கு அதிக அளவிலும், தொடர்ந்தும் மூலப்பொருட்கள் தேவைப் படுகின்றன. டஜன் கணக்கில் லாரிகள் தினமும் மூலப்பொருட்களை தொழிற்சாலைகளுக்கு அளித்து வருவதை நீங்கள் காணலாம்.

காகித ஆலைகளில் சாதாரணமாக மூங்கில், தைலம், சூபாபுல் ஆகிய மரங்களின் கட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது சூபாபுல்கட்டை பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

இக்கட்டைகளுடன் சாதாரண உப்பு, காஸ்டிக் சோடா போன்ற பல வேதிப் பொருட்களையும் காகிதத் தயாரிப்பில் பயன்படுத்துகின்றனர். கிழிந்த காகிதங்களைப் பயன்படுத்தியும் புதிய காகிதங்களை ஆலைகளில் மீண்டும் தயாரிக்கின்றனர்.

தொழிற்சாலைகளில் மின்சாரத்தில் இயங்கும் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். காகித ஆலையில் இயந்திரங்களை நடத்த மின்சாரம் தேவைப்படுகிறது. நாம் உதாரணத்திற்காக படத்தில் காட்டியுள்ள காகித ஆலைக்கு ஓராண்டில் 25 மெகா வாட் மின்சாரம் தேவைப்படுகிறது. தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரத்தில் பாதிக்கும் மேலாக தொழிற்சாலையின் சொந்த மின் உற்பத்தி இயந்திரங்கள் மூலம் பெறப்படுகிறது. மின்சாரத்துடன் ஆலைக்கு ஆண்டு முழுவதும் அதிக அளவில் நீர் தேவைப்படுகிறது.

**காகித ஆலையும், மறைந்து வரும் மூங்கில் வளமும்.**

காடுகளிலிருந்து காகிதத்திற்கான மூங்கிலும் மற்ற மென்கட்டை மரங்களும் உள்ள பகுதிகளிலேயே அமைக்கப் படுகின்றன.

காகித ஆலைகளுக்கு மூங்கிலையும், பிற மூலப்பொருட்களையும் அளிப்பதில் ஒப்பந்ததாரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சில பத்தாண்டுகளுக்கு முன் ஒப்பந்ததாரர்கள் காடுகளிலிருந்து மூங்கில்களை வெட்டிவர மலையின மக்களை (நீங்கள் ஆறாம் வகுப்பில் படித்த குணவரம் குன்றுகளில் குடியிருக்கும் குடிமக்களைப் போல்) பயன்படுத்தி வந்தனர். கடந்த காலத்தில் அளவுக்கதிகமாக மூங்கில்களை வெட்டி விட்டதால் காகித ஆலைகளுக்கு அருகில் உள்ள காடுகளில் மூங்கில் தற்போது கிடைப்பது இல்லை.

எனவே காகித ஆலைகள் கிராமத்தில் வளரும் சூபாபுல் போன்ற மாற்று மூலப் பொருட்களை தேடுகின்றன. இது அரசாங்கம், மக்களை சூபாபுல் மரங்களைத் தங்களது பண்ணை நிலங்களில் வளர்க்க ஊக்கம் தர வழி வகுத்துள்ளது. தற்போது காகித ஆலைகள் வெகுதூரப் பகுதிகளிலிருந்து கட்டைகளைக் கொண்டு வருகின்றன.

- காகிதத் தொழிலுக்குத் தேவையான மிக முக்கியமான மூலப்பொருட்கள் யாவை?
- மின்சாரம் ஒரு மூலப்பொருள் என நீ நினைக்கிறாயா? காரணங்களைக் கூறு
- உனக்குத் தெரிந்த சில ஆலைகள் அல்லது தொழிற்சாலைகள் பற்றி உன்னுடைய ஆசிரியருடன் விவாதித்து கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்பு.



*படம் 9.3 மூங்கில்களை லாரிகளில் ஏற்றுதல்*

SCERT TELANGANA

| வ.எண் | உற்பத்தி | தொழிற்சாலையின் பெயர் | மூலப்பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | செருப்பு | காலணித் தொழிற்சாலை | விலங்கின் தோல்/ரப்பர் |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

- நாம் அதிக அளவில் காகிதத்தைப் பயன்படுத்தினால், நாம் அதிகமாக காடுகளை வெட்ட வேண்டியிருக்கும். அல்லது உணவுப் பயிர்கள் வளரும் பகுதியை குறைக்க வேண்டியிருக்கும் என நீ கருதுகிறாயா? வகுப்பில் விவாதி

நாங்கள் காகித ஆலைக்குச் சென்றபோது ஆலைவாயிலின் வெளிப்புறத்தில் சூபாபுல் கட்டைகளின் சுமைகள் அடங்கிய 4-5 லாரிகளைக் கண்டோம். காலை 9-30 மணிக்குப் பிறகே அவை ஆலையின் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டன. அங்கே தனிக் கதவுகள் இருந்தன ஒன்று உழைப்பாளர்களுக்கும், மற்றொன்று பெரிய வாகனங்களுக்காகவும், இருந்தன. நாங்கள் ஆலை உரிமையாளர்களிடம் ஆலையில் நுழைய முன்கூட்டியே அனுமதி பெற்றிருந்தோம். நாங்கள் எங்கள் பெயர்களை வாயிலின் அருகே இருந்த பாதுகாவலர் அறையில் இருந்த பதிவேட்டில் பதிவு செய்தோம். பிறகு ஆலைக்குள் நுழைந்தோம். பிறகு லாரிகளும் ஆலைக்குள் நுழைந்தன.

## காகிதம் தயாரிக்கும் முறை

காகித ஆலையின் உள்ளே சூபாபுல் கட்டையை லாரியிருந்து எடுத்து பக்கத்தில் உள்ள இரும்பு மேடையின் மீது போடும் கிரேன் போன்ற இயந்திரத்தைக் கண்டோம். ஒரு சேர்ப்பிக்கும் இயந்திரத்திடம் சேர்க்கிறது. உண்மையில் காகிதமானது ஐந்துபடி நிலைகளில் தயாரிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் ஒவ்வொரு படிநிலைக்கும் ஒரு பிரிவு உள்ளது. பல்வேறு படிநிலைகளில் இவற்றின் இயந்திரங்கள் மூலப்பொட்களைப் பயன்படுத்துகின்றன. அப்படிநிலைகள் கீழ்கண்டவாறு உள்ளன.

**(1) துண்டுகள் ஆக்குதல்.** இப்படிநிலையில் பெரிய மரப்பலகைகளை இயந்திரத்தின் துணையுடன் சிறு துண்டுகளாகச் செய்வர். இப்பிரிவில் சுமார் 15-20 பேர் வேலை செய்கின்றனர். துண்டுகளை அவற்றின் அளவுகளைக் கொண்டு வேறுபடுத்துவர். பெரிய துண்டுகளை மீண்டும் சிறிய துண்டுகளாக்குவர். ஒரு லாரி மரப்பலகைகளை இயந்திரத்தின் உதவியுடன் 30 நிமிடங்களின் சிறு துண்டு களாக்குவர். இதே போன்று நாள்முழுவதும் வேலை தொடரும். ஒரு நாள் முழுவதும் (24 மணி நேரம்) தொழிற்சாலை நடப்பதற்கு எத்தனை மரங்கள் வெட்டப்படும் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

**(2) மரக்கூழ் தயாரித்தல்:** சிறிய மரப்பலகைத் துண்டுகளை நார்வரிசைப் பிரிவிற்கு அனுப்புவர். இப்பிரிவில் இத்துண்டுகளைப் பெரிய பாத்திரங்களில் சில வேதிப்பொருட்களைக் கலந்து கொதிக்க வைப்பர்.



படம் 9.4 வெட்டும் இயந்திரத்தில் பணியாற்றும் உழைப்பாளர்




படம் 9.5 அமைக்கும் இயந்திரத்தில் பணியாற்றும் உழைப்பாளர்கள்.



SCERT TELANGANA



படம் 9.6 மரக்கூழ் தயாரிக்கும் இயந்திரம் (நார் வரிசை)

இம்முறையில் மரத்துண்டுகள் மெல்லிய நார்களாக மாற்றப்படுகின்றன (பருத்தி இழைகளைப் போல்) திரவ நிலையிலுள்ள மரக்கூழ் பிறகு வேதிப்பொருள்களைப் பயன்படுத்தி மென்மையாக்கப்படுகிறது. பிறகு அது பால் போலாக்கப்படுகிறது. திரவ மரக்கூழ் எந்த தூசுமின்றி பால்போன்ற வெண்மை நிறத்தில் இருப்பதை நாங்கள் கண்டோம்.

(iii) ***மரக்கூழை பரப்புதல் :*** இந்த திரவ நிலையில் உள்ள மரக்கூழை உருளைகளின் மேல் உள்ள மெல்லிய திரைகளின் மீது பரப்பவுர். இது காகிதம் தயாரித்தலில் ஒரு முக்கியமான படிநிலை ஆகும். இதில் காகிதத்தின் அகலம், நீளம் மற்றும் பருமன் ஆகியவை அமைக்கப்படுகிறது. நீரானது வடிந்து விடும். மேலும் வெப்பத்தால் நீராவியாகவும் மாறிவிடும். பிறகு மரக்கூழ் உலர்ந்து விடும். இது நடந்து முடிந்த பிறகு மரக்கூழ் சேர்ப்பிக்கும் வளையத்தின் (Conveyor Belt) மூலம் முன்னோக்கித் தள்ளப்படும்.

(iv) ***அழுத்துதல், உலர்த்துதல் மற்றும் சுருட்டுதல் :*** உலர்த்தப்படும் மரக்கூழ் மிருதுவாக்கப்படுவதற்கு உருளைகளால் அழுத்தப்படுகின்றது. மரக்கூழ் முழுவதுமாக உலர்ந்த பிறகு தற்போது நாம் சுருட்டக்கூடிய காகிதத்தாளாக நமக்கு கிடைக்கிறது.

(v) ***வெட்டுதல் :*** காகிதம் நமக்குத் தேவையான அளவுகளில் வெட்டும் இயந்திரத்தால் வெட்டப்படுகிறது. காகிதம் சுருள்களாகவும் தாள்களாகவும் செய்யப்படுகிறது. பிறகு கட்டுகளாக அடுக்கப்பட்டு கிடங்குகளுக்கு அனுப்பப்படுகிறது.

உற்பத்தியானது அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே நேரத்தில் தொடர்ந்து நடைபெறுகிறது.

***பல குழுக்களாக பணிகள் :***

சுருள் வடிவிலும், தாள்கள் வடிவிலும் கரகிதம் கிடங்குகளில் பாதுகாக்கப்படுகிறது. ஒவ்வொரு சுருளின் மீதும் சீட்டுத்துண்டு ஒன்றை ஒட்டவைத்து பகுதி/பருமன், எண் எடைபோன்றவை அதன் மீது குறிப்பிடப்படும் பகுதி என்றால் என்ன? தொழிற்சாலைக்கு ஒரு லாரி கட்டை சுமை கொண்டுவரப்படும் போது அந்த மொத்த கட்டைகளுக்கும் ஒரு பகுதி எண் தரப்படும். இந்த பகுதி பிறகு வெவ்வேறு பிரிவுகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பப்படும். ஒரு பகுதியின் மூலப்பொருள் ஒவ்வொரு நிலைகளிலும் ஒன்றாகவே செயல்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக பகுதி எண்.201ஐ சிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டிருக்கும் போது அதே நேரத்தில் முந்தைய பகுதி (எண்,200) மரக்கூழ்பிரிவில் இருக்கும் மற்றும் பகுதி எண், 199 பரப்பும் பிரவில் இருக்கும். பகுதி எண்.201ன் மரப்பலகைகள் துண்டுகளாக்கப்பட்டு அடுத்த பிரிவுக்கு அனுப்பப்படும் மற்றும் பகுதி எண்.202 துண்டுகளாகக்கப்படுவதற்கு வந்து சேரும்.

ஒரு பகுதியில் தயாரிக்கப்பட்ட அனைத்து காகிதங்களும் ஒரே மாதிரியான உள்ளீடுகளையும் செயல்முறைகளையும் கொண்டிருப்பதால் அவற்றின் தரம் ஒரே மாதிரியாக இருக்கும். பகுதி அமைப்பானது ஒரு தொழிற்சாலையை நாள் முழுவதும் தொடர்ந்து உற்பத்தி செய்ய அனுமதிக்கிறது. அது நிர்வாகிகளுக்கும் உற்பத்தியில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருந்தால் அதைக் கண்டறியவும் குறிப்பிட்ட பகுதியில் எதனால் தவறு நடந்தது என்பதை சரிபார்க்கவும் அனுமதி வழங்குகிறது.

***பணிநேரங்களும் மாற்றுப் பணி நேரங்களும் :*** இக்காகித ஆலைகள் ஒரு நாளில் 24 மணி நேரமும் நடக்கும். பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 8 மணி நேரங்கள் என மூன்று மாற்றுப் பணிநேரங்களில் பணி செய்வர் A, B மற்றும் C என்னும் மாற்றுப் பணிநேரங்கள் உள்ளன. ஒவ்வொரு மாற்றுப் பணிநேரத்திலும் சுமார் 800-900 பணியாளர்கள் பணியில் இருப்பர்.

A மாற்றுப்பணிநேரம் : காலை6 முதல் 2 மணி வரை

B மாற்றுப் பணிநேரம் : மதியம் 2 மணி முதல் 8 மணிவரை

C மாற்றுப்பணி நேரம் : இரவு 8 மணி முதல் காலை 6-00 மணி வரை

இரவு மாற்றுப்பணிநேர பணியாளர்களுக்கு

SCERT TELANGANA

சிறப்புச் சலுகை உள்ளன. பணியாளர்கள் சுழற்சியாகத் தங்களது பணிநேரங்களை மாற்றிக் கொள்வர். ஒவ்வொரு மாற்றுப் பணிநேரப் பணியாளர்களும் A விலிருந்து B க்கும் பிறகு C க்கும் ஒவ்வொரு வாரமும் மாறுவர். நிர்வாகக் குழுவிற்கு என பொதுவான மாற்றுப்பணி நேரமும் காலை 9-30 முதல் மாலை 5 மணி வரை இருக்கும் நிர்வாகக்குழு நிர்வகித்தல், கணக்குகள், வியாபாரம் மற்றும் உற்பத்தியின் விற்பனைகள் பணியாளர்களின் நலவாழ்வு நடவடிக்கைகள் போன்றவற்றை கவனித்துக் கொள்வர்.

***காகிதத்தை விற்றல் :***

இந்த காகித ஆலைக்கு பல நகரங்களில் சந்தைக்கிடங்குகள் உள்ளன. அது காகிதங்களை பிற நாடுகளான இலங்கை, வங்காள தேசம், நேபாளம், மலேசியா, சிங்கப்பூர், நைஜீரியா மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் விற்பனை செய்கிறது. காகிதமானது இந்தக் கிடங்குகள் மூலம் விற்கப்படுகின்றது.

அங்கு முன்னேற்ற மடைந்த இரயில் பாதைகளும், சாலைவழிகளும் உள்ளன. எனவே கட்டைகளையும், தாள்களையும் ஆலைகளி லிருந்து எளிதில் கொண்டு செல்லவும், கொண்டு வரவுமான போக்குவரத்து எளிதில் நடைபெறும்.

- காகிதச்சுருள்களின் மீது அடையாளம், பகுதி எண் குறிப்பிடுவது அவசியமா?
- காகித ஆலைகள் இரவும் பகலும் ஏன் வேலை செய்து கொண்டே இருக்கின்றன?

விவசாய நிலத்தில் நடைபெறும் வேலைகளுடன் இதை ஒப்பிடு

நுழைவு வாயிலில் ஏன் பாதுகாவலர் நிறுத்தப்பட்டுள்ளார்? காவலாளி எவ்வாறு நடந்துக் கொள்கிறார் என்பதைத் தெரிவி. அவர் யாரை உள்ளே விடுவார் யாரை உள்ளே விட மாட்டார்?


## காகித ஆலை வேலை செய்யும் விதம்:

ஒரு தொழிற்சாலை பல்வேறு விதமான உழைப்பாளர்களை அதிக அளவில் பணியில் நியமிக்கிறது. சிலர் இயந்திரங்களில் வேலை செய்வர், சிலர் அவர்களுக்கு உதவுவர், சிலர் மின்சார அமைப்புகளை கவனிப்பர், சிலர் பொருட்களை போக்குவரத்து செய்வதில் உதவுவர். அவர்களில் சிலர் பொறியியல் போன்ற அதிகக்கல்வித் தகுதியும், பிறர் ITI மற்றும் பல்துறைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயின்றவர்களாகவும் இருப்பர். மேலும் சிலர் எழுத்தறிவு அற்றவர்களாக இருப்பதால் அவர்கள் சுத்தம் செய்தல் போன்ற கையால் செய்யப்படும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவர். தொழிற் சாலையில் மக்கள் பல முறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணியில் நியமிக்கப்படுகிறார்கள்.

சிலர் சீரான நிரந்தரத் தொழிலகப் பணியாளர்களாகவும், சிலர் தேவையின் அடிப்படையில் காரணப்பணியாளர்களாகவும் மேலும் சிலர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

காகித ஆலையில் ஆனந்த் என்பவர் நிரந்தரப் பணியாளராக இருக்கிறார். நீங்கள் அவரை அவருடைய சீருடையான நீலச்சட்டை மற்றும் காவி கால்சட்டையில் அழுத்தும் பிரிவில் காணலாம்.

- **கீழ்காணும் பிரிவினை மீண்டும் படித்து காலி இடங்களை உன் சொந்த வாக்கியங்களில் நிரப்பு**




SCERT TELANGANA


இவர் இந்த ஆலையில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வேலை செய்து வருகிறார். இவர் மாத சம்பளமாக ரூ.15,000 பெறுகிறார். நிரந்தர ஊழியர் என்ற முறையில் இவர் பல்வேறு இதர பயன்களையும் பெறுகிறார். அவை வருங்கால நிதி (பணி ஓய்வு பெறும் போது தரப்படும் தொகை) மருத்துவ காப்பீடு வசதி போன்றவை ஆகும். ஏதாவது ஒரு காரணத்தால் அவர் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டால் அல்லது விபத்து ஏற்பட்டு வேலை செய்ய முடியாமல் போனால், தொழிற்சாலை அவருக்கு உரிய இழப்பீட்டு தொகை அளிக்கும். ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு பெறுவார். இவரோ அல்லது இவருடைய குடும்ப உறுப்பினர் நோயுற்றால் அருகிலுள்ள அரசால் இயங்கும் மாநில ஊழியர் காப்பீடு மருத்துவமனைக்குச் சென்று (E.S.I.) இலவச சிகிச்சை மற்றும் மருந்துகள் பெறும் வசதி தரப்பட்டுள்ளது. இம் மருத்துவ வசதி பெற இவர் மாதம் தோறும் ஒரு குறிப்பிட்ட சிறுதொகையை சம்பளத்தில் இருந்து தருகிறார். காகித ஆலை நிர்வாகமும் இதற்காக உரிய தொகையை தன் பங்காக அரசுக்கு செலுத்துகிறது. ஆனந்த் வாரத்திற்கு ஒரு நாள் விடுப்பு பெறுகிறார். அத்துடன் பண்டிகை. இதர விடுப்புகளும் பெறுகிறார்.

சீருடை வாங்கவும், சுத்தம் செய்யவும் ஏற்படும் செலவுகளுக்கு ஏற்ற அலவென்சுகள் பெறுகிறார். சில வருடங்களில், காகித ஆலைக்கு அதிக வருவாய் வரும்போது, தொழிலாளர்களுக்கு நிர்வாகம் அளிக்கும் போனஸ் பெறுகிறார். இந்த காகித தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.


உமர் நிரந்தர தொழிலாளி அல்ல. ஆனால் தினமும் வேலை செய்ய தொழிற்சாலைக்கு வருகிறார். லாரிகளில் இருந்து பொருட்களை இறக்குதல், காகிதங்களை கட்டுகட்டி எற்றி அனுப்புதல் போன்றவை இவர் செய்யும் வழக்கமான வேலைகளாகும். ஓராண்டுக்கு முன்பு, மஹாராஷ்ராவில் உள்ள இவருடைய கிராமத்திற்கு வந்த ஒரு ஒப்பந்தக்காரர், இவருக்கு காகித ஆலையில் நிரந்தர வேலை வாங்கி தருவதாக வாக்குறுதி கொடுத்து இங்கு சேர்ந்தார். உமர் போன்ற தற்காலிக தொழிலாளிகளுக்கு, மாத சம்பளமாக 8000 ரூபாய்க்கள் தரப்படுகிறது. இது நிரந்தர தொழிலாளர்களுக்கு தரப்படும் சம்பளத்தை விட மிக குறைவாகும். இதர அலவென்சுகள் மற்றும் மருத்துவ வசதி, போனஸ் போன்றவற்றை பெறமுடியாது. ஊதியத்துடன் கூடிய விடுப்பு இவர்களுக்கு இல்லை. இருப்பினும், ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வேலை செய்த பிறகு அவர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கபடலாம்.

இத்தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள் தரையை சுத்தப்படுத்துதல், காகித கட்டுகள் மீது லேபிள்கள் ஒட்டுதல் போன்ற வேலைகளை செய்கின்றனர். புஷ்பா இந்த தொழிற்சாலையில் தினக்கூலி தொழிலாளியாக வேலை செய்கிறார். அவ்வப்போது வேலையில் அமர்த்தப்படும் தொழிலாளிகள் தினக்கூலி தொழிலாளர்கள் ஆவர்.

புஷ்பா நாள்தோறும் தொழிற்சாலைக்கு வந்து அன்றைக்கு வேலை இருக்கிறதா? என்பதை கேட்டறிவார். அவளுக்கு வாரத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தொழிற்சாலையின் தரையை சுத்தம் செய்யும் வேலையை தருவர். மரத்துண்டுகள் வெட்டப்படும் பிரிவில் அதிகமான மரத்தூள்கள் நிரம்பி இருக்கும். இவற்றையெல்லாம் அகற்றி சுத்தம் செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை துடைத்து சுத்தமாக வைக்க வேண்டும். தினக்கூலி அடிப்படையில் ஊதியம் தரப்பகிறது. சில நாட்கள் வேலை கிடைக்காது. தினக் கூலியாக ரூ.100 முதல் ரூ.150 வரை தரப்படுகிறது. மூன்றாண்டுகளுக்கும் மேல் அவரவர் இங்கு வேலை செய்து கொண்டிருந்தாலும், மாதத்திற்கு ரூ.2500 சம்பாதிக்கிறார். ஆனந்த் போன்ற நிரந்தர ஊழியர்கள் பெறும் இதர வசதிகள் இவளுக்கு தரப்படுவதில்லை.


படம் 9.7 காகிதம் வெட்டும் இயந்திரம்

வழக்கமாக, தொழிற்சாலை எஜமானர்கள் தங்கள் உற்பத்தி செலவை குறைத்துக் கொள்ள நிரந்தர வேலைகளுக்கு தற்காலிக தொழிலாளர்களை அமர்த்தி கொள்கின்றனர். சில சமயங்களில் குறைவான தொழிலாளர்களைக் கொண்டு இயங்க கூடிய புதிய இயந்திரங்களை பயன்படுத்து கின்றனர் அச்சமயங்களில் தொழிலாளர்களும், தொழிலாளர் சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தும், நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியும் அவர்களின் நிலைமையை மேம்படுத்திக் கொள்வர்,


தொழிற்சாலையின் உட்புறத் தோற்றம்

ஆலையில் வேலை செய்யும் தொழிளாளர்கள் தவிர, நிர்வாகம் கணக்காளர் களையும், குமாஸ்தாக்களையும் பயன் படுத்துகிறது. அவர்களுக்கு அதிக சம்பளமும் தரப்படுகிறது. ஆலையின் மூத்த மேலாளர்கள் வழக்கமாக ஆலை எஜமானர்களின் உறவினர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களுக்கு மிக உயர்ந்த அளவு ஊதியங்கள் அளிக்கப் படுகின்றன.

- ஆனந்த், உமர் மற்றும் புஷ்பா ஆகியோரை ஒப்பிட்டு கீழ்வரும் பட்டியலை நிரப்புக.

## காகித ஆலை யாருக்கு சொந்தம்?

இக்காகித ஆலைக்கு எஜமானர் ஒருவர் மட்டும் அல்ல. சிலர் ஒன்று சேர்ந்து, இத்தொழிற்சாலையை நிறுவியுள்ளனர். இவர்கள் பெருமளவு பணத்தை இதில் முதலீடு செய்துள்ளனர். அத்துடன் எங்களிடம் இருந்தும் கடன் பெற்று நடத்தி வருகின்றனர். மேலாளர்கள், நிர்வாக ஊழியர்கள், நிரந்தர ஊழியர்கள் போன்றோரை நியமிக்கின்றனர். தொழிலாளர்களுக்கும், மேலாளர்களுக்கும், நிர்வாக ஊழியர்களுக்கும் சம்பளங்கள் தரப்படுகின்றன. எஜமானர்களுக்கு சம்பளம் தரப்படுவதில்லை. ஊதியங்கள், ஆலையை நடத்த ஆகும் செலவுகள் போக மீதமுள்ள பணத்தை எஜமானர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். அதாவது, காகித ஆலையின் லாபத்தை பெறுகின்றனர். ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால், அதனை கூட்டாக ஏற்றுக் கொள்கின்றனர்.

| வ.எண் | பெயர் | செய்யும் வேலை | அனுபவம் | வருவாய் | இதர பயன்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆனந்த் | | | | |
| 2 | உமர் | | | | |
| 3 | புஷ்பா | | | | |

- தொழிற்சாலைகள் நிரந்தர, தற்காலிக மற்றும் தினக்கூலி தொழிலாளர்களை ஏன் வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றன என்று நீ கருதுகிறாய்?
- நிரந்தரமற்ற தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எவை என்று நீ கருதுகிறாய்?
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள காகித ஆலையில் வேலை செய்ய தொலை தூர இடங்களிலிருந்து மக்கள் ஏன் வருகின்றனர் என்று நீ கருதுகிறாய்?

SCERT TELANGANA

கீழ்காணும் குறிப்புகளை பயன்படுத்தி தொழிற்சாலை உற்பத்தியின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக எழுதிட உன்னால் முடியுமா?

1. இயந்திரங்கள்
2. கச்சாப்பொருட்கள்
3. எரிபொருள் மற்றும் தண்ணீர்
4. உற்பத்தி
5. மேலாளர்கள்
6. சந்தை
7. முதலாளிகள்
8. உரிமையாளர்கள்

சில தொழிற்சாலைகள் தனி முதலாளிகள் அல்லது கூட்டு முதலாளிகளால் அல்லாமல் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. மக்களின் நல்வாழ்விற்காக இவை அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன.

பெரும்பாலான தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள்கள் பெருமளவு தேவைப்படுகின்றன. காடுகள், நதிகள், கனிச் சுரங்கங்கள், விரைவாக தீர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தொழிற்சாலைகள் பெருமளவு புகையை வெளியிடுகின்றன. நதிகளில் ரசாயனக் கழிவுகளை வெளியிட்டு மாசுபடுத்தி வருகின்றன. சுற்றுப்புற நிலங்களும் மிக மோசமாக மாசடைகின்றன. எனவே, சுற்றுப்புறங்களான நிலம், நீர், காற்று போன்றவற்றிற்கு தொழிற்சாலைகள் விளைவிக்கும் சேதங்களை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை கண்டறிந்து பின்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் அதிகமான எண்ணிக்கையில் மக்களுக்கு வேலை வாய்ப்பை தருகின்றன. இருப்பினும், இத்தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் பல சமயங்களில் வேலை கடினத்தால் மிகவும் களைப்பை உண்டாக்கும்படி இருப்பதாக கருதுகின்றனர். இரசாயனங்கள் மற்றும் தூசுகள் நிறைந்த சூழ்நிலையில் வேலை செய்வதால் அடிக்கடி நோய்வாய் படுகின்றனர். அவர்களுக்கு மிகக்குறைந்த ஊதியங்கள் தரப்படுகின்றன. தொழிலாளர்கள் மிகவும் குறைந்த வசதிகள் கொண்ட குடிசைப் பகுதிகளில் வாழ வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர்.

நம்முன் உள்ள மிகப் பெரிய சவால்கள் என்னவென்றால், எவ்வாறு நமக்கு தேவையான பல்வேறு பொருட்களின் உற்பத்தியை சமன்படுத்துவது, தொழிற்சாலை அமைப்புகளால் உண்டாகும் தீய விளைவுகளை எவ்வாறு தடுப்பது, எவ்வாறு தொழிலாளர்களின் வாழ்க்கையை வசதியானதாக, கௌரவமானதாக மாற்றுவது, போன்றவை ஆகும்.


படம் 9.9 காகித சுருள்கள்.

**மாசடைதல் :**

காகித ஆலையின் மற்றொரு பக்கத்திற்கு நாங்கள் சென்றபோது, அப்பகுதியின் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்தோம். இரசாயணப் பொருட்களை பயன்படுத்துவதால் இத்துர்நாற்றம் உண்டாகிறது. காகித ஆலையில் இருந்து வெளியே வந்த பிறகு நாங்கள் அந்த ஆலையின் அருகில் உள்ள பகுதியில் வாழ்ந்து வரும் சிலரிடம் பேசினோம். அவர்கள் இவ்வாறு எங்களிடம் கூறினார்கள், இத்துர்நாற்றம் வழக்கமாக இருப்பது தான். இத்தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் தூசுகள் வீடுகள் மீதும், மரங்களின் மீதும், தோட்டத் தாவரங்கள் மீதும் படிந்து கிடப்பது சாதாரணமாக நிகழ்வதுதான். இக்காகித ஆலை நதியில் இருந்து பெருமளவு தூய நீரையும் பம்பு செட் இயந்திரங்கள் மூலம் இறைத்துக்கொள்கிறது. ஆனால், கொடுமை என்னவென்றால் விஷத்தன்மை வாய்ந்த இரசாயனங்கள் கலந்த நீரை வெளியிடுகிறது. அந்த மாசடைந்த நீர் நேரிடையாக நதி நீரில் சென்றடைகிறது.

சென்ற ஆண்டு தான் கழிவு மற்றும் இரசாயணங்கள் கலந்த நீரில் இருந்து அவற்றை அகற்றி சுத்தபடுத்திடும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டது. இவ் இயந்திரம் ஆலையில் இருந்து வெளியேறும் நீரிலுள்ள தீங்கு விளைக்கும் பொருட்களை நீக்குகிறது. காற்று, நீர் மண் மற்றும் உணவின் மூலம் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் மாசுகளை இந்த சுத்திகரிப்பு நிலையம் கட்டுபடுத்தி வருகிறது. சுற்று சூழலுக்கு ஏற்றவாறு பாதுகாப்பான நீரை உண்டாக்கி வெளியிடுகிறது. அத்துடன் வெளியேற்றுவதற்கு ஏற்ற வகையில் (அ) மறுபடியும் பயன்பாட்டுக்கு ஏற்ற (சாதாரணமாக உரங்களோடு பயன்படுவன) திடக் கழிவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இத்துடன், காகித ஆலைகள் கழிவு நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட நீரை, அவற்றின் தோட்டங்களில் உள்ள தாவரங்களுக்கு பாய்ச்சி வளர்க்கின்றன. சில விவசாயிகள் இந்நீரை நீர்பாசனத்திற்கும் பயன்படுத்துகின்றனர்.

நம் மாநிலத்திலும், நாட்டிலும் பலதரப்பட்ட பொருட்களை மக்கள் பயன்பாட்டிற்காக, அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன.

SCERT TELANGANA

### முக்கியச் சொற்கள்

1. உற்பத்தி செயல்முறை
2. சேர்ப்பிக்கும் வளையம்(Conveyor Belt)
3. நார் வரிசை (Fibre Line)
4. லேபிள்
5. அலவன்ஸ் / சலுகைகள்
6. போனஸ் / ஊக்கத்தொகை
7. கணக்காளர்
8. வேலை நேரம்
9. மூலப் பொருட்கள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. நீ தோல் அல்லது துணி தொழிற்சாலை தொடங்க விரும்புகிறாய் என்று கற்பனை செய்திடு. ஒரு தொழிற்சாலை அமைத்திடும் போது நீ கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?(AS1)
2. காகிதம் தயாரிப்பில் நிகழும் உற்பத்தி முறைகள் குறித்து விவரித்திடு.(AS1)
3. இக்காகித ஆலை ஒரு நாள் வேலை செய்வதை நிறுத்திக் கொள்ளும் என்று நீ நினைக்கின்றாயா? அவ்வாறு நிகழ்ந்தால், தொழிலாளர்களின் வாழ்க்கை மீது அதன் தாக்கம் எப்படியிருக்கும்?(AS4)
4. காகிதம் இல்லாத உலகத்தை கற்பனை செய்திடு. காகிதத்திற்கு பதிலாக எந்தெந்த மாற்றுப் பொருட்களை நீ பயன்படுத்துவாய்?(AS4)
5. தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்படும் மாசடைதலை நிறுத்த செய்ய வேண்டிய சில முக்கிய நடவடிக்கைகள் குறித்து நீ கருதுவது என்ன?(AS4)
6. காகித ஆலையின் நன்மை, தீமைகள் குறித்து உன் வகுப்பறையில் ஒரு விவாதம் நடத்துக.(AS1)
7. காகித ஆலையில் வேலை செய்யும் ஒரு நிரந்தர ஊழியர் பெறும் வருவாய் மற்றும் பயன்களை பட்டியலிடு. அவற்றை தற்காலிக ஊழியர்கள் மற்றும் தினக்கூலி வேலை செய்வோரின் வருவாய், பயன்களோடு ஒப்பிட்டு வேறுபாடுகளை கண்டறியவும்.(AS1)
8. கைவினை தொழிலாளர் கூடை தயாரிப்பதையும், காகித ஆலையில் காகிதம் தயாரிப்பதையும் கவனித்தில் கொண்டு கீழே தரப்பட்டுள்ள அம்சங்கள் இவ்விரண்டு தயாரிப்பிலும் எவ்வாறு உள்ளன என்பதை ஒப்பிடுக.(AS1)

   1. வேலை செய்யும் இடம் 2. கருவிகள்/இயந்திரங்கள் 3. கச்சாப்பொருட்கள்

   4. அதிலாபாத் மாவட்டத்தில் 5. சந்தை 6. முதலாளிகள்
9. அதிலாபாத் மாவட்டத்தில் சிர்ப்பூர் காகஜ்நகர் என்னுமிடத்தில் ஒரு காகித ஆலை உள்ளது. இந்த காகித ஆலை மாவட்டத்தின் தலைநகரில் ஏன் அமைக்கப்படவில்லை என்று நீ கருதுகிறாய்? கலந்துரையாடு.(AS1)
10. உலக புறவரிப் படத்தில் கீழ்காணும் நாடுகளை குறித்து காட்டுக.(AS5)

    (அ) இலங்கை (ஆ) சிங்கப்பூர் (இ) நைஜீரியா (ஈ) தென் ஆப்பிரிக்கா (உ) நேபாளம்
11. பக்கம் 91ல் 3ஆம் பத்தியை படித்து தொழிற்சாலைகள், தொழிலாளிகளின் நலனில் அக்கறை காட்டுகிறது என்று நீ கருதுகிறாயா? ஏன்?(AS2)

**செயல்திட்டம் :**

உங்கள் பகுதியில் மாசு உண்டாக்கும் தொழிற்சாலையை கவனித்திருப்பீர்கள். அல்லது உங்களுடைய பகுதியில் ஒரு தொழிற்சாலை மாசு உண்டாக்கி கொண்டிருக்கிறது என்று கற்பனை செய்திடு. உள்ளூர் செய்தித்தாளின் பதிப்பாளருக்கு அது குறித்து ஒரு கடிதம் எழுதுக. அத்துடன் அக்கடிதத்தில் எழுதப்பட்ட விஷயங்கள் குறித்து வகுப்பறையில் சக மாணவர்களுடன் கலந்துரையாடு.



SCERT TELANGANA

பாடம் 10

# போக்குவரத்து அமைப்பின் முக்கியத்துவம்

நம் அன்றாட வாழ்க்கையில், நாம் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல பல்வேறு வாகனங்களை பயன்படுத்துகின்றோம். மக்கள் எவ்வாறு சாலை போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, விமான போக்குவரத்து, கப்பல் போக்குவரத்துகளை பயன்படுத்தி கொள்கின்றனர் என்னும் அம்சம் குறித்து இப்பாடத்தில் நாம் விவாதித்து அறிவோம். அத்துடன் மக்கள் போக்குவரத்து சாதனங்களை தங்கள் வருவாய் ஆதாரங்களாக ஏன், எவ்வாறு தேர்ந்தெடுத்து கொள்கின்றனர் என்பது குறித்தும், வணிக சந்தைகளில் போக்குவரத்தை எவ்விதம் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பது குறித்தும், நாம் இப்பாடத்தில் கலந்துரையாட உள்ளோம். இப்பாடத்தில் ஆந்திரபிரதேசத்தில் உள்ள போக்குவரத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதற்கு சாலைப் போக்குவரத்து ஒரு தனியார் அமைப்பிடம் தரப்பட்டு உள்ளது. இதர போக்குவரத்து மார்க்கங்களான ரயில் போக்குவரத்து நீர் மற்றும் வான்வழி போக்குவரத்து குறித்து நீங்கள் மேல் வகுப்புகளில் படிக்க போகிறீர்கள்.

நீங்கள் ஏற்கனவே போக்குவரத்து முறைகள் குறித்து தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

- கீழ்கண்ட பட்டியலில் தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு நிரப்புக. சில சொற்களை ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பயன்படுத்த வேண்டி இருக்கும். அவ்வாறு அச்சொற்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்துவதற்கான காரணங்களை கூறுக.

  புனித யாத்ரிகர்கள், கார், மீன், கால்நடைகள், தானியம், மாட்டு வண்டி, பெட்ரோல், தொழிலாளிகள், கப்பல், ஹெலிகாப்டர், டாங்கர் லாரி, மிதிவண்டி, சுற்றுலாப் பயணிகள், இரும்புத்தாது, சரக்கு ரயில் வண்டி, மாம்பழங்கள்.

| போக்குவரத்து மார்கம் | பயன்படுத்தப்படும் வாகனங்கள் | சில உற்பத்திகள் / மக்கள் சமூகங்கள் பயன்படுத்துவன. |
|---|---|---|
| சாலை போக்குவரத்து | | |
| இரயில் போக்குவரத்து | | |
| கப்பல் போக்குவரத்து | | |
| விமான போக்குவரத்து | | |

### தெலங்கானாவில் போக்குவரத்து அமைப்பு :

மாநிலத்தின் பெரிய அளவிலான போக்குவரத்து அமைப்பின் படத்தை பார்க்கும் போது, நாம் கீழ்கண்டவற்றை கவனிக்க முடியும்.

**சாலை போக்குவரத்து :** இந்தியாவில் பெரும்பாலான சாலைகள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. சாலைகள் பல்வேறு வகைப்படும். சில சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என்று அழைக்கப்படுகின்றன.

நாட்டின் பல்வேறு மாநிலங்களின் குறுக்கே தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துகாட்டாக தேசிய நெடுஞ்சாலை எண்.7 அல்லது 44 உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்கள் வழியாக செல்கிறது. ஆந்திர பிரதேச மாநில அரசு சிறு பட்டினங்கள், மாவட்டங்களை இணைத்திடும் சாலைகளை பராமரிக்கிறது. கிராம சாலைகள் அமைத்து பராமரித்தல் பஞ்சாயத்துகளின் பொறுப்பாகும். பெரும்பாலானவை சரளை கற்களால் அமைக்கப்படுகின்றன.

SCERT TELANGANA

நகர்புற சாலைகளின் பொறுப்பினை நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்கள் ஏற்றுள்ளன. அத்துடன், சர்வதேச எல்லைகளின் வழியாக அமைக்கப்படும் சாலைகளை எல்லைச் சாலைகள் என்பர். சாலை வழிகள் தொலை தூரங்களில் மூலை முடுக்குகளில் வாழும் மக்களை முக்கிய நகரங்களோடு ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.




படம் 10.1: 1932ல் நிஜாமால் போக்குவரத்து துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 27 வாகனங்கள்

**ரயில் போக்குவரத்து** : இந்தியாவில் உள்ள பயணிகளில் ஐந்தில் ஒரு பங்கினர் ரயில்களை பயன்படுத்துகின்றனர். நிலக்கரி, இரும்புத்தாது, உரங்கள், சிமெண்ட், உணவு தானியங்கள் போன்றவற்றை போக்குவரத்து செய்திட ரயில்கள் முக்கியமாக பயன்படுத்தப்படுகின்றன. ஆந்திரப்பிரதேசத்தில் ஏறத்தாழ 650 ரயில் நிலையங்களும், 5000 கி.மீ. நீளமுள்ள ரயில் வழிப்பாதைகளும் உள்ளன. துறைமுகங்களில் இருந்து பொருட்களை எடுத்துச் செல்லவும், மற்ற இடங்களுக்கு சேர்க்கவும் ரயில்கள் உதவுகின்றன. துறைமுகங்கள் அயல் நாட்டு வணிகத்தில் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

**விமான போக்குவரத்து** : ஆந்திர பிரதேசத்தில் ஆறுவிமான நிலையங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று சர்வதேச விமான நிலையம், ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களாகும். சர்வதேச விமான நிலையம் ஐதராபாத்தில் (ஷம்ஸாபாத்) உள்ளது. மீதமுள்ள விமான நிலையங்கள் விசாகபட்டினம், திருப்பதி (ரேணிகுண்டா), ராஜமந்திரி, விஜயவாடா (கன்னவரம்) மற்றும் புட்டபர்த்தி முதலிய இடங்களில் உள்ளன. ஆந்திர பிரதேசத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்றிட சர்வதேச விமான நிலையம் பயன்படுகிறது. இந்திய நாட்டுக்குள் பயணம் செய்வோருக்கு உள்நாட்டு விமான நிலையங்கள் பயன்படுகின்றன.

**கப்பல் போக்குவரத்து** : இந்திய வணிகர்கள் அயல் நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் பெரும்பாலான பொருட்கள், துறைமுகங்கள் வழியாக போக்குவரத்து செய்யப்படுகின்றன. துறைமுக நகரங்கள் அல்லது பட்டினங்கள் இதனால் பெரும் வியாபார மையங்களாக விளங்குகின்றன. ஆந்திர பிரதேசம் 15 துறைமுகங்களை கொண்டுள்ளது. அவற்றில் விசாகப்பட்டினம் மிகப் பெரிய துறைமுகம் ஆகும். கோதாவரி, கிருஷ்ணா பென்னா நதிகள் மற்றும் அவற்றின் கால்வாய்கள் நீர் வழிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

- ஆந்திர பிரதேசத்தின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுக நகரங்களை புறவரி படத்தில் குறித்து காட்டுக.

**உற்பத்தி மற்றும் பொருட்களின் விற்பனைக்கு - சாலைகளின் பயன்பாடு**

ஆந்திர பிரதேசத்தில் உள்ள பெரும் பான்மையான மக்கள் பயணத்திற்கு சாலைகளை சார்ந்து உள்ளனர். நம் மாநிலத்தில் போக்குவரத்து வசதிகளை கிராமங்கள் பெறுவதில் மாற்றத்தை காண முடிகிறது. 2001ஆம் ஆண்டில் ஏறக்குறைய நான்கில் மூன்று பங்கு கிராமங்கள் போக்குவரத்து வசதிகளை பெற்றிருந்தன.

முந்தைய வகுப்புகள் மற்றும் பாடங்களில் விவசாயிகள் குறித்து விவரிக்கப்பட்டிருந்தது. மீனவர்கள், மற்றும் தொழிற்சாலைகள் போக்குவரத்தின் மீது பல்வேறு காரணங்களுக்காக சார்ந்துள்ளனர். விவசாயிகள் தங்கள் விளைச்சல் பொருட்களை உழவர் சந்தைக்கும், மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை கெடுவதற்கு முன்பு வாங்குவோருக்கு சேர்த்திடவும், போக்குவரத்தை நம்பி உள்ளனர். தொழிற்சாலைகள் தங்களின் உற்பத்தி பொருட்களை நுகர்வோருக்கு சேர்த்திடவும் போக்குவரத்து அமைப்பை சார்ந்துள்ளன. எடுத்துக்காட்டாக பருத்தியை எடுத்துக் கொள்வோம். விவசாயிகளால் விளைவிக்கப்பட்ட பருத்தியை போக்குவரத்து மூலம் மில்களுக்கு சேர்க்கின்றனர். பருத்தியில் இருந்து துணி

SCERT TELANGANA

தயாராவதற்கு பல்வேறு நிலைகளில் மாற்றங்கள் அடைந்து ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு போக்குவரத்து மூலம் அனுப்பப்படுகிறது. இறுதியாக துணி உற்பத்தியாகும் இடத்திற்கு சேர்கிறது. சந்தைகள் இவ்வாறாக போக்குவரத்து வசதிகள் மீது மிகவும் சார்ந்துள்ளது.

◆ கீழ்காணும் பத்தியை படித்திடு. தரப்பட்டுள்ள பிரச்சனையை தீர்க்க வழியை கூறுங்கள்.

புன்னியப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் அவர்கள் விளைவிக்கும் நெல்லை ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாயுடு பேட்டை பட்டினத்திற்கு எடுத்துச் சென்று விற்கின்றனர். மாட்டு வண்டி நடத்துவோர் ஒரு சமயத்தில் 10 மூட்டைகள் நெல்லை, மூட்டை ஒன்றுக்கு வாடகையாக 50 ரூபாய் பெற்றுக்கொண்டு சேர்த்திடுவர். டிராக்டரில் ஒரு முறைக்கு 30 முதல் 40 மூட்டைகள் கொண்டு செல்ல முடியும் லாரியில் ஒரு முறையில் 150 முதல் 170 மூட்டைகள் எடுத்துச் செல்ல முடியும். அதிகமான தூரமாக இருந்தால் டிரக் ஓட்டுநர்கள் அதிகம் வசூல் செய்வர்.

எடுத்துக்காட்டாக, நாயுடுபேட்டையில் உள்ள மொத்த வியாபாரியிடம் இருந்து நெல்லை, பிரகாசம் மாவட்டத்தில் உள்ள மாரூருக்கு கொண்டு போய் சேர்த்திட 100 முதல் 120 கி.மீ.க்கு, போக்குவரத்து கட்டணமாக டிரக் நடத்துபவர் ஒரு மூட்டைக்கு 50 ரூபாய் வசூலிப்பார். ஒரு டன் பொருளை போக்குவரத்து செய்திட அவர்கள் 800 முதல் 1000 கட்டணமாக பெற்றுக்கொண்டு ஐநூறு கிலோ மீட்டர் தொலைவிற்கு எடுத்து சென்று சேர்த்திடுவர்.

ஒரு கிராமத்தில் மூன்று விவசாயிகள் உள்ளனர். அவர்கள் நெல் பயிரை விளைவித்து அறுவடை செய்தனர். அவர்கள் முறையே 25, 50 மற்றும் 75 மூட்டைகள் அறுவடை செய்தனர். அவற்றை அருகிலுள்ள பட்டினத்தில் உள்ள விவசாய சந்தை வளாகத்தில் விற்றிட விரும்பினர். அப்பட்டினம் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. எப்படிப்பட்ட போக்குவரத்து சாதனத்தை நீங்கள் சிபாரிசு செய்வீர்கள்? ஏன்?



**படம் 10.2 விலங்குகளை ஏற்றுமதி செய்தல்**

**போக்குவரத்து செயல்கள் - வேலை**

ஒவ்வொரு பேருந்திலும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் என இரண்டு நபர்கள் வேலை செய்வதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். போக்குவரத்து வாகனங்களை பராமரிக்க ஆயிரக்கணக்கான மக்கள் தேவைப் படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஆந்திர பிரதேச மாநில சாலை போக்குவரத்து கழகம் அதன் 20,000 பேருந்துகளை இயக்க 1,20,000 ஊழியர்களை கொண்டுள்ளது. இப் பேருந்துகள் ஆந்திரபிரதேசம் முழுவதும் இயங்கி, நாள்தோறும் 1.25 கோடி பயணிகளை அவர்களின் இடங்களுக்கு கொண்டு சேர்க்கிறது. இவ்வூழியர்கள் கணக்குகளை கையாள்கின்றனர். பேருந்துகளை பழுது செய்பவர் (அல்லது) பேருந்து நிலையத்தில்

◆ கீழ்காணும் பல்வேறு வகையான பேருந்துகளில் பயணம் செய்ய கட்டணம் மற்றும் பயணத்திற்கான நேரம் ஏதேனும் உங்களுக்கு தெரிந்த இடங்களுக்கு இடையே ஒப்பிட்டு அட்டவணையை நிரப்புக.

| பேருந்து வகை | கட்டணம் | எடுத்துக்கொள்ளும் நேரம் |
|---|---|---|
| 1. பல்லெ வெலுகு/பல்லெபாட்டா/கிராமணி | | |
| 2. விரைவுப் பேருந்து | | |
| 3. சொகுசு பேருந்து | | |

- பேருந்து கட்டணங்களில் காணப்படும் வேறுபாடு நியாயமானது என்று நீங்கள் கருதுகிறீர்களா? காரணங்களை கூறுக.
- கட்டண வேறுபாடுகள் போன்றே, பேருந்து பயணத்தில் கிடைத்திடும் வசதிகள் மற்றும் பயண நேரம் ஆகியவற்றிலும் வேறுபாடுகளை காண முடிகிறது. இருப்பினும், உன் கருத்துப்படி, பெரும்பான்மை மக்கள் எவ்விதமாக பயணம் செய்திட விரும்புவர்? நீ பேருந்து வசதிகளை மேம்படுத்தும் அதிகாரியாக இருந்தால், எவ்வகை பேருந்தில் வசதிகளை மேம்படுத்த நீ முன்னுரிமை தருவாய்?

வேலை செய்வர், சில ஊழியர்கள் பேருந்து சலுகை சீட்டு மற்றும் பேருந்து பயண சீட்டுகளை பேருந்து நிலையத்தில் விநியோகம் செய்கின்றனர் அல்லது சோதனை ஆய்வாளராக பணியாற்றுகின்றனர்.

ஆந்திர பிரதேச மாநில சாலைகள் மீது ஏறக்குறைய ஒரு கோடி வாகனங்கள் இயங்குகின்றன. அவற்றில் நான்கில் மூன்று பங்கு இரு சக்கர வாகனங்கள் ஆகும். போக்குவரத்து அமைப்பு திறம்பட செயலாற்ற பெட்ரோல் / டீசல் விநியோக நிலையங்கள், பழுது சீரமைக்கும் பணிமனைகள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்கும் கடைகள் முதலியவை பெரும் துணை புரிகின்றன.



*படம் 10.3 பழைய, புதிய போக்குவரத்து வழிகள்*

## போக்குவரத்து சேவைகள் மற்றும் வாய்ப்புகள் :

மக்கள் பயன்படுத்தும் போக்குவரத்து முறை, கிடைத்திடும் வசதிகள், தங்கும் நிலை ஆகியவற்றை சார்ந்துள்ளது. சில சமயங்களில் பல்வேறு வகையான போக்குவரத்தை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைத்திடும் எடுத்துகாட்டாக, பாகிஸ்தான் நாட்டிற்கு சென்றிட பேருந்து, ரயில் மற்றும் விமான மார்கங்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக நெடுந் தொலைவு நாடுகளுக்கு செல்ல கப்பல்கள் முக்கியமானவைகளாக விளங்கின. ஆனால் தற்காலத்தில் மிக குறைவான மக்களே கப்பல் பயணம் செய்கின்றனர். பெரும்பாலும் பொருட்களை போக்குவரத்து செய்திட கப்பல்கள் பயன்பட்டு வருகின்றன.



**படம் 10.4 ரயில்வே தொழிலாளர்கள்**

நகரங்களில் போக்குவரத்து சாதனங்களின் தேர்வு வெவ்வேறு விதங்களாக இருக்கும்.

உங்களில் சிலர் பள்ளிக்கு பேருந்தில் வரலாம். தொழிற்சாலைகள், அலுவலகங்கள், வீட்டு வேலை செய்வோர், கடை நடத்துவோர் முதலியோரும் போக்குவரத்து சாதனங்களை சார்ந்துள்ளனர். ஒவ்வொரு நகரத்திலும் பொதுமக்கள் போக்குவரத்து அமைப்பு இல்லாமல் இருக்கலாம். அச்சமயங்களில் மக்கள் தங்களின் சொந்த வாகனங்கள் அல்லது வாடகை வாகனங்களான ஆட்டோ ரிக்ஷா அல்லது வாடகை கார்களை சார்ந்து உள்ளனர்.

பயண கட்டணம் அதிகமாக இருந்தால், மக்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல இயலாது.

எடுத்துக்காட்டாக, ஓரித்தில் கிடைக்கும் சம்பளம் பிற இடங்களை விட அதிகமாக இருந்தால் குறைவான ஊதியம் கிடைக்கும் பகுதிகளில் உள்ள மக்கள் அதிக ஊதியம் கிடைக்கும் இடங்களுக்கு செல்ல விரும்புவர். போக்குவரத்து கட்டணம் அதிகமாக இருப்பின் மக்கள் அவ்விடங்களுக்கு சென்றிட ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

குறைவான வருவாய் கொண்ட மக்கள் தங்களின் ஊதியத்தில் பெருமளவு பங்கை செலவு

SCERT TELANGANA

செய்ய வேண்டி உள்ளது. மிதிவண்டியில் செல்லுதல், நடந்து செல்லுதல், போன்றவை தொலைதூர பயணம் செய்ய சுலபமானது அல்ல. பெரு நகரங்களில் மக்கள் நடந்து செல்வதற்கும், மிதிவண்டி சிறப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டியது முக்கியமானதாகும். பாதசாரிகள் செல்வதற்கு நடைபாதைகள் இருப்பினும், அவற்றை கடைக்காரர்கள் ஆக்கிரமித்து இருப்பதை நீங்கள் காணலாம். சில இடங்களில் நடைபாதை மற்றும் சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் வாகனங்களை பயன்படுத்துவோர் மிகவும் சிரமப்படுகின்றனர். நடைபாதைகளை கூட பயன்படுத்த இயலாது. எனவே, சாலையில் வாகனத்தை ஓட்டி செல்வோர் வீட்டிற்கு செல்லும்முன் பல சாகசங்களுடன் செல்கின்றனர்.

- கிருஷ்ணாவும், இப்ரஹீமும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு இடங்களில் வசிக்கின்றனர். ஆனால் அவர்களின் வீட்டில் இருந்து பள்ளி மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இப்ரஹீம் நகர பேருந்து மூலம் பள்ளிக்கு வருகிறான். கிருஷ்ணா பள்ளி பேருந்து மூலம் பள்ளிக்கூடத்திற்கு வருகிறான். இவ்விரு மாணவர்களும் வெவ்வேறு வாகனங்களில் பள்ளிக்கு வருவதன் காரணம் எதுவாக இருக்கும்? அவர்களின் குடும்பங்களுக்கு எந்தெந்த அம்சங்கள் காரணமாக இருக்கலாம்?

**போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசடைதல் :**


நம் நாட்டில் உள்ள பெரும்பாலான நகரங்கள் மக்கள் நெருக்கம் மற்றும் போக்குவரத்து நெரிசலை சந்தித்து வருகின்றன. நகரங்களில் சிறந்த போக்கு வரத்து அமைப்பு இல்லா விட்டால் அதிக மக்கள் சொந்தமாக வாகனங்கள் வாங்க வேண்டி இருக்கும். அதன் விளைவாக போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்தும். ஏனெனில் சாலைகள், பெருகி வரும் வாகனங்களுக்கு ஏற்றவையாக, அகலமாக இருப்பதில்லை.

இதனை ஒரு எடுத்துக்காட்டு மூலம் நாம் புரிந்து கொள்வோம். இந்தியாவின் மிகப் பெரும் ஆறு நகரங்களின் மக்கள் தொகை 1981 முதல் 2001 வரையிலான ஆண்டுகளில் இரண்டு மடங்காகியது. ஆனால், அதே காலகட்டத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை எட்டு மடங்காக ஆனது. மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார்கள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

இதன் விளைவாக பெருமளவு பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாடு அதிகரித்து காற்று மாசடைதலுக்கு வழிவகுத்தது. காற்று மாசடைதலை குறைத்திட பெட்ரோலிய பொருட்களின் பயன்பாட்டை குறைத்திட வேண்டும். பொதுமக்களுக்கான போக்குவரத்து அமைப்பு அதிகமான மக்களை, குறைந்த செலவில் பயணம் செய்திட உதவுகிறது.

**பாதுகாப்பாக பயணம் செய்தல் :**

தற்காலத்தில் சாலைப் பயணம் மிகவும் ஆபத்தானதாக ஆகிவிட்டது. சாலை விபத்துகளால் ஏற்படும் மரணங்கள் மற்றும்



படம் 10.5 மலைப்பகுதியில் பயணம் செய்யும் இரயில்

உடல் காயங்கள் குறைவான வருவாய் உடைய குடும்பங்கள் மீது மிகுந்த விளைவை உண்டாக்குகின்றன. சாலை விபத்துக்களில் இறந்தவர்களில், காயமடைந்தவர்களில் அதிகம் பேர் மிதிவண்டி ஓட்டுவோர், பாதசாரிகள் அல்லது நடைபாதைகளில் வாழ்பவர்களே உள்ளனர். விபத்துகள் சாலை மார்க்கம் மட்டுமின்றி இதர போக்குவரத்து மார்க்கங்களிலும் நிகழ்கின்றன. சாலை மற்றும் ரயில் மார்க்கங்கள் கலக்கும் இடங்களில் பெரும்பாலும் ரயில்வே கேட்டுகள் வாகனங்களை நிறுத்திட பயன்படுத்தபடுகின்றன.

இருப்பினும், அவ்வகையான ரயில்வே கேட்டுகள் இல்லாத இடங்களில் மக்களும், வாகனங்களும் நின்று இரண்டு பக்கங்களிலும் கவனித்து அதன் பிறகு கடந்து செல்ல வேண்டியது முக்கியம்.

## சாலை பாதுகாப்பு வாரம் :

ஒவ்வொரு ஆண்டின் முதல் வாரத்தில் சாலை போக்குவரத்து துறை நாடு முழுவதும் சாலை பாதுகாப்பு வாரமாக கொண்டாடப்படுகிறது. இந்நாட்களில் அத்துறையினர் பொதுமக்களுக்கு

சாலை விதிகளை பின்பற்றும்படி வழிகாட்டி நியமங்களை விளக்கி கூறுவர். அரசாங்கத்தால் நடத்தப்படும் நிறுவனங்களான ஆந்திர பிரதேச மாநில சாலை போக்குவரத்துக் கழகம் போன்றவை ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு முகாமை நடத்துக்கின்றன.

வாகன ஓட்டுநர்கள் பாதுகாப்பாக வாகனங்கள் ஓட்ட பயிற்சி அளிக்கின்றன. பள்ளிக்கூடங்களில் மாணவ-மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, பட்டிமன்றம் மற்றும் இதர போட்டிகளை மாநில சாலை போக்குவரத்து துறை நடத்தி, அவர்கள் பாதுகாப்பாக பயணம் செய்திடவும், சாலை போக்குவரத்து விதிகளை பின்பற்றவும் ஊக்கமளிக்கின்றன. சாலைகள், ரயில்வேக்கள், நீர்வழிகள் வான்வழிகள் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் சாலை பாதுகாப்பு விதிகளை பின்பற்ற வேண்டியுள்ளது. இதனால் போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் மரணங்கள், காயங்களை குறைத்திட முடியும்.



*படம் 10.6 விசாகப்பட்டினத்துறைமுகம்*

- உங்களுக்கு அருகிலுள்ள போக்கு வரத்து காவலர் அல்லது ஓட்டுநர் பயிற்சி பள்ளி அல்லது ஓட்டுநர் உரிமம் பெற்றவரை சந்தித்து பேசுங்கள். ஓட்டுநர்கள் எவ்வாறு பயிற்சி பெறுகின்றனர் என்பதை குறித்து கலந்து ரையாடுங்கள். வாகன ஓட்டுநர் களுக்கான பயிற்சி பள்ளி வளாகத்தில் பார்வைக்காக வைக்கப் பட்டிருக்கும் சாலை விதிகள் குறித்து கவனித்து தெரிந்து கொள்ளுங்கள்.
- சாலைகளை பயன்படுத்தும் போது நாம் பின்பற்ற வேண்டிய அடிப்படை விதிகள் குறித்து கலந்துரையாடுங்கள் சாலைகள் மீது பாதுகாப்பாக பிரயாணம் செய்வது எப்படி? என்பதை குறித்து விவாதியுங்கள். சாலை பாதுகாப்பு விதிமுறைகளை காட்டும் படங்களை சார்ட் மீது வரைந்து உங்கள் வகுப்பறையில் பார்வைக்கு மாட்டி வைத்திடுங்கள்.

### முக்கியச் சொற்கள் :

1. பாதுகாப்பான பயணம்
2. சாலை போக்குவரத்து
3. விமானப்போக்குவரத்து
4. கப்பல் போக்குவரத்து
5. ரயில் போக்குவரத்து
6. தேசிய நெடுஞ்சாலை
7. மாநில நெடுஞ்சாலை
8. கிராம சாலைகள்
9, நகர்புறச்சாலைகள்
10. எல்லைப்புறச் சாலைகள்
11. T.S.R.T.C
12. போக்குவரத்து நெரிசல்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. விவசாய பொருட்களின் உற்பத்திக்கு போக்குவரத்து அமைப்பு எவ்வாறு அத்தியாவசியமானது? உதாரணத்துடன் விவரி.(AS1)
2. பேருந்துகளின் பயன்பாடு ரயில்களின் பயன்பாட்டை விட எவ்வாறு மாறுபட்ட ஒன்றாகும்?(AS1)
3. கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து தருவது ஏன் முக்கியமானது?(AS1)
4. ஒரு நாட்டிற்கு நீர் மார்க்கங்கள் முக்கியமானது என்று ஏன் நீ கருதுகிறாய்?(AS1)
5. போக்குவரத்து அமைப்பு வாழ்க்கையின் சாதனமாக எவ்வாறு உருவெடுத்துள்ளது?(AS6)
6. தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களின் போக்குவரத்து செலவு அதிகரித்தால் என்னவாகும்? ஒரு எடுத்துக்காட்டுடன் விவரி.(AS1)
7. **விபத்துகளை தடுத்தல்** என்னும் கருத்தின் மீது சில முழக்கங்களை எழுதுக.(AS6)
8. வாகனங்களை பேரளவில் பயன்படுத்துவதால் வாகன நெரிசலும், போக்குவரத்து அடைப்புகளும் ஏற்படுகின்றன. இதை தடுக்க நீ என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வாய்?(AS4)
9. தெலங்கானா புறவரிப்படத்தை வரைந்து ஐதாராபாத்தை குறிப்பிடு.(AS5)

**கலந்துரையாடல்:** சாலை விபத்துகள் - பாதுகாப்பு முறைகள் என்ற தலைப்பில் காவலருடன் உரையாடுங்கள்.

### செயல் திட்டம் :

போக்குவரத்து அமைப்பில் பணிபுரியும் ஒரு ஓட்டுநரை நேர்க்காணல் காணுங்கள், இதன் மூலம் அவர்களின் வேலை, அடையும் பயன்கள், விபத்துக்கள் முதலிய விவரங்களை கேட்டறிந்து ஒரு அறிக்கையை தயார் செய்திடுங்கள்.

SCERT TELANGANA

பாடம் **11**

# புதிய அரசர்களும், இராஜ்ஜியங்களும்

## பகுதி - I

7வது நூற்றாண்டுகளுக்குப் பிறகு பல புதிய அரச வம்சங்கள் தோன்றலாயின. 7ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை இந்திய துணைக்கண்டத்திலுள்ள வெவ்வேறு நிலப்பகுதிகளில் அரசாட்சி செய்ய வெவ்வேறு அரசு வம்சங்களை படம் 1ல் காணலாம்.

- குர்ஜாரா-பிரதிஹாராக்கள், ராஷ்ட்டிரகூடர்கள், பாலர்கள், சோழர்கள், சௌஹான்கள் ஆகியோரின் ராஜ்ஜியங்களை வரைபடத்தில் குறிக்கவும்.
- அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பரப்புகள் தற்போது எந்த மாநிலங்களில் உள்ளன என்பதை உங்களால் அடையாளம் காண முடியும்?




*வரை படம் 1 : 7ஆம் மற்றும் 12 ஆம் நூற்றாண்டுக்கிடையே முக்கிய இராஜ்ஜியங்கள்*

SCERT TELANGANA

## அரச வம்சங்களின் தோற்றம்

7ஆம் நூற்றாண்டில். இந்திய துணைக் கண்டத்தின் வெவ்வெறு நில பரப்புக்களில். பெரிய நில சுவாந்தார்களும், படை வீரர்களின் அரசர்கள் அவர்களை தங்களுக்கு கீழ்நிலையில் உள்ள குறுநில மன்னர்களை (சாமந்தர்கள்) அங்கீகரித்தனர். அவர்கள் அடிக்கடி, மன்னர்களுக்கு பரிசுப் பொருட்களையும், இராணவ, உதவியையும் செய்து வந்தனர். காலப்போக்கில் அதிகாரத்தையும் பெருஞ் செல்வத்தையும் பெற்ற இவர்கள் தங்களை மகா சாமந்தர்களாவும் (Mandialesswara) அறிவித்துக்கொண்டனர். குறிப்பிட்ட நிலப் பகுதிகளில் ஆட்சிபுரிபவர்கள் சிலர், மன்னர்களின் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்றனர்.

இதுபோல தோன்றிய அரசு அம்சங்களில் ஒன்றே தக்காணத்தில் தோன்றிய ராஷ்டிர கூட அரச, வம்சம். தொடக்கத்தில் இவர்கள், கர்நாடக சாளுக்கிய அரசர்களுக்கு கீழ்பணிந்தவர்களாக இருந்தனர்.

8ம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் ராஷ்டிர கூடத்தில் முதன்மையானவரான தண்டி துர்கா, சாளுக்கிய ஆட்சியை வீழ்த்தி ஹிரண்யா கர்பா (Hiranyagarba) என்ற மதச்சடங்கை செய்தார். ‘தங்க கருவறை’ என்பதே இதன் பொருளாகும். இச்சடங்கை பிராமணர்கள் உதவியுடன் செய்தார். பிறப்பால் தான் சத்ரியன் இல்லை என்றாலும், செயலால் தாங்குவது சத்ரியனாக ‘மறுபிறவி’ எடுத்தாக நினைத்தார்.

◆ அரசாட்சி புரிய சத்ரியனாக பிறப்பது மிகவும் அவசியம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

சில சமயங்களில் பலமிக்க வீர குடும்பங்களிலிருந்து வந்த சிலர், தங்கள் இராணுவ பலத்தை பயன்படுத்தி ராஜ்ஜியங்களை ஏற்படுத்தினர். எடுத்துக்காட்டாக கடம்பா மயூர சர்மன் மற்றும் குர்ஜாரா – பிரதிஹாரா ஹரிசந்திரா என்ற பிராமணர்கள் தங்கள் குலத்தொழிலைவிட்டு, ஆயுதங்களை கையில் எடுத்து கர்நாடக மற்றும் ராஜஸ்தானில், ராஜ்ஜியங்களை தோற்றுவித்தனர்.



படம் 11.1 விஷ்ணுவை நரசிம்மராக சித்தரிக்கும் படம். இது ராஷ்டிர கூட காலத்தை சேர்ந்ததாகும்.

## பிரசாஸ்திகளும், நில மானியங்களும்:

கல்வெட்டின் தொடக்க பகுதியே ‘பிரசாஸ்தி’ என்பதாகும். பிரசாஸ்தி என்பது ஆட்சியாளரின் குடும்பங்கள், அவர்கள் முன்னோர்கள், வாழ்ந்த காலங்கள், பெற்ற பெருமைகள், வெற்றிகள் போன்றவை எழுதப்பட்டதாகும். ஆனால் ஆட்சியாளர்கள் தங்களை எவ்வாறு பதிவிட வேண்டும் என நினைத்தார்கள். எடுத்துக்காட்டாக மாவீரன், வெற்றி வீரன் போன்றவை பற்றியும் அவை கூறுகின்றன. இவை அரசு நிர்வாகத்தில் உதவிபுரிந்த, நன்கு கற்ற பிராமணர்களால் எழுதப் படுவதாகும்.

## நாகப்பட்டரின் சாதனை:

பல அரசர்கள் தங்கள் சாதனைகளை பிரசாஸ்தியில் விவரித்துள்ளனர். சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பிரசாஸ்தி என்று மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் காணப்பட்டது. இது நாகப்பட்டினரின் வெற்றியை கீழ்கண்டவாறு வர்ணனை செய்கிறது.

ஆந்திர, சைவந்தர்கள் (சிந்து), விதர்பா (மஹாராஸ்டிரத்தில் ஒரு பகுதி) கலிங்கம் (ஒரிசாவில் ஒரு பகுதி போன்ற பகுதிகளின் அரசர்கள் இவர் இளவரசராக இருந்த பொழுதே இவர் காலில் விழுந்தனர். இவர் 'கனூஜ்' அரசரான சக்ராயுதரை வெற்றிக்கொண்டார். மேலும் வங்கம் (வங்காளத்தின் பகுதி) அனர்த (குஜராத்தின் ஒரு பகுதி) மாளவா (மத்திய பிரதேசத்தின் ஒரு பகுதி) கிராடம் (காட்டுவாசிகள்) துருஷ்கா (துருக்கிய) வத்சா, மத்சாயா (வட இந்தியாவின் இரண்டு ராஜ்ஜியங்கள்) போன்ற நிலப்பகுதியின் அரசர்களையும் இவர் போரில் தோற்கடித்து வெற்றி பெற்றார். இவற்றின் நிலப்பகுதிகளை வரைபடம் 1ல் குறிக்கவும்.



படம் 11.2

நிலமான்யம் தொடர்பான 9ம் நூற்றாண்டின் தாமிர பட்டயங்கள் இவை. இப்பட்டயங்களில் சில தமிழிலிலும், சில சமஸ்கிருதத்திலும் எழுதப் பட்டுள்ளன. இவை முக்கியமான ஆவணங்கள் என்பதை குறிப்பிடுவதற்காக இவற்றின் ஓரத்தில் இப்பட்டயங்களை இணைக்கும் உருண்டை வடிவ வளைவில் அரசு முத்திரைப் போடப்பட்டுள்ளது.

அரசர்கள், அடிக்கடி பிராமணர்களுக்கு 'நிலமானியம்' அளித்து சிறப்பித்தனர். இம்மானியங்கள் தாமிர பட்டயங்களில் எழுதப்பட்டு நிலமானியமாக பெற்றவருக்கு தரப்பட்டது.

12ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த காஷ்மீர் அரசர்களை பற்றி 'கல்ஹணர்' என்ற புலவர் சமஸ்கிருத மொழியில் பாடல்களை இயற்றினர். காஷ்மீர் அரசர்களின் வரலாற்றை பாடல்களாக எழுதிய இவர், இதற்கு ஆதாரமாக கல்வெட்டுகள், ஆவணங்கள், நேரில் கண்டவர்களின் கூற்றுகள், முந்தைய வரலாறு போன்றவற்றை சேர்த்துள்ளார். பிரசாஸ்திகளின் கல்வெட்டு வரலாறு போலன்றி, கல்ஹணர் அரசர்கள் மற்றும் அவரது கொள்கைள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

## நிலமானியத்துடன் வேறென்ன கொடுத்தனர்?

இது சோழர்களின் நிலமானியம் பற்றி தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டின் தொகுப்பு :

நாங்கள் இந்நிலத்தில் எல்லைகளை வரப்புகள் மூலமும், முட்புதற்களான வேலிகள் மூலமும் வேறுபடுத்திக் காட்டுகின்றோம்.

மானியமாக அளிக்கப்பட்ட நிலம் சுவைமிக்க பழங்கள், நீர் நிலைகள், தோட்டங்கள், கிணறுகள், வெட்டவெளி இடங்கள், கிராமங்கள், பச்சை வயல்கள், கால்வாய்கள், கழிவுநீர் கால்வாய்கள், ஆறுகள், ஏரிகள், தானிய கிடங்குகள், மீன் வளரும் நீர் நிலைகள், தேன் கூடுகள் போன்றவற்றை பெற்றுள்ளது.

இம்மானிய நிலத்தை பெற்றுக் கொள்பவர், இந்நில பரப்பில் கிடைக்கும் வரியை வசூல் செய்துகொள்வர். வாகன வரி, வெற்றிலை பாக்குகள் மீதான வரி, துணிகள் மீதான வரி, நீதித்துறை அதிகாரங்களால் விதிக்கப்படும் அபராதங்கள் போன்றவற்றை இவர்கள் வசூல்செய்துக்கொள்வர்.

மானியமாக பெற்றவர், தான் பெற்ற நிலத்தில் சுட்ட செங்கற்களால் பல அடுக்குமாடிகள் கட்டிக்கொள்ளலாம். அதுமட்டுமின்றி கிணறு தோண்டிக்கொள்ளலாம். மரங்கள் வளர்க்கலாம் பாசன வசதிக்காக கால்வாய்களை கட்டுக்கொள்ளலாம். மானிய நிலத்தில் அவர் நீரை வீணாக்கக்கூடாது. மேற்கண்ட கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பலவகையான பாசன முறைகள் விவாதிக்கவும்.

SCERT TELANGANA

## ராஜ்ஜியங்களின் நிர்வாகம்:

புதிய அரசர்களில் பலர் மகா ராஜாதி ராஜா, திரிபுவன சக்ரவர்த்தி போன்ற விருதுகளை பெற்றிருந்தனர். திரிபுவன சக்ரவர்த்தி என்றால் மூன்று உலகங்களுக்கும் சக்ரவர்த்தி என்று பொருள் ஆனால் சில சமயங்களில் இவர்கள் சாமந்தர்கள், விவசாய சங்கங்கள், வியாபாரிகள், பிராமணர்கள் போன்றவர்களுடன் அதிகாரத்தை பகிரிந்துக்கொண்டனர்.

ஒவ்வொரு ராஜ்ஜியத்திலும் விவசாயிகள், பசு வளர்ப்போர், கைவினை கலைஞர்கள் போன்றோரிடம் அவர்கள் உற்பத்தியில் ஒரு பகுதி கேட்டு வாங்கப்பட்டது. நாட்டின் நிலப்பகுதி அனைத்தும் அரசனை சேர்ந்தால், இவ்வசூலை நிலத்திற்கான வாடகை எனவும் நினைத்தனர். வியாபாரிகளிடமிருந்தும் வரி வசூல் செய்யப் பட்டது.

வரிவசூல் மூலம் கிடைத்த பணம் அல்லது பொருள் அரசு நிர்வாகத்திற்கும் கோயில்கள் மற்றும் கோட்டைகள் போன்றவற்றை கட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. பெரும் செல்வங்களை கொள்ளையடிப்பதற்கும், வியாபார வளர்ச்சிக்கு தடையாக உள்ள நிலங்களை ஆக்ரமிப்பதற்கும் போர் ஒரு கருவியாக பயன்பட்டது.

வருவாய் வசூல் செய்யும் பொறுப்பு செல்வாக்குள்ள குடும்பங்களுக்கு தரப்பட்டுள்ளது. இப்பொறுப்பு வம்சாவழி மூலம் குடும்பங்களுக்கு தொடர்ந்தது.

இராணுவ அமைப்புக்கும் இதுபோன்ற நியமன முறை கடைப்பிடிக்கப்பட்டது. குறிப்பாக இப்பொறுப்புகள் அரசனின் உறவினர்களுக்கே கிடைத்தது.

- அன்றைய நிர்வாகம், தற்கால நிர்வாகத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

## செல்வ சுரண்டலுக்கான போர்:

ஒவ்வொரு அரசு வம்சமும் ஒரு குறிப்பிட்ட நிலபரப்பில் ஆட்சி புரிந்தது என்பது நாமளித்த ஒன்றாகும்.

அதே சமயத்தில், அரசர்கள் மற்ற நிலப்பரப்புகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர எண்ணினர். கங்கை நதி பள்ளத்தாக்கில் உள்ள கனோஜ் (Kanauj) என்ற நகரம் சிறப்பு மிக்க நிலப்பகுதியாகும். இப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர குர்ஜாரா – பிரதிஹாரார்கள், ராஷ்ட்டிர கூடர்கள், பால வம்ச அரசர்கள் பல நூற்றாண்டு காலங்களாக போராடிவந்தனர். நீண்ட பெரும் போரில் 3 வம்ச அரசர்கள் பங்கேற்றதால், இதை ‘மூவர் போராட்டம்’ என்று வரலாற்று அறிஞர்கள் வர்ணித்தனர்.

எக்காரணத்திற்காக கனோஜ் நகரத்தையும், கங்கை பள்ளத்தாக்கையும் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர அரசர்கள் விரும்பினார் கள் என்பதை வரைபடம் 1யை பார்த்து விவாதிக்கவும்.

### முகமது கஜினி :

கி.பி. 997லிருந்து 1030 ஆண்டுகள் வரை ஆப்கானிஸ்தானை ஆண்ட கஜினி, மத்திய ஆசிய, ஈரான், இந்திய துணைகண்டத்தின் வடமேற்குப் பகுதி போன்றவற்றை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றார். அவர் ஒவ்வொரு ஆண்டும் இந்திய துணைக் கண்டத்தின் மீது தாக்குதல் நடத்தி பெருஞ்செல்வம் படைத்த, குஜராத்திலுள்ள சோமநாத் போன்ற கோயில்கள் அவருடைய இலக்காக இருந்தன. போரின் மூலம் கொள்ளையடித்துச் சென்ற பெருஞ்செல்வத்தை கஜனி ஆடம்பர தலைநகரத்தை உருவாக்க செலவிட்டார்.

தான் ஆக்கிரமித்த நிலப் பரப்புக்களில் வாழும் மக்களைப்பற்றி தெரிந்துக்கொள்வதில் கஜினி அதிக ஈடுபாடு காட்டினார். இந்திய துணைக்கண்டத்தைப் பற்றி எழுதும் பொறுப்பை அல்–பிருனி என்னும் அறிஞரிடம் ஒப்படைத்தார். அவர் எழுதிய கிதாப் அல் – ஹிந்த் என்னும் நூல் வேறு வரலாற்று அறிஞர்களுக்கு மிகப் பெரிய ஆதாரமாக உள்ளது. சமஸ்கிருத அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்று அல் – பிருனி இந்நூலை இயற்றினார்.

### சாஹமனர்கள் (சௌஹான்கள்)

சாஹமனர்கள் எனப்படும் சௌஹான்கள் டில்லி மற்றும் அஜ்மீரை ஒட்டியுள்ள பகுதிகளை ஆட்சி செய்தனர். அவர்கள் தங்கள் ஆட்சியை மேற்கு மற்றும் கிழக்கை நோக்கி விரிவுபடுத்த முயற்சித்தனர். ஆனால் அவர்கள் குஜராத்தின் சாளுக்கியர்களிடமும், வடக்கு உத்திரபிர தேசத்தின் கஹதவாலர்களிடமிருந்து பலத்த

SCERT TELANGANA

எதிர்ப்பை எதிர்க்கொள்ள வேண்டி இருந்தது.

ஆப்கான் நாட்டைச் சேர்ந்த முகமது கோரியை, 1191ல், சௌஹான் வம்சத்தைச் சேர்ந்த மூன்றாவது பிரதிவிராஜ் (1168 - 1192) தோற்கடித்தார். ஆனால் 1192ல் நடைபெற்ற போரில் மூன்றாவது பிரதிவிராஜை, முகமது கோரி தோற்கடித்தார்.


சாஹமனர்கள் ஏன் தங்கள் ஆட்சி அதிகாரத்தை மற்ற நிலப் பரப்புகளுக்கு விரிவுபடுத்த விரும்பினர் என்பதை வரைபடம் 1ஐ பார்த்து விவாதிக்கவும்.

# பகுதி - II

## சோழர்கள் :

இப்போது நாம் தென்னிந்திய அரசர்களைப் பற்றி அறிந்துக்கொள்வோம்! தென்னிந்திய வரலாற்றில் சோழர்களின் ஆட்சி மிக நேர்த்தியாக எழுதப்பட்தாகும். அவர்கள் எவ்வாறு வெற்றிகரமான ஆட்சியாளர்களானார்கள் என்பதை இப்பாடப் பகுதியில் காண்போம்.

*வரைபடம் 2 : சோழ அரசும் அண்டை அரசுகளும்*




## உறையூரிலிருந்து தஞ்சாவூர் வரை :

சோழர்கள் எவ்வாறு ஆட்சி அதிகாரத்தை பிடித்தனர்? முத்தரையர் என்னும் சிறிய, முக்கியமான குடும்பம் ஒன்று காவிரி டெல்டா பகுதியில் ஆட்சியில் இருந்தது. இவர்கள் காஞ்சிபுரத்தை ஆண்ட பல்லவ அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்தனர். 9ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் உறையூரைச் சேர்ந்த விஜயாலயன், முத்தரையரின் டெல்டா நிலப்பகுதியை ஆக்கிரமித்தார். இவர் தஞ்சாவூர் நகரைத் தோற்றுவித்து, அந்நகரில் நிசும்பசூதினி என்ற பெண் கடவுளுக்கு கோயில் கட்டினார்.

விஜயாலயனுக்குப் பிறகு வந்த அரசர்கள் தங்கள் அண்டை ராஜ்ஜியங்களைக் கைப்பற்றி, சோழ ராஜ்ஜியத்தை விரவுபடுத்தினர். தெற்கிலும், வடக்கிலும் இருந்த பாண்டிய மற்றும் பல்லவ நிலப் பகுதிகள் சோழ ராஜ்ஜியத்தின் ஒருங்கிணைந்த பகுதிகளாயின. ராஜராஜ சோழன் 1, சோழ வம்ச அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர்.

இவர் கி.பி 985ல் அரசரானார். இவர் பல

SCERT TELANGANA



படம் 11.3 கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள கோயில். கோயில் கோபுர கலசப்பகுதி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது என்பதையும். வெளிப்புற சுவற்றில் சிற்ப வேலைப்பாடுகளையும் காணலாம்.

அரசர்களுடன் போரிட்டு தன் இராஜ்ஜியத்தை விரவுபடுத்தினார். இவர் ராஜ்ஜியத்தின் நிர்வாகத்தையும் மறுசீரமைத்தார். ராஜராஜ சோழனின் மகனான முதலாம் ராஜேந்திரன். தன் தந்தையின் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். இவர் தன் இராஜ்ஜியத்தை கங்கை பள்ளத்தாக்கு, இலங்கை, தென் கிழக்கு ஆசியா போன்ற இடங்களுக்கு விரிவு படுத்தினார். போருக்காக கப்பற்படையை உருவாக்கிய பெருமை இவரையே சேரும்.

## அற்புத கோயில்களும், வெண்கலச் சிற்பங்களும் :

ராஜ ராஜ சோழனும், முதலாம் ராஜேந்திரனும் தஞ்சாவூர் மற்றும் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில்கள் அற்புத கட்டிட கலைக்கும், சிற்பக்கலைக்கும் சாட்சியாக உள்ளன.

இச்சிறப்பம்சமே மக்கள் கோயில்களைச் சுற்றி குடியேறவும், அந்நகரங்கள் கைவினைப் பொருட்களின் மையங்களாகவும் உருவாக காரணமாக விளங்கியது. ஆட்சியாளர்களும், மற்றவர்களும் கோயில்களுக்கு வழங்கிய நில மானியங்களால் கோயில்கள் நன்கு சிறப்புற்றன. கோயில் மானிய நிலங்களிலிருந்து உற்பத்தியாகும் தானியங்கள் கோயில்களில் பணிபுரியும் அல்லது கோயில்களுக்கு அருகில் வசிப்பவர்களான பூசாரிகள், பூமாலை கட்டுபவர்கள், சமையல்காரர்கள், கோயிலை சுத்தப்படுத்துபவர்கள், இசைக் கலைஞர்கள், நாட்டிய கலைஞர்கள் போன்றோருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. ஆகவே கோயில்கள் வழிபடும் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக, பொருளாதார பண்பாட்டு மையமாகவும் திகழ்ந்தன.



படம்11.4 சோழர்களின் வெண்கல சிலை எவ்வளவு நேர்த்தியாக வடிவமைக் கப்பட்டதோ இங்கு காணலாம்.

கோயில்களுக்கு அருகே தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களில் முக்கியமானது, வெண்கலத்தால் செய்யப்பட்ட சிலைகளாகும், சோழர்களின் வெண்கலச் சிலைகள் உலகப் புகழ் பெற்றதாகும், கடவுள்களின் சிலைகள் மட்டுமின்றி, பக்தர்களின் சிலைகளும் தயாரிக்கப்பட்டன.

## விவசாயமும் நீர்பாசன வசதியும் :

விவசாயத்தில் ஏற்பட்ட புதிய வளர்ச்சியே சோழர்களின் பல சாதனைகளுக்கு காரணமாயிற்று. இரண்டாவது வரைபடத்தை மறுபடியும் காணுங்கள். காவிரி நதி வங்காள விரிகுடாவில் கலப்பதற்கு முன் பல கிளை நதிகளாக பிரிந்துச்செல்வதை கவனியுங்கள். இக்கிளைகளில் அதிகமாக நீர் பெருக்கு ஏற்பட்டதால் அவற்றை ஒட்டிய பகுதிகளில் வளமான மண் ஏற்பட காரணமாயிற்று. நெல் உற்பத்திக்கு தேவையான பாசன நீர் மற்றும் ஈரப்பதம் இந்நதிகளிலிருந்து கிடைத்தது

SCERT TELANGANA



படம் 11.5 தமிழ்நாட்டில் கி.பி 9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நீரைக்கட்டுப்படுத்தி விடும் மதகு. ஏரியிலிருந்து பாசனத்திற்காக திறந்து விடப்படும் நீரை கட்டுப்படுத்தி, வெளியேற்றும் மதகு.

தமிழ்நாட்டின் பிற பகுதிகள் விவசாயத்தில் வளர்ச்சியடைந்து இருந்தாலும், 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டு காலத்தில் மட்டுமே இப்பகுதி விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்டது. சில பகுதிகளிலிருந்த காடுகள் அழிக்கப்பட்டன. மற்றப் பகுதிகளிலிருந்த வெற்று இடங்கள் சீராக்கப்பட்டன. நதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடுக்க ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டன. வெள்ளப் பெருக்கைக்கட்டுப்படுத்தி பாசனத்திற்கு பயன்படுத்துவதற்காக பல இடங்களில் கால்வாய்களும் கட்டப்பபட்டன. ஒரு வருட கால இடைவெளியில் இரண்டு போக பயிர்கள் விளைந்தன.

பல சமங்களில் பயிர்களுக்கு செயற்கை முறையில் பாசன வசதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாசன வசதிகளை மேம்படுத்த பல புதிய வழிகள் கடை பிடிக்கப் பட்டன. சில பகுதிகள் கிணறுகள் தோண்டப்பட்டன. வேறு சில இடங்களில் மழை நீரை சேகரிக்க ஏரிகள் உருவாக்கப்பட்டன. நீர் பாசன வேலை என்பது திட்டமிடுதல், வேலையாட்களின் அமைப்பு, பணவசதி போன்றவற்றை உள்ளடக்கிய ஒன்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏறக்குறைய அனைத்து புதிய அரசர்களும், மக்களும் நீர்ப்பாசனத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டனர்.

**சாம்ராஜ்ஜியத்தின் நிர்வாகம் :**

அன்றைய நிர்வாக முறை எவ்வாறு இருந்தது? அரசனுக்கு நிர்வாகத்தில் உதவியாக இருக்க அமைச்சரவை இருந்தது. அரசன், பலமிக்க இராணுவத்தையும், கடற்படையையும் பெற்றிருந்தான். சாம்ராஜ்ஜியத்தின் மொத்த பகுதிகளும் 'மண்டலங்கள்' (மாநிலங்களாக) பிரிக்கப் பட்டன அவை மேலும் 'நாடுகள்' ஆக பிரிக்கப்பட்டன.

விவசாயிகளின் வாழ்விடங்கள் 'ஊர்' என்று அழைக்கப்பட்டன. இவை நீர்ப்பாசன வசதி மேம்படுத்தப்பட்டதால் முன்னேறிய பகுதிகளாயின. இந்த 'ஊர்'களின் தொகுப்பே நாடாகும் (நாடு). வரி, வசூல், நீதி போன்ற நிர்வாக வேலைகளை கிராம சபைகளும், நாடு களும் மேற்கொண்டன.

சோழர்கள் ஆட்சியில், நாடு என்ற அமைப்பை நிர்வகிப்பதில் வெள்ளாள சாதியினர் மிக முக்கியப் பங்கு வகித்தனர். சோழர்கள், பெரிய நிலச்சுகாந்தர்களுக்கு மூவேந்த வேலன் அறையர் (தலைவர்) போன்ற உயரிய விருதுகளை வழங்கி சிறப்பித்தனர். (வேலன் அல்லது விவசாயி, என்பவர் மூன்று அரசர்களுச் சேவை செய்பவர்

இவர்களுக்கு அரசாட்சியில் முக்கிய பொறுப்புக்களும் வழங்கப்பட்டன.

**நிலத்தின் வகைகள்:**

சோழர்கால கல்வெட்டுக்கள் நிலத்தின் பல வகைகளைப்பற்றி குறிப்பிடுகின்றன.

வெள்ளான்வகை :

இவை பிராமணர் அல்லாத விவசாயிகளின் நிலங்களாகும்.

பிரம்மதேயம் :

இவை பிராமணர்களுக்கு கொடுத்த மானிய நிலங்களாகும்.

சாலபோகம் :

இவை பள்ளியை நிர்வகிக்க ஒதுக்கப்பட்ட நிலங்களாகும்.

தேவதானம், திருநாமத்துக்காணி :

இவை கோயிலுக்கான மானிய நிலங்களாகும்.

பள்ளிச்சந்தம் :

இவை ஜைன மத அமைப்புகளுக்கான நிலங்களாகும்.

பிராமணர்கள் அடிக்கடி நிலமானியம் (பிரம்மதேயம்) பெற்றனர் என்பது நாம் அறிந்ததே. அதன் பலனாகவே, மற்ற தென் இந்திய பகுதிகளில் குடியேறியதைப் போல காவிரி நதி பள்ளத்தாக்கிலும் பிராமணர்கள் அதிக அளவில் குடியேறினர்.

ஒவ்வொரு பிரம்மதேயமும், பிராமண நில உரிமையாளர்களால் ஆன சபைகளால் பராமரிக்கப்பட்டன. இச்சபைகள் மிகவும் திறமையாக செயல்பட்டன. இவர்களின் நிர்ணயங்கள் அல்லது முடிவுகள் கல்வெட்டுக்களிலும், கோயில் சுவர்களிலும் பதிவு செய்தனர். நகரங்கள் எனப்படும் வர்த்தக சங்கங்களும் நகர நிர்வாகத்தில் தேவைக்கேற்ப பங்கேற்றன.

தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் கிடைத்த உத்திரமேரூர் கல்வெட்டுக்கள் சபை எவ்வாறு நிர்வகிக்கப்பட்டது என்பதை விரிவாக எடுத்துரைக்கின்றனர். நீர் பாசனப் பணிகள், தோட்டங்கள், கோயில்கள் போன்றவற்றை பராமரிக்கும் பொறுப்பை சபையால் ஏற்படுத்தப்பட்ட தனிக்குழுக்கள் மேற்கொண்டன. இக்குழுக்களின் உறுப்பினர்களாக வேண்டும் என்று விரும்பியவர்களின் பெயர்கள் பனை ஓலைகளில் சீட்டுக்கள் வடிவத்தில் எழுதப்பட்டு. மண் பானையில் போடப்பட்டன. மண் பானையிலுள்ள பெயர்கள், ஒரு சிறுவனால் குலுக்கல் முறையில் ஒவ்வொன்றாக தேவைப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப எடுக்கப்பட்டு சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**கல்வெட்டுக்களும் கருத்துக்களும் :**

சபையின் உறுப்பினராக யார் நியமிக்கப்படுவார்? உத்திரமேரூர் கல்வெட்டு கீழ்கண்டவற்றை தெரிவிக்கின்றது. யார் சபையின் உறுப்பினர்களாக வேண்டும் என விரும்புகிறார்களோ அவர்கள் நிலவரி வசூலிக்கப்படும் பகுதியில், நில உரிமையாளர்களாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு சொந்த வீடுகள் இருத்தல் வேண்டும். அவர்கள் 35 வயதுக்கும் மேலும் 70 வயதுக்குள்ளும் இருத்தல் வேண்டும். அவர்கள், வேதங்களை நன்கு கற்றவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் நேர்மையானவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், சபையின் எக்குழுவிலாவது பதவி வகித்த ஒருவர், மற்ற குழுவின் உறுப்பினராக முடியாது. கணக்கை காட்டாத யாரும் அல்லது அவர்களது உறவினர்களும் சபையின் உறுப்பினர்களாக போட்டியிட முடியாது.

மேற்கண்ட சபை அல்லது குழுக்களின் உறுப்பினர்களாக பெண்களும் பதவி வகித்தனர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறை சிறந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா?

SCERT TELANGANA

கல்வெட்டுகள், அரசர்கள் பற்றியும், பலம் பொருந்தியர்கள் பற்றியும் கூறும். அதே வேளையில், சாதாரண ஆண்கள் மற்றும் பெண்களைப்பற்றி, கி.பி 12ஆம் நூற்றாண்டில் தமிழில் எழுதப்பட்ட பெரிய புராணம் கீழ்காணும் தகவல்களைத் தருகின்றது.

ஆதனூரின் புறப்பகுதியில் புலையர் களின் சிறு கிராமம் ஒன்று இருந்தது. விவசாய கூலிகளான இவர்கள் குடிசை வீடுகளில் வாழ்ந்து வந்தனர். அக்குடிசைகளின் வாயில்கள் தோல் பொருட்களால் மூடி வைக்கப்பட்டிருந்தன. கோழிகள் கூட்டங்களாக அங்கும் இங்கும் திரிந்தபடி இருந்தன. கருப்பு நிறமுடைய சிறுவர்கள், கருப்பு நிறத்தாலான இரும்பால், செய்யப்பட்ட மணிக்கட்டு வளையத்தை *(bracelets)* அணிந்திருந்தனர். அவர்கள் சிறு குழந்தைகளை மகிழ்வித்தபடி இருந்தனர். ஒரு பெண் தொழிலாளி, மருது மரத்தின் நிழலில் தோல் பட்டையை விரித்து குழந்தையைத் தூங்க வைத்துக்கொண்டு இருந்தான். மாமரக்கிளைகளில் பறைகள் *(drums)* தொங்க விடப்பட்டிருந்தன. தென்னை மர நிழல்களில் நாய்க்குட்டிகள் உறங்கிக் கொண்டு இருந்தன. சேவல்கள், பொழுது விடிவதற்க்குள் கூவியதால் புலையர்கள் வேலைக்குப் புறப்பட்டுச்சென்றனர், இஞ்சி மர நிழலில் புலையர் பெண்கள் தங்கள் கூந்தலை உலர்த்தியபடி நெல் குத்திக்கொண்டு இருந்தனர்.

அக்கிராமத்தில் நடைபெற்ற அனைத்து வேலைகளையும் விவரிக்கவும்.

**முக்கியச் சொற்கள் :**

1.சாமந்தர்கள் 2.கோயில் 3.நாடு 4.சபை 5.இராஜ்ஜியம் 6.சுல்தான்

**செயல் திட்டம் :**

1. ஆந்திரப்பிரரேசத்தில் ஏதாவது இராஜ்ஜியம் இருந்ததா என்பதை வரைபடம் 1 ஐ பார்த்து கண்டுபிடி.

2. இப்பாடத்தில் காட்டப்பட்ட கோயிலையும், உங்கள் ஊரில் உள்ள கோயில்களையும் ஒப்பிடுக. இவற்றுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை குறிப்பிடுக.

3. தற்போது வசூலிக்கப்படும் வரிகளைப்பற்றி விரிவாகத் தெரிந்துக்கொள்ளுங்கள். அவை பணம், உழைப்பு, பொருள் போன்ற வடிவங்களில் வசூலிக்கப்படுகின்றனவா?

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மூவர் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் யார்?(AS1)
2. சோழர் பேரரசில் சபை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?(AS1)
3. சாஹமனர்கள் (சௌஹான்கள்) கட்டுப்பாட்டில் இருந்த இரண்டு பெரிய நகரங்கள் எவை?(AS1)
4. ராஷ்ட்டிர கூடர்கள் எவ்வாறு வலுப்பெற்ற அரசர்களாக ஆயினர்?(AS1)
5. மக்களின் அங்கீகாரம் பெற புதிய இராஜ்ஜியங்கள் என்ன செய்தன?(AS1)
6. தமிழ்ப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன வசதிகளின் வகைகளைப் பட்டியலிடுக?(AS1)
7. சோழர்கால கோயில்களுடன் தொடர்புடைய செயல்பாடுகளை விவரி?(AS1)
8. தற்போதைய பஞ்சாயத்து தேர்தல் முறைகளையும், உத்திரமேரூர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள தேர்தல் முறையையும் வேறுபடுத்திக் காட்டுக?(AS4)
9. பழைய கோவில்களின் படங்களை சேகரித்து ஒரு படத்தொகுப்பை தயாரி.(AS3)
10. பக்கம் 106 மற்றும் 107ல் உள்ள விவசாயமும், நீர்பாசன வசதியும் என்னும் தலைப்பில் உள்ள முதல் இரண்டு பத்திகளை படித்து, அவற்றை குறித்து உன் கருத்தை தெரிவி.(AS2)

SCERT TELANGANA

பாடம் 12

# ஒரு வட்டார அரசின் தோற்றம் - காகதீயர்கள்

பிரம்மநாயுடு, பாலச்சந்திரா் மற்றும் 66 வீரா்களின் தைரியம், சாகசங்கள் பற்றிய பல செயல்களையும், கதைகளையும் பற்றி நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். சம்மக்கா, சாரக்கா ஆகியோரின் ஜாத்திரைகளிலும் நீங்கள் கலந்துக்கொண்டிருப்பீர்கள். அவர்கள் மலைவாழ் மக்களின் உரிமைக்காக அரசர்களின் இராணுவங்களை எதிர்த்துப் போராடியவர்கள். கால்நடை வளர்ப்பவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக நெல்லூா் அரசர்களோடு போரிட்ட காட்டம ராஜீவின் பிரபலக் கதையைக் கேட்டு நீங்கள் மகிழ்ந்திருக்கலாம்.

- உங்கள் பெற்றோரிடமிருந்தும் மூத்தவர்களிடமிருந்தும் பலநாட்டுப் பகுதி வீரா்களின் சம்மக்கா-சாரக்கா மற்றும் காடம ராஜீவின் கதைகளை தெரிந்துகொள். இந்தக் கதைகளை உன் வகுப்பில் கூறு.

இக்கதைகளனைத்தும் பொ.யு.1000 முதல் 1350 வரையிலான காலத்திற்குத் தொடர் புடயவை. இது நம் வரலாற்றில் மிகவும் முக்கியமான காலமாகும். முன்பாடத்தில், நாம் இந்தியா முழுவதும் தோன்றிய புதிய அரசு வம்சங்களைப் பற்றிப் படித்தோம். இந்த ஆட்சியாளர்கள் விவசாய கிராமங்களில் தங்களுடைய சிறிய அரசுகளை அமைக்க தங்களுடைய கால்நடை வளர்க்கும் தொண்டர்களை விவசாயிகளாக குடியேறச் செய்தனர். இந்த பேராசை கொண்ட வீரர்களும் அரசர்களும் தொடர்ந்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். இச்சூழ்நிலைகளுக்கிடையில் வரங்கலில் காகதீயர் அரசு ஏற்பட்டது.

இது தெலுங்கு மொழியில் முதல் நூல்கள் எழுதப்பட்ட காலமும் ஆகும். பாரம்பரியக் கதைகளின்படி முக்கவிஞர் களான நன்னயர், திக்கனார், எர்ராபிரகடரா போன்றவர்களால் பொ.யு.1000 மற்றும் 1400 ஆண்டுகளுக் கிடையில் தெலுங்கு மொழியின் முதல் செய்யுள் படைப்பான ஸ்ரீமத் ஆந்திர மகாபாரதம் இயற்றப்பட்டது.

அரசர்கள், இராணிகள், படைத் தலைவர்கள் விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் மற்றும் வியாபாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றி நமக்குத் தெரிவிக்கும் பல கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. வடமொழி மற்றும் தெலுங்கில் அவற்றைப் பற்றி எழுதப்பட்ட பல நூல்கள் நமக்கும் கிடைத்துள்ளன. வித்யாநாதர், காகதீயர் ஆட்சிகாலத்தில் பிரதாபருத்திர யஷோ பூஷணம் என்னும் நூலை எழுதினார். அவர்கள் ஆட்சியின் முடிவிலும் சில நூல்கள் இயற்றப்பட்டன (விணுகொண்ட வல்லபராயரின் கிராதபிராமம், ஏகாம்பரநாதரின் பிரதா பருத்திர சரித்திரம்.



*படம் 12.1 வரங்களில் காகதீய அரசர்களால் கட்டப்பட்ட சுயம்பு சிவன்கோயிலின் கீர்த்தி நுழைவு வாயில்*



SCERT TELANGANA

மேலே உள்ள பாடப்பகுதியைப் படித்த உங்களால் காகதீயர் அரசர்களைப் பற்றி தகவல் அறிய இரண்டு முக்கிய ஆதாரங்களைக் கூற முடியுமா?

கல்வெட்டுகள் மற்றும் இலக்கியங்களின்படி காகதீயர்களை தூர்ஜயா என்பவரின் வழித்தோன்றல்கள் எனத் தெரிகிறது. அவர்கள் தெலுங்கை தங்கள் அரசு மொழியாக ஏற்றுக்கொண்டனர். அவர்களின் பெரும்பாலான கல்வெட்டுகள் தெலுங்கில் உள்ளன. அவர்கள் தங்களை ஆந்திர ராஜாக்கள் என்றும் அழைத்துக் கொண்டனர். அவர்கள், தெலுங்கு மொழிப்பேசப்பட்ட மூன்று பகுதிகளான – கடலோரப் பகுதிகள், தெலுங்கானா பகுதி மற்றும் இராயலசீமை ஆகியவற்றை ஒருங்கிணைக்க முயன்றனர். இவ் வகையில் காகதீய அரசர்கள் தெலுங்கு வட்டார உணர்வினை ஏற்படுத்த முயன்றனர். இம்முயற்சியில் அவர்கள் ஓரளவிற்கு வெற்றியும் கண்டதால் இப்பகுதியில் அவர்கள் இன்றும் நினைவு கூறப்படுகிறார்கள்.


## காகதீய அரசர்களும் சிற்றரசர்களும்

### முக்கியமான காகதீய ஆட்சியாளர்கள்

| | |
|---|---|
| புரோலர் II | (பொ.யு. 1116 - 1157) |
| ருத்தரதேவர் | (பொ.யு. 1158 - 1195) |
| கணபதி தேவர் | (பொ.யு. 1199 - 1262) |
| ருத்திரமதேவி | (பொ.யு. 1262 - 1289) |
| பிரதாப ருத்திரர் | (பொ.யு. 1289 - 1323) |

இந்த வம்சத்தில் முதலில் தோன்றியவர்கள் படைத்தலைவர்களாகவும், ராஷ்டிரகூடர்கள் மற்றும் சாளுக்கிய மன்னர்களின் சிற்றரசர்களாகவும் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கினர். அவர்கள் 'ரட்டடி' என அழைக்கப்படும் கிராமத் தலைவர்கள் பதவியையும் வகித்துவந்தனர். அவர்களுடைய போர்த்திறமையால் படைத்தலைவர்களாகவும் சிற்றரசர்களாகவும் உயர்ந்து தெலுங்கானாவில் அனுமகொண்டாவை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

வரைப்படம் 1 வரங்கல் கோட்டை




மேற்கு சாளுக்கிய மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்,காகதீயர்கள் சுதந்திர அரசர்களாக மாறினர்.

ருத்திரதேவரின் ஆட்சியின்போது காகதீயர்களின் (பொ.யு.1158–1195) தலைநகரம் அனுமகொண்டாவி லிருந்து ஒருகல்லுவிற்கு (வரங்கல்) மாற்றப்பட்டது. நகர மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போலவும் ஒரு ஏகாதிபத்திய தலைநகரத்தின் தேவைகளை நினைவு செய்யவும் ஒரு புதிய நகரத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ருத்திரதேவர் ஒரு பெரிய கோட்டையையும், ஒரு ஏரியையும், அனுமகொண்டாவில் ஆயிரம் கால் மண்டபம் கொண்ட ஒரு கோயிலையும் கட்டினார்.

வரங்கல் கோட்டையின் புறவரிப் படத்தைப்பார். நான்கு வாயில்கள் கொண்ட வெளிப்புறக் கோட்டைச் சுவரை நீங்கள் காணலாம். இது விளைநிலங்களையும் அதனுள் அடங்கிய பல நீர்த்தடாகங்களையும் காத்தது. இப்பகுதியில் கூடைகள் பின்னும் கைவினைக் கலைஞர்களின் குடிசைகளும் இருந்தன. இவற்றைக் கடந்த பிறகு அகழியும் மண்ணாலான கோட்டைச் சுவரும் உள்ள மையப் பகுதிக்கு வந்தோம்.

SCERT TELANGANA

மையப்பகுதியை நோக்கி மேலும் நடந்தால் உங்களால் மற்றொரு அகழியையும், கல்லாலான கோட்டைச் சுவரையும் நீங்கள் காணலாம். நகரத்தின் கட்டிடங்களும், அரண்மனைகளும் இந்த கற்சுவர் பகுதிக்குள்ளேயே உள்ளன. அதில் நான்கு வாயில்கள் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு திசைகளில் வெளியே செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாயிலில் இருந்தும் ஒரு முக்கிய சாலை நகரத்தின் மையப் பகுதிக்குச் செல்கிறது. அங்கு சுயம்பு சிவன்கோயில் ஒன்று உள்ளது. இந்தக் கோயிலுக்கும் நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள் உள்ளன.

நகரம் பல குடியிருப்புப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரேவிதமான தொழிலை செய்யும் மக்கள் அவர்களுக்கென தனியாக உள்ள பகுதிகளில் வாழ்வார்.

- உங்களுடைய கிராமம் அல்லது நகரத்தின் வரைபடத்தை வரைந்து அதை ஒருகல்லு வரைப்படத்துடன் ஒப்பிடுக.
- தற்கால நகரங்களுக்கும் கடந்த கால ஒருகல்லு போன்ற நகரங்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் யாவை?
- வெளிச்சுவரின் அகலம் கிழக்கிலிருந்து மேற்காக எவ்வளவு என்பதை படத்தில் காட்டியுள்ள அளவுகோல் உதவியுடன் கண்டுபிடி.
- உட்புற கல்சுவருக்குள் வடக்கிலிருந்து தெற்கு திசையில் நகரத்தின் அகலத்தையும் கண்டுபிடி.
- வரங்கல் நகரத்திற்கு நீங்கள் சென்றிருந்தால் இன்று இந்த நகரம் எவ்வாறு உள்ளது என்பதை உங்கள் வகுப்பு மாணவர்களுடன் விவரி.
- சுயம்பு சிவன் காகதீயர்களின் குலதெய்வம், அவர்கள் நகரத்தின் மையத்தில் அரண்மனையோ சந்தையோ கட்டாமல் கோயிலைக் கட்டியதன் காரணமென்ன? காகதீய அரசர்கள் வலிமை பெற்றதால் அவர்கள் பல சிற்றரசர்களை /படைத்தலைவர்களை தங்களை அரசர்களாக ஏற்கும்படிச் செய்தனர்.

காகதீயர்கள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட சிற்றரசர்களை மற்ற படைவீரர்களிடமிருந்தும் படைத்தலைவர்களிடமிருந்தும் காத்தனர். அது மட்டுமின்றி மற்ற அரசுகளை கைப்பற்றச் செல்லும்போது அவர்களை தங்களுடன் அழைத்துச் செல்வர். பல சிற்றரசர்கள் கப்பம் கட்டும் தலைவர்கள் சுதந்திர அரசர்களாக மாறுவதற்கு முயற்சி செய்ததால் காகதீய அரசர்கள் அவர்களை அடக்க இராணுவங்களை அனுப்பினர்.

## ருத்திரம தேவி

ருத்திரம தேவி என்னும் தைரியமான பெண் ஆட்சியாளரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டீர்களா? அவர் தன்னுடைய அனைத்துத் திறன்களால் அனைவரையும் கவர்ந்த ஒரு வலிமைமிக்க வெற்றிகரமான ஆட்சியாளர் ஆவார். தற்கால வரங்கல் பகுதியான ஒருகல்லுவை ஆண்டவர் ருத்திரம தேவி அவர் புகழ்மிக்க காகதீய வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் கி.பி.1262 முதல் 1289 வரை சுமார் 27 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். நம் நாட்டில் ஒருசில பெண் ஆட்சியாளர்களே இருந்தனர். தொலைதூர டில்லியிலும் சில வருடங்களுக்கு முன் ரஜியா சுல்தானா என்னும் பெண் ஆட்சியாளர் இருந்தார். ஆனால் அவருடைய பிரபுக்களும் மற்றவர்களும் ஒரு பெண்ணால் ஆளப்படுவதை விரும்பாததால் அவரை கொன்றுவிட்டனர். இத்தாலியிலிருந்து




*படம் 12.2 ருத்திரமதேவி-குதிரை சவாரி செய்தல் (ஐதராபாத்தில் புதியதாக அமைக்கப்பட்ட சின்னம்)*

SCERT TELANGANA

வந்த பயணியான மார்க்கோ போலோ ருத்திரமதேவியின் அரசிற்கு விஜயம் புரிந்தார். அவர், ருத்திரமதேவி பயமற்றவர், ஆணைப் போல் உடையணிந்து குதிரையில் மிகவும் சுலபமாக சவாரி செய்பவர் என்று தெரிவித்துள்ளார். உண்மையில் ருத்திரமதேவி தன் கல்வெட்டுகளில் தன்னை ருத்திரதேவ மகாராஜா என்று அழைத்துக்கொண்டார். ரஜியா சுல்தானாவைப் போன்று இவரும் பல எதிர்ப்புகளை தன் தந்தையின் கீழிருந்த பல முக்கிய படைத்தலைவர்களிடமிருந்து பெற்றார். இருப்பினும் அவர்களை அடக்குவதில் ருத்திரமதேவி வெற்றிகண்டார். ருத்திரமதேவியும் அவருடைய பேரனான பிரதா பருத்திரரும் பல புரட்சிகளை எதிர்கொண்டனர். அவர்களை அடக்குவதற்கு பல வழிமுறைகளையும் மேற்கொண்டனர்.



*படம் 12.3 உட்புற மண்சுவரின் ஒரு பகுதியும் அதற்கு வலப்புறத்தில் உள்ள ஒரு அகழியும்.*



*படம் 12.4 நகரத்தின் உட்புற கற்சுரில் உள்ள கிழக்கு நுழைவாயில். இது மேலிருந்து எடுக்கப்பட்ட காட்சி. ஒரு வளைவு நுழைவாயிலும் ஒரு திறந்தமுற்றமும் படத்தில் காட்டப்பட்டுள்ளது. வலப்புறத்திலுள்ள கதவு நுழைவாயில் ராஜபாட்டைக்கு அழைத்துச்செல்கிறது.*



SCERT TELANGANA

## நாயங்கார முறை :

ருத்திரமதேவியும், பிரதாப ருத்திரரும் எளிமையான குடும்பங்களிலிருந்து பிறந்த அரசன் மற்றும் அரசியின் நம்பிக்கைக்கு பாத்திரமான திறமை மிக்க பல வீரர்களை ஊக்கப்படுத்தினர். அவர்களுக்கு உயரிய பொறுப்புக்களும் "நாயகா" என்ற பட்டங்களும், வரி வசூல் செய்யும் பொறுப்புக்களும் அளிக்கப்பட்டன. இந்த கிராமங்களையே அவர்களின் நாயங்கரங்களாகக் கருதுவர். இவற்றிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு நாயக்கர் அரசர் முடிவெடுத்தபடி இராணுவத்தை அரசருக்காக நிர்வகிப்பார். இதுபோன்ற கிராமங்களின் மீது தலைவர்களுக்கு வரிவசூல் செய்துகொள்ளும் உரிமையை நிலையாக வைக்காமல் தொடர்ந்து புதிய இடங்களுக்கு மாற்றுவர். நாயக்கர்கள் அரசர் அல்லது அரசியின் நம்பிக்கையுள்ளவரை பதவியில் நீடிப்பர். அரசருக்கு எதிராக செயல்படும் புரட்சிகளை அடக்கு வதற்கும் இவர்கள் அரசருக்கு உதவி செய்வர். இந்த நிபந்தனைகளின்படி வடிவமைக்கப்பட்டதே "நாயங்கார முறை" என்பர்.



படம் 12.5 சிதைந்த நிலையில் உள்ள சிவன்கோயில்

ருத்திரமதேவியின் ஆட்சி காலத்தில் ஒரு நாயக்கரால் அமைக்கப்பட்ட கல்வெட்டில் உள்ள சிறுபகுதியைப் படியுங்கள். கி.பி.1270ம் ஆண்டில் பொங்கல் திருவிழாவின்போது காகதீய ருத்திரதேவா மகாராஜாவின் வாயில் காப்போரான பொல்லிநாயகர் நிலத்தில் பத்து அளவுகளை கல்யாண கேசவர் கோவில் சேவைகளுக்காக கிரஞ்ச கிராமத்தில் தன் சொந்த நாயக்கர எல்லையில் உள்ள நிலத்தை தன் அரசரான ருத்திரதேவ மகாராஜாவின் பெருமைக்காக தானமாக வழங்கப்படுகிறது.

- பொல்லிநாயகர் ருத்திரம தேவியை ருத்திரதேவ மகாராஜா என்று ஏன் அழைத்தார்?

## விவசாயத்திற்கும் கோயில்களுக்கும் ஊக்கமளித்தல்

காகதீயர்கள் பெரிய அளவிலான நிலங்களை விவசாயத்தின் கீழ்கொண்டு வந்தனர். அவர்கள் அதற்காக ஏரிகளையும், கிணறுகளையும் அமைத்தனர். அரச குடும்பத்தினர், சிற்றரசர்கள், சமுதாயத்தில் செல்வந்தர்களான வியாபாரிகள், கைவினைக்கலைஞர்கள் ஏரிகளை அமைப்பதன் மூலம் விவசாயத்திற்கு உதவினர்.


இதேபோல் கடினமான தரிசுநிலங்கள் உள்ள தெலுங்காணா மற்றும் இராயல் சீமைகளில் சிறிய அளவில் உள்ள விவசாய நிலங்களை பெரிய அளவில் விவசாயத்தின் கீழ் கொண்டு வரப்பாடுபட்டனர்.

படம் 12.6 ராமப்பர் கோயில்



SCERT TELANGANA

காகதீயர்கள் பெரிய அளவில் அதிகமான தானங்கள் வழங்கி கோயில்களை விரிவான அளவில் கட்ட உதவினர். அரச குடும்பங்களில் இருந்த பெண்களில் முப்பமாம்பாள், மயிலம்மாள் போன்றவர்களும் கோவில்கள் கட்டுவதற்கு தங்களுடைய நிலங்களை நன்கொடையாக வழங்கினர். பிற செல்வந்தப் பிரிவுகளில் இருந்த பெண்களும் கோவில்களைக்கட்ட நிலங்களை வழங்கியதோடு ஏரிகள், பசுக்கள் பணம், தங்க ஆபரணங்கள் ஆகியவற்றை கோவில்களுக்கும் பிராமணர்களுக்கும் வழங்கினர். காகதீயர்கள் விவசாயத்துறையை வளர்த்ததால் வரிகள் வடிவிலும் விவசாய உற்பத்தி மூலமாகவும் அவர்களுக்கு வருமானம் வந்தது.




படம் 12.7 காகதீயர்களால் வெளியிடப்பட்ட தங்க நாணயம்.

## வியாபாரம்

அன்றை ஆட்சியாளர்கள், அரசர்கள், கப்பம் கட்டும் தலைவர்கள் ஆகியோர் அதிகமாக தம் வருவாய் மூலங்களை வாணிகத்தின் மீது போடப்படும் வரிகள் மூலம் பெறுவர். முக்கியமாக வெளிநாட்டு வாணிகம் செய்யும் வியாபாரிகள் துறைமுகங்களில் செலுத்தும் சுங்கவரிகள் அரசு வருவாயில் அதிக அளவில் இடம்பெறும். கீழே தரப்பட்ட காகதீய கணபதி தேவர் காலத்தைச் சேர்ந்த மோட்டுப்பள்ளி கல்வெட்டு மூலம் நாம் பல தகவல்களை அறிய முடிகிறது.



படம் 12.8 மோட்டுப் பள்ளி கல்வெட்டு

இந்த சாசனம் கணபதி தேவரால் அனைத்து கண்டங்கள், நாடுகள் மற்றும் நகரங்களுக்குச் சென்று திரும்பும் கடல்வணிகர்களுக்காக வழங்கப்படுகிறது. கடந்த கால அரசர்கள் புயலில் படகுகள் அழிந்துவிட்டாலும் கட்டாயமாக வரியை வசூலிப்பர். வியாபாரிகளின் தங்கம், யானைகள், குதிரைகள், ஆபரணங்கள் முதலியவற்றைக் கைவசம் செய்து கொள்வர். இது போன்ற சூழ்நிலைகளிலிருந்து வணிகர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தி, வெளிநாட்டு வியாபாரத்தை ஊக்கப்படுத்தி நாங்கள் எங்கள் பெருமைக்காகவும், புகழுக்காகவும், புண்ணியத்திற்காகவும், இரக்கத்துடன் பெயரளவு சுங்கவரிகளை மட்டுமே விதிக்கிறோம் என்று கூறியுள்ளனர்.

இந்த கல்வெட்டில் வெளிநாட்டு வியாபாரம் செய்யும் வெவ்வேறு பொருட்களின் மீது வரி விதித்து வசூல் செய்யும் சுங்கங்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன.

- கடந்தகால ஆட்சியாளர்கள் வெளிநாட்டு வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் எவ்வாறு நடந்துகொள்வர்?
- கணபதி தேவர், வியாபாரிகளுக்கு எது போன்ற வாக்குறுதியைத் தந்தார்?
- கணபதி தேவர் வெளிநாட்டு வியாபாரிகளுக்கு ஏன் பாதுகாப்பை ஏற்படுத்தித்தந்தார்?

இத்தாலி நாட்டுப் பயணியான மார்க்கோபோலோ மோட்டுப்பள்ளி துறைமுகத்திற்குச் சென்று அங்கிருந்து வைரங்கள், சிலந்திக்கூட்டைப் போன்ற மிக மெல்லிய மற்றும் மிகச்சிறந்த ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும் அவற்றை உடுத்த மகிழ்ச்சி கொள்ளாத அரசனோ அரசியோ உலகில் இல்லை என்றும் தெரிவித்தார்.

## காகதீயர்களின் ஆட்சி முடிவு

சுமார் கி.பி.1190 ஆண்டு காலத்தில் ஒரு புதிய அரசு டில்லியில் உருவாக்கப்பட்டது. இந்த புதிய

SCERT TELANGANA

அரசர்கள் சுல்தான்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் முதலில் துர்கிஸ்தானிலிருந்து வந்தனர். அவர்களிடம் ஒரு வலிமையான இராணுவம் இருந்தது. அதனால் அவர்களால் வட இந்தியாவிலும் பிறகு தக்காணத்திலும் பல அரசர்களை வெல்ல முடிந்தது. சுல்தான் முகமதுபின் துக்ளக் காகதீய பிரதாப ருத்திரரை கி.பி. 1323ல் தோற்கடித்தார். இவ்வாறு காகதீய வம்சம் முடிவுக்கு வந்தது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு கர்நாடகத்தில் பாமினி மற்றும் விஜய நகரப்பேரரசு என்னும் இரண்டு புதிய அரசுகள் ஏற்பட்டது என்பதை இனி வரும் பாடங்களில் படிப்போம்.

### செயல் திட்டம் :

1. இப்பாடத்தில் கூறப்பட்ட மூன்று கதைகளை சிறு நாடக வடிவில் எழுதி நடித்துக்காட்டு.
2. உங்கள் கிராமம் அல்லது நகரம் தோன்றிய புகழ்மிக்க குறிப்புகளை சேகரித்தும் ஒரு வரைபடத்தைத் தயாரித்தும் வழங்கு.
3. உங்கள் பகுதியிலுள்ள ஒரு பழைய கோவிலுக்குச்சென்று எப்போது கட்டப்பட்டது என்பதை அறியவும் அங்கு ஏதேனும் கல்வெட்டு இருக்கிறதா என்று பார்.

**பல்நாட்டி வீரா - சாதித் தடைகளைக் கடந்து வந்த கதாநாயகர்கள்.**

ஸ்ரீநாதரால் 1350களில் எழுதப்பட்ட பலநாட்டி வீரர்களின் கதை எவ்வாறு போர்வீரர்கள் பலர் தோன்றினர் என்பதைப் புரிந்து கொள்ள நமக்கு துணைபுரிகிறது. இதில் தலைமைப் பாத்திரமான பாலச்சந்திரர் பல்வேறு இனங்களிலிருந்து வந்த அர்ப்பணிக்கப்பட்ட தோழர்களின் ஒரு சிறுபோர்க்குழுவைப் பெற்றுள்ளார். அவர்களில் ஒருவர் பிராமணர். மற்றவர்கள் கருமார், பொற்கொல்லா, மீனவர், குயவர், சவரத்தொழிலாளி போன்றோர் சேவை மற்றும் கைவினைக் கலைஞர் சமூகங்களிலிருந்து வந்தவர்கள். பாலச்சத்திரர் மற்றும் அவரது கூட்டாளிகள் ஒருவருக்கொருவர் பாசத்தால் கட்டுப் பட்டவர்களாக இருந்ததால் அவர்களை சகோதரர்கள் என்று அழைத்தனர். அவர்கள் போருக்குப் புறப்படுவதற்கு சற்றுமுன் பாலசந்திரரின் தாய் தன் கைகளால் அனைத்து சகோதரர்களுக்கும் உணவு தயாரித்து வழங்கினார். ஆனால், அத்தாய் உணவினை ஒவ்வொருவருக்கும் வேறுவேறு மண் தட்டுகளில், இலைகளில் வெண் கலத்தாலான தட்டுகளிலும் பரிமாறினார். அவரது மகனால் இச்செயலுக்காக திட்டப்பட்டார். போருக்குச் செல்லும்போது சாதியை தூக்கியெறிய வேண்டும் என்று கூறி அவர்கள் அனைவரும் மற்றவர்களின் தட்டுகளில் உள்ள உணவை மாற்றிக்கொண்டு உண்டனர்.

### முக்கியச் சொற்கள்

**1. போர்வீரர்கள் 2. நாயங்கார முறை 3. சிற்றரசர்கள் 4.கைத்தொழிலாளர்கள்**

## உனது கற்றலை மேம்படுத்துக.

1. அக்கால படைவீரர்களுடன் தற்கால இராணுவத்தைப் பற்றி நீ அறிந்தவற்றுடன் ஒப்பிடு. அவர்களிடையே காணப்படும் வேறுபாடுகள் யாவை?(AS1)
2. காகதீயர்கள் காலத்தில் விவசாயத்தை மேம்படுத்த அரசர்களும் படைத்தலைவர்களும் நீர்ப்பாசனத்திற்காக ஏரிகளை கூட்டினர். அவர்கள் தற்போது என்ன செய்கிறார்கள்?(AS1)
3. காகதீயர்கள் படைத்தலைவர்களை/சிற்றரசர்களைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவருவதில் எவ்வாறு வெற்றியடைந்தனர்?(AS1)
4. காகதீயர்கள் வலிமை வாய்ந்த சிற்றரசர்களை நாயகர்களாக நியமிக்காதது ஏன்?(AS1)
5. பெண்களால் அக்காலங்களில் ஆள்வது கடினமாக ஏன் இருந்தது? இன்று இது வேறுபட்டுள்ளதா? எவ்வாறு?(AS4)
6. அக்காலங்களில் வலிமை வாய்ந்த ஆண்கள் நிலங்களை சொந்தமாகப் பெற்றிருந்தனர். மற்ற விவசாயிகள் வியாபாரிகள், கைவினைக் கலைஞர்கள் ஆகியோர் மீது வரிகளை சுமத்தவும் அவர்களால் முடிந்தது. தற்போது வலிமை பெற்றவர்களால் இதைச் செய்ய முடியுமா? காரணங்களைக் கூறுக.(AS4)
7. பக்கம் 114ல் உள்ள நாயங்காரா முறை என்னும் தலைப்பின் கீழ் உள்ள பத்தியை படித்து அதன் மீது உன் கருத்தினை தெரிவி.(AS2)
8. பெண்கள் சிறந்த நிர்வாக திறமையுடையவர்கள் இக்கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?(AS2)



SCERT TELANGANA

பாடம் 13

# விஜயநகர மன்னர்கள்

படைவீரர்களும் தலைவர்களும் கிராமங்களை எவ்வாறு தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தனர் என்பதையும் அவற்றை காகதீயர்கள் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர எவ்வாறு முயற்சி செய்தனர் மற்றும் ஒரு பேரரசை எவ்வாறு நிறுவினர் என்பதையும் கடந்த பாடத்தில் நாம் அறிந்து கொண்டோம். டில்லி சுல்தான்கள் வரங்கல் அரசை கைப்பற்றியவுடன் காகதீயர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆனால் விரைவிலேயே விஜயநகரம் அல்லது கர்நாடக பேரரசு என்னும் மிகப்பெரிய அரசு ஒரு படைவீரர்கள் குடும்பத்தால் நிறுவப்பட்டது.

விஜயநகரம் என்பதற்கு வெற்றி நகரம் என்பது பொருள். இது கர்நாடக மாநிலத்தில் துங்கபத்திரா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பாரம்பரியக் கதைகளின் கூற்றுப்படி இது வித்தியாரண்யரின் ஆசிர்வாதத்தோடு ஹரிஹரராயர் மற்றும் புக்கராயர் என்னும் சகோதரர்களால் நிறுவப்பட்டது. விஜயநகர மன்னர்கள் திருவிருப்பாட்சரை (சிவன்) வணங்கினர். ஆலயத்தை விரிவுபடுத்தினர். விஜயநகரப் பேரரசு சுமார் 250 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தது. சங்கம வம்சத்தைச் சேர்ந்த ஹரிஹரர் மற்றும் புக்கராயர்களுக்குப் பிறகு சாளுவ, துளுவ மற்றும் ஆரவீடு வம்சத்தினர் ஒருவருக்குப்பின் ஒருவர் இப்பேரரசை ஆண்டனர்.

துங்கபத்திரா ஆற்றின் வடக்கிலும் பாமினிப் பேரரசுகள் என்னும் புதிய பேரரசுகள் ஏற்பட்டன. தொடக்கத்தில் இது குல்பர்காவைத் தலைநகரமாகக் கொண்ட ஒரு பெரிய அரசாக இருந்தது. பின்னர் கி.பி.1489க்கும் 1520க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐந்து சிற்றரசுகளாக பிரிந்துவிட்டது. இந்த ஐந்து அரசுகளில் தற்போதைய கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் பெரும்பான்மையான பகுதிகளாக விளங்கிய பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா ஆகியவை அடங்கி இருந்தன. இந்த அரசுகள் ஈரான் மற்றும் அரேபியாவிலிருந்து வந்த சுல்தான்கள் மற்றும் படைத் தளபதிகளால் ஆளப்பட்டன. இந்த அனைத்து அரசுகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு தத்தம் அரசுகளை விரிவு படுத்துவதிலேயே கருத்தாய் இருந்தன. அவர்கள் உள்ளூர்களிலிருந்து படைவீரர்களையும் தலைவர்களையும் பணியமர்த்த முயன்றனர் என்பதை நாம் முன்பாடங்களில் படித்தோம். அவர்களின் உதவியால் கிராமங்களையும், நகரங்களையும் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர அவர்கள் முயன்றனர். விவசாயிகளிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் வரி வசூலித்தனர்.

**விஜயநகரத்தின் சில முக்கிய மன்னர்கள்**

| | |
|---|---|
| ஹரிஹர ராயர் | (பொ.யு.1336-1357) |
| புக்கராயர் I | (பொ.யு.1357-1377) |
| ஹரிஹரராயர் II | (பொ.யு.1377-1404) |
| தேவராயர் II | (பொ.யு.1426-1446) |
| சாளுவ நரசிம்மராயர் | (பொ.யு.1486-1491) |
| ஸ்ரீகிருஷ்ண தேவராயர் | (பொ.யு.1509-1529) |
| அச்சுதராயர் | (பொ.யு.1529-1542) |
| அலிய ராமராயர் | (பொ.யு.1543-1565) |
| வெங்கடபதிராயர் | (பொ.யு.1585-1614) |

SCERT TELANGANA

### நாம் எவ்வாறு அறிவது?

விஜய நகரப் பேரரசைப் பற்றி அக்கால கல்வெட்டுகள், நூல்கள் மற்றும் கட்டிடங்களின் மூலம் நாம் அறியலாம். அக்கால ஆட்சி முறை அன்றாட வாழ்க்கை முறை சமூக அமைப்பு ஆகியவற்றையும் நம்மால் அறிய முடிகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த பயணிகளால் விட்டுச் செல்லப்பட்ட குறிப்புகள் முக்கியமாக – பொ.யு.1420ல் விஜய நகரத்திற்கு வந்த இத்தாலி நாட்டின் நிக்கோலோ கோண்டி பொ.யு.1443ல் வருகை புரிந்த ஈராக்கின் அப்துல்ரஜாக், பொ.யு.1520ல் வருகைபுரிந்த போர்ச்சுகீசிய மாலுமி டோமிங்கோ பெயஸ் மற்றும் பொ.யு.1537ல் வருகைபுரிந்த நுனிஜ் ஆகியோரின் குறிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

### விஜயநகரத்தின் நகரம் :

இந்த நகரம் துங்கபத்திரா ஆற்றங்கரையில் பம்பாதேவி மற்றும் சிவபெருமான் ஆலயங்களுக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த நகரத்திற்கு ஏழு கோட்டை மதில்கள் இருந்ததாக அப்துல் ரஜாக் கூறுகிறார். இவற்றில் சிலவற்றை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

போர்ச்சுகீசியப் பயணியான பெயஸின் வர்ணணையின்படி :

*மன்னர் ஒரு வலிமையான நகரத்தை அமைத்து அதைச் சுற்றிலும் சுவர்களையும் கோபுரங்களையும் கட்டினார். இந்த சுவர்கள் மற்ற நகரங்களைப் போல் அல்லாமல் மிகவும் வலிமையான கட்டுமான நுட்பத்தால் அமைக்கப்பட்டன.*

*ஓர் அகன்ற மற்றும் அழகான வீடுகளைக்கொண்ட கண்கவரும் வீதியையும் நீங்கள் காணலாம். இவ்வீடுகள் வணிகர்களுக்குச் சொந்தமானவை. எனவே அவை அனைத்துவிதமான வைரம், வைடூரியங்களாலும், பவளம் மற்றும் முத்துக்களாலும் அழகுபடுத்தப்பட்டன. மேலும் அனைத்துவகையான ஆடைகளும் இருந்தன. மாலையில் சந்தைகள் கூடும். அங்கு குதிரைகள், காய்கறிகள், பழங்கள், கூடைகள் ஆகியவை விற்கப்பட்டன.*




*படம் : 13.1 திருமலைக்கோயிலில் வடிவமைக்கப்பட்ட கிருஷ்ண தேவராயர் மற்றும் அவருடைய இரு துணைவியார்களின் வெண்கலச்சிலை.*

* மாலைவேளைகளில் காய்கறிகள், பழங்கள் மற்றும் குதிரைகள் ஏன் விற்கப்பட்டன?

தொல்பெருள் ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்த நகரமானது நான்கு தனிப்பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. முதல் பகுதி பாறைப் பகுதிகளில் அமைந்துள்ள கோயில்கள். இரண்டாவதாக, கால்வாய்களிலிருந்து நீர்ப்பாசனம் பெற்று பயிர் வளர்க்கப்படும் பள்ளத்தாக்குப் பகுதி. மூன்றாவதாக அரண்மனைகளும் நாயக்கர்கள் வாழும் பகுதிகளும் அடங்கிய அரசவை. நான்காவதாக, சாதாரண நகரமக்கள் வாழும் பகுதி. ஒவ்வொரு பகுதியும் மற்றவற்றிலிருந்து புறவரிப்படத்தில் காட்டியுள்ளதைப் போல் தனிமை படுத்தப்பட்டுள்ளது.

* விஜயநகரத்தை வரங்கலுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

SCERT TELANGANA




புறவரிப்படம்–1 : விஜயநகரப் பேரரசு நகரம்

* இவ்வகையான கோட்டைச் சுவர்களை இக்கால நகரங்களில் ஏன் கட்டுவதில்லை?

**இராணுவங்களும் இராணுவத் தலைவர்களும்**

நீங்கள் தற்காலத்தில் நடந்துவரும் பெரும் போர்கள் பற்றியும் வலிமையான இராணுவங்கள் பற்றியும் கேட்டும் படித்தும் இருப்பீர்கள்.

* நாடுகளின் இராணுவங்கள் வலிமையாவதன் காரணம் என்ன?
* நவீன இராணுவங்கள் எவ்வகையான கருவிகளையும் ஆயுதங்களையும் பயன்படுத்துகின்றன?

விஜயநகர ஆட்சிக்காலத்தில் இவை எவ்வாறு இருந்தன என்பதைக் கண்டறிவோம்.

விஜய நகர ஆட்சியாளர்கள் தங்களுடைய இராணுவத்தை வலிமைபடுத்துவதில் பெருமளவு செலவு செய்தனர். அவர்கள் அரேபியாவிலிருந்தும் ஈரானில் இருந்தும் குதிரைகளை அதிக அளவில் இறக்குமதி செய்தனர். அவை கப்பல் மூலம் மேற்கு கடற்கரையிலிருந்து துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்தன. அவர்கள் பெரிய இராணுவத்தை அமர்த்தி பல வலிமையான கோட்டைகளைக் கட்டினர். முக்கிய மன்னர்களில் ஒருவரான கிருஷ்ணதேவராயர் II அவருடைய இராணுவத்தில் சேவைபுரிய முஸ்லிம் வீரர்களை பணியமர்த்தத் தொடங்கினார். தன் படைவீரர்களுக்கு புதிய போர் முறைகளைக் கொண்டு பயிற்சி அளித்தார். அவர் தலைநகர்களில் முஸ்லீம் வீரர்கள் தங்கியிருந்த பகுதிகளில் மசூதிகளை கட்டிக் கொள்ள அனுமதித்தார். அக்காலங்களில் துப்பாக்கிகளும், பீரங்கிகளும் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டன. விஜய நகரமன்னர்கள் தங்கள் படைகளில் துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் பயன்படுத்தினர். துப்பாக்கிக் கருவிகளும் குதிரைப்படைகளும் இந்தியாவிலேயே அவர்களை மிகவும் வலிமை வாய்ந்த இராணுவங்களில் ஒன்றாக மாற்றியது.

* அக்காலங்களில் குதிரைகள் படைவீரர்களின் விரைவான பயணத்திற்கு மிகவும் முக்கியமானவையாக இருந்தன. அவற்றுக்குப் பதில் தற்காலத்தில் எவை வந்துள்ளன?
* யானைகள் மெதுவாக நகர்ந்தாலும் தாக்குவதில் வலிமைபடைத்தவை. அவற்றுக்குப் பதில் தற்காலத்தில் எவை வந்துள்ளன?

**படைத்தலைவர்கள் – அமர நாயக்கர்கள் :**

முழு அரசும் படைத்தலைவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. அவர்கள் யார்? என்ன செய்தனர்? என்பதைப் பற்றி நாம் அறிவோம். கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜய நகரத்திற்கு வருகைபுரிந்த போர்ச்சுகீசியப் பயணியான டோமிங்கோ பெயஸ் என்பவரால் விட்டுச்செல்லப்பட்ட குறிப்புகளைப் படி,

*அரசருக்குப் போர் புரிவதற்கு ஒரு மில்லியன் படைவீரர்கள் இருந்தனர். அவற்றில் 35,000 குதிரைப்படை வீரர்கள், தேவை ஏற்படும் போதெல்லாம் அனுப்ப தயார் நிலையிலிருந்தனர்.*

SCERT TELANGANA

அப்பகுதிகளில் அரசர் என்றால் மிகவும் பயம்.

இப்படைகளின் தலைவர்கள் அரசின் உயர்குடிகளாக இருந்தனர். அவர்கள் மாநகர, நகர மற்றும் கிராமங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்களிடையே இருந்த தலைவர்களிடம் மில்லியன் தங்க நாணயங்களும், பிறரிடம், இருநூறு, முந்நூறு அல்லது ஐந்நூறு ஆயிரம் தங்க நாணயங்களும் இருந்தன. வருவாயின் அடிப்படையில் அரசர் படைவீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தார். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படையை படைத்தலைவர்கள் நிர்வகிக்கும்படி நிர்ணயித்தார். இப்படைவீரர்கள் எவ்வெப்போதெல்லாம் அழைக்கப்படுவார்களோ, எங்கெங்கெல்லாம் செல்ல வேண்டுமோ அதற்கு தயார் நிலையில் இருப்பர். இப்படைகளை நிர்வகிப்பதோடு ஒவ்வொரு படைத்தலைவரும் ஆண்டு சந்தா செலுத்த வேண்டும்.

படைத்தலைவர்களால் அளிக்கப்படும் படைவீரர்களோடு சேர்த்து அரசர் தனக்கென சொந்தமாக தான் பணம் செலுத்தி நிர்வகிக்கும் படைவீரர்களையும் பெற்றிருப்பார்.

> மேற்கண்ட பாடப்பகுதியை கவனமாகப் படித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.
>
> * கிருஷ்ண தேவராயர் என்றால் பிறருக்கு பயம். ஏன்?
> * விஜயநகரப் பேரரசின் நகரங்களையும் கிராமங்களையும் கட்டுப்படுத்தியவர் யார்?
> * அவர்கள் அனைவரும் சமமான வருமானத்தைப் பெற்றனரா?
> * தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த கிராமங்களையும், நகரங்களையும் கொண்டு படைத்தலைவர்கள் என்ன செய்தனர்?



படம் : 13.2 ஹஜாரா ராமர் கோவிலிலுள்ள கல் தேர்

> * படைத்தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட கிராமங்களுக்கு நிகராக படைத் தலைவர்கள் அரசருக்கு என்ன செய்ய வேண்டும்?
> * படைத்தலைவர்கள் அனுப்பும் படைவீரர்கள் மீது மட்டுமே அரசர் சார்ந்திருந்தாரா?

படைத்தலைவர்கள் என இங்கு குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் நாயக்கர்கள். இந்த நாயக்கர்கள் வருவாய் பணிகளை செய்தனர். அதாவது அவர்களுக்கு கிராமங்களும் நகரங்களும் தரப்பட்டன. அவற்றிலிருந்து வரிவருவாய் வசூலித்து பயன்படுத்த அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. இதுபோன்ற வருவாய்ப் பணிகளை வைத்துக்கொள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் படைவீரர்களை நிர்வகிக்க வேண்டும் என்னும் கடமைகள் அவர்களுக்கு இருந்தன. அவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளையும் நிர்வகித்தனர். மேலும் அவர்களுக்கும் நீதி அதிகாரங்கள் இருந்தன. (குற்றவாளிகளை விசாரிக்கவும் தண்டனை வழங்கவும் அதிகாரம்) இது டில்லி சுல்தான் ஆட்சி முறையோடு ஒத்திருந்தது. அதாவது உயர்குடிகள் அல்லது அமீர்கள் இதே போன்ற வருவாய் பணிகளான இக்தாக்கள் அளிக்கப்பட்டிருந்தன.

அமரநாயக்கர்களில் பெரும்பான்மையானவர் தெலுங்கு படைவீரர்கள். அவர்கள் தங்களுடைய கிராமவாசிகள் அல்லது உறவினர்கள் போன்றோரை இராணுவ வீரர்களாக பணியமர்த்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இந்த இராணுவங்கள் அரசர்களை விட நாயக்கர்களுக்கு அதிக மதிப்பு அளித்தது. சாளுவ நரசிம்மர் அல்லது நரச நாயக்கர் போன்ற வலிமை வாய்ந்த நாயக்கர்கள் அரசின் பெரும் பகுதிகளை கட்டுப்படுத்தினர். மேலும் விஜயநகர அரசர்களையும் சவாலுக்கு அழைத்து உள்ளனர்.

உண்மையில் அவர்களில் சிலர் மிகவும்

வலிமை வாய்ந்தவர்களாக இருந்ததால் அரசர் இறந்தவுடன் அவர்கள் அதிகாரத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு தங்களை அரசர்களாக அறிவித்துக் கொண்டனர்.

### ஒப்பிடுவோம் :

சோழப் பேரரசில் கிராமங்கள் நில உரிமைகொண்ட கிராமவாசிகள் கொண்ட குழுவால் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டது? என்பதையும் இக்குழுக்கள் உதவியால் அரசர் எவ்வாறு நிலவரியை வசூலித்தார்? என்பதைப் பற்றியும் நீங்கள் படித்திருப்பீர்கள். இராணுவங்கள் மற்றும் நாயக்கர்களின் அதிகாரம் அதிகரிக்க அதிகரிக்க விஜயநகரப் பேரரசில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கிராமங்கள் மற்றும் நகரங்களின் மீதான கட்டுப்பாடு இந்த நாயக்கர்களுக்கு வழங்கப்பட்டதையும் நீங்கள் அறிந்தீர்கள்.

* கிராமங்களில் இது எவ்வகையான செல்வாக்கைப் பெற்றிருக்கும்? உன் வகுப்பில் விவாதி.
* ஆறாம் வகுப்பில் படித்த ஒரு பாடத்தில் தற்காலத்தில் கிராமங்களும் நகரங்களும் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி நீங்கள் அறிந்தீர்கள். இதை விஜய நகர அமைப்புடன் ஒப்பிட்டு வேற்றுமைகளைக் குறிப்பிடு.

### மன்னர் கிருஷ்ண தேவராயர்

கிருஷ்ண தேவராயர் கி.பி.1509 முதல் 1529 வரை அரசாண்டார். அவர் ஒரு மாபெரும் படைத்தலைவராக இருந்தார். விஜயநகர இராணுவத்தை பாமினி சுல்தான்கள் மற்றும் ஒடிசாவின் கஜபதிகளுக்கு எதிராகவும் வெற்றிகரமாக நடத்தினார். கர்நாடகம், ஆந்திரம் மற்றும் தமிழ்நாடு பகுதிகளில் கலகம் செய்த படைத்தலைவர்களை அடக்கினார். இதனால் கிருஷ்ணா ஆற்றுக்கு தெற்கில் இருந்த அனைத்துப் பகுதியும் முக்கியமாக கிழக்குக் கடற்கரையிலிருந்த துறைமுகங்கள் அனைத்தும் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

இக்காலத்தில் மேற்கு கடற்கரையில் இருந்த கோவா போன்ற சில துறைமுகங்களில் போர்ச்சுகீசியர் தங்களது ஆதிக்கத்தைப் பெற்றிருந்தனர். கிருஷ்ண தேவராயர் அவர்களிடமிருந்து குதிரைகளையும் ஆயுதங்களையும் பெறுவதற்காக அவர்களிடம் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார். தன்னுடைய படைகளில் போர்ச்சுகீசியர்களையும் இராணுவ வீரர்களாக பணியமர்த்தினார்.

ஒவ்வொரு வருடமும் விஜயதசமி நாள் அன்று அரசர் விரிவான கொண்டாட்டங்களையும் வழிபாடுகளையும் ஏற்பாடு செய்வார். இராணுவ அணிவகுப்பின் சாகசங்களோடு முடிவுக்கு வரும் இந்த நாளில் அனைத்து படைத்தலைவர்களும் அமரநாயக்கர்களும் அரசருக்கு கப்பம் செலுத்துவர்.

கிருஷ்ண தேவராயர் தன் அரசில் இருந்த கோயில்கள் மீது தனிக்கவனம் செலுத்தியதோடு அவற்றில் திருப்பதி, ஸ்ரீசைலம், அஹோபிளம் போன்ற பல கோயில்களுக்கு தானே விஜயம் புரிந்தார். அவர் பலகோயில்களுக்கு பெரிய அளவில் நன்கொடைகள் வழங்கினார்.

கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டுகள் போரில் அவர் வென்ற பெரும்பொருட்களை தென்னிந்தியாவின் அனைத்து பெரிய



படம் 13.3 ஹஜாரா ராமர் கோயில் சிற்பங்கள் இந்த உருவங்களின் அடிப்படையில் உன்னால் ஒரு கதை எழுத முடியுமா?



*படம்: 13.4 காஞ்சிபுரத்தின் ஏகாம்பரநாதர் கோயிலின் இராஜகோபுரம்*

கோயில்களுக்கும் பகிர்ந்தளித்தார் என்று தெரிவிக்கின்றன. கோயில் வாயில்களான இராஜகோபுரங்கள் அவருடைய பெருமையை எடுத்துக்கூறும் வகையில் பல கோயில்களில் கட்டப்பட்டன. இந்த செய்கைகள் தென்னிந்திய மக்களிடையே அவர் பெயர் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் என்பதை உறுதிப் படுத்துகின்றன.

விஜய நகர நகரத்தில் கூட இவர் சில அழகிய கோயில்களைக் கட்டினார்.

கிருஷ்ண தேவராயர் தெலுங்கு இலக்கியத்தையும் ஆதரித்தது மட்டுமின்றி ஆமுக்த மால்யதா என்னும் தமிழ் பக்திக் கவிஞரான ஆண்டாளின் வாழ்க்கையைத் தெரிவிக்கும் கவிதை நூலையும் தானே எழுதி வெளியிட்டார். அவரது சபையில் அஷ்ட திக்கஜங்கள் என்னும் எட்டு பேர் கொண்ட கவிஞர் குழு இருந்தது.

அவர்கள் அல்லசாணி பெத்தன்னா, முக்கு திம்மன்னா, தூர்ஜாடி, ராமராஜ பூஷன்னா, தெனாலி ராமகிருஷ்ணர், பிங்கலி சூரன்னா, ஐயலராஜு ராமபத்திரர், மாதயகாரி மல்லன்னா ஆகியோர் ஆவர்.


விஜய நகர அரசர்களின் அதிகாரம் கிருஷ்ண தேவராயருக்குப் பின் அரசர்களாக வந்த அச்சுத தேவராயர் மற்றும் அலிய ராமராயர் ஆகியோரின் காலத்தில் மேலும் வளர்ந்தது. பாமினி அரசர்களால் விஜய நகரத்தை எதிர்த்து தனியாக போரிட முடியாததால் கி.பி.1565ல் அனைத்து ஐந்து பாமினி அரசுகளும் கூட்டு சேர்ந்து ராமராயரை ராட்சச 'தங்கடி' என்னும் தலைக்கோட்டை போரில் தோற்கடித்து விஜயநகரத்தை சூறையாடி அழித்துவிட்டன. அவருக்குப் பின் வந்த அரசர்கள் தங்களுடைய தலைநகரத்தை திருப்பதிக்கு அருகிலுள்ள சந்திரகிரிக்கு மாற்றினர். ஆனால் முன்பிருந்த பெருமையை அவர்களால் திரும்பப் பெறமுடியவில்லை. பேரரசின் ஒரு பகுதி சுல்தான்களின் கட்டுப்பாட்டில் வந்ததால், படைத்தலைவர்களும் நாயகர்களும் மற்ற பகுதிகளில் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்துக் கொண்டனர்.

### கோல்கொண்டாவின் குதுப்ஷாகிகள் 1512-1687

| குதுப்ஷாகிகள் - காலவரிசை | |
|---|---|
| குலி குதுப் ஷா | (1512-1543) |
| ஜம்ஷெட் குலி | (1543-1550) |
| இப்ராஹிம் குதுப் ஷா | (1550-1580) |
| முகமது குலிகுதுப்ஷா | (1580-1612) |
| அப்துல்லா குதுப்ஷா | (1626-1672) |
| அப்துல் ஹசன் தனாஷா | (1672-1687) |

முன் பாடத்தில் தெலங்காணாவின் காகதீயப் பேரரசைப் பற்றி படித்தோம். காகதீயப் பேரரசின் முடிவிற்குப் பின் அவ்வரசின் துணைத் தலைவர்கள் தனி பேரரசுகளை நிறுவினர். இவற்றில் இராச கொண்டா மற்றும் தேவரகொண்டாய் பகுதிகளின் வேலமா அரசுகள் மிக வலிமையானதாகவும் விஜயநகரப் பேரரசர்கள் மற்றும் பாமினி அரசர்களின் அதிகாரத்தையும் எதிர்த்தனர். 1512ல் தெலங்காணாவின் பாமினி அரசர்களின் ஓர் ஆளுநராக இருந்த குலி குதுப் ஷா தன்னை சுதந்திர அரசர் என அறிவித்துக் கொண்டார். கோல் கொண்டாவில் குதுப் ஷாஹி மரபினைத் தோற்றுவித்தார். அவர வரங்கல், கொண்ட பள்ளி, ஏலூரு மற்றும் இராஜமந்திரி கோட்டைகளைக் கைப்பற்றி தனது ஆட்சியை விரிவுபடுத்தினார். தெலங்காணா கோல்கொண்டா அரசின் முக்கியப் பகுதியாக இருந்தது. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் 1687 வரை ஆட்சி செய்தனர்.

SCERT TELANGANA




(வரைபடம் 2 குதுப்ஷாஹி மரபு)

சுல்தான் இப்ராஹிம் குதுப்ஷா (1550-80) தெலுங்கு இலக்கியத்தை ஆதரித்தார். பிராமணர்களுக்கும் கோயில்களுக்கு நிதியுதவி வழங்கினார் காகதீய அரசர்களைப் போன்று பேரளவில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தித் தந்தார். இவர் காலத்தில் சிங்கணாச்சாரியர், அத்தங்கி கங்காதரர், கந்துகூரு ருத்திரகவி, பொன்ன கண்டி தெலகநாரியர் போன்ற புகழ் மிக்க தெலுங்குப் புலவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் இப்ராஹிம் குதுப் ஷாவால் ஆதரிக்கப்பட்டனர். இப்புலவர்கள் இப்ராஹிம் குதுப்ஷாவை மல்கிபா-ராமா என்று புகழ்ந்தனர். அவர், காகதீயர்களின் படைவீரர்களை ஆதரித்த மரபில் வந்தவர்கள என்று பெருமைப்பட்டுக் கொண்ட பல நாயக்க தலைவர்களையும் தன்னுடைய ஆட்சி சேவையில் எடுத்துக் கொண்டார். அவர்கள் குறிப்பாக பிரதாப ருத்திரரின் சேவர்களாவர். இப்ராஹிம் அவர்களுக்கு விவாசயத்துறையில் கணிசமான அளவு தன்னதிகாரத்தை வழங்கினார். பெரிய கோட்டைகளின் அதிகாரத்தையும் அவர்களிடம் ஒப்படைத்தார்.

குதுப் ஷாஹி ஆட்சியாளர்கள் அப்பகுதியின் சூழ்நிலையியலை துரிதமாக புரிந்துகொண்டனர். தெலங்கானாவின் மையப்பகுதியில் விவசாயத்தை விரிவாக்க காகதீயர் முறையிலான நீர்ப்பாசன முறையைத் தொடர முடிவு செய்தனர். தலைநகரான கோல்கொணடாவில் அவர்கள் வாழ்ந்ததால் ஹுசைன் சகார் ஏரியை 1562ல் இப்ராஹீம் குதுப் ஷாஹி வடிவமைக்க உதவி புரிந்த சூபி துறவியான ஹஜ்ரத் ஹுசைன் ஷா வாலி என்பவரின் பெயரால் அது அழைக்கப்பட்டது. அது ஆண்டுதோறும் நீரை மூசி நிதியிலிருந்து பெறும் வகையில் செயற்கையான ஏரியாக மேம்படுத்தப்பட்டது. அது ஐதராபாத்தின் முக்கிய குடிநீர் வளமாக மாறியது. இப்ராஹிம் குதுப்ஷானி இப்ராஹிம் பட்டிணத்தில் மற்றொரு ஏரியைக் கட்டினார். எனினும் அது புராணாபுல் என்னும் பாலத்தை மூசி நிதியின் குறுக்கே கட்டியதால் அது மிகவும் பிரபலமடைந்தது.

இப்ராஹிமின் மகன் முகமது குலி தொலைநோக்குப் பார்வை கொண்டவராக

SCERT TELANGANA

திகழ்ந்தார். ஐதராபாத் நகரத்தை திட்டமிட்டு வடிவமைத்தவர் அவரே ஆவார். அவருமடைய காலத்தில் ஐதராபாத் நகரத்தின் சிற்பியாகத் திகழ்ந்தவர் மிர் மொமின் அஸ்தராபாதி ஆவார். குலிகுதுப்ஷாவின் முதலமைச்சரான அவர் புதிய தலை நகரத்துடன் சார்மினார் வடிவமைப்பு திட்டத்தை தயாரிப்பதிலும் அவர் மிக முக்கிய பங்கு வகித்தார். முகமது குலிகுதுப் ஷா மெக்கா மசூதியையும் ஜாமா மசூதியையும் கடடினார். அது மெக்காவின் பெரிய மசூதியின் மாதிரியாக கட்டப்பட்டது. குலி குதுப்ஷா மெக்காவிலிருந்து மண்ணைக்கொண்டு வரச்செய்து அதைக் கொண்டு கற்களை வருவாக்கி மிகுதியினையை வளயைத்தை கட்டியதால் அப்பெயர் வைக்கப்பட்டது. இம்மசூதியின் ஓர் அறையில் முகமது நபியின் தலைமுடியும் உள்ளது. ஐதராபாதின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட சின்னமான சார்மினாரை குலிகுதுப்ஷா கட்டினார். அவர் பெர்ஷிய மற்றும் உருது மொழிகளில் சிறந்த கவிஞரும் ஆவார். தக்காணத்தின் உருது மொழி அவருடைய தொண்டினால் இலக்கிய மொழித் தகுதியையும் பெற்றது.



படம் 13.5 சார்மினார்

முகமது குலி குதுப் ஷாவின் மகள் ஹயத் பக்ஷி பேகம் ஆவார். அவர் ஐதராபாத்திற்கு அருகில் உள்ள ஹயத் நகரில் அமைந்துள்ள ஹயத் பக்ஷி மசூதியைக் கட்டினார். அவர் மாசஹேபா என்னும் அழைக்கப் பட்டார். மாசப் ஏரி என்பது மா சஹேபா ஏரி என்பதன் மருவிய வடிவமே ஆகும்.

அப்துல்லா குதுப்ஷா கவிதை இசையிலும் நாட்டம் மிக்கவர். அவர் தன்னுடைய அரசவைக்கு புகழ்மிக்க பாதம் செய்யுள் எழுத்தாளரான சேத்திரய்யாவை அழைத்து கௌரவித்தார். குதுப் ஷாஹி மரபின் கடைசி மற்றும் மிகவும் பிரபலமான ஆட்சியாளர் அபுல்-ஹசன் தானா ஷா ஆவார். அவர் கஞ்சர்ல கோபன்னாவை (ராமதாசர் என்றும் அழைக்கப்பட்டவர்) பல்வாஞ்சா பகுதியின் தாசில்தாராக (வருவாய்த்துறையின் தலைவர்) நிமித்தார். இராமசதாசர் பொது நிதியை பத்ராச்சலத்தில் ராமர் கோயிலைக் கட்டவும் ராமர், சீதை, இலட்சுமணன் சிலைகளுக்கு ஆபரணங்கள் வாங்கவும் செலவிட்டார். பொது நிதியை வேறு செயலுக்குப் பயன் படுத்திய குற்றத்திற்காக தனாஷா இராமதாசரைரை சிறையிலடைந்தார். பிறகு இராமதாசரின் பெருமையை உணர்ந்த பின் விடுதலை செய்தார்.

குதுப் ஷாஹி காலத்தில் கோல் கொண்டா அதன் வைரங்களுக்காக உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்கியது. அக்காலத்தில் மசூலிபட்டிணம் முக்கிய துறைமுகமாக இருந்தது. அங்கிருந்து தென்கிழக்கு ஆசியா, சீனா, பெர்சியா, அரேபியா மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கிடையே வாணிகமும் நடைபெற்றது. கடற்கரைப் பகுதியிலிருந்து பெருமளவிலான வணிகர்கள் தங்களுடைய விலைமதிப்பு மிக்க விற்பனைப் பொருட்களான தங்கள் வெள்ளி ஆகியவற்றை பல நாடுகளி லிருந்து கோல் கொண்டாவிற்குக் கொண்டு வந்தனர்.

ஏழு குதுப் ஷாஹி ஆட்சியாளர்களின் கல்லறைகள் ஐதராபாதின் புகழ்மிக்க கோல்கொண்டா கோட்டைக்கு மிக அருகில் அமைந்துள்ள இப்ராஹிம் பாக்கில் அமைந்துள்ளன. இக்கல்லறைகள் பெர்ஷிய மற்றும் இந்து கலவையிலான கட்டிடக் கலை நுட்பத்தில் கூட்டப் பட்டுள்ளன. ஷாஜஹான் குதுப் ஷாஹி கல்லறைகளின் குட்டிடக்கலை நுட்பத்தால் ஈர்க்கப்பட்டு அதே முறையில் தாஜ் மகாலையும் வெண் சலவைக் கற்களால் கட்டினார். இக்கல்லறைகள் கல் வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு அழகிய தோட்டங்களால் சூழப்பட்டுள்ளன.

இப்ராஹிம் குதுப் ஷாவின் காலத்திலிருந்தே முகலாயர்கள் இந்த செல்வச் செழிப்பான அரசை கைப்பற்றுவதில் கவனம் செலுத்தினர். படிப்படியாக ஔரங்கசீப் 1687ஆம் ஆண்டில் கோல்கொண்டா கோட்டையை கைப்பற்றியதால் அதில் வெற்றியும் பெற்றனர்.

SCERT TELANGANA

குதுப்ஷாஹிகளின் இணைக்கும் கொள்கையை முகலாயர்கள் பின்பற்ற வில்லை. அவர்கள் அதிகாரத்திலிருந்து உள்ளூர் மக்களை பதவிலியிருந்து விலக்கி வெளியிலிருந்து விலக்கி வெளியிலிருந்து பலரைக் கொண்டுவந்து பதவியில மர்த்தினர். அவர் இப்பகுதியிலிருந்து அதிக வருவாயை வசூலிக்க முயன்றனர். வரிவருவாய் ஒப்பந்த முறையைப் பின்பற்றினர். இம்முறையில் ஏலத்தில் அதிக அளவு பணம் தந்தவரை ஒரு பகுதியில் வரி வசூலிக்கும் உரிமையை வழங்கினர். ஏலத்தில் உரிமை பெற்றவர்கள் உள்ளூரில் செல்வாக்கு மிக்கவர்கள் அல்லது கடன்வழங்குப வர்களாவர். அவர்கள் விவசாயிகளிடமிருந்து கைவினைஞர்களிடமிருந்தும் அதிக வரியை வசூலித்து கொடுமைபடுத்தினர். இதனால் அதிகளவில் கவலை தரும் பஞ்சம், குடிபெயர்தல், வெளியேறுகதல் போன்றவை ஏற்பட்டன.

* குதுப் ஷாஹி அரசின் வரைபடத்தை பார்த்து கோல் கொண்டா, மசூலிப்பட்டிணம், பதராச்சலம் போன்ற இடங்களைக் குறிக்கவும்.

* குதுப் ஷா ஆட்சிகாலத்தில் கோல் கொண்டா அரசு பொருளாதாரத்தில் சிறந்து விளங்கி தொடக்க கால முகலாயர் ஆட்சியர் வீழ்ச்சியடைந்ததற்கான காரணம் என்ன?



படம் 13.6 கோல்கொண்டா

* கோல்கொணடா ராஜ்ஜியத்தின் புகழ்பெற்ற வைர சுரங்கத்தை கண்டறி. அதன் வாணிகம் குறித்தும் கண்டறி.

**முக்கியச் சொற்கள்**

1. *அமரநாயகர்*
2. இக்தா
3. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்
4. அமீர்கள்
5. இராஜகோபுரம்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஒருகல்லுவில் அரசர்கள் நகரத்தின் மையப்பகுதியில் இருந்ததைப் போலன்றி விஜயநகரத்து அரசர்கள் ஒரு தனிப்பட்ட பகுதிகளில் வாழ்ந்ததற்கான காரணம் என்ன?(AS1)
2. வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி விஜயநகரம் மிகவும் இராணுவ மயமாக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் இதனால் எவ்வாறு பாதிப்பு அடைந்திருப்பர்?(AS1)
3. அமரநாயக்கர்கள் ஏன் அதிகாரம் மிக்கவர்களாக இருந்தனர்?(AS1)
4. அமரநாயக்கர்களை காகதீயர்கள் காலத்தில் வாழ்ந்ததாக நீ கற்ற படைத்தலைவர்களோடு ஒப்பிடு – அவர்கள் ஒரே மாதிரியாக இருந்தனரா அல்லது வேறு பட்டிருந்தனரா? எந்த வகையில்?(AS3)
5. மேற்கு கடற்கரையிலிருந்து வந்த இறக்குமதிகள் மீது விஜயநகர இராணுவம் ஏன் சார்ந்திருந்தது?(AS6)
6. தனது அரசை விரிவுபடுத்த கிருஷ்ண தேவராயர் பல அரசர்ளோடு போர்கள் புரிந்தார். அவற்றைப் பட்டியலிடு.(AS2)
7. விஜய நகர பேரரசர்கள் தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகள் யாவை?(AS6)
8. இந்தியப் புறவரிப் படத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.(AS5)
(அ) ஹம்பி (ஆ) பீஜப்பூர் (இ) திருப்பதி (ஈ) ஸ்ரீசைலம் (உ) காஞ்சிபுரம் (ஊ) துங்கபத்திரா நதி
9. குதுப் ஷாஹி அரசின் கலை மற்றும் கட்டிட கலை குறித்து வரையறு.(AS1)

பாடம் 14

# முகலாயப் பேரரசு

முகலாயரின் கீழ் இந்தியா ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு புதிய யுகம் தொடங்கியது. முகலாயர்கள் பொ.யு.1550 மற்றும் 1700 ஆண்டுகளுக்கிடையே ஒரு பேரரசை உருவாக்கினர். தங்களது பேரரசை டில்லியிலிருந்து இந்திய துணைக்கண்டம் முழுமைக்கும் விரிவுபடுத்தினர். அவர்களின் ஆட்சிமுறை ஏற்பாடுகள், ஆளும் முறைமைகள், கட்டிடக்கலை முதலியவை அவர்களுடைய பேரரசு வீழ்ச்சிக்குப் பின் வந்த அரசர்களையும் நீண்ட காலம் தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்று நம் இந்தியப் பிரதமர் தேசிய சுதந்திர தினத்தை முகலாயப் பேரரசர்களின் வாழ்விடமான டில்லியில் செங்கோட்டையின் கல்சுவர்களின் மீது நின்று தேசிய கொடியேற்றி உரையாற்றுகிறார்.




ஜஹாங்கீரின் உருவம் உள்ள நாணயம்

SCERT TELANGANA

### முகலாயர்கள் யார்?

முகலாயர்கள் மத்திய ஆசிய நாடுகளான உஸ்பெகிஸ்தான் மற்றும் மங்கோலியா நாடுகளை சேர்ந்தவர்கள். முதல் முகலாயப் பேரரசரான பாபர் (1526-1530) வேறொரு மன்னரின் படையெடுப்பால் தான் மரபுரிமையாகப் பெற்ற சிம்மாசனத்தை விட்டுவிட வலியுறுத்தப்பட்டார். நீண்ட காலம் அலைந்து திரிந்த பின் இறுதியில் பொ.யு.1504ல் காபூலைக் கைப்பற்றினார். பொ.யு.1526ல் டில்லி சுல்தானான இப்ராஹீம் லோடியை தோற்கடித்து டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.



படம் 14.1 செங்கோட்டை

# முக்கியமான முகலாயப் பேரரசர்கள்
# முக்கிய படையெடுப்புகளும் நிகழ்வுகளும்



**பாபர் : பொ.யு. 1526-1530**

கி.பி.1526 பாபர் இப்ரஹீம் லோடியை வென்றார். டில்லி, ஆக்ராவின் மீது தன் ஆதிக்கத்தை நிறுவினார்.



**ஹுமாயூன் : பொ.யு. 1530-1556**

செர்ஷா ஹுமாயூனைத் தோற்கடித்ததால் ஈரானுக்கு ஓடச்செய்தார். ஈரானில் ஹுமாயூன் சபாவித்ஷாவின் உதவியைப்பெற்றார். அவர் மீண்டும் டில்லியை கி.பி.1556ல் கைப்பற்றினாலும் அடுத்த ஆண்டில் ஒரு விபத்தில் இறந்தார்.



**அக்பர் : பொ.யு. 1556-1605**

அக்பர் பேரரசரான போது அவருக்கு வயது 13. அவர் விரைவிலேயே வங்காளம், மத்திய இந்தியா, இராஜஸ்தான் மற்றும் குஜராத் பகுதிகளை வென்றார். அதன்பின் அவர் ஆப்கானிஸ்தான் காஷ்மீர் மற்றும் தக்காணத்தின் சில பகுதிகளையும் வென்றார். அவருடைய பேரரசை புறவரிப்படத்தில் பார்க்கவும்.



**ஜஹாங்கீர் :பொ.யு.1605-1627**

அக்பரால் தொடங்கப்பட்ட இராணுவ முறைகள் தொடரப்பட்டன. பெரிய அளவில் எதையும் கைப்பற்றவில்லை.

**ஷாஜஹான் : பொ.யு. 1627-1658**

தக்காணத்தில் முகலாயர்களின் படை தொடர்ந்தது. இவர் பல புரட்சிகளை சந்தித்தார். 1657-1658 காலகட்டத்தில் அவரது மகன்களுக்கிடையே விவாதம் ஏற்பட்டது. அதில் தன் மூன்று சகோதரர்களை கொன்று ஔரங்கசீப் வென்றான். பின் ஷாஜஹான் தன் வாழ்நாள் முழுவதும் ஆக்ராவிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டார்.



**ஔரங்கசீப் : பொ.யு.1658-1707**

அஸ்ஸாமைக் கைப்பற்றினார். ஆனால், அவருடைய அரசு முழுவதும் ஆப்கானிஸ்தான், அஸ்ஸாம், இராஜஸ்தான், பஞ்சாப்,தக்காணம் முதலிய பகுதிகளிலிருந்து புரட்சியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குருதேஜ்பகதூர், கோவிந்த் சிங், சிவாஜி மற்றும் அவருடைய சொந்த மகனும் அவரை எதிர்த்து புரட்சி செய்தனர். சிவாஜி ஒரு தனிச் சுதந்திர மராத்திய அரசை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். ஔரங்கசீப் பொ.யு. 1685ல் ஜெய்ப்பூரைக் கைப்பற்றினார். பொ.யு.1687ல் கோல்கொண்டாவை கைப்பற்றினார். அவர் மறைவிற்குப் பின் அரசாட்சியை வெல்ல அவருடைய மகன்களுக்கிடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது.



**பிற அரசர்களுடன் முகலாயர்களின் தொடர்புகள் :**


அன்று இந்தியா முழுவதும் பல சிறுசிறு அரசுகளை உள்ளூர் அரசர்கள், ஆட்சியாளர்கள் ஆண்டு வந்தனர். முகலாயப் பேரரசு நிறுவப்பட்டவுடன் இவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர். அவர்களை தங்கள் பழைய பகுதிகளை ஆள்வதற்கு அனுமதி வழங்கி அவர்களிடமிருந்து வரியை வசூலித்தனர். ஆனால் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் போரிட முடியாது. மேலும் அரசருக்கு உதவ ஒரு படையை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்.

முகலாயர்கள் தங்களின் அதிகாரத்திற்கு கட்டுப்பட மறுத்த ஆட்சியாளர்களுடன் தொடர்ந்து போரிட்டு வந்தனர். ஆனால் முகலாயர்களின் படைவலிமை அதிகரித்ததால் பிற ஆட்சியாளர்கள் தன்னார்வத்துடன் அவர்களுடன் இணைந்துக் கொண்டனர். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக ராஜபுத்திரர்கள் விளங்கினர். அவர்களில் பலர் முகலாயர் குடும்பங்களுடன் திருமண உறவு கொண்டு உயர் பதவிகளைப் பெற்றனர். ஆனால் பலர் முகலாயர்களை எதிர்த்தனர். சிந்தூரின் சிசோதிய இராஜபுத்திரர்கள் நீண்டகாலமாக முகலாயர் அதிகாரத்தை ஏற்கமறுத்தனர். இவர்களிடம் ஒருமுறை தோற்ற அரசர்களை கூட கௌரவித்து அவர்களுடைய நிலப்பகுதியை திருப்பி அவர்களிடம் ஒப்படைப்பர்.

இவர்களுடைய முக்கிய நோக்கம் தோற்கடிப்பதேயன்றி எதிரிகளை அவமானப்படுத்துவதல்ல. இந்த எச்சரிக்கையான நடவடிக்கையால் எத்தனையோ ஆட்சியாளர்களின் நன்மதிப்பைப் பெற்றனர். இந்த நட்பின் அடையாளமாக இவர்கள் உள்ளூர் இளவரசிகளை திருமணம் செய்துக் கொண்டனர். ஜஹாங்கீரின் தாய் அம்பர் பகுதியை ஆண்ட (நவின ஜெய்பூர்) இராஜபுத்திர ஆட்சியாளரின் மகளாவார். ஷாஜஹானின் தாயும் ஜோத்பூரின் இராஜபுத்திர ஆட்சியாளரின் மகள் ஆவார்.

## மன்சப்தார்களும், ஜாகீர்தார்களும்

முகலாயப் பேரரசு நன்கு விரிவாக்கப்பட்டதால் பல பகுதிகளிலிருந்து வந்த மக்களை பல்வேறு வேலைகளில் நியமித்தனர். இவர்களில் துருக்கியர்கள், ஈரானியர்கள், இந்திய முஸ்லீம்கள், ஆப்கானியர்கள் இராஜபுத்திரர்கள், மராத்தியர்கள் மற்றும் பிறரும்கூட



புறவரிப்படம் : 1 அக்பர் காலம்
பொ.யு.1605

SCERT TELANGANA



படம் 14.2 மன்சப்தார் தனது இராணுவ அணிவகுப்பை நடத்திச் செல்லும் விதம்.

சேர்க்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் வேலை தந்து அவர்களை மன்சப்தார்கள் என்ற தரத்திற்கு உயர்த்தினர். இவர்கள் அனைவரும் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இருப்பர். இவர்கள் அரண்மனையைக் காத்தல், ஒரு பகுதியை ஆட்சிசெய்தல் புதிய அரசுகள் மீது படையெடுத்தல் அல்லது கலகங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல் போன்ற கடமைகளைச் செய்தனர்.

இந்த மன்சப்தார்கள் தாங்களே எந்தவிதமான சொந்த முடிவுகளையும் எடுக்காமல் பேரரசின் விருப்பத்திற்கேற்ப நடந்துக்கொள்ளும்படியான ஒரு நிர்வாக முறையை ஏற்படுத்தினர். விஜய நகரப்பேரரசில் நாயகர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்துக் கொண்டு போதிய அதிகாரம் பெற்றதை நீங்கள் நினைவு கூறலாம். முகலாயர் இதைத் தொடர்ந்து தடுத்து வந்தனர். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மன்சப்தார்களை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றினர். இவ்வாறு ஒரு மன்சப்தார் ஓரிடத்தில் குடியமர்ந்து அதிகாரம் பெறமுடியாமல் போனது.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைசவாரி செய்பவர்களை அல்லது குதிரைப்படையை வளர்த்து வரும் பொறுப்பை ஒவ்வொரு மன்சப்தாரும் பெற்றிருந்தார்.

ஒவ்வொரு மன்சப்தாரும் தன்னுடைய குதிரைப்படையை புனரமைத்துக் கொள்ள கொண்டுவந்து, அவற்றை பதிவுசெய்து, அவர்களின் குதிரைகளுக்கு முத்திரை குத்தி பிறகு அவர்களுக்கு சம்பளம் தர பணத்தைப் பெறுவர். ஒரு மன்சப்தாரின் மகன் தன்னிச்சையாக மன்சப்தாராக ஆக முடியாது. அதாவது இது வாரிசுரிமையானது அல்ல. மன்சப்தாரின் மகனை, மன்சப்தாராக நியமிக்கலாமா வேண்டாமா என்பதை அரசரே முடிவு செய்வார். உண்மையில் மன்சப்தார் இறந்த பின் அவருடைய அனைத்து சொத்துகளையும் அரசரே எடுத்துக்கொள்வார்.

மன்சப்தார்கள் அவர்களின் சம்பளத்தை ஜாகீர்களிலிருந்து வரும் வருவாயிலிருந்து எடுத்துக்கொள்வர். இது ஓரளவிற்கு விஜயநகரத்து நாயங்கரா முறையைப் போலுள்ளது. ஆனால் நாயகர்களைப் போல் அல்லாமல் பெரும்பாலான மன்சப்தார்கள் ஜாகிர்களில் வசித்து அதை நிர்வகிப்பது இல்லை. அவர்கள் தங்கள் ஜாகீர் கிராமங்களிலிருந்து வரிவருவாயை வசூலித்து அரசருக்கு அனுப்புவர். இது அவர்களுடைய சேவகர்களால் வசூலிக்கப்படும். ஏனெனில் மன்சப்தார்கள் நாட்டின் மற்ற பகுதிகளில் சேவை செய்துக்கொண்டிருப்பர். ஜாகீர்கள் அரசரின் கீழ் பிற அலுவலர்களால் நேரடியாக நிர்வகிக்கப்படும். இவ்வலுவலர்கள் ஜாகிர்தாரின் பணியாட்கள், அனுமதிக்கப்பட்ட பணத்திற்கு மேல் விவசாயிகளிடமிருந்து வசூலிக்காமல் இருப்பதை கண்காணிக்க முயற்சிப்பர்.

ஜாகீர்களும் ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையும் மாற்றப்படும்.

அக்பர் ஆட்சியில் இந்த ஜாகீர்கள் கூட மன்சப்தாரின் சம்பளத்திற்கு சமமாக இருக்கும்படி கவனமாக கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்படும். ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் மன்சப்தார்களின் எண்ணிக்கை அதிகமாக உயர்த்தப்பட்டது. ஆனால் ஜாகீர்களைப் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருக்கும். இவையும் மற்றும் பிற காரணிகளும் ஜாகீர்களின் எண்ணிக்கையில் குறைவினை ஏற்படுத்திவிட்டன. இதன் விளைவாக பல ஜாகிர்தார்கள் அவர்களிடம் ஜாகிர் இருந்த காலத்தில் எவ்வளவு வருவாயைப் பெறமுடியுமோ அவ்வளவு பணத்தை சுரண்ட முயற்சித்தனர். ஔரங்கசீப் ஆட்சியின் கடைசி காலத்தில் இந்த சுரண்டல்களை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே விவசாயிகள் பயங்கர துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது.

**ஜப்த் நிலவரி முறையும்-ஜமீந்தார்களும் :**

முகலாய ஆட்சியாளர்களுக்கு முக்கிய வருவாய் மூலம் விவசாய உற்பத்தியின் மீது விதிக்கப்பட்ட வரியாகும். அக்பரின் நிதி அமைச்சரான தோடர்மால் பொ.யு.1570-80 ஆண்டுகளுக்கு இடையே எப்பகுதி பயிர் செய்ய ஏற்றது, எந்தெந்த இடத்தில் எந்தவகை பயிர்களை வளர்க்கின்றனர். அவற்றின் விலைகள் போன்றவற்றை மிகவும் கவனத்துடன் கணக்கிட்டார். இந்த புள்ளி விவரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பயிருக்கும் வரிப்பணத்தை நிர்ணயித்தார். ஒவ்வொரு பகுதியும் வருவாய் மண்டலங்களாக பிரிக்கப்படும். ஒவ்வொரு பயிருக்கும் வரிவிகிதம் கொண்ட பட்டியல் இருக்கும். இது போன்ற வரி வருவாய் அமைப்பு "ஜப்த்" எனப்படும். எங்கு முகலாய நிர்வாக அதிகாரிகள் நிலத்தை அளந்து கவனத்துடன் குறிப்புகளை வைத்திருந்தனரோ அப்பகுதியில் இம்முறை நடைமுறையில் இருந்தது. இது குஜராத் மற்றும் வங்காளத்தில் செயல்பட முடியவில்லை.

பெரும்பாலான இடங்களில் விவசாயிகள் வரிகளை கிராமத்து கற்றறிந்தோரின் மூலம் அதாவது தலைவன் அல்லது உள்ளூர் தலைவர் மூலம் செலுத்தினர்.

முகலாயர்கள் இவர்களையும் அனைத்து தரகர்களை குறிப்பிட அவர்கள் உள்ளூர் கிராமத்தலைவராக இருந்தாலும் அல்லது



படம் 14.3 படம் 1. லஞ்சம் பெறும் அரசு ஊழியர்
2. வரி கட்ட முடியாத விவசாயியை தண்டிக்கும் வரிவசூலிப்பவர்.

அதிகாரம் கொண்ட தலைவர்களாய் இருந்தாலும் ஜமீன்தார்கள் என்னும் சொல்லைப் பயன்படுத்தினர். ஜமீன்தார்கள் முகலாயப் பேரரசர்களால் நியமிக்கப்படுவதில்லை. ஆனால் மரபுரிமை அடிப்படையில் அதாவது தந்தையர் இறந்தபின் மகன்கள் அப்பதவிக்கு வரும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. இவர்களுக்கும் ஆயுதம் தாங்கிய தொண்டர்கள் இருந்தனர். நிலவரியை வசூலிப்பதற்கு ஜமீன்தார்களுக்கு பேரரசரிகளிடமிருந்து வரியில் ஒரு பங்கை செலுத்துவர். இவர்கள் முகலாய அதிகாரிகளுடன் கிராமவாசிகளின் தரப்பில் செயல்படும் பிரதிநிதிகளாக செயல்படுவர்.

சில பகுதிகளில் ஜமீன்தார்கள் அதிகாரத்தை பெரிய அளவில் செயல்படுத்துவர். முகலாய நிர்வாகிகளின் சுரண்டல் முறைகள் கலகத்திற்கு வழி வகுத்தது. சில நேரங்களில் ஜமீன்தார்களும் விவசாயிகளும் ஒன்று சேர்ந்து முகலாய அதிகாரிகளை எதிர்த்து கலகம் செய்தனர். இதுபோன்ற ஜமீன்தார் விவசாயிகளின் கலகங்கள் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகலாயப் பேரரசின் நிலைப்பாட்டிற்கு சவாலாக மாறின.

* மன்சப்தாருக்கும், ஜமீன்தாருக்கும் உள்ள வேற்றுமை என்ன?

SCERT TELANGANA



*படம் 14.4 அக்பர் பல மதங்களைச் சேர்ந்த மேதைகளுடன் தனது ‘இபாதத் கானாவில்’ விவாதங்களை செய்யும் காட்சி.*

* பேரரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவர்கள் யார்?
* நாயக்கர் மற்றும் மன்சப்தாரின் பதவிகளை ஒப்பிடு.

**அக்பரின் ஆட்சிமுறைகள் ஒரு கண்ணோட்டம் :**

அக்பரால் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாகமுறைகள் அனைத்தும் அவருடைய நண்பரும், அவருடைய சபை உறுப்பினராகவும் விளங்கிய அபுல்பஜல் என்பவர் தன் நூலான அக்பர்நாமாவில் விரிவாக விவரித்துள்ளார். 1570 களில் அக்பர் பதேபூர் சிக்ரியில் (ஆக்ரா அருகில்) இருந்தபோது மதங்களைக் குறித்து முஸ்லீம் பண்டிதர்கள் பிராமணர்கள், ஜெஸுட் துறவிகளான ரோமன் கத்தோலிக்கர் மற்றும் ஜெராஸ்ட்ரியன்களிடமும் விவாதங்களை நடத்தினார். அவருக்கு பல்வேறு மதங்களிலும், மக்களின் பல்வேறு பண்பாடுகளின் மீதும் ஆவல் அதிகமாக இருந்தது. அக்பர் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களை ஒன்று சேர்க்க விரும்பினார். இதுவே படிப்படியாக அக்பரை சுல்ஹ–இ–குல் அல்லது சர்வதேச அமைதி என்னும் சிந்தனைக்கு வழி நடத்தியது. இந்த சகிப்புத் தன்மை சிந்தனையால் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களிடையே வேறுபாட்டை அவர் உணரவில்லை. நீதி, நேர்மை அமைதிபோன்ற அனைத்து உலகமும் பின்பற்றக்கூடிய கொள்கைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று அக்பர் விருப்பினார். சுல்ஹ-இ-குல் முறை அடிப்படையிலான அரசாட்சியை நடைமுறைப்படுத்துவதில் அக்பருக்கு அபுல்பசல் உதவினார். அரசர் மக்களின் தகுதி, மதம்போன்றவற்றைப் பாராமல் குடிமக்கள் அனைவரின் நலத்திற்காக பாடுபட்டார். இந்த ஆட்சிக் கொள்கை ஜஹாங்கீர்மற்றும் ஷாஜஹானால் பின்பற்றப்பட்டது. ஔரங்கசீப் இக்கொள்கையிலிருந்து மாறுபட்டார். தன்னை ஒருசுன்னி முஸ்லிம்களுக்காக பாடுபடுவராகக் காட்டிக் கொள்ள முயன்றார். ஔரங்கசீப்பின் இக்கொள்கையால் பிற மதங்களை சேர்ந்த மக்கள் மிகவும் கவலையடைந்தனர்.

**சுல்ஹ்-இ-குல்**

அக்பரின் மகனான ஜஹாங்கீர் தனது தந்தையின் சுல்ஹ்-இ-குல் என்னும் கொள்கையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

இந்த விசாலமான கடவுளின் கருணையில் அனைவருக்கும் இடம் உண்டு. இந்த அரசில் அனைத்து திசைகளிலும் எல்லை உண்டு. சுற்றிலும் பெருங்கடலைத் தவிர வேறொன்றும் இல்லை. பிற நம்பிக்கைகள் மற்றும் மதகுருக்களுக்கும், மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இடம் உள்ளது. மத வேறுபாட்டிற்கு இடமே இல்லை.சுன்னிகளும், சியாக்களும் வழிபாட்டிற்கு ஒரு மசூதியில் சந்தித்தால், கிருஸ்தவர்களும், யூதர்களும்

SCERT TELANGANA

மாதாகோவிலில் கூடுவர். அவர் நிலையான உலக அமைதி (சுல்ஹ-இ-குல்) முறைகளை கடைபிடித்தார்.

**17ம் நூற்றாண்டிற்குப் பின் முகலாயப் பேரரசு**

நிர்வாகம் மற்றும் இராணுவத்திறமைகளால் முகலாயப் பேரரசு பொருளாதார மற்றும் வாணிகத் துறைகளில் நல்ல முன்னேற்றம் கண்டது எனக் கூறலாம். அயல்நாட்டுப் பயணிகள் இந்தியாவை புகழ்மிக்க செல்வந்த நாடு என வர்ணித்தனர்.ஆனால் அவர்களே செல்வத்தைக் கண்டதோடு வறுமையையும் கண்டு வருத்தப்பட்டனர். இந்த ஏற்றத்தாழ்வுகள் மிகவும் வெளிப்படையாக தெரிந்தது. ஹாஜஹானின் 20 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டஆவணங்கள் கீழ்காணும் கருத்துக்களை தெரிவிக்கின்றன. பேரரசில் மொத்த மன்சப்தார்கள் 8000 பேர் இருந்தால் அவர்களின் உயர்தரவரிசையில் இருந்தவர்கள் 445பேர் மட்டுமே. மொத்த மன்சப்தார்களின் எண்ணிக்கையில் இது 5.6 சதவீதம் மட்டுமே. ஆனால் இவர்களுக்கும், இவர்களுடைய படையினருக்கும் வருமானத்தில் 61.5 சதவீதம் சம்பளம் தருவார்களாம். முகலாயப் பேரரசர்கள் மற்றும் அவர்களுடைய மன்சப்தார்கள் தங்களின் வருமானத்தில் பெரும்பகுதியை

**சர்தார் சர்வேய் பாபண்ணா :**



வரங்கல் மாவட்டத்தை சேர்ந்த சர்வேய் பாபண்ணா, தெலங்கானாவில் முகலாயர்களின் ஆட்சிக்கு எதிராக போராடியவர் இவர் ஔரங்கசீப் காலத்தை சேர்ந்தவர். ஏழ்மையில் வாழ்ந்த பின்தங்கிய மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைக்காக நலனுக்காக குரல் கொடுத்தவர்.

பொ.யு.1687 முதல் 1724 வரை முகலாய ஆட்சியின் கீழ் இருந்த தெலங்கானா பகுதிகளை கைப்பற்றி, கிலாஷாபூரில் கோட்டையை நிர்மானித்தார். இது வரங்கல் மாவட்டத்தின் தலைநகராக விளங்கியது.

முகலாய ஆட்சியின் கீழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற அடக்குமுறைகளையும், வன்கொடுமைகளையும் பார்த்த இவர், ஒரு சிறு ராணுவ அமைப்பை உருவாக்கி, கொரில்லா தாக்குதல்கள் நடத்தவும் பயிற்சி அளித்தார்.



நல்கொண்டாவில் புவனகிரி கோட்டை கொலனுபாகு, வரங்களில் தாட்டிகொண்டா, செரியாலா மற்றும் கரீம்நகரில் ஹுஜாராபாத், ஹஸ்னாபாத் ஆகிய பகுதிகள் பாபண்ணாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இவர் தனது ஆட்சியை விரிவுப்படுத்தும் நோக்கோடு தனது முதல் கோட்டையை சர்வேய்பேட்டையில் நிர்மானித்தார். மேலும் இவர் தாட்டிகொணடா, வேமுலகொண்டா, ஷாபுரம் ஆகிய இடங்களில் கோட்டைகளை கட்டினார். இவருடைய காலத்தில் தாட்டிக்கொண்டாவில் நிர்மானிக்கபபட்ட Existing check dam மூலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர் என்பது புலப்படுகிறது.

சுபேதாரர்கள், ஜமீன்தாரர்கள் மற்றம் நிலச்சுழார்கள் மீது கொரில்லா தாக்குதலை நடத்தும் பொருட்டு போர்ப்படை மற்றும் ராணுவப்படைக்கு அதிகமான நிதியை ஒதுக்கினார்.

பாபண்ணாவின் புகழை கேள்விப்பட்டு, ஔரங்கசீப் ரஸ்தும்-தில்-கானை அழைத்து, பாபண்ணாவை அடக்குமாறு அறிவுறுத்தினார். இதையடுத்து ரஸ்தும்-தில்-கான், காசின் கானை அழைத்து முதலில் பாபண்ணாவையும், அடுத்து அவருடைய ஷாபூர் கோட்டையும் கைப்பற்றுமாறு உத்தரவிட்டார். ஆனால் காசின்கான் தோல்வியுற்று, பாபண்ணாவினால் வதம் செய்யப்பட்டார். பின்பு ரஸ்தும்-தில்-கான் நேரடியாக கலந்து கொண்ட போர் மூன்று மாதங்களுக்கு மேலாக நீடித்தது. கடையில் ரஸ்தும்-தில்-கான் தப்பியோட இப்போரில் பாபண்ணா தனது நெருங்கிய நண்பரான சர்வண்ணாவை இழந்தார்.

ஔரங்கசீப்பின் இறபுக்கு பின், பொ.யு.1707ல், தக்காணத்தை ஆண்ட சுபேதாரர் கம்பாக்ஷ்கான், தக்கணாத்தின் மீதான ஆதிக்கதை இழந்து வந்தார். இவரின் பலவீனமான நிர்வாகத்தை கண்ட பாபண்ணா பொ.யு.1708 ஏப்ரல் 1ல் வரங்கள் மீது போர் தொடுத்தார். தாட்டிகொண்டாவிலும், கிலாஷாபூரில் நடந்த போரில் தப்பியோடிய அவரை பொ.யு.1712ல் பிடித்து தலை துண்டிக்கப்பட்டது.

சம்பளங்களுக்காகவும், பொருட்களை வாங்கவும் செலவிட்டனர். இந்தசெலவுகள் மூலம் பொருட்களை பகிர்ந்தளிக்கும் விவசாயிகள் மற்றும் கைவினை கலைஞர்கள் வேலைகளை பெறுவர். ஆனால் ஏழைகளுக்கு இதனால் ஒரு பயனும் ஏற்படுவது இல்லை. ஏனெனில் அவர்களிடையே இருந்த ஏழைகள் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்னும் நிலையிலிருந்ததால்-கருவிகளையும், அளிப்புகளையும் கூட்டு வளங்களில் முதலீடு செய்து உற்பத்தித்திறனை அதிகரிக்க அவர்களால் நினைத்தும் பார்க்க முடியாது. செல்வந்தர்களான விவசாயிகளும், கைவினை பொருட்களை செய்யும் குழுவினரும், வியாபாரிகள் மற்றும் வட்டிவியாபாரிகள் இக்காலத்தில் இலாபமடைந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் அளவுக்கதிகமான சொத்துக்களும், வளங்களையும் முகலாய அதிகாரிகள் பெற்றிருந்ததால் அவர்கள் மக்களில் மிகவும் வலிமை வாய்ந்த பிரிவாகமாறினர். முகலாயப் பேரரசின் அதிகாரம் குறையக் குறைய வட்டார அரசுகள் சில இடங்களில் வலுவடையத் தொடங்கின. அவர்கள் சிறு சிறு சொந்த அரசுகளுடன் ஐதராபாத் மற்றும் அவத் போன்ற அரசுகளை அமைக்கத் தொடங்கினர். கடைசியில் டில்லியில் முகலாயப் பேரரசரைத் தங்களது தலைவராக அங்கீகரித்தாலும் 18ம் நூற்றாண்டில் இந்த அரசுகள் சுதந்திர அரசுகளாக மாறின.

**ஹைதராபாத்தின் ஆசய் ஜாஹிக்கள் :**
1724 - 1948

| ஆசய் ஜாஹிக்களின் காலவரிசை | |
|---|---|
| நிஜாம்-உல்-மக்-முதல் நிஜாம் | (1724-1748) |
| நாஜர் ஜங் | (1748-1751) |
| முசாபர் ஜங் | (1751-1751) |
| சபத் ஜங் | (1751-1751) |
| நிஜாம் அலிகான்-இரணடாம் நிஜாம் | (1803-1829) |
| நசீர்-உத்தௌலா-நான்காம் நிஜாம் | (1829-1857) |
| அப்சல்-உத்தௌலா-ஐந்தாம் நிஜாம் | (1851-1869) |
| மீர்மகபூப் அலிகான்-ஆறாம் நிஜாம் | (1869-1911) |
| மிர் உஸ்மான் அலிகான்-ஏழாம் நிஜாம் | (1911-1948) |

கி.பி. 1720க்கு பின்பு முகலாயர்களின் பலவீனமான ஆட்சியை எதிர்த்து. முகலாய கவர்கனர்கள் சுதந்திரத்தை வலியுறுத்தினர். இவர்களில் ஒருவர் தக்காணத்தை சேர்ந்த சுபேதார் சின்-க்ளிச்-கான் என்கிற நிஜாம்-உல்-மக் இவர் 1724ல் அசப் ஜாஹி வம்சத்தை தோற்றுவித்தவர் ஆவார். 1724 முதல் 1948 வரை பத்து அரசர்கள் ஆட்சி செய்தனர். இதில் ஏழு அரசர்கள் முகலாயர்களால் நிஜாம் என்றழைக் கப்பட்டனர். நாஜர்ஜங் முசாபர் ஜங், மற்றும் சபத் ஜங் ஆகியோர் இப்பட்டத்தை பெறவில்லை. நிஜாம்கள், இப்பட்டத்தை பெறவில்லை. நிஜாம்கள், ஹைதராபாத் சுயாட்சிக்காக மராத்தியர்களிடமும், மைசூர் மன்னர்களிடமும் போர் புரிந்து வந்தனர். இதனால் ஆங்கிலேயர்களின் உதவியை நாடி, அவர்களுக்கு கீழ்படிந்திருந்தனர்.

ஆங்கிலேயர்கள் இந்த செல்வாக்கை பயன்படுத்தி, ஹைதராபாத்தில் குடியேறி0னர். அவர்களுக்கு ஹைதராபாத் கலாச்சாரம் மிகவும் பிடித்திருந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஹைதாராபாத் வளர்ச்சி பாதையில் சென்றது. 1858 முதல் 1883 வரை பிரதம மந்திரியாக இருந்த சாலர் ஜங் என்ற நிஜாம், குடியேற்ற வளர்ச்சி கொள்கையை வரவேற்றார். (இவரை பற்றி மேலும் அடுத்த பாடத்தில் கற்போம்)


சாலார் ஜங்

ஆறாம் நிஜாமான மிர் மகபூப் அலிகானின் காலத்தில் பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். அசாமியா நூலகம், விக்டோரியா அனாதை இல்லம், மகபூபியா மகளிர் பள்ளி ஆகியவை நிறுவப்பட்டது. 1908ல் ஏற்பட்ட முசி வெள்ளப்பெருக்கின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு இருப்பிடம் வழங்கி, நிவாரணப்பணிகளை சுயமாக

SCERT TELANGANA

பார்வையிட்டனர். எனினும் ஏழாம் நிஜாம் தாராளவாத நிர்வாக சீர்த்திருத்தங்களை கொண்டுவந்த போதிலும், தனது ஆட்சி அமைப்பை பாதுகாத்து கொள்ள தீர்மானித்தார். (இவருடைய சாதனைகளை பற்றி எட்டாம் வகுப்பில் படிப்போம்)

**முக்கியச் சொற்கள் :**

1. *மன்சப்தார்* 2. *ஜாகீர்தார்* 3. *சுல்ஹ்-இ-குல்* 4. *ஜப்த்*
5. மேதை 6. ஜமீன்தார்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மன்சப்தாருக்கும் அவருடைய ஜாகிருக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?(AS1)
2. முகலாயர்களின் ஆட்சியில் ஜமீன்தார்களின் பங்கு என்ன?(AS1)
3. மதகுருக்களோடு நடத்திய விவாதங்களின் செல்வாக்கால் அக்பரின் நிர்வாக சிந்தனைகளின் மீது எவ்வகையான பாதிப்புகளை ஏற்படுத்தின?(AS1)
4. முகலாயப் பேரரசில் தோற்ற அரசர்களை அவரவர் அரசுகளிலேயே ஏன் தொடர வைத்தனர்?(AS1)
5. முகலாயர்கள் பரந்தப் பேரரசை கட்டுப்படுத்துவதில் சுல்ஹ-இ-குல் ஏன் முக்கிய கொள்கையாக கருதப்படுகிறது?(AS1)
6. பக்கம் 130ல் உள்ள ஜப்தியும் ஜமீன்தார்களும் என்னும் தலைப்பில் உள்ள முதல் பத்தியை படித்து உன் கருத்தைக் கூறு.(AS2)
7. முகலாய பேரரசர்கள் பற்றிய விவரங்களை சேகரித்து கீழ்காணும் அட்டவணையை நிரப்பு.(AS3)

| வ. எண் | பேரரசரின் பெயர் | ஆட்சிக்காலம் | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

SCERT TELANGANA

பாடம் 15

# இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசு நிறுவப்படுதல்

வலிமைவாய்ந்த முகலாய ஆட்சியாளர்களில் ஔரங்கசீப் கடைசியானவர். அவர் தற்போது இந்தியா என்று அழைக்கக்கூடிய மாகாணத்தில் மிகப் பெரும்பகுதியின் மீது தனது ஆதிக்கத்தை நிறுவினார். C.E. 1707ல் அவர் மறைந்த பிறகு பல முகலாய ஆளுநர்கள் (சுபேதார்கள்) மற்றும் பெரிய ஜமீன்தார்கள் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தத் தொடங்கி வட்டார அரசுகளை அமைத்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வலிமை வாய்ந்த வட்டார அரசுகள் தோன்றியதால், டில்லியில் ஒரு திறமையான மையமாக அரசு செயல்பட முடியவில்லை.


இருப்பினும் பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பாதியில் ஆங்கிலேயர் என்னும் ஒரு புதிய வல்லரசு அரசியல் துறையில் தோன்றியது. ஆங்கிலேயர்கள் முதன் முதலில் ஒரு வியாபாரக் குழுவாக இந்தியாவிற்கு வந்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? பிறகு எவ்வாறு அவர்களால் ஒரு மிகப்பெரிய பேரரசிற்கு தலைவர்களாக உருவாக முடிந்தது?

## கிழக்கு நாடுகள் நோக்கி வந்த கிழக்கிந்திய கம்பெனி

இங்கிலாந்து ஆட்சியாளரான முதலாம் எலிசபெத் ராணியிடமிருந்து கிழக்கு நாடுகளுடன் வியாபாரம் செய்ய கிழக்கிந்திய கம்பெனி C.E.1600ல் ஒரு உரிமையை அரசு ஆவணம் மூலம் பெற்றது. இதன்படி இங்கிலாந்திலுள்ள எந்தவொரு கம்பெனியும் கிழக்கிந்திய கம்பெனியுடன் போட்டியிடக் கூடாது. இந்த ஒப்பந்தம் மூலம் இக்கம்பெனிக்கு பெருங்கடலுக்கு அப்பால் உள்ள புதிய நாடுகளில் பொருட்களை மலிவான விலைக்கு வாங்கி, ஐரோப்பாவில் அதிக விலைக்கு விற்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்த கம்பெனிக்கு மற்ற ஆங்கிலேய கம்பெனியைச் சேர்ந்தவர்களுடன் வியாபாரப் போட்டியோ, பயமோ இல்லாமல் போனது.

### வாணிக அமைப்பு

கிழக்கிந்திய கம்பெனி முக்கியமாக வாணிகத்தின் மூலம் லாபம் அடையும் ஒரு வியாபார அமைப்பாகும். மலிவான விலைக்குப் பொருட்களை வாங்கி அதிகமான விலைக்கு விற்பார்கள்.



*படம் 15.1. இலண்டனில் உள்ள கிழக்கிந்திய கம்பெனி அலுவலகம்*

SCERT TELANGANA



படம் 15.2. வாஸ்கோடாகாமா

அக்காலங்களில் வியாபார அமைப்புகள் தங்களிடையே போட்டியில்லாமல் பார்த்துக் கொண்டு அதிக லாபத்தை அடைவர்.

இருப்பினும் இந்த அரசு ஆவணத்தில் பிற ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளின் சந்தைகளில் நுழைவதிலிருந்து தடுக்க முடியவில்லை. ஆங்கிலேயரின் முதல் கப்பல் ஆப்ரிக்காவின் மேற்கு கடற்கரை வழியாக பயணித்து நன்னம்பிக்கை முனையைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் நுழைவதற்குள்ளாகவே போர்ச்சுகீசியர் இந்தியாவின் மேற்குப் பகுதியான கோவாவில் தங்களது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டனர். போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோடகாமா C.E.1498ல் இந்தியாவிற்கு கடல் வழியைக் கண்டுபிடித்தார். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் டச்சுக்காரர்கள் (ஹாலந்து) கூட இந்தியப் பெருங்கடலின் கரையோரத்தில் வியாபாரம் செய்வதற்கான வாய்ப்புகளைப் பற்றி ஆராய்ந்து வந்தனர்.



படம் 15.3 1676ம் ஆண்டில் வரையப்பட்ட மசூலிப் பட்டினத்தின் படம்

விரைவிலேயே பிரெஞ்சுக்காரர்களும் வந்து சேர்ந்தனர். இதில் சிக்கல் என்னவென்றால் அனைத்து கம்பெனியினரும் ஒரேவிதமான பொருட்களை வாங்குவதில் நாட்டம் கொண்டனர். இந்தியாவில் தயாரிக்கப்படும் தரமான பருத்தி, பட்டு ஆகியவற்றிற்கு ஐரோப்பாவில் மிகுந்த தேவை இருந்தது. காகிதம், லவங்கம், கடுகு, ஏலக்காய், இஞ்சி போன்ற வாசனை பொருட்களுக்கும், அதிக தேவை இருந்தது.

ஐரோப்பிய கம்பெனிகளிடையே நிலவிய போட்டி அப்பொருட்களின் விலையை அதிகமாக உயர்த்தியது.

போட்டி நிறைந்த இந்த வியாபரத்தை காப்பாற்றிக் கொள்ள இராணுவமும் கோட்டைகளும் தேவைப்பட்டன.

கோட்டைகளுக்கு அருகிலேயே தங்களுடைய குடியிருப்புகளும் தேவைப்பட்டன.

கோட்டைகள் கட்டி தங்களுடைய குடியிருப்புகளை அமைத்துக் கொள்ளும் முயற்சிகள், இலாபகரமான வியாபாரத்தை மேற்கொள்ளுதல் போன்றவை உள்ளூர் ஆட்சியாளர்களிடையே பெரும் சச்சரவுகள் ஏற்பட வழி வகுத்தன.

## ஆயுதம் தாங்கிய வியாபாரிகள்

இந்தியாவில் வியாபாரம் செய்ய ஐரோப்பிய வியாபாரிகள் தங்களுடைய சொந்த கம்பெனிகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஆங்கிலேய வியாபாரிகள் கிழக்கிந்திய கம்பெனியையும், பிரெஞ்சு வியாபாரிகள், பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியையும் அமைத்துக் கொண்டனர். இந்தியாவில் வியாபாரத்தை கைவசப் படுத்திக்கொள்ள இரண்டு கம்பெனிகளும் பல வருடங்கள் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனர். இருவரும் ஒருவரை ஒருவர் விரட்ட முயற்சித்தனர். அவர்களுடைய போர்களுக்கு உதவ, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளிலிருந்து

SCERT TELANGANA

இராணுவங்களை வரவழைத்தனர். அந்தந்த நாடுகளின் அரசர்களும் தங்களது கம்பெனிகளுக்கு ஆதரவளித்து அனைத்து விதங்களிலும் உதவினர். அந்த கம்பெனிகள் இந்தியாவில் நிலங்களைப் பெற்று கோட்டைகளை கட்டிக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் போரிட்டுக் கொண்டனர்.

வியாபாரத்தில் லாபங்கள் மூலம் அவர்களிடம் சேர்ந்த அளவுக்கதிகமான சொத்து ஆங்கிலேயர் அவர்களுடைய தொழிற்சாலை முன்னேற்றத்திற்கும் உலகளவில் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் பயன்பட்டது. இக்காலத் திலேயே இங்கிலாந்தும் மேலும் பிற ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்ஸ், ஹாலந்து, மற்றும் ஜெர்மனி ஆகியவை வடக்கு, தென் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களிலும் தத்தம் குடியிருப்புகளை பெற்றன. இந்த குடியிருப்புகள் (காலனிகள்) ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகாரத்தையும் செல்வத்தையும் அளித்தன.

முகலாயப் பேரரசர்கள், உள்ளூர் அரசர்கள், நவாபுகள் இந்த வியாபாரிகளை அனுமதித்ததால் அவர்களுடைய இராணுவத்தை வளர்த்தது மட்டுமின்றி கோட்டைகள் கட்டி, அவர் களுக்குள் ஒருவருக்கொருவர் போர் புரியவும் தொடங்கினர். உள்ளூர் அரசுகளில் வெளிநாட்டு வியாபாரிகள் இராணுவ உதவியுடன் பொருளாதார அதிகாரம் செய்வது எவ்வளவு ஆபத்தானது என்பதை இவர்கள் படிப்படியாக உணரத் தொடங்கினர்.

முகாலயப் பேரரசு வலிமையாக இருந்த வரை ஐரோப்பிய கம்பெனிகளுக்கு அவர்களுடைய சொந்த இராணுவ அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஷாஜஹான் மற்றும் ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தில் பலமுறை இந்த ஐரோப்பிய கம்பெனிகள் போராடி தோற்றன. ஔரங்கசீப் இறந்த சிறிது காலத்திலேயே பல்வேறு சிற்றரசர்கள், தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்துக்கொண்டு தங்களுடைய மாகாணங்களை ஆளத் தொடங்கினர். இவ்வாறு வங்காளம், அவத் (லக்னோ), ஹைதராபாத் பகுதிகள், முகலாயப் பேரரசர்களின் அதிகாரத்தை பெயரளவு மட்டும் ஏற்றுக்கொண்டு சுதந்திர அரசுகளாக மாறின.

முகலாயப் பேரரசு சிறு சிறு அரசுகளாக துண்டாடப்பட்டவுடன் இந்த கம்பெனியினர்



*படம் 15.4 முகலாயப் பேரரசரான ஷா ஆலம் இராபர்ட் கிளைவிற்கு வங்காளத்தை ஆளும் உரிமை வழங்குதல்.*

தங்களுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்துவ தற்கான வாய்ப்பு என உணர்ந்தனர். அரசர்களும் நவாபுகளும் தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பினாலும் கம்பெனிகளின் இராணுவத்தை அணுகினர். ஆனால் பிரெஞ்சுக்காரர்களின் சிறிய இராணுவம், நவாபின் பெரிய இராணுவத்தை தோற்கடித்து அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. அதாவது சிறிய ஐரோப்பிய இராணுவம் பெரிய இந்திய இராணுவத்தை தோற்கடித்து. இந்த வெற்றியால் ஐரோப்பிய வியாபாரிகளுக்கு தைரியம் வந்து தம்முடைய இராணுவ பலத்தால் இந்தியாவில் அவர்கள் நினைத்ததை சாதிக்க முடியுவும் என்னும் நம்பிக்கையை தந்தது.

C.E. 1700களில் இந்திய ஆட்சியாளர் களின் இராணுவங்களை விட ஐரோப்பிய இராணுவங்கள் எவ்வாறு வேறுபட்டிருந்தன? ஐரோப்பிய இராணுவ வீரர்கள் நல்ல பயிற்சியைப் பெற்று, அதிகமான சம்பளத்தை சீராகப் பெற்றனர். அவர்களிடம் சிறந்த பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இருந்தன. அவர்கள் தினமும் உடற்பயிற்சியும் அணிவகுப்பும் செய்து வந்தனர். இதுபோன்ற தினசரிப் பயிற்சியால் ஐரோப்பிய இராணுவத்தில் சேர்ந்த இந்திய இராணுவ வீரர்கள் கூட போரில் தங்களுடைய சிறந்த திறன்களைக் காட்டினர்.

SCERT TELANGANA

**இந்திய அரசுகளில் வளர்ந்து வரும் ஐரோப்பியரின் தலையீடு**

கம்பெனியாளர்கள் வியாபாரத்தில் லாபங்களைப் பெருக்கிக் கொள்ள இராணுவத்தை பயனுள்ளதாக ஆக்கிக்கொண்டனர். பல சமயங்களில் இரண்டு இந்திய ஆட்சியாளர்கள் சண்டையிட்டுக் கொள்ளும்போது அவர்கள் ஒருவர் பக்கமாக சார்ந்து போரில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வர். அவர்களுடைய இராணுவத்தை ஒரு சாராருக்கு உதவ அனுப்பி எதிரியை தோற்கடிக்கச் செய்வர். இதற்கு கைமாறாக கம்பெனிகள் ஆட்சியாளர்களிடமிருந்து பல வியாபாரச் சலுகைகளைக் கோரியும் பெற்றும் வந்தனர். ஆட்சியாளர்களும் அவர்களின் இராணுவ உதவிக்காக கம்பெனிகளுக்கு அதிக அளவில் பணத்தை நன்கொடையாக வழங்கினர். இப்பணம் அவர்களின் வியாபாரத்தை மேலும் அதிகரிக்கப் பயன்பட்டது.

எடுத்துக்காட்டாக, பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநரான டூப்ளே, முஜாபர் ஜங்கை தக்காணத்தின் நிஜாமாக ஆக்க உதவி செய்தார். அதற்குப் பதிலாக, முஜபர்ஜங் பிரெஞ்சுக்காரர்களுக்கு பாண்டிச்சேரிக்கு அருகில் சில பகுதிகளையும் மசூலிப்பட்டிணத்தையும் வழங்கினார். அவர் மேலும் கம்பெனிக்கு ரூ.50,000மும், பிரெஞ்சுப்படைகளுக்கு ரூ.20,00,000 மற்றும் ஒரு ஜாகீரையும் (அதாவது ஓராண்டிற்கு ரூ.1,00,000) டூப்ளேவிற்கு அளித்தார்.

இதன்பின் கம்பெனிகளும் உள்ளூர் ஆட்சியாளர்களிடமிருந்து அரசுகளின் சிறு பகுதிகளை நன்கொடைகளாகப் பெறத் தொடங்கினார். அவர்கள் அப்பகுதிகளிலிருந்து, கிராமங்கள் மற்றும் நகரங்களிலிருந்து நில வரியை வசூலித்து அவற்றை வியாபாரச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்துவர். அவர்கள் இப்பணத்தை அவர்களுடைய இராணுவத்தை வளர்த்துக்கொள்ளவும், நிர்வகிக்கவும் பயன் படுத்தினர்.

மெதுவாக, இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டும் போராட்டத்தில் பிரெஞ்சுக் கம்பெனியை வீழ்த்தி ஆங்கிலேய கம்பெனி வெற்றியடையத் தொடங்கியது.

**கம்பெனியின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்.**

ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு நன்கொடைகள் வழங்குதல், அவர்களின் இராணுவச் செலவுகளை சுமத்தல், மிகவும் கடினம் என்று விரைவிலேயே இந்திய அரசர்கள் உணர்ந்தனர். கம்பெனி செய்யும் பிற வேலைகள் கூட இந்த அரசர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தின. சில இந்திய ஆட்சியாளர்கள் தங்களிடமிருந்து வாங்கிய பல பொருட்களின் மீது வரி விலக்கினை தந்தனர். இருப்பினும் மக்கள் இச்சலுகைகளை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டனர். எடுத்துக்காட்டாக கம்பெனியின் சேவகர்கள் தங்களுடைய சொந்த, தனிப்பட்ட வியாபாரத்தை செய்ய தொடங்கினர். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பொருட்களையும் கம்பெனிக்குச் சொந்தமானது எனக்கூறி வரிகட்டுவதிலிருந்து தப்பித்து வந்தனர். இவ்வகையில் கம்பெனியின் சொத்து உயரும் வேளையில் அதனுடைய ஊழியர்களும் அலுவலர்களும் கூட இந்தியாவில் அதிகப் பணத்தை சம்பாதித்து பெரும் செல்வந்தர்களாக தங்களுடைய நாடு திரும்பினர். பல இந்திய வியாபாரிகளும்,



படம் 15.5 சென்னையில் கப்பல்களிலிருந்து பொருட்களைக் கொண்டுவரும் படகுகள் 1867ல் சிம்சனால் வரையப்பட்டது.

சேட்டுகளும் கம்பெனியின் வியாபாரத்திற்கு உதவினர். அவர்கள் கூட தங்களுடைய பொருட்களை கம்பெனியின் பொருட்களாக காட்டி வரியிருந்து தப்பித்தனர்.

இவ்வாறு கம்பெனிகள் உள்ளூர் அரசுகளின் வருமானத்தை பெருமளவிற்கு கொள்ளையடித்தல், பதுக்கிக் கொள்ளுதல் போன்றவை நடந்தன. கம்பெனி தன் இராணுவ பலத்தைக் கண்டு பெருமை கொள்வதோடு மிகுந்த அகம்பாவத்துடனும் செயல்படத் தொடங்கியது. கைவினை கலைஞர்களை குறைந்த விலைக்குப் பொருட்களை அளிக்குமாறு கட்டாயப்படுத்துவர். தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் அளவுக்கு மீறிய அளவில் விவசாயிகளைப் பிழிந்து வரி வசூலிக்க முயற்சித்தனர். உள்ளூர் ஆட்சியாளர்கள் அதை எதிர்த்தால் ஆங்கிலேயர்கள் அவர்களை எதிர்த்துப் போரிடுவர். தேவைப்பட்டால் அந்த அரசர்களை நீக்கி, தங்களுடைய வியாபாரத்திற்கு குறுக்கே வரும் எந்த தடைகளையும் நீக்க விருப்பம் கொண்டவர்களையே அரசர்களாக நியமிப்பர்.

- வியாபாரம் செய்பவர்களுக்கு பொருட்களை வாங்கவும் அவர்கள் அவற்றை மற்றவர்களுக்கு விற்கவும் பணம் தேவை. இந்தியாவில் ஆங்கிலேயரின் வியாபாரத்திற்கு பணம் கிடைத்த மூன்று வழிமுறைகளை எழுது.
- ஆங்கிலேயர்களிடமிருந்து இந்திய ஆட்சியாளர்கள் பெற்ற நன்மைகள் யாவை?

## ஆங்கிலேயர் ஆட்சியை புகுத்துதல்

இந்தியாவை முழுமையாகவும், சுதந்திரமாகவும் தங்களுடைய வியாபாரத்திற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் தாங்களே ஆட்சியாளர்களாக மாறவேண்டும் என்னும் கருத்து ஆங்கிலேயரிடம் படிப்படியாக வளரத்தொடங்கியது. எனவே அவர்கள் அரசர்களையும் நவாபுகளையும் நீக்கித் தாங்களே ஆளத்தொடங்கினர்.

C.E.1757ல் ஆங்கிலேயர்கள் வங்காள நவாபான சிராஜ் உத்தௌலாவை பிளாசி என்னுமிடத்தில் தோற்கடித்து வங்காளத்தில் தங்களுடைய ஆட்சியை அமைத்தனர். "பிளாசிப் போர் "இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வு ஆகும்.

அதன்பிறகு ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதும் கைப்பற்றத் தொடங்கினர்.

C.E.1765-68 ஆண்டுகளின் இடைக்காலத்தில் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கடற்கரை மாவட்டங்களை (கிருஷ்ணா, கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்கள், விசாகபட்டிணம், விஜய நகரம், ஸ்ரீகாகுளம், பிரகாசம், குண்டூர்) தங்களிடம் ஒப்படைக்கும்படி ஹைதராபாத் நிஜாமை கிழக்கு இந்திய கம்பெனியாளர்கள் பலவந்தப்படுத்தி கைவசப் படுத்திக்கொண்டனர். இப்பகுதியை கம்பெனி சென்னை மாகாணத்தின் வடக்கு சர்க்கார்கள் என அழைத்தனர். இதற்கு கைமாறாக, நிஜாமிற்கு உதவியாக ஆங்கிலேயரின் இராணுவத்தை வைக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் உண்மையில் இந்த இராணுவங்கள் நிஜாமிற்கு உதவி செய்வதைவிட அவரை கட்டுபடுத்தவே பெரிதும் உதவின.


ஆங்கிலேயரின் சூழ்ச்சிகளை உணர்ந்த பல அரசர்களும் நவாபுகளும் அவர்களை எதிர்த்துப் போராடினர். அவ்வாறு போராடியவர்களுள் மைசூரைச் சேர்ந்த ஹைதர் அலி, திப்பு சுல்தான், மராத்தா சர்தாரான மகத்ஜி சிந்தியா, நானா பத்னவிஸ், வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் பலர் அடங்குவர். ஆனால் அவை சிற்றரசுகள் என்பதால் ஒன்றன்பின் ஒன்றாக ஆங்கிலேயர் வசமானது.


இந்த போர்களில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு உதவிய கவர்னர் ஜெனரல்களில் ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், வெல்லஸ்லி போன்றோர் முக்கியமானவர்கள். படிப்படியாக இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகள் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வரத்தொடங்கின. பல இடங்களில் அரசர்கள், நவாபுகள் ஆண்டு வந்தாலும் அவர்கள் ஆங்கிலேயரின் இறையாண்மையின் கீழ் மட்டுமே பணியாற்றினர். ஆங்கிலேய அரசாங்கம், அரசர்கள் (அ) நவாபுகளின் அரசவைகளில் 'ரெசிடென்ட்' எனப்பட்ட ஆங்கிலேய அதிகாரிகளை நியமித்தது. இதன்மூலம் ஆங்கிலேய அரசாங்கம் அவர்கள் எவ்வாறு ஆட்சி செய்தனர். என்பதை கண்காணிக்க முடிந்தது.

இந்தியாவில் வியாபாரம் செய்துவந்த கிழக்கிந்திய கம்பெனியாளர்கள், நம் நாட்டை ஆளவேண்டும் என ஏன் நினைத்தனர்?

SCERT TELANGANA




*இந்தியாவில் ஆங்கிலேய மாகாண அதிகார விரிவாக்கத்தினைக் காட்டும் புறவரிப்படங்கள்*

- இந்தியாவின் இந்தப் புறவரிப்படங்களையும் இன்றைய அரசியல் புறவரிப்படத்தையும் பார். இந்த ஒவ்வொரு புறவரிப்படத்திலும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வராத இந்தியாவின் பல்வேறு பகுதிகளை அடையாளம் காண முயற்சி செய்.
- C.E.1857ம் ஆண்டிற்குள் ஆங்கிலேயர் ஆட்சி எவ்வளவு தூரம் பரவியது? 1857ம் ஆண்டிலும் இந்திய அரசர்களால் ஆளப்பட்ட பகுதிகளை பட்டியலிடு.

SCERT TELANGANA

### ஆங்கிலேய ஆட்சியின் மீது அதிருப்தி

ஆங்கிலேயர்கள் தங்களுடைய ஆட்சியை அமைக்க பல அரசர்களுடனும் நவாபுகளுடனும் போரிட வேண்டியிருந்தது. அவர்களுடைய கொள்கைகள், நிர்வாகத்தைப் பற்றி மேலும் அதிகமாக மேல்வகுப்புகளில் நீங்கள் படிப்பீர்கள். அவர்களை இந்தி மக்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு சாதகமாக உள்ள அரச குடும்பத்தினரை பதவியில் வைப்பதும் இல்லாவிட்டால் பதவி விலக்குவதுமாக இருந்ததால் அரச குடும்பங்கள் ஆங்கிலேயரை எதிர்த்தன.

அதிகமாக வரி விதித்தல், கட்டாயப்படுத்தி வரி வசூலித்தல் போன்ற செயல்களால் விவசாயிகளும் நில உரிமையாளர்களும் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர். வரி கட்டாமல் போனால் நிலங்களை இழக்க நேரிடும் என்ற அச்ச உணர்வு தொடர்ந்து அவர்களிடம் இருந்ததால் ஆங்கிலேயர்களை எதிர்த்து கலகம் செய்தனர்.

ஆங்கிலேயர்களால் நடைமுறைப்படுத்திய புதிய விதிமுறைகள், சட்டங்களால் காடுகள் மீது தங்களுடைய உரிமை பறிக்கப்படும் என்று உணர்ந்து மலைவாழ் மக்களும் ஆங்கிலேயர்களை எதிர்த்தனர். பின்வரும் பாடங்களில் இதைப் பற்றி நீங்கள் மேலும் படிப்பீர்கள்.

பல இந்துக்களும், முஸ்லீம்களும் தங்களுடைய மதங்களை அழித்து, ஆங்கிலேயர்கள் தம்மை கிறித்துவர்களாக மாற்றுவதாக அஞ்சினர்.

1857ல் சில மாதங்கள் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் வட இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் தம்முடைய ஆட்சியை இழந்தனர். இந்த கலகத்தை இந்திய சிப்பாய்களே தொடங்கினர். பின்னர் அரச குடும்பங்களும் இப்போராட்டத்தில் இவர்களுடன் கலந்து கொண்டனர். விவசாயிகள், மலைவாழ் மக்கள், நிலச்சுகாந்தார்கள், கைத்தொழில் செய்பவர்களும் இப்புரட்சியில் இணைந்துக் கொண்டனர்.

---

### 1857 சிப்பாய் கலகம்

இடம் : மீரட் இராணுவ முகாம், ஆங்கிலேய இராணுவ மையம்.

தேதி : 10-05-1857 ஞாயிற்றுக்கிழமை இந்திய சிப்பாய்கள் ஆங்கிலேய அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும்போதே சூரியன் மறையத் துவங்கியது. ஆங்கிலேயர்கள் இந்திய அரசர்களை தோற்கடித்து அவர்களின் அரசுகளை வெல்ல எந்த இராணுவ வீரர்கள் உதவி செய்தனரோ அவர்களே இக்கலகத்தை செய்தனர். அவர்கள் ஆங்கிலேயரின் நடவடிக்கையில் வெறுப்பு அடைந்தனர். அவர்கள் சம்பளங்களை சரியான நேரத்தில் பெறவில்லை. அவர்களுக்கு ஆங்கிலேய இராணுவ வீரர்களுக்குச் சமமான மரியாதை கிடைக்கவில்லை. இதற்கும் மேலாக சிப்பாய்களுக்கு தரப்பட்ட புதிய துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் தோட்டாக்களுக்கு பசு, பன்றிகளின் கொழுப்பு பூசப்பட்டுள்ளதாகவும் அவற்றை வாயால் கடித்து பயன்படுத்த வேண்டும் என்பது தங்களின் மத நம்பிக்கையை மீறுவதற்கு சமமாகும் என்று கருதினர். இந்த சந்தேகத்தின் பேரில் இதே போன்ற கலகம் கல்கத்தாவின் அருகிலுள்ள பாரக்பூரிலும் 1857ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்தது. மீரட்டில் ஏற்பட்ட இந்த அதிருப்தி எங்கும் பரவியது. இந்த நாளில் இராணுவ வீரர்கள் ஆங்கில அதிகாரிகள் மீது துப்பாக்கியால் சுட்டனர். புரட்சி செய்யும் இராணுவ வீரர்கள் அந்த இரவிலேயே டில்லியை நோக்கி அணி வகுத்துச் சென்றனர்.




*படம் 17.5 A- துப்பாக்கியை குண்டுகளால் நிரப்புதல்*

*1) தோட்டாவை பிரிப்பதற்கு காகித முத்திரையை வாயால் கடிக்கும் சிப்பாய்*

*2) துப்பாக்கியில் துப்பாக்கி மருந்தினை நிரப்பும் சிப்பாய்*

*3) காகிதத்தால் சுற்றிய தோட்டாவை துப்பாக்கியில் பொருத்தும் சிப்பாய்.*

SCERT TELANGANA

*இடம் : மீரட் நகரம்*
*நாள் :*
*ஞாயிற்றுக்கிழமை*
*இரவு-திங்கட்கிழமை*
*மே மாதம் 10-11-1857*




*சிப்பாய்களின் புரட்சி மீரட்டில் காட்டுத்தீ போல் பரவியது. நகரம் முழுவதும் கொந்தளிப்பால் நிரம்பியது. மக்கள் அலை கடைத்தெருவிலிருந்து புறப்பட்டு ஆங்கிலேயர்களின் மாளிகை களைத்தாக்கத் தொடங்கின. அந்த மக்கள் கூட்டத்தில் காவலர்களும் இணைந்தனர். ஆங்கிலேயர்களைக் கொன்றனர்.*

*படம் 15.7 1857ல் மீரட்டில் சிப்பாய்கலகக் காட்சி*

*இடம் : டில்லி, செங்கோட்டை*
*நாள் : திங்கட்கிழமை 11-5-1857*

ஒரே நாளில் மீரட் சிப்பாய்கள் யமுனை நதியை கடந்து டில்லியை அடைந்தார்கள். அவர்கள் முகலாயப் பேரரசரான பகதூர்ஷா ஜாபரை சிறையிலிட்ட செங்கோட்டைக்குள் புகுந்தனர். அவர்கள், அவரை தங்களது அரசராக அறிவித்து ஆங்கிலேயர்களின் இறையாண்மையை மறுக்கும்படி அவரை தூண்டினர். ஆங்கிலேயரை விரட்டி முகலாயர் ஆட்சியை மீட்டு வாருங்கள், என்பதே இச்சிப்பாய்களின் எழுச்சிக்குரலாக இருந்தது.



படம் 15.8 1857ல் டில்லியின் காட்சி மரக்கட்டை அணைமீது யமுனைநதியை கடக்கும் சிப்பாய்கள்.

**புரட்சி பரவுதல் :**

இந்த அழைப்பு கிடைத்த உடனே ஆங்கிலேயர்களுக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. அலிகார், மெயின்புரி, புலந்தர்ஷஹர், அட்டக், மதுரா இராணுவ முகாம்களில் இருந்த சிப்பாய்கள் கலகம் செய்தனர். ஆங்கிலேயர்கள் நடுநடுங்கினர். அவர்கள் இப்போது கடினமான சூழலை எதிர்க்கொண்டனர்.



படம் 15.9 ஆங்கிலேயருடன் போராடும் இராணி இலட்சுமிபாய்

அப்போது 45,000 ஆங்கிலேய அதிகாரிகளும், இராணுவ வீரர்கள் மட்டுமே இந்தியாவில் இருந்தனர். இந்திய சிப்பாய்கள் அனைவரும் புரட்சி செய்தனர். இனி அந்த நகரத்திலுள்ள ஆங்கிலேயர்களின் சொத்துக்களையும், உயிர்களையும் யார் காப்பாற்றுவார்கள்? ஆங்கிலேயர்களின் இராணுவத்திலிருந்த இந்தியர்கள் இப்போது நம்பத் தகுந்தவர்கள் அல்லர். இச்சூழ்நிலையில் பல ஆங்கிலேய இராணுவவீரர்கள் தம் குடும்பங்களை காப்பாற்றவும் பின்வாங்கினர். எனவே புரட்சியை உடனடியாக அவர்களால் நிறுத்தமுடியவில்லை. அது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு பரவத் தொடங்கியது.



படம் 15.10 நானா சாகிப்

ஆங்கிலேயரிடம் அரசாட்சியை இழந்த பல அரச குடும்பங்கள் இப்புரட்சியில் கலந்து கொண்டன. அவர்களில் ஔத்தின் முன்னாள் நவாபும் மராட்டிய பீஷ்வாவான நானாசாகிபும் அடங்குவர். புரட்சி செய்த சிப்பாய்களின் இராணுவங்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளின் அரசர்களும் டில்லியை நோக்கி அணி வகுத்துச் சென்றனர். ஆங்கிலேயர்களை விரட்டிடுவோம் என்றும், முகலாயர் ஆட்சியையும், முந்தைய அரசியல் ஒழுங்கிணையும் மீட்டிடுவோம் என்றும் அவர்கள் தீவிரமாக நம்பினர்.

துர்பாஷ் கான்



- புரட்சி செய்யும் இந்தியர் அனைவரையும் முகலாயப் பேரரசு ஏன் ஒன்றுபடுத்தியது? விவாதிக்கவும்.
- நீங்கள் எதையாவது எதிர்த்தால் அதனிடத்தில் மாற்று வழி ஒன்று இருத்தல் வேண்டும். உங்கள் அனுபவத்திலிருந்து மாற்று வழி தேவை என்பதைப் பற்றி யோசி.


## ஒவ்வொரு கிராமமும் புரட்சியில் ஈடுபடுதல்

உத்திரப்பிரதேசம் மற்றும் பீகாரில் ஒவ்வொரு கிராமத்திற்கும் வீதி, வீதிக்கும் புரட்சி, தீப்பிழம்பு போல் பரவியது. விவசாயிகள், ஜமீன்தார்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஆங்கிலேயர் களையும், அவர்களுடைய அலுவலர்களையும் ஓட ஓட விரட்டினர். ஆங்கிலேய அரசிற்கு வரிகளை கட்டாமல் நிறுத்திவிட்டனர். இரயில் தண்டவாளங்களை நாசம் செய்தனர். காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், தபால் தந்தி அலுவலகங்கள் ஆகியவற்றை எரித்தனர். தந்தி மின்கம்பிகளை பிடுங்கி எறிந்தனர். மேற்கூறிய யாவும் ஆங்கிலேயர்களால் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டவை. ஆங்கிலேயர்களின் தோல்வியே, இந்தியர்களில் நாளுக்கு நாள் தைரியத்தை ஏற்படுத்தி ஆங்கிலேயர்களுடன் இன்னும் போராட முடியும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

புரட்சியாளர்கள் வட்டி வியாபாரிகளின் வீடுகளில் கொள்ளையடித்து, அவர்களிடமிருந்த ஆவணங்களை எரித்துவிட்டனர். அதுவரை இந்த வட்டி வியாபாரிகள் ஆங்கிலேயரின் சட்டங்களின் உதவியால் கிராமங்களில் பெரும் அதிகாரம் செலுத்தி வந்தனர்.

## புரட்சி ஒடுக்கப்படுதல்

புரட்சியானது பரவலாக வெற்றியடைந்தாலும் ஆங்கிலேயர்கள் படிப்படியாக நிலைமையைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். புரட்சியாளர்கள் தைரியமாக போரிட்டனர். ஆனால் அவர்களிடம் இரண்டு முக்கிய குறைபாடுகள் இருந்தன. ஒவ்வொரு நகரம் அல்லது பகுதிகளில் புரட்சியாளர்களின் வேறுபட்ட குழுக்கள் ஆங்கிலேயரை எதிர்த்து தனித்தனியாக போரிட்டனர். அவர்கள் ஒன்றுப்பட்டுப் போரிடவில்லை. அவர்களிடம் இணைந்து நன்கு திட்டமிடப்பட்ட முயற்சி இல்லை. எனவே ஆங்கிலேயர்கள் புரட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக சமாளித்து வந்தனர்.



படம் 15.11 புரட்சியாளர்களை தூக்கிலிடுதல்

புரட்சியாளர்களிடம் நவீன ஆயுதங்களின் அளவு குறைவாகவே இருந்தது. அவர்களுக்குத் தேவையான துப்பாக்கிகள், பீரங்கிகள், துப்பாக்கி மருந்துகள் தோட்டாக்கள் ஆகியவற்றை இந்தியாவிற்கு வெளியிலிருந்து கொண்டு வரவேண்டி இருந்தது. அதனால் புரட்சியாளர்கள் பழைய துப்பாக்கிகள், அம்புகள், ஈட்டிகள், கத்திகளை கொண்டு போரிட வேண்டியிருந்தது. நவீன ஆயுதங்களுடன் இந்த கத்திகளும் கட்டாரிகளும் எவ்வளவு காலம் போராட முடியும்?

இருப்பினும் புரட்சியானது பரவிய வேகத்தைக் கண்டு ஆங்கிலேயர்கள் அஞ்சினர். அதனாலேயே புரட்சியை அடக்கிய இடங்களிலெல்லாம் அவர்கள் மிகவும் கொடூரமாக நடந்துக்கொண்டனர். அவர்கள் புரட்சியாளர்களை மனிதநேயமற்ற முறையில் கொன்று அவர்களின் இறந்த உடல்களை மரங்களில் தொங்கவிட்டனர். புரட்சி செய்தால் என்ன விளைவு இருக்கும் என்பதை கிராமவாசிகளுக்கு புரிய வைக்கவே இவ்வாறு செய்தனர்.

சில புரட்சியாளர்களை பீரங்கிகளுக்கு முன் கட்டி அப்பீரங்கிகளை வெடித்து, அவர்களின் உடல்களை துண்டு துண்டுகளாக்குவர். துண்டான உடல்பாகங்கள் காற்றில் வீசியெறியப்படும். பல புரட்சியாளர்கள் ஆங்கிலேயரிடம் அகப்படாமல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று மறைந்து கொள்வர். சிலர் நேபாளம் போன்ற பகுதிகளுக்கும் சென்று மறைந்து கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் பேரரசர் பகதூர்ஷா ஜாபரை தொலைதூரப்பகுதியான ரங்கூனுக்கு நாடு கடத்தினர். கடைசி முகலாயப் பேரரசரான அவர் அங்கேயே இறந்தார். ஆங்கிலேயர்களை எதிர்த்து நடந்த பெரும்புரட்சியே 1857 புரட்சி. இந்த புரட்சியை அடக்கிய பின்னர் அவர்களின் வலிமை அதிகரித்து மேலும் 90 ஆண்டுகள் வரை அவர்களின் ஆட்சி தொடர்ந்தது.

SCERT TELANGANA

**சரியான விடையை தேர்ந்தெடு**

(அ) கி.பி. 1857ன் புரட்சியாளர்கள் முகலாயர் ஆட்சியை (மீட்க/நீக்க)........... விரும்பினர்.

(ஆ) ஆங்கிலேய இராணுவத்தின் பலவீனத்திற்கு காரணம் அதில் இருந்த இராணுவ வீரர்கள் பெரும்பாலும் (ஐரோப்பியர்கள்/இந்தியர்கள்)

- புரட்சி செய்த இந்திய இராணுவத்தில் இருந்த குறைபாடுகள் யாவை?

## புரட்சிக்குப் பின்

1857 புரட்சியை ஒடுக்குவதற்கு ஆங்கிலேயர்களுக்கு ஓராண்டிற்கு மேல் பிடித்தது. இக்காலத்தில் அவர்களின் வழிமுறைகளை போதிய அளவிற்கு மாற்றிக்கொண்டனர். புதிய வழிமுறைகளை பின்பற்றினர். 1858ல் விக்டோரியா மகாராணி ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். இந்திய அரசர்கள் தங்கள் அரசுகளில் எந்தவித கவலையுமின்றி ஆளலாம். ஏனெனில் ஆங்கிலேயர்கள் அவர்களை பதவி நீக்கம் செய்யமாட்டார்கள் என்று மகாராணியார் கூறினார்.

இவ்வாறு ஆங்கிலேயர்கள் அரசு குடும்பங்களுடன் நல்ல நட்புறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். அதேபோல் ஜமீன்தார்களுக்கும் அவர்களின் சொத்துக்களை காப்பாற்றுகிறோம் என்று கூறி அவர்களுக்குத் தேவையான சலுகைகளை வழங்கினர்.

ஆங்கில அரசு இந்தியர்களின் மத நம்பிக்கைகளில் தலையிடாது எனவும் பழைய சம்பிரதாயங்கள் தொடரும் எனவும் பண்டிதர்களுக்கும் மௌல்விகளுக்கும் வாக்குறுதி அளித்தது. அரசாங்கப் பணிகளில் இந்தியர்களை சேர்த்துக் கொள்வதாகவும் மேலும் ஒரு வாக்குறுதியை ஆங்கில அரசு அளித்தது. 1857ல் தங்களுடைய இந்தியப் பேரரசு பறிக்கப்படுவதை ஆங்கிலேயர்கள் நேரடியாகக் கண்டனர் என்பது உண்மை. அதனாலேயே இந்திய செல்வந்தர்களின் உதவியைப் பெறுவதற்குத் தேவையான அனைத்து சலுகைகளையும் தந்து தம்முடைய ஆட்சியைத் தொடரும் முயற்சிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் மேற் கொண்டனர்.

**ஐதராபாத் மாநிலமும் ஆங்கிலேயரும் :**

அக்காலத்தில் பிற ராஜ்ஜியங்களை போலவே ஐதராபாத்தும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. படிப்படியாக ஆங்கிலேயர் தங்களுடைய வசிப்பிடத்தை ஐதராபாத்தில் அமைத்து அதன் முழு நிர்வாகத்தை கவனித்தது.



*படம் 15.12 பகதூர் ஷா ஜாபரையும் அவரது மகன்களையும் கைது செய்யும் கேப்டன் ஹட்சன். ஔரங்கசீப்பிற்கு பின் வலிமையான முகலாய அரசர் யாருமில்லை. ஆனால் முகலாயர்கள் முக்கியமானவர்கள் போன்று தங்களை தொடர்ந்து காட்டிக் கொண்டனர். 1857ல் சிப்பாய் கலகம் ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த போது முகலாய பேரரசான பகதூர் ஷா ஜாஃபர் அவர்களின் இயல்பான தலைவராக காணப்பட்டார். கிழக்கிந்திய கம்பெனியால் கலகம் அடக்கப்பட்ட பின் அவர்தன் ராஜ்ஜியத்தை விட்டு வெளியேறும்படி வலியுறுத்தப்பட்டார். அவருடைய புதல்வர்கள் அரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

ஐதராபாத்தில் குடியிருக்கும் அதிகாரி மற்றும் ஆங்கில கவர்னர் ஜெனரலின் ஒப்புதலின்படி நிஜாம் தன்னுடைய திவானை நியமித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அனைத்து துறைகளும் ஆங்கில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐ.சி.எஸ்.(இந்திய உள்ளாட்சி சேவை) அலுவலர்களால் தலைமை தாங்க வேண்டியிருந்தது. இவ்வாறு நிஜாம் மாநிலத்தின் மீது முழு அதிகாரத்தையும் ஆங்கிலேயர்கள் பெற முடிந்தது. படிப்படியாக நிஜாம் அரசை மற்ற பகுதிகளைப் போன்று தங்களின் நிர்வாக முறை மற்றும் கொள்கைகளை ஏற்குமாறு செய்தது.

ஐதராபாத்திற்குள் நீங்கள் சென்றால் ஐதராபாத்தின் திவான்களில் ஒருவரான சாலார் ஜங் என்பவரின் முயற்சியால் பல பொருட்கள் திரட்டப்பட்டு செமிக்கப்பட்டிருக்கும் இடமான சாலார் ஜங் அருங்காட்சியகத்தை காணலாம். அவர் பல சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். ஐதராபாத் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டார். பழைய தேஷ்முக் போன்ற முறைகளை நீக்கி ராஜ்ஜியத்தை சுபாக்களாகவும் மாவட்டங்களாகவும் பிரித்தனர். அவர் வரியளித்து விவசாயம் செய்யும் முறையை அழித்து அதற்கு பதிலாக மாவட்ட அதிகாரிகளை கொண்டு விவசாயிகளிடம் நேரடியாக வரி வசூல் செய்யும் முறையை அறிமுகம் செய்தார். 1855ல் ஆங்கில வழி பள்ளிகளான தர்-உல்-உல்ம் சதர்கட்டிலும் 1870ல் நகரக் கல்லூரி, தக்காண பொறியியல் கல்லூரியும், மதர்சா-இ-அலியாவும் நிறுவப்பட்டன. இந்த சீர்த்திருத்தங்கள் நாட்டின் மற்ற பகுதிகளை போன்று ஐதராபாத் மாநிலமும் உருவாக துணை புரிந்தன.

**முக்கியச் சொற்கள்**

1. அரசு ஆவணங்கள்
2. சுபேதார்
3. தனி உரிமை
4. தேவை
5. ஜாகீர்
6. இராணுவ முகாம்
7. குடியேற்றங்கள்
9. மௌல்விகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஐரோப்பிய வியாபாரக் கம்பெனிகள் இந்தியாவில் இராணுவத்தை ஏன் நிர்வகித்தனர்? கம்பெனியின் வியாபாரத்தில் இந்த இராணுவங்கள் எவ்வாறு பங்களித்தன?(AS1)
2. 1700 மற்றும் 1800 ஆண்டுகளில் ஐரோப்பிய இராணுவங்கள் இந்திய இராணுவங்களை எவ்வாறு தோற்கடித்தன?(AS1)
3. உலகப் புறவரிப்படத்தில் வாஸ்கோடாகாமா போர்ச்சுகலில் இருந்து, இந்தியாவிற்கு கடற்பயணம் செய்த மார்க்கத்தைக் குறித்து காட்டுக.(AS1)
4. 1857ல் தங்களுடைய மத நம்பிக்கை பறிபோனதாகக் கருதிய இராணுவ வீரர்கள் யார்?(AS1)
5. 1857ல் ஆங்கிலேயருக்கு எதிராக மக்கள் எவ்வாறு புரட்சி செய்தனர்?(AS1)
6. 1857ல் புரட்சி செய்த மக்கள் எதை அடைய வேண்டுமென விரும்பினர்?(AS1)
7. 1858ல் விக்டோரியா மகாராணியின் அறிவிப்பில் புரட்சியாளர்களின் எந்தெந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தனர்?(AS1)
8. முகலாயர்கள் இந்தியாவில் ஆட்சிக்கு வந்ததற்கும், ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு வந்ததற்கும் இடையேயுள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?(AS5)
9. வெளிநாட்டுப் படையெடுப்பைத் தவிர்க்க ஒற்றுமை தேவை என்பதைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.(AS6)
10. ஆங்கிலேயர் ஆட்சி மீது உன் வெறுப்பை வெளிப்படுத்து.(AS1)
11. 1857ஆம் ஆண்டு புரட்சியைப் பற்றிய தகவல்களை சேகரித்து அதன் விவரங்களை கீழ்காணும் பட்டியலில் நிரப்பு.(AS3)

| வ.எண் | புரட்சியில் பங்கேற்றவர்கள் | புரட்சியிலிருந்து விலகி இருந்தவர்கள் |
|---|---|---|
| | | |

SCERT TELANGANA

பாடம் 16

# மாநில சட்டமன்றத்தில் சட்டங்களை இயற்றுதல்

இப்பகுதியில் நாம் இதுவரை மக்கள் எவ்வாறு ஆட்சி செய்தார்கள் செய்யப்பட்டார்கள் என்பதைப் படித்தோம். சென்ற ஆண்டு மலைவாழ் மக்களைப்பற்றியும் அவர்கள் தங்கள் அரசாட்சி செயல்பாடுகளை, கிராம பெரியவர்கள் முன்னிலையில் எவ்வாறு செயல்படுத்தினார்கள் என்பதையும் படித்தோம்.அரசு மற்றும் பேரரசுகளில் அரசர்களும் அரசு அதிகாரிகளும் அரசு நிர்வாகத்தில் எடுத்த முக்கிய முடிவுகளையும் அதிகாரத்தில் அரசர்கள் போர் புரிந்ததையும் கண்டோம். குறுநில மன்னர்களும், படைவீரர்களும் மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்து வரி வசூல் செய்து அணைகள் கால்வாய்கள்,கோயில்கள், மசூதிகள், மற்றும் தாங்கள் வாழ்வதற்கென பெரிய மாளிகையில் கட்டிக் கொண்டதையும் கண்டோம். இந்திய வளங்களை சுரண்டி ஆங்கிலேயே ஆட்சியாளர்கள் எவ்வாறு இந்தியாவை அடிமைப்படுத்தினார்கள் என்பதையும் இதனால் இந்திய மக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பையும் நாம் படித்தோம்.

இன்று நம்மை ஆட்சி செய்ய அரசர்கள் இல்லை, எழுபது ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்றோம். ஆகவே இப்போது நம்மை நாம் எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும்? நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் பழைய கால அரசர்களை போன்று அதிகாரம் படைத்தவர்களா? அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அவற்றை செய்துக் கொள்கிறார்களா? இல்லை தற்போதைய அரசாங்கங்கள் சட்டங்களுக்கு உட்பட்டே செயல்படுகின்றன. சட்டங்களுக்கு அப்பால் யாரும் இல்லை. அமைச்சர்களும், அதிகாரிகளும் சட்டத்திற்கு இணங்கி செயல்பட வேண்டும். ஆனால் சட்டங்களை யார் இயற்றுகிறார்கள் ? சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன ? . ஆட்சியாளர்களின் விருப்பங்களுக்கு இணங்க இயற்றப்படுகின்றனவா? இல்லை. சட்டங்களை சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இயற்றுகின்றனர் சட்டங்களை எவ்வாறு இயற்ற வேண்டும் என்பதை இந்திய அரசியல் அமைப்பு சட்டம் எடுத்துரைக்கின்றது. அரசியல் அமைப்பு சட்டத்தின் விதிகளுக்குட்பட்டே சட்டங்கள் இயற்றப்படுகின்றன இப்பாடத்தில் மாநில சட்டமன்றத்தில் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன என்பதை பற்றி படிப்போம்.



படம் 16.1 தெலங்கானா சட்டசபை

SCERT TELANGANA

இங்கே ஒரு செய்தி தரப்பட்டுள்ளது. அச்செய்தியில் என்ன சொல்லப்பட்டுள்ளது என தெரிந்துக்கொள்ளலாம் ஆந்திர மாநில புகைபிடித்தல் தடை மற்றும் சுகாதார பாதுகாப்பு சட்டம் : 2002

பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் மசோதா ஏற்பு
(எமது சிறப்பு நிருபர்)

**ஐதாராபாத் மார்ச் 27**

பொது இடங்கள் அரசு அலுவலகங்கள் அரசு வாகனங்கள் போன்றவற்றில் புகை பிடிக்க தடை விதித்து புதன் கிழமை அன்று தெலங்கானா மாநில சட்ட மன்றத்தில் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டத்தை மீறுபவர்கள் மீது ரூ 100லிருந்து ரூ 1000 வரை அபராதம் விதிக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கீழ்கண்டவற்றைக் வலியுறுத்தினர். கல்வி நிலையங்களுக்கு 100 மீட்டர் தூரத்தில் சிகரெட் விற்பதைத் தடுக்க வேண்டும் என்றும் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பதை தடை செய்ய வேண்டும் என்றும் சிகரெட் பற்றிய விளம்பரங்களை தடை செய்ய வேண்டும் என்றும் கூறினர். சிலர் இதற்கு மாறாக புகைப்பொருட்களின் தடை, புகையிலை உற்பத்தி செய்யும் விவசாயிகளையும் பெட்டிக்கடை வைத்து பிழைப்பு நடத்துபவர்களையும் பாதிக்கும் என்றனர் அமைச்சர் இந்த வாதத்தை ஏற்கவில்லை புகைப்பிடிப்பதால் ஏற்படும் உடல்நிலை பாதிப்பாலும் நவம்பர் 2, 2001 அன்று உச்ச நீதி மன்றம் கொடுத்த ஆணைக்கு இணங்கவும் இச்சட்டத்தை இயற்றப் பட்டுள்ளது என அமைச்சர் கூறினார். சட்டப்பிரிவு 5, 6, 10ன் படி பொது இடங்களிலும் அரசு அலுவலகங்களிலும் வாகனங்களிலும் புகை பிடிக்கக் கூடாது என்றும், மீறுபவர்களுக்கு முதல் முறையாக ரூ 100 அபராதமும், இரண்டாவது முறை சட்ட மீறலுக்கு ரூ 200 லிருந்து வரை அபராதம் விதித்து தண்டிக்கலாம் என அமைச்சர் கூறினார் (மார்ச் 27, 2002) “தி ஹிந்து” இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

- செய்தித்தாள்களை எப்போதும் பெரியவர்கள் மட்டுமே படிக்கின்றனர் என்ற எண்ணத்துடன் எழுதுகின்றனர் ஆகவே கீழே உள்ள வார்த்தைகளுக்கு பொருட்களை அறிவோம். தடை விதித்தல், வாதத்தை ஏற்க மறுத்தல், ஐயங்கள் மீறுதல்.
- மேலே உள்ள செய்தி சுருக்கத்திற்கு இணங்க கோடிட்டவற்றை நிரப்புங்கள்

1) பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடுக்க--------- தாக்கல் செய்யப்பப்பட்டது. (மசோதா, சம்பிரதாயம், சட்டம், நிபந்தனை)
2) புகைப்பிடிக்க தடை என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் கீழே உள்ளவற்றில் எதை சேர்க்க வில்லை (பணிபுரியும் இடம், அரசு வாகனங்கள், தனியார் தோட்டங்கள், பேருந்து நிலையம்)
3) இந்த சட்டம் உச்ச நீதிமன்ற உத்தரவை ----------படுத்துவதற்கு இயற்றப்பட்டது. (அமைதி, தண்டனை,செயல்படுத்த, புறக்கணிக்க)
4) இந்த மசோதா இயற்றப்பட்ட இடம்------ – உச்ச நீதிமன்றம் அமைச்சகம், மாவட்ட ஆட்சியரகம், சட்டமன்றம்

- மேற்கண்ட செய்திக்கட்டுரை இந்த மசோதா பற்றி எல்லோருக்கும் ஒரே கருத்து இருக்க வேண்டும் என்று கருதுகின்றதா?
- மேற்கண்ட செய்திக்கட்டுரை சட்டத்தை மீறுபவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றது?

இந்திய அரசியலமைப்பு சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் சட்டசபையை வழங்குகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றம் ஒரு ஆளுனரையும், ஒன்று அல்லது இரண்டு சட்டசபைகளை கொண்டிருக்கும். சட்டமன்றங்கள் ஒரு அவை அல்லது இரு அவைகளை கொண்டிருக்கும். கீழவையாக எப்போதும் சட்டசபை இருக்கும். மேலவையாக



SCERT TELANGANA

சட்ட மேலவை இருக்கும். தற்போது சில மாநிலங்கள் மட்டுமே இரு அவைகளை கொண்டுள்ளன.


**சட்ட மன்றம் :**

மாநிலத்திற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதில் இந்த சபை முக்கிய பங்கு வகிக்கின்றது மாநில் மக்களின் நலன்களுக்காக சட்டங்களை அமுலாக்குவதிலும் அரசின் கொள்கைகளை வடிவமைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் தெலங்கானா மாநில சட்ட மன்றத்தில் 119 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர்கள்.

பொதுவாக ஒவ்வொரு மாநில சட்ட மன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆனால் பதவிக்காலத்திற்கு முன்னதாகவே ஒரு சில சூழ்நிலைகளில் மாநில ஆளுநரால் சட்டமன்றம் கலைக்கப்படலாம். ஆனால் நெருக்கடி நிலை அமுலில் இருக்கும் காலங்களில் சட்டமன்றத்தின் பதவிக் காலம் ஒரு ஆண்டு நீடிக்கப்படலாம்.

மாநில சட்டமன்றம் ஆண்டுக்கு இரு முறை கட்டாயம் கூட வேண்டும். இரண்டு கூட்டத் தொடர்களுக்கு இடையே ஆறு மாதத்திற்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது.

வரைபடம் :1




SCERT TELANGANA

| தெலங்கானா மாநில சட்ட மன்றம் இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது. | | |
|---|---|---|
| **சபை** | **உறுப்பினர்** | **சுருங்கிய வடிவம்** |
| சட்டசபை | சட்டசபை உறுப்பினர் | எம்.எல்.ஏ |
| சட்டப்பேரவை | சட்டமேலவை உறுப்பினர் | எம்.எல்.சி |

### சட்டமன்ற தொகுதிகள்:

தெலங்கானா சட்டமன்றம் 119 சட்ட மன்ற தொகுதிகளைக் கொண்டுள்ளது. சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை மாநில மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக தெலங்கானா மாநில சட்டமன்றத் தொகுதி சுமார் 1,70,000 வாக்களர்களை கொண்டதாக உள்ளது. 18 வயது நிரம்பிய ஆண், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை தரப்பட்டுள்ளது. வாக்காளர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்துக் கொள்ளுதல் வேண்டும். ஒரு சட்டப் பேரவை தொகுதியின் வாக்காளர்கள் அந்த சட்ட பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வாக்களின்கின்றனர்.

ஒவ்வொரு சட்டமன்றமும் பல கிராமங்களை அல்லது நகரங்களை உள்ளடக்கியது. விஜயவாடாவை போன்ற பெரிய நகரங்கள் மூன்று சட்டமன்ற தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய மாவட்டங்கள் அதிக சட்டமன்ற தொகுதிகளையும், சிறிய மாவட்டங்கள் குறைந்த சட்டமன்ற தொகுதிகளையும் கொண்டுள்ளது.

### சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல்:

பொதுவாக மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. மாநில சட்டமன்ற உறுப்பினராக வேண்டும் என விரும்பும் நபர் தேர்தலில் போட்டியிட வேண்டும். வெவ்வேறு அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்துகின்றன. எந்த அரசியல் இலாபம் தரக்கூடிய மத்திய மாநில அரசுப்பதவிகளில் இருக்கக்கூடாது. சட்டத்தால் குறிப்பிடப்படும் மற்றத் தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

தேர்தலில் அரசியல் கட்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அனைத்து அரசியல் கட்சி வேட்பாளர்களும் தேர்தல் அறிக்கைகள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வாக்குறுதியாக விளங்குகின்றன. வேட்பாளர்களும் அவர்களின் ஆதாரவாளர்களும் பொதுக் கூட்டங்களையும் மேற்கொள்கின்றனர்.

- உங்கள் பகுதியில் செயல்படும் அரசியல் கட்சிகளைப்பற்றியும் அவற்றின் சின்னங்களையும் பட்டியலிடுங்கள்.
- நீங்கள் தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர் என்றால் உங்கள் வாக்குறுதிகளை "தேர்தல் அறிக்கை" யாக தயாரிக்கவும்.
- தேர்தலில் போட்டியிட நிறைய பணம் செலவாகின்றது எனவும் இது பெரும் பணக்காரர்களுக்கே சாத்தியம் எனவும் நினைக்கக்கின்றனர் இக்கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?
- பெரும் பணக்காரர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியுமானால் அது அரசின் முடிவுகளை சட்டமன்றத்தில் எவ்வாறு பாதிக்கும் என நினைக்கின்றீர்கள்? எந்த கட்சியையும் சேராத நபர்களும் சுயேச்சையாக போட்டியிடலாம். தேர்தலில் போட்டியிடும் நபர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

SCERT TELANGANA


படம் 18.2

- தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட இரண்டு படங்கள் இங்கே உள்ளன்.இவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் நடத்தப்படும் தேர்தல்களின் போது எடுக்கப்பட்ட படங்களாகும். இப்படங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த பல ஆண்டுகளில் தேர்தல் நடத்துவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆசிரியர்களுடனும் பெரியவர்களுடனும் கலந்துரையிடுங்கள்.

தேர்தல் நடக்கும் நாளான்று வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களிக்கின்றனர். வாக்குச் சாவடியிலுள்ள தேர்தல் அதிகாரி வாக்காளர் அடையாள அட்டையை சரி பார்க்கும் பொறுப்பு வகிக்கிறார் பெரும்பான்மையான வாக்காகளர் களுக்கு தேர்தல் ஆணையம் வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்கி உள்ளது. இந்த அடையாள அட்டைகளை தேர்தல் அதிகாரியிடம் வாக்காளர்கள் காட்ட வேண்டும். வாக்காளர்கள் தாங்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை வெளியில் சொல்வதில்லை. அது ரகசியமாகும்.



படம் 18.3 வாக்காளர் அட்டை

- யாருக்கு வாக்களித்தோம் என்பதை ஏன் இரகசியமாக வைக்க வேண்டும்?
- உங்கள் பெற்றோரின் வாக்காளர் அடையாள அட்டையை பரிசீலித்து உனக்கென அனைத்து விவரங்கள் உள்ளடக்கிய கற்பனையான வாக்காளர் அடையாள அட்டையை தயாரிக்கவும்.

SCERT TELANGANA

தேர்தலுக்கு பிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

- ஒரு சட்ட மன்றத் தொகுதியில் சுமார் 1,50,000 வாக்காளர்கள் உள்ளனர். என்று நினைத்துக் கொள்ளுங்கள் வெவ்வேறு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை இங்கே தரப்பட்டுள்ளன. இவர்களில் யார் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்?

| | |
|---|---|
| ஆறுமுக சாமி | 45,000 . |
| ரங்க சாமி | 44,000 |
| பழனிச்சாமி | 16.000 |
| திருப்பதிசாமி | 20.000 |
| வெங்கட சாமி | 15.000 |
| குமார சாமி | 10.000 |

- வெற்றி பெற்ற வேட்பாளர்கள் தொகுதி மக்களின் கருத்துக்கும், நலனுக்கும் எவ்வாறு செயலப்டுகிறார்? உங்கள் ஆசிரியரின் உதவியுடன் தெரிந்துக் கொள்ளுங்கள்,
- உங்கள் சட்டமன்றத் தொகுதியின் பெயர்– ----------------------
- உங்கள் மாவட்டத்திலுள்ள ஏதேனும் மூன்று சட்டமன்ற தொகுதிகளின் பெயர்களை எழுதுங்கள்-----------,---------,-------------,
- உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர்----------
- உங்கள் மாவட்டத்திலுள்ள தாழ்த்தப்பட்டோரின் தனித் தொகுதிகளின் பெயர்களை எழுது ----------------- -----------------
- உங்கள் குடும்பத்தில் கடந்த தேர்தலின்போது வாக்களிப்பில் பங்கு பெற்ற குடும்ப உறுப்பினர்கள் பெயர்களை எழுதுக?

## ஆட்சி அமைத்தல் :

தெலங்கானாவில் மொத்தம் 119 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன என்பதை நாம் அறிவோம்.

அட்டவணையின் படி A என்னும் கட்சி 156 இடங்களில் வெற்றி பெற்று பெரும்பான்மை உறுப்பினர்களை பெற்ற கட்சியாகவும் A என்னும் அரசியல் கட்சி 92 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது பெரிய கட்சியாகவும் விளங்குகிறது. மொத்த சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் பாதிக்கும் மேல் சட்டமன்ற உறுப்பினர்களை பெறும் கட்சி பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களை பெற்ற கட்சி ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் அவர் மாநில முதல் அமைச்சராக ஆளுனரால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களில் சிலரை முதல்அமைச்சர், அமைச்சர்களாக நியமனம் செய்ய பரிந்துரைக்கிறார். அமைச்சரவை என்பது முதல் அமைச்சரையும் மற்ற அமைச்சர்களை கொண்ட அரசாங்கம்" என்று அழைக்கிறோம். சட்டங்களை அமுல்படுத்துவதிலும்

வளர்ச்சி திட்டங்களை அமுல் படுத்துவதிலும், புதிய சட்டங்களை உருவாக்குவதிலும் நிறைவேற்றுவதிலும் அமைச்சரவை முக்கிய பங்கு வசிக்கின்றது.

| எண் | அரசியல் | தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் |
|---|---|---|
| 1. | அரசியல் கட்சி A | 75 |
| 2. | அரசியல் கட்சி B | 17 |
| 3. | அரசியல் கட்சி C | 10 |
| 4. | அரசியல் கட்சி D | 7 |
| 5. | அரசியல் கட்சி E | 6 |
| 6. | அரசியல் கட்சி F | 4 |
| | மொத்தம் | 119 |

SCERT TELANGANA




| எண் | அரசியல் கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசியல் கட்சி ABCD | 45 |
| 2. | அரசியல் கட்சி MNOP | 33 |
| 3. | அரசியல் கட்சி WXYZ | 26 |
| 4 | அரசியல் கட்சி STUV | 15 |
| | **மொத்தம்** | **119** |

- மற்றொரு அட்டவணை 2 ஐ பாருங்கள் இங்கே சட்டமன்ற தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. எந்த கட்சி ஆட்சி அமைக்கும் என்று உங்களால் சொல்ல முடியுமா?
- அட்டவணை 3ல் வெவ்வேறு அரசியல் கட்சிகளின் வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை தரப்பபட்டுள்ளது. புதிய ஆட்சி எந்த அரசியல் கட்சியால் அமைக்கப்படும் என்பதை உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

சில சமயங்களில் எந்த ஒரு அரசியல் கட்சியும் அறுதிப்பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறவில்லை என்றால் இரண்டு (அ) மூன்று அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கின்றன. இதை கூட்டணி ஆட்சி என்கிறோம்.

### அமைச்சரவை

அமைச்சர்களுக்கான துறைகளை முதல் அமைச்சர் ஒதுக்குகிறார். எடுத்துக்காட்டு : நிதித்துறை, கல்வித் துறை போன்றவை. அமைச்சர் தன் துறைக்கான கொள்கை முடிவுகளை வடிவமைக்கிறார் இக்கொள்கைகள் அத்துறையின் அதிகாரிகளால் விதிகளுக்கு இணங்க வடிவமைக்கப்படுகின்றன. சட்ட மன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் அமைச்சரவை பொறுப்பு வகிக்கிறது. சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அக்கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக வழி முறைகளை அமைச்சரவை மேற்கொள்ளும்.

ஒவ்வொரு அமைச்சரகமும் தனித்தனியாக செயல்பட்டாலும் முக்கிய கொள்கை முடிவுகள் ஒட்டு மொத்த அமைச்சரவையால் எடுக்கப்படுகின்றன. ஏதாவது தவறு நேர்ந்தால் அமைச்சரவை குறிப்பாக முதல் அமைச்சர் பொறுப்பு ஏற்க வேண்டும். நற்செயலுக்கான பாராட்டும் அமைச்சரவையையே சேருகின்றது.

### மாநில சட்டமன்றம்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களில் ஒருவரை சபாநாயகராக தேரந்தெடுக்கின்றனர். சட்டமன்ற கூட்டத்தை சபாநாயகர் நடத்துகிறார். எதை யார்,எப்போது விவாதிக்க வேண்டும் என்பதை சபாநாயகர் முடிவு செய்கிறார். அவையின் விதிகளுக்கு முரணாக செயல்படுவோரை தண்டிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது.

கொள்கைகள், புதிய வரிவிதிப்பு, புதிய சட்டங்கள் ஆகிய அனைத்திற்கும் சட்டமன்றத்தின் ஒப்புதல் அவசியம் ஆகும்.ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட அம்சத்தைப் பற்றி விவாதிக்கின்றனர்.
இதன் மூலம் கொள்கைகள் அல்லது திட்டங்களின் நன்மை தீமைகள்

SCERT TELANGANA

விவாதிக்கப்படுகின்றன.இந்த விவாதங்கள் தொலைக்காட்சியிலும் செய்தித்தாள்களிலும் செய்திகளாக வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவையின் கவனத்துக்கு கொண்டு வருவர் அப்பிரச்சினை தொடர்பான துறையைச் சேர்ந்த அமைச்சர் விசாரணை நடத்தி உறுப்பினர்களுக்கு பதில் அளிப்பர். அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சட்ட மன்றத்திற்கு பொறுப்பு வகிக்கின்றனர். குறிப்பிட்ட அமைச்சரின் துறை தொடர்பான கேள்விகளுக்கு அத்துறை அமைச்சர் பதில் அளிக்க வேணடும். அமைச்சர் அளிக்கும் பதில் திருப்தி அளிக்கவில்லை என்றால் குறிப்பிட்ட அமைச்சரை பதவி விலகுமாறு உறுப்பினர்கள் வலியுறுத்துவர்.

## சட்டம் இயற்றுதல்

சட்ட மன்றங்கள் சட்டங்களை எவ்வாறு இயற்றுகின்றன? சாதரணமாக மசோதாக்கள் ஆளுங்கட்சியால் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. ஏனென்றால் ஆளுங்கட்சிக்கு சட்ட மன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. ஆனால் சில சமயங்களில் தனிப்பட்ட முறையில் உறுப்பினர் ஒருவர் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் மசோதாவை தாக்கல் செய்யலாம். சட்டம் இயற்றுதலின் வழி முறைகளை இப்போதுப் பார்க்கலாம்.

சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மசோதா பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் சட்டமாகின்றது. ஆகவே "மசோதா" என்பது சட்டத்தின் "முன் வடிவம்." சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும்

### சட்ட மேலவை

தெலங்கானா மாநில சட்டமன்றத்தில் இரண்டு அவைகள் உள்ளன என்பதை நாம் தெரிந்துக்கொண்டோம். இரண்டாவது அவை சட்ட மேலவை எனப்படுகிறது. ஆந்திர மாநில சட்ட மேலவை 1958-1985 வரை மற்றும் 2007 முதல் இன்றைய நாள் வரை இயங்கி வருகின்றது இது நிரந்தரமான அவையாகும் MLC க்கள் என அழைக்கப்படும் இதன் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் பதவிக்காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அவையிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். இச்சபையின் உறுப்பினராக போட்டியிடும் நபர் இந்தியக் குடிமகனாக இருந்தல் வேண்டும். 30வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். இலாபம் தரக்கூடிய மத்திய மாநில துறைகளில் பணி புரியக்கூடாது. நாடாளுமன்றம் அவ்வப்போது குறிப்பிடும் தகுதிகளைப் பெற்றவராக இருந்தல் வேண்டும். ஆந்திர சட்ட மேலவை 90 உறுப்பிகர்களைக் கொண்டது.

***மேலவையின் அமைப்பு:***

30 உறுப்பினர்கள் (1/3 சட்டமன்ற உறுப்பினர்களால் (MLC) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்)
30 உறுப்பினர்கள் (1/3 உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்)
7அல்லது 8 உறுப்பினர்கள் (1/12 பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்)
7 அல்லது 8 உறுப்பினர்கள் (1/12 ஆசிரியர்களால் தேர்நதெடுக்கப்படுகின்றனர்)
15 உறுப்பினர்கள (1/6 ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.)

இரண்டு அவைகளின் ஒப்புதலைப் பெற்ற பிறகே மசோதா சட்டமாகின்றது.

**ஆளுநர்** : ஒரு மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார். மாநில அரசாங்கம் இந்திய அரசியல் சட்டப்படி இயங்குகின்றதா என்று கவனிக்கும் பொறுப்பு ஆளுநரைச் சேர்ந்தாகும் ஆளுநர் முதலமைச்சரையும் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கிறார். மாநிலத்தின் அனைத்து நிர்வாக அதிகாரங்களும் கவர்னரை சேர்ந்தாகும்.

**தெலங்கானா மாநில ஆளுநர் யார்?**



SCERT TELANGANA

## இட ஒதுக்கீடு முறை

தற்போதைய சூழலில் சமுதாயத்தில் நலிவடைந்த மக்களான தாழ்த்தப்பட்டவர்களும் மலைவாழ் மக்களும் நின்று வெற்றி பெறுவது என்பது கடினமான செயலாகும். ஆகவே நலிவடைந்த மக்களில் ஒரு சிலரே சட்டமன்றத்திற்கு தேர்நதெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் அளிக்க இந்திய அரசியல் சட்டம். சில சட்டமன்றத் தொகுதிகளை ஒதுக்கீடு செய்துள்ளது.

**தெலங்கானா மாநில சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்டோருக்கும் மலைவாழ் மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகள்:**

மொத்த சட்டமன்றத் தொகுதிகள் : 119

தாழத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட் தொகுதிகள் : 19

மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் : 12

மகளிருக்கும் இது போன்ற இட ஒதுக்கீடு வேணடும் என்று பலர் நினைக்கின்றனர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மசோதா ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பிறகு சட்டமாகின்றது.

மசோதாவைக் கொண்டு வரும் அமைச்சர் அதற்கான அவசியத்தை சட்ட மன்றத்தில் விளக்குவார். மசோதா குறித்து விவாதம் நடத்தப்படும். சில சமயங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடமிருந்து மசோதாவுக்கு எதிர்ப்பு வரலாம். சில உறுப்பினர்கள் மசோதாவுக்கான சில திருத்தங்களையும் முன் வைக்கலாம். மசோதாவின் திருத்தங்கள் பற்றி விவாதிக்க ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய சிறிய கமிட்டி நியமிக்கப்படும். கமிட்டியின் பரிந்துரைகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட பிறகு சபையின் ஒப்புதலுக்காக மசோதா தாக்கல் செய்யப்படுகிறது. பெரும்பான்மை கீழ்சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும். பிறகு மசோதா மேல் சபையில் நிறைவேற்றப்படும். மசோதா ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு சட்டமாகிறது. இச்சட்டம் அரசிதழில் வெளியிடப்படுகிறது.

### சட்டமன்றத்தில் விவாதம்:

சட்டமன்றத்தில் நடைபெறும் விவாதத்தை ஒரு கற்பனையான எடுத்துக்காட்டுடன் காண்போம்.

MLA (1): அவைத் தலைவர் அவர்களே! எங்கள் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக மழையில்லாத காரணத்தால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கையும் அதிகரித் துள்ளது. நிலத்தடி நீர் அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை அறிந்துக் கொள்ள விரும்புகின்றேன்.




*Fig 16.4*

MLA (2): மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே! எங்கள் சட்டமன்ற தொகுதியிலும் அதே நிலைமை உள்ளது. அரசு அதிகாரிகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை. மக்கள் நீண்ட தூரம் நடந்து சென்று குடிநீர் கொண்டு வருகிறார்கள்.

MLA (3): மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே! நீர் நிலைகளின் கரைகளை வலுப்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும் ஏரிக்கரைகள் உடையாமல் இருக்க கரைகளின் மேல் மரங்களை நட வேண்டும்.

MLA (4): மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே! அரசுக்கு இந்த நிலைமை நன்றாகத் தெரியும். இழப்பு மேலும் அதிகமாகாமல் இருக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் நிலத்தடி நீர் குறைந்துள்ள மண்டலங்களை அடையாளம் காண வேண்டும்.

MLA (5): மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே! எதிர்கட்சி உறுப்பினர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்ட வேண்டும். ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்க வேண்டும். அரசின் எல்லா நடவடிக்கை களையும் விமர்சிக்கக் கூடாது. எங்கள் சட்டமன்றத் தொகுதியில் நீர் நிலைகளை ஏற்படுத்தி கரைகளை வலுவாக்கியுள்ளதால் நிலத்தடி நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. அரசு அதிகாரிகளும் மக்களுக்கு ஒத்துழைக்கிறார்கள்.

MLA (6): மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே! எங்கள் தொகுதியிலுள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரால் நீர் மாசு அடைந்து உள்ளது. இதனால் சுகாதாரச் சீரழிவு ஏற்படுகிறது. இதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது. என தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். கடுமையான குடிநீர் தட்டுப்பாடு உள்ளது.

**அமைச்சர்** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே! மக்கள் சுகாதாரத்தின் மீது அரசுக்கு அதிக அக்கறை உள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட மண்டலங்களில் ஏரிகளை மேம்படுத்துதல், மரம்வளர்த்தல் மணல் கொள்ளையை தடுத்தல், போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உறுப்பினர்கள் கூறிய ஆலோசனைகள் அனைத்தையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. அதே நேரத்தில் இந்த நடவடிக்கைகளை செயல்படுத்த மாண்புமிகு உறுப்பினர்களின் ஆதரவை கோருகின்றேன்.

- நீங்கள் MLA வாக இருந்தால் இந்த பிரச்சினையில் உங்கள் கருத்து என்ன?
- எதிர்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பில் உள்ள வேறுபாடுகள் என்ன?

**குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இந்திய அரசாங்கம் உருவாக்கிய இரு சட்டங்கள் கீழ்வருமாறு :**

**1) POCSO Act - 2012 (Protection of children from sexual offences Act, 2012. பாலியல் தொந்தரவுகளிலிருந்து குழந்தைகளுக்கு பாதுகாப்பு. இச்சட்டம் குழந்தைகளின் பாதுகாப்பையும் சுகத்தையும் உறுதி செய்கிறது.**

**2) The Juvenile Justice (care and Protection of childern) Act, 2015.**

இச்சட்டம் குழந்தைகளின் பாதுகாப்பை சட்டத்திற்கேற்றவாறு உறுதி செய்யும் மற்றும் பாதுகாப்பற்ற கவனிப்பாரற்ற குழந்தைகள் (அனாதைகள்) போன்றோரின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. அத்தகைய குழந்தைகளுக்கு இச்சட்டம் கல்வி, ஆரோக்யம், சத்துணவு, ஆலோசனை போன்ற சமூகத்தில் வாழக்கூடிய வழிகளை தருகிறது.

SCERT TELANGANA

**முக்கியச் சொற்கள்**

1. தேர்தல் அறிக்கை 2. அமைச்சரவை 3. சபாநாயகர்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடைய எந்த அம்சங்களின் மீது சட்டங்களை இயற்றலாம்?(AS1)
2. உங்கள் பள்ளி அரசுக்கல்வித்துறையைச் சேர்ந்தது. உங்கள் பள்ளியின் மீது நடைமுறைபடுத்தக்கூடிய சில சட்டங்களை பற்றி விவாதி (மாணவர்கள். ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர், கல்லூரி முதல்வர், பெற்றோர் ஆசிரியர் கழகம்.(AS4)
3. 6-14 வயதுக்குட்ப்பட்ட பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க உரிமை உள்ளது என்ற சட்டம் உள்ளது. இந்த சட்டத்தை அமுல்படுத்த என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உங்கள் ஆசிரியரின் உதவியுடன் விவாதியுங்கள்.(AS4)
4. நீங்கள் ஆந்திரமாநில சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளீர்கள் என்று நினைத்துக்கொள்ளுங்கள். எந்தவகையான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்துவீர்கள்? ஏன்? எடுத்துக்காட்டுடன் விளக்குக,(AS4)
5. சட்டம் இயற்றுதல் என்னும் பத்தியை படித்து கீழ்காணும் வினாவிற்கு விடையளி.(AS1)
6. உத்தரம் என்ற மாநிலத்திலுள்ள சட்டமன்றத்தில் 368 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என நினைத்துக்கொள்ளுங்கள். தேர்தலுக்குப் பிறகு வெவ்வேறு அரசியல் கட்சிகள் கீழ்காணும் எண்ணிக்கையில் சட்டமன்ற தொகுதிகளைக் கைப்பற்றியது.(AS3)

| | | |
|---|---|---|
| அரசியல் கட்சி A | = | 89 |
| அரசியல் கட்சி B | = | 91 |
| அரசியல் கட்சி C | = | 70 |
| அரசியல் கட்சி D | = | 84 |
| மற்றவைகள் | = | 34 |
| மொத்தம் | = | 368 |

மேற்கண்ட அட்டவணையைப் படித்து கீழ்காணும் கேள்விகளுக்கு விடையளி :

a) மொத்தமுள்ள 368 இடங்களில், பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கத் தேவையான உறுப்பினர்கள் எண்ணிக்கை என்ன?

b) தேர்தலுக்குப் பிறகு எக்கட்சி தனிப்பெருங்கட்சியாக உள்ளது?

c) தனிப்பெருங்கட்சியாக ஆட்சி அமைக்க முடியமா? அவ்வாறு இல்லை எனில் ஆட்சியமைக்க மாற்று வழி ஏதேனும் உள்ளதா?

d) கூட்டணி ஆட்சி, ஒருகட்சி ஆட்சியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

7. இந்தியாவிலுள்ள மாநிலங்களில் சில மாநிலங்களில் மட்டுமே இரண்டு சபை உடைய சட்டமன்றங்கள் இயங்கி வருகின்றன. அம்மாநிலங்கள் எவை?(AS5)
8. பாடக்கருத்தை மையமாகக் கொண்டு, கீழே உள்ள படத்திற்கேற்றவாறு கற்பனையான உரையாடல்களை எழுதுங்கள்.(AS1)



SCERT TELANGANA

பாடம் 17

# சட்டங்களை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துதல்

சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன என்பதைப் பற்றியும், மக்கள் நல வளர்ச்சித் திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றியும் சென்ற பாடத்தில் நாம் கற்றோம். ஆனால் அவை எவ்வாறு அமுலாக்கப்படுகின்றன? சட்டங்களை அமுலாக்கும் அதிகாரிகளைக்கூட மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இயற்றப்பட்ட சட்டங்களை மக்களே அமுலாக்கிக் கொள்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? சட்டங்கள் எவ்வாறு அமுலாக்கப்படுகின்றன என்பதை இப்பாடத்தில் நீங்கள் தெரிந்துக்கொள்வீர்கள். கீழே உள்ள அம்சங்களை உன்னுடன் பயிலும் மாணவர்களுடன் விவாதியுங்கள்.

1. கால்வாய்களையும், அணைகளையும் கட்டுதல்.
2. வீடுகளுக்கு மின்சாரத்தை அளித்தல்.
3. நியாய விலை கடையை நடத்துதல்.
4. மின் தொடர்வண்டிகளின் போக்குவரத்து.
5. ரூபாய் நோட்டுகளை அச்சடித்தல்.
6. மக்களிடமிருந்து வரி வசூல் செய்தல்.
7. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி அளித்தல்.
8. இந்திய எல்லைகளைக் காத்தல்.
9. வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்களை அடையாளம் கண்டு அவர்கள் நலனுக்கு நலத்திட்டங்களைச் செயலாக்குதல்.
10. திருட்டுத்தனத்தை ஒழித்தல்.

- இவை மட்டுமின்றி அரசு செயல்படுத்தும் பல நலத்திட்டங்களையும் அறிந்திருப்பீர்கள். அவற்றில் சிலவற்றை உங்கள் நண்பர்களுடன் விவாதிப்பீர்களா?

சென்ற பாடத்தில் நாம், அரசின் வெவ்வேறு துறைகள், மக்கள் நலத்திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தி வருகின்றன என்பதைத் தெரிந்துக்கொண்டோம். இத்துறைகளில் பல அரசு அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் அரசின் ஆணைகளை செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு இயங்கி வரும் துறைகள், அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. மக்கள் நலத்திட்டங்களை அமுலாக்க, சில அதிகாரிகளை, ஐதராபாத் போன்ற மாநில தலைநகரங்களில் நாடு முழுவதும் பணியமர்த்துகின்றனர். அதே நேரத்தில் ஒரு மாநிலம் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் பல துறைகள் இயங்கி வருகின்றன.

அரசின் சட்டங்களையும், திட்டங்களையும் அமுல்படுத்த பல அதிகாரிகள் இங்கே பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆந்திர பிரதேசத்தில் மொத்தம் 23 மாவட்டங்கள் உள்ளன.

மாவட்டத்திலுள்ள பல்வேறு துறைகளின் செயல்களை மாவட்ட ஆட்சியர் ஒன்றிணைக்கிறார். இவர் மாவட்ட நீதிபதியாகவும் விளங்குகிறார். மாவட்ட ஆட்சியரின் கடமைகளை இப்போது நாம் அறிந்துக் கொள்வோம்.


- உங்கள் மாவட்டத்தின் பெயர் என்ன? அதன் தலைநகரம் எங்குள்ளது?



SCERT TELANGANA

## மாவட்ட ஆட்சியர் மற்றும் நல்லவரம் என்ற மாவட்ட நீதிபதி

இப்போது நாம் நல்லவரம் என்ற கற்பனையான மாவட்டத்தைக் காண்போம். இம்மாவட்டம் கீழ்காணும் மண்டலங்களை உள்ளடக்கியது. அவை கிரிபள்ளி, மல்லபள்ளி, நரசபேட்டை மற்றும் குர்தூர், போன்றவை. மாவட்ட நீதிபதியின் அலுவலகம் நல்லவரம் என்ற நகரத்தில் உள்ளது.



*நல்லவரம் மாவட்டம்*

மாவட்ட நீதிபதியாக உள்ள மனிஷா நகெல், தினந்தோறும் தன் அலுவலகத்திற்கு காலை 10.30 மணிக்குச் செல்கிறார். காலை 11.30 மணிக்கு அவருடைய அலுவலகத்தில் அனைத்துத் துறை அதிகாரிகளின் கூட்டம் உள்ளது. வெவ்வேறு துறைகளின் தலைவர்கள் அக்கூட்டத்தில் கலந்துக்கொள்கின்றனர். பல்வேறு துறைகளின் தலைவர்களிடம், அவர்கள் அலுவலகங்களின் பணிகளில் சென்ற மாதம் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கேட்டறிகிறார். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் மாவட்ட ஆட்சியர் கேட்டறிகிறார்.

அக்கூட்டத்திற்குப் பிறகு ஆட்சியர் மனிஷா நகெல் தன் அலுவலகக் கோப்புகளைப் பரிசீலனை செய்கிறார். ஒவ்வொரு கோப்பும் அந்த துறையின் செயல்களை குறித்து எடுத்துரைக்கின்றன. அவர் அவற்றை படித்து, தன் கருத்துக்களையும், ஆணைகளையும் பதிவு செய்கிறார்.

அனைத்துத்துறைகளின் கோப்புகளை பரிசீலனை செய்ய மதியம் 3.00 மணி ஆகிறது. நாள்தோறும் மதியம் 3.00 மணி முதல் 04.30 மணிவரை மாவட்ட பகுதிகளில் இருந்து வரும் மக்களை சந்திக்கிறார். எல்லா மண்டலங்களிலிருந்து வரும் மக்கள் தங்கள் பிரச்சனைகளை குறித்து முறையிட அவரை சந்திக்கின்றனர்.

மல்லபள்ளி மண்டலத்திலிருந்து வந்த விவசாயிகள் குடிநீர் பிரச்சனைகளை தீர்க்க வேண்டினர். அவர்கள் மண்டலங்களிலுள்ள ஏரிகள் கடந்த இரண்டு வருடங்களாக உலர்ந்து விட்டதால் விவசாயம் செய்வதில்லை. ஆகவே அவர்கள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்யவும், ஆட்சியரிடம் முறையிட வந்தனர். அதே போல பக்கத்து கிராமங்களில் ஏரிக்கரைகளை வலுப்படுத்தி குடிநீர் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என கூறினர்.

மாநில வறட்சி பாதித்த மண்டலங்களின் பட்டியலில் மல்லபள்ளி இல்லாததால் விவசாயிகள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய முடியாது என்று ஆட்சியர் மனிஷா நகெல் கூறினார். மேலும் அவர்கள் அவர்களின் சட்டமன்ற உறுப்பினரைச் சந்தித்து குறைகளை முறையிட வேண்டும் எனக்கூறினார். ஏரிக்கரைகளை வலுப்படுத்த நீர்ப்பாசனத் துறைக்கு ஆணையிடுவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

அடுத்த நாள் காலை 5-00 மணிக்கு நரசப்பேட்டை மண்டலத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நரசப்பேட்டை மண்டலத்தில் உள்ள பஞ்சாலை தொழிற்சாலையில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டது. மக்கள் தீயை அணைக்க முயற்சி செய்தனர். தீயணைப்பு வண்டி ஏற்கனவே அந்த இடத்ததை வந்து சேர்ந்தது. இந்த தீ விபத்து பக்கத்து ஊர்களுக்கு பரவாமல் தடுக்க வேண்டும். இதைக்கேட்ட மனிஷா, நரசப்பேட்டைக்கு விரைந்தார். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டென்ட் மற்றும் மாவட்ட மருத்துவ அதிகாரியையும் தன்னுடன் வருமாறு பணித்தார்.

மாவட்ட ஆட்சியர், நரசப்பேட்டை கிராமத்தைக் காலை 7-00 மணிக்கு சென்றடைந்தார். அவர் பஞ்சாலை இருக்கும் பகுதிக்கு உடனடியாகச் சென்றார். ஏராளமான பருத்தி, தீ விபத்தில் எரிந்து சாம்பலாயின.

SCERT TELANGANA




படம் 17.2 பருத்தி ஆலையில் மாவட்ட ஆட்சியர்

ஆனால் தீ இப்போது கட்டுக்குள் வந்துள்ளது. நகராட்சித்தலைவரும், காவல் அதிகாரிகளும் சம்பவ இடத்தில் உள்ளனர். தீ விபத்தில் பலத்த காயமுற்ற, இரண்டு பஞ்சாலை தொழிலாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நகராட்சி தலைவர் கூறினார். அருகில் இருந்த இரண்டு வீடுகளும் தீயில் நாசமாயின.

சேதமுற்ற வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.10,000/-ஐ அளிப்பதாக ஆட்சியர் அறிவித்தார். தீ விபத்துக்கான காரணத்தை அறிய, விசாரணைக்கு உத்திரவிடுவதாகவும் அறிவித்தார். அங்கிருந்து புறப்பட்ட மாவட்ட ஆட்சியர், மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வரும் காயமுற்ற தொழிலாளர்களைச் சென்று பார்த்தார். காயமுற்ற தொழிலாளர்களுக்கு தலா ரூ.20,000/-அளிப்பதாக ஆட்சியர் அறிவித்தார்.

தன் அலுவலகத்திற்கு திரும்பிச் செல்லும் வழியில் நகராட்சி அலுவலகத்தைப் பார்வையிட்டார். நகரத்தின் பல பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருப்பதால், தீயணைப்பு வண்டி குறிப்பிட்ட நேரத்துக்குள் சம்பவ இடத்திற்கு செல்ல இயலவில்லை. பல வீடுகளும், அலுவலகங்களும் அனுமதிக்கப்பட்ட இடத்தைத் தாண்டி மதில் சுவர்களைக் கட்டியுள்ளன.

போக்குவரத்துத்தடை ஏற்பட இவை காரணமாக உள்ளன. அடுத்த சில வாரங்களுக்குள் ஆக்கிரமிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து மாத கூட்டத்தில் அறிக்கை அளிக்குமாறு நகராட்சி அதிகாரிகளுக்கு பணித்தார். அவர் இருட்டிய பிறகே நல்லவரத்தைச் சென்றடைந்தார்.

நல்லவரம் என்ற மாவட்டம் கற்பனையானது என்பது நமக்குத்தெரியும். நல்லவர மாவட்ட ஆட்சியர் எவ்வாறு தன் கடமைகளை செய்தாரோ அதே போல அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள்.

- கடன் தள்ளுபடி செய்ய முடியாமைக்கு மாவட்ட ஆட்சியர் விவசாயிகளுக்குக் கூறிய விளக்கம் என்ன?
- இந்த விபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அதிகாரிகள் யார்?
- இந்த விபத்தில் குறிப்பிட்டுள்ள அரசு அதிகாரிகள் அல்லாதவர்கள் யார்?

## **தாசில்தார் மற்றும் கிராம வருவாய் அதிகாரிகள்** (MRO)

நல்லவரம் மாவட்டம் பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஒரு மண்டலத்தின் தலைமை அதிகாரி தாசில்தார் மண்டலத்தில் பல கிராமங்கள் உள்ளன. நல்லவரம் மாவட்ட வரைபடத்தில் நல்லவரம் பல மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதை நீங்கள் காணலாம். பல கிராமங்கள் ஒன்று சேர்ந்தது தான் ஒரு மண்டலம். மாவட்ட தலைமையகத்தில் பல அலுவலகங்கள் இயங்குவது போல, மண்டல தலைமையகத்திலும் பல அலுவலகங்கள் இயங்குகின்றன. கல்வி, விவசாயம் போன்றவற்றிற்கு மண்டல அளவில் அலுவலகங்கள் உள்ளன.

- உங்கள் மண்டலத்தின் பெயர் என்ன?
- உங்கள் மாவட்டத்திலுள்ள சில மண்டலங்களின் பெயர்களைக் கூறுக.

SCERT TELANGANA

உங்கள் வீட்டில் உங்கள் பெற்றோர் வீட்டுக்கான ஆவணத்தை வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதுபோல வருவாய் அதிகாரிகள் நில ஆவணங்களைப் பராமரிக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள நிலங்கள், அளக்கப்பட்டு அதன் விவரங்கள் வருவாய்த் துறை அலுவலகங்களில் பராமரிக்கப் பட்டு வருகின்றன. மக்களின் இருப்பிடங்கள், விளை நிலங்கள், ஏரிகள், கிணறுகள், கழிவு நீர் கால்வாய்கள், சாலைகள், கிராம எல்லைகள், மலைகள் போன்றவற்றின் வரைப் படங்களும் இந்த அலுவலகங்களில் பராமரிக்கப் படுகின்றன. இந்த ஆவணங்கள் மிகவும் பயனுள்ளவை. நில அளவு தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படுமாயின் இந்த ஆவணங்கள் மூலம் எளிதாக தீர்த்துக் கொள்ளலாம். யாராவது நிலங்களை வாங்கினாலோ அல்லது விற்றாலோ இந்த ஆவணங்களில் பதிவு செய்தாக வேண்டும். விளை நிலங்களின் வரைபடம் மட்டுமின்றி புறம்போக்கு நிலங்கள், காடுகள், போன்றவற்றின் வரைபடங்களும் இங்கே ஆவணங்களாகக் காக்கப்படுகின்றன. யாரேனும் அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தால், இந்த ஆவணங்கள் மூலம் எளிதாகக் கண்டுபிடித்து ஆக்கிரமிப்புகளை அகற்றலாம்.

நிலம் தொடர்பான அனைத்து விவரங்களுக்கும், ஆவணங்களுக்கும் கிராம வருவாய் அதிகாரியும், மண்டல வருவாய் அதிகாரியும் பொறுப்பு வகிக்கிறார்கள்.

## சட்டங்கள் எவ்வாறு அமுலாக்கப் படுகின்றன?

இதை புரிந்துக்கொள்ள முதலில் சட்டத்தைப் பற்றி அறிந்துக்கொள்ள வேண்டும். சென்ற பாடத்தில் நாம் நிலத்தடி நீர் பற்றியும், அது விவசாய வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் அறிந்தோம்.




படம் 17.3 நில ஆவணங்களுடன் கிராம கணக்கர்

ஜீவ நதிகளும், வனப்பகுதிகளும் அதிக அளவு இருக்கின்ற போதிலும் ஆந்திரப்பிரதேசத்தில் சுமார் 1500 அடிவரை ஆழ்துளை கிணறுகள் தோண்டப்படுகின்றன. நாளுக்கு நாள் நிலத்தடி நீர் வறண்டுக் கொண்டே சென்றால், வருங்காலத்தில் நீர் பாசனம் செய்யவும் குடிநீரும் கிடைப்பதும் கடினமாகும்.

## தெலங்கானா மாநிலம் நீர், நிலம்மற்றும் மரங்கள் பாதுகாப்புச்சட்டம், 2002

வருங்கால சந்ததியினருக்காக இவ்வளங்களைக் காப்பது மிகவும் முக்கியமானதாகும். ஆகவே இவ்வளங்களை காக்க ஆந்திர பிரதேச அரசாங்கம், 2002 ஆம் வருடம் ஆந்திர மாநில நீர், நிலம் மற்றும் மரம் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது. இது 19-4-2002 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

a. புதிய ஆழ்துளை கிணறுகளை அமைக்க மண்டல வருவாய் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும்.

b. இரு ஆழ்துளை கிணறுகளுக்கு இடையே குறிப்பிட்ட ஆழம் மற்றும் தூரத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

SCERT TELANGANA

c. மழை நீர் வீணாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

d. ஒவ்வொரு தொழிற்சாலையும் கழிவு நீரை சுத்திகரிப்பு இயந்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

e. குடி நீரை பாதுகாக்க வேண்டும்.

f. நிலத்தடி நீர் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அருகில் உள்ள ஆற்றுப்படுக்கையில் மணல் அள்ளுவதைத் தடுக்க வேண்டும்.

g. சமூக காடு வளர்ப்பு திட்டத்தைப் பெரிய அளவில் செயல்படுத்த வேண்டும்.

h. அனுமதியின்றி மரம் வெட்டுவது தடை செய்யப்பட்டு உள்ளது. ஒரு மரம் வெட்டப்பட்டால், இரண்டு மரக்கன்றுகளை நட வேண்டும்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட உடன், இதை அமுல்படுத்த தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதுவே நீர், நில மற்றும் நதி பாதுகாப்பு அமைப்பாகும். (Water, land and trees protection Authority or Walta) இது போன்ற சட்டத்தை அமுல்படுத்த அரசின் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும். நீர் வளத்தைப் பெருக்க வனத்துறை மிக முக்கியமானதாகும். அது போல நீர் மாசுபடாமல் தடுக்க தொழிற்துறை முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஆகவே அரசின் வெவ்வேறு துறை அமைச்சகங்களிலுள்ள அதிகாரிகள் (WALTA) சட்ட அமுலுக்கு பொறுப்பு வகிக்கின்றனர். இச்சட்ட அமுலுக்கு பொறுப்பு வகிக்கும் துறைகளை நாம் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

| **துறை** | **பொருள்** |
|---|---|
| நிலத்தடி நீர் துறை | ஆழ்துளை கிணறுகளின் பதிவு, மணல் அள்ளுதல், நிலத்தடி நீர் ஆதார பகுதிகளைப் பிரித்தல். |
| நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர மேம்பாட்டுத்துறை | மழை நீர் சேகரிப்பு நிலையங்களை (தொட்டிகளை) அமைத்தல், மரம் வளர்த்தல், புதிய கட்டிடங்களை கட்ட அனுமதித்தல். |
| சுரங்கம் மற்றும் மண் ஆராய்ச்சித் துறை | நீர் நிலைகளில் மணல் அள்ளுவதைக் கட்டுப்படுத்துதல் |
| வனத்துறை | மரம் வெட்ட அனுமதி தருதல் |

இச்சட்டம் நல்ல முறையில் அமுலாக்கப்பட்டால் என்ன நேரிடும்? கீழே உள்ள பிரச்சினைகளை பரிசீலனை செய்து, எந்த துறை, எந்த முறையில் அதன் பணிகளைச் செய்ய வேண்டுமோ என்று கவனித்து, இச்சட்டம் அமுலாக்கப்படுவதில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதை பரிசீலிக்கவும்.

- வெண்ணிலா என்னும் விவசாயி புதிய ஆழ்துளை கிணறு தோண்ட வேண்டும் என விரும்புகிறாள். ஆனால் பக்கத்து நிலத்தில் மற்றொரு ஆழ்துளை கிணறு உள்ளது. அவள் எந்த சட்ட விதிகளைப் பின்பிற்ற வேண்டும்?
- வசந்தன் என்பவர் புதிய வீடு கட்ட வேண்டும் என்று விரும்புகிறார். வீடுகட்ட அருகிலுள்ள ஆற்றுப்படுகையிலிருந்து மணல் கொண்டுவர நினைக்கிறார். இதற்கு யாருடைய அனுமதியை பெற வேண்டும்.
- அப்பாதுரை என்பவர் ஒரு ஒப்பந்தக்காரர். இவர் காட்டுக்கு அருகில் கல்குவாரியை துவக்க விரும்புகிறார். அவர் எந்த துறையிடமிருந்து அனுமதியை பெற வேண்டும்.

SCERT TELANGANA

இவ்வாறாக நம் நாட்டைப்போன்று மக்களாட்சி நடைபெறும் நாடுகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இது பழைய காலத்தில் நம் மீது அதிகாரம் செலுத்திய மன்னர்கள் மற்றும் மத போதகர்களின் சர்வாதிகார முறையிலிருந்து மாறுபடுகிறது. இதனால், சமுதாயத்தில் இருந்து ஏற்றத்தாழ்வுகள், வேறுபாட்டு உணர்வுகள் மறைந்துவிட்டன என்ற அர்த்தமல்ல. ஆனால், இவை இல்லாத சமுதாயத்தை சாதித்திட நாம் ஒன்றுபட்டு பணியாற்ற முடியும்.

**முக்கியச் சொற்கள் :**

1. மேஜிஸ்ட்ரேட்
2. தாசில்தார்
3. சட்ட அமலாக்கம்
4. கிராம வருவாய் அலுவலர்
5. கின்னிங்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. மாவட்ட ஆட்சியரின் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.(AS1)
2. கீழ்காணும் வாக்கியங்களை சரி செய்க.(AS1)
   (அ) சட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அமுலாக்கப்படுகிறது.
   (அ) மண்டல அலுவல்களுக்கு மாவட்ட ஆட்சியர் பொறுப்பு வகிக்கிறார்.
   (இ) மாவட்டத்தின் அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்க மக்கள் மண்டல அதிகாரியை அணுகுகிறார்கள்.
   (ஈ) நில வருவாய் ஆவணங்களை மண்டல வருவாய் அதிகாரி (தாசில்தார்) பராமரிக்கிறார்.
3. பக்கம் 160ல் உள்ள முதல் இரண்டு பத்திகளை படித்து கீழ்காணும் வினாவிற்கு விடையளி. கிராம மற்றும் மண்டல நிலைகளில் நில ஆவணங்கள் ஏன் பராமரிக்கப்பட்டு வருகின்றன? இந்நிலை அதிகாரிகளின் கடமை என்ன?(AS2)
4. சென்ற இரண்டு பாடங்களில் சட்டங்களை இயற்றுவது பற்றியும், அவற்றை அமுல்படுத்துபவர்கள் பற்றியும் தெரிந்துக்கொண்டோம். அவர்களின் பங்கை கீழே உள்ள பட்டடியலில் பதிவு செய்யும் அரசு அதிகாரிகளின் பங்களிப்பை விவரிக்கவும்.(AS1)
   (அ) தேர்தலில் போட்டியிடுதல்
   (ஆ) அரசின் வெவ்வேறு துறைகளின் பங்கு
   (இ) சட்டங்களை இயற்றுவதில் பங்கு
   (ஈ) சட்டங்களை அமுலாக்குவதில் பொறுப்பு.
   (உ) மக்கள் பிரதிநிதிகளை ஐந்து ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுப்பதில் பங்கு
   (ஊ) வெவ்வேறு பணிகளுக்கு பணி நியமனம்.

| சட்டமன்ற உறுப்பினர் | அரசு நிர்வாகத்தில் அதிகாரிகள் |
|---|---|
| | |
| | |
| | |



SCERT TELANGANA

5. மாவட்ட ஆட்சியர் மனிஷா நெகல் பற்றி சில தகவல்கள் இங்கே தரப்பட்டுள்ளன. கீழே உள்ளவற்றைப் படித்து, அவற்றை இப்பாடநூலின் 16 வது பாடமாக உள்ள மன்சப்தார் மற்றும் ஜாகிர்தாரர்கள் மற்றும் 15-வது பாடமாக உள்ள அமரநாயக்கர்கள் ஆகியவையுடன் ஒப்பிடுக.(AS3)

கடந்த ஐந்து வருட காலமாக நல்லவரத்தின் மாவட்ட ஆட்சியராக மனிஷா இருந்து வருகிறார். அவர் மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்படுவதற்கு முன்பு மக்கள் சுகாதாரத்துறையில் துணைச் செயலாளராக மாநில தலைநகரில் பணியாற்றி உள்ளார். அவரை வேறு மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சியராகவோ, அல்லது மாநில தலைமைச் செயலக பணியிலோ அமர்த்தக் கூடிய வாய்ப்பு உள்ளது. அவர் இந்திய அரசாங்கத்தின் பணியாளராக உள்ளார். இது போன்ற அதிகாரிகளின் சிலர் புதுடில்லிக்கும் மாறுதல் செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் இந்திய அரசு தேர்வாணையத்தின் மூலம் பணியமர்த்தப்படுபவர்கள்.

| பொருள் | அரசு ஊழியர்கள் | நாயக்கர்கள் | மன்சப்தார்கள் |
|---|---|---|---|
| தேர்வு முறை | | | |
| சம்பளம் | | | |

6. உங்களுடைய மாவட்ட வரைபடத்தில் நீங்கள் வசிக்கும் மண்டலத்தை சுற்றியுள்ள மண்டலங்களை வண்ணமிட்டுக் காட்டுக.(AS5)

**கலந்துரையாடல் :** வருவாய் துறையுடன் மாணவர்களின் கலந்துரையாடலை "சட்டங்களை அமல்படுத்துதல்" எனும் தலைப்பில் ஒரு விவாதத்தை நிர்வகிக்கவும்.

**திட்டப்பணி** : (Project work)

1. நீங்கள் உங்கள் பள்ளி ஆசிரியரிடம் அவர் எவ்வாறு பணியில் நியமிக்கப்பட்டார் என்பதைக்கேட்டுத் தெரிந்துக்கொள்ளுங்கள். அவர்கள் அரசின் எந்தத்துறைக்குப் பொறுப்பு வகிக்கிறார்கள்? அந்த ஆசிரியர் எப்போதாவது மாறுதல் செய்யப்பட்டாரா? அவர் எவ்வாறு பதவி உயர்வு அல்லது இறக்கம் பெற்றார்? அவருடைய சம்பளத்திற்கு யார் பொறுப்பு வகிக்கின்றார்? பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளை அவர் யாரிடம் புகார் அளிக்க வேண்டும்?
2. குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், மதிய உணவு அளித்தல் மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் ஆசிரியர்களின் பங்கு என்ன? நீங்கள் அறிந்த செய்திகளை வகுப்பறையில் விவரியுங்கள்.

SCERT TELANGANA

பாடம் 18

# ஜாதி வேறுபாடு மற்றும் சமத்துவத்திற்கான போராட்டம்

ஜாதி முறை நம் நாட்டில் மிகப்பெரும் சமத்துவமின்மையை உருவாக்கி உள்ளது. பல நூற்றாண்டுகளாக இவ்வேறுபாட்டை எதிர்த்து மக்கள் போராடினார். நமது அரசியலமைப்பு சட்டமும் இம்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்திட முயன்று வருகிறது. ஜாதி வேற்றுமைகளை நீக்குவது நமது அரசாங்கங்களின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. ஜாதி முறை எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றியும், ஜாதி வேற்றுமைகளை முடிவுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், நாம் இந்த பாடத்தில் படித்தறிய இருக்கிறோம்.

நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் தங்களை ஏதாவது ஒரு ஜாதியை சேர்ந்தவர் என கருதுகின்றனர். அவர்களின் ஜாதிப் பெயர்களை, தங்களுடைய பெயரோடு சேர்த்து கொள்கின்றனர். வழக்கமாக ஒரு ஜாதியை சேர்ந்த மக்கள் பொதுவான மரபுகளை பின்பற்றுகின்றனர். சில குறிப்பிட்ட கடவுள்களை வணங்குகின்றனர். ஜாதி நியமங்களை பின்பற்றும் பெரும்பாலோர் அவர்களின் ஜாதியை சேர்ந்தவரை மட்டும் மணந்து கொள்கின்றனர். பழங்காலத்தில் ஒரு ஜாதியை சேர்ந்த மக்கள் ஒரே விதமான தொழில் அல்லது வேலையை செய்து வந்தனர். நம்முடைய காலத்தில் இது விரைவாக மாறி வருகிறது. இவ்வாறு ஜாதிமுறை ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவில் பிணைப்பை உண்டாக்கி, அவர்களை பிற மக்களிடம் இருந்து பிரிக்கிறது.

- உங்கள் பகுதியில், ஜாதிமுறை குறித்து மேலே கூறப்பட்ட அம்சங்கள் எவ்வாறு உண்மையானதாக உள்ளன? என்பதை குறித்து உன் வகுப்பறையில் கலந்துரையாடு, அவை எந்த அளவு ஜாதிமுறை மாறியுள்ளது என்பதையும் விவாதிக்கவும்.

அது மட்டுமின்றி, ஜாதிமுறை அதிக அளவு சமத்துவமின்மையையும், வேறுபாடுகளையும் நமது சமுதாயத்தில் ஏற்பட காரணமாக உள்ளது. இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை காண்போம்.

மக்கள் தங்களின் வாழ்க்கைக்கு தேவையான பணத்தை சம்பாதிக்க கல்வி கற்பித்தல், தச்சுவேலை, மண்பாண்டம் செய்தல், நெசவு, மீன்பிடித்தல், பயிர்கள் விளைவித்தல் போன்ற பல்வேறு வேலைகள் செய்கின்றர். இருப்பினும், சில வகை வேலைகள் பிற வேலைகளை காட்டிலும் அதிகமாக மதிப்பிட்டு பார்க்கப்படுகின்றன. சுத்தம் செய்தல், துவைத்தல், முடிவெட்டுதல், குப்பைகளை அகற்றுதல் போன்ற வேலைகளை செய்வோர் அசுத்தமானவர்கள் அல்லது தூய்மை அற்றவர்கள் என்றும் கருதப்படுகின்றனர். இந்த நம்பிக்கை ஜாதிமுறையின் மிக முக்கிய தன்மை ஆகும். ஜாதி முறையில் மக்களின் சமுதாயங்கள் அல்லது குழுக்கள் ஒரு வகையான ஏணிப் படிகள் போன்று அமர்த்தி வைக்கப்பட்டுள்ளன.


இதில் ஒவ்வொரு ஜாதியும், மற்ற ஜாதியை உயர்ந்தோ, தாழ்ந்தோ காணப்படும். இந்த ஏணி அமைப்பில் எந்த ஜாதி உயர்ந்த இடத்தில் வைக்கப்படுகிறதோ அந்த ஜாதியினர் தங்களை உயர்ந்த ஜாதியினர் என்று அழைத்துக் கொண்டனர். தங்களை உயர்ந்தோர் என நினைத்தனர். ஜாதி அமைப்பு ஏணியின் அடிபாகத்தில் உள்ளோர் மதிப்பற்றவர்களாக கருதப்பட்டனர். அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்பட்டனர். தீண்டத்தகாதவர்கள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வேலைகளை தவிர பிற வேலைகளை செய்யவிடாதபடி ஜாதி விதிகள் நடைமுறையில் இருந்தன. எடுத்துக்காட்டாக, சில ஜாதி குழுக்கள் கிராமத்தில் குப்பைகளை அகற்றவும், இறந்த விலங்குகளை அப்புறப்படுத்தவும் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். அவர்களை உயர் ஜாதி மக்களின் வீடுகளுக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

SCERT TELANGANA

கிராமத்தின் பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல தடை இருந்தது. கோவில்களுக்கு உள்ளே செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. அவர்களுடைய குழந்தைகள் பள்ளியில் பிற ஜாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் பக்கத்தில் சமமாக உட்கார முடியாது. இவ்வாறு உயர்ஜாதி மக்கள் பெற்று வந்த உரிமைகளை தீண்டத்தகாதவர் பெற முடியாத வண்ணம் நடந்து கொண்டனர்.

- ஜாதிமுறை மக்களிடையே சமத்துவமின்மை எவ்வழிகளில் வளர்க்கிறது என்று நீ கருதுகிறாய்?

கல்வி பெறுதல், விரும்பிய வேலையை செய்தல் போன்றவற்றை சமுதாயத்தில் சில மக்கள் அனுமதிக்கப்படாத போது அவர்கள் ஜாதி பாரபட்ச போக்கை எதிர் கொண்டுள்ளனர் என நாம் கூறலாம் Dr.பீமாராவ் அம்பேத்கர் இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களுள் ஒருவர். இவர் 1901 ஆம் ஆண்டு ஜாதியை அடிப்படையாக கொண்ட பாரபட்ச போக்கை எதிர்கொண்ட தனது அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். அப்போது அவருக்கு வயது ஒன்பது. அவன் தன்னுடைய சகோதரர்களுடன் தன் தந்தையை சந்திக்க கோரேகான் என்னுமிடத்திற்கு சென்றார். இது தற்போது மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளது.



டாக்டர். B.R.**அம்பேத்கர்**
(1891-1956)

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வரைவு குழுவின் தலைவர் மற்றும் முதன் முதல் இந்திய நாட்டின் சட்டத்துறை அமைச்சர் ஆவார்.

நாங்கள் நீண்ட நேரம் காத்திருந்தோம். ஆனால் எங்கள் பக்கமாக யாரும் வரவில்லை. ஒரு மணி நேரம் கழித்து ரயில் நிலைய அதிகாரி வந்தார். எங்களிடம் பயண சீட்டு இருக்கிறதா? எனக் கேட்டார். எங்களுடைய பயண சீட்டுகளை அவரிடம் காட்டினோம். நீங்கள் ஏன் காத்திருக்கிறீர்கள் என கேட்டார். நாங்கள் கோரோன்கான் (Koregaon) செல்ல வேண்டும். எங்களுக்காக எங்கள் தந்தை அல்லது வேலையாள் வருவார்கள் என்று காத்திருக்கிறோம். ஆனால் யாரும் வரவில்லை. ஆனால், எங்களுக்கு கோரேகான் சென்றடையும் வழி தெரியாது. என்றோம். நாங்கள் நல்ல ஆடைகள் அணிந்திருந்தோம். எங்கள் ஆடைகள் அல்லது பேசும் மொழி போன்றவற்றால் எங்களை தீண்டதகாதவர்களுடைய குழந்தைகள் என்று யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. ரயில் நிலைய அதிகாரி எங்களை பிராமண குழந்தைகளாக நினைத்து தொட்டு பேசினார். எல்லோரை போலவே, ரயில் நிலைய அதிகாரி நாங்கள் யார் என்று கேட்டார். உடனே நாங்கள் "மஹர்கள்" வகுப்பை சேர்ந்தவர்கள் என்று கூறினோம். (மஹர் வகுப்பினர் பம்பாய் மாகாணத்தில்) தீண்ட தகாதவர்களாக கருதப்பட்டனர்) அதை கேட்டவுடன் அவர் அதிர்ச்சி அடைந்தார் அவருடைய முகம் திடீரென மாறிவிட்டது. தன் முகத்தில் ஏற்பட்ட அருவெறுப்பான உணர்வுகளை மறைத்திட அவரால் முடியவில்லை.

எங்களுடைய பதிலை கேட்டவுடன் அவர் எங்களை விட்டு விலகி அவருடைய அறைக்குச் சென்றார். நாங்கள் அங்கேயே நின்றிருந்தோம்.

பதினைந்து முதல் இருபது நிமிடங்கள் கழிந்தது. ஏறக்குறைய சூரியன் மறைந்து கொண்டிருந்தது. ஆனால் என்னுடைய அப்பாவோ, அவருடைய வேலைக்காரரோ வரவில்லை. ரயில் நிலைய அதிகாரியும் எங்களை விட்டு சென்றுவிட்டார். நாங்கள் தடுமாற்றம் அடைந்தோம். பயணத் துவக்கத்தில் இருந்த மகிழச்சியும் உற்சாகமும் மறைந்து மிகுந்த வருத்த உணர்வை ஏற்படுத்தியது.

அரை மணி நேரம் கழித்து, ரயில்நிலைய அதிகாரி மறுபடியும் எங்களிடம் வந்தது, "நீங்கள் என்ன செய்ய நினைத்திருக்கிறீர்கள்" என கேட்டார். அதற்கு தாங்கள், எங்களுக்கு வாடகைக்கு மாட்டு வண்டி கிடைத்தால் கோரேகான் சென்றிடுவோம்.

SCERT TELANGANA

அந்த இடம் வெகுதூரம் இல்லையென்றால் நடந்தே சென்று விடுவோம். என்று கூறினோம் அந்த ரயில் நிலையத்தின் அருகே வாடகை மாட்டு வண்டிகள் நிறைய இருந்தன. ஆனால் நாங்கள் மஹார்கள் வகுப்பை சேர்ந்தவர்கள் என்று ரயில் நிலைய அதிகாரியிடம் கூறியது அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே பேசி கொண்டனர். அவர்களில் ஒருவர் கூட எங்களை வண்டியில் ஏற்றிச் சென்று தீண்ட தகாதவரை அழைத்துச் சென்ற அவப்பெயரை வாங்க, முன்வரவில்லை. நாங்கள் இரண்டு மடங்கு வாடகையை தந்திடவும் தயாராக இருந்தோம். ஆனால் பணம் அவர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எங்கள் சார்பாக பேச நினைத்த ரயில் நிலைய அதிகாரிக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை, பேசாமல் இருந்து விட்டார்.

ஆதாரம் : டாக்டர் B.R.அம்பேத்கர்

இயற்றியவை மற்றும் உரைகள்.

Volume : 12 தொகுப்பு வசந்த் மூன், மும்பை கல்வித்துறை, மஹாராஷ்ரம் மாநில அரசாங்கம்

- சிறுவர்கள் இரு மடங்கு பணத்தை தருவதற்கு முன் வந்தாலும் மாட்டுவண்டிக்காரர்கள் அவர்களை ஏற்றிச் செல்ல ஏன் மறுத்தனர்?
- ரயில் நிலையத்தில் இருந்தவர்கள், டாக்டர். அம்பேத்கர் மற்றும் அவரது சகோதரர்களிடம் எவ்வாறு பாரபட்ச போக்குடன் நடந்து கொண்டனர்?
- சிறு வயதில் இருந்த டாக்டர் B.R.அம்பேத்கர், தாங்கள் மஹர் ஜாதி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று ரயில் நிலைய அதிகாரியிடம் கூறிய போது, அவர் நடந்து கொண்ட முறையை பார்த்து, எப்படிப்பட்ட உணர்வை பெற்றிருப்பார் என்று நீ கருதுகிறாய்?
- நீ எப்போதாவது ஜாதி வேறுபாடான பாரபட்சத்திற்கு ஆளாகிறாயா? அல்லது அப்படிப்பட்ட நிகழ்ச்சியை பார்த்திருக்கிறாயா?
- இந்நிகழ்வு உன்னை எவ்வாறு யோசிக்க வைத்தது?

மக்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு சுலபமாக செல்ல முடியாமல் போனால் எவ்வளவு சிரமமாக இருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். உன்னை விட்டு விலகிச்சென்று, தீண்டத்தகாதவனாக பார்த்தால், எல்லோரும் குடிக்கும் நீரை பயன்படுத்தவிடாமல் உன்னை தடுத்தால், உனக்கு எவ்வளவு அவமானம், வேதனை ஏற்படுமோ என்பதை பற்றி கற்பனை செய்துப்பார்.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாட்டு வண்டியில் செல்ல பணம் கொடுத்தாலும் வாடகைக்கு வண்டி கிடைக்கவில்லை என்றும் இச்சிறு சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. ரயில் நிலையத்தின் அருகே எல்லா மாட்டுவண்டிகாரர்களும் அச்சிறுவர்களை ஏற்றிச் செல்ல மறுத்தனர். அவர்கள் ஜாதிபாரபட்சத்துடன் நடந்து கொண்டனர். இச்சம்பவம் நமக்கு, ஜாதி அடிப்படையில் பாரபட்சபோக்கு, தலித்மக்களை சில பொருளாதார செயல்களை செய்வதில் இருந்து தடுத்தது மட்டுமன்றி அவர்களுக்கு பிறரைப் போன்று கௌரவமும், அந்தஸ்தும் கிடைக்காமல் செய்து விட்டது என்பதை எடுத்து காட்டுகிறது.

### பள்ளிக்கூடங்களில் பாரபட்ச போக்கு

ஓம் பிரகாஷ் வால்மீகி பிரசித்தி பெற்ற எழுத்தாளர். ஜூதான் என்னும் தன் சுயசரிதை புத்தகத்தில் இவ்வாறு எழுதி உள்ளார். நான் வகுப்பறையில் மற்றவரிடம் இருந்து விலகி தொலைவில் தரையில் உட்காருவேன். நான் உட்காரும் இடம் வரை தரைப்பாய் இருக்காது. சில சமயங்களில் கதவின் அருகே எல்லோருக்கும் பின்னால் அமர வேண்டி இருக்கும். சில சமயங்களில் எந்த வித காரணமும் இன்றி என்னை அடித்தனர். ஓம் பிரகாஷ், நான்காம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது, தலைமை ஆசிரியர் அவரை பள்ளிக்கூடத்தையும், விளையாட்டு மைதானத்தையும் பெருக்கச் சொன்னார். அது குறித்து இவ்வாறு எழுதுகிறார்.

விளையாட்டு மைதானம் மிகவும் பெரியது. சிறுவனாக இருந்த எனக்கு, அதையெல்லாம் சுத்தம் செய்வதால் முதுகெலும்பு வலித்தது. என் முகம் எல்லாம் தூசு நிரம்பி விடும். தூசு என்னுடைய வாய்க்குள்ளும் போய்விடும். என் வகுப்பில் மற்ற மாணவர்கள் படித்து கொண்டிருக்கும் வேளையில் நான் பெருக்கி கொண்டு இருப்பேன். தலைமை ஆசிரியர் தனது அறையில் அமர்ந்தபடி என்னை கவனித்து கொண்டிருப்பார். குடிநீரை குடிக்க கூட அவர் அனுமதிக்க மாட்டார். நாள் முழுவதும் பெருக்கினேன். கதவுகள், ஜன்னல்கள், பள்ளியில் இருந்த அறைகளையும் சுத்தம் செய்தேன். நான் இவ்வேலைகளை செய்து கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டு இருப்பார்கள். ஓம் பிரகாஷ் இவ்வாறு பள்ளியையும், விளையாட்டு மைதானத்தையும் மேலும் இரண்டு நாட்கள் சுத்தம் செய்தார்.

SCERT TELANGANA

ஓம்பிரகாஷின் தந்தை ஒருநாள் அவ்வழியாக செல்லும்போது, தன்னுடைய மகன் பெருக்கி கொண்டிருப்பதை கண்டார். அவர் ஓம் பிரகாஷின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று கொண்டே ஆசிரியர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார். நீங்கள் ஆசிரியர்கள்......எனவே நான் விட்டுச் செல்கிறேன்..... ஆனால் இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.....இவன் இங்கேயே, இப்பள்ளியிலேயே படிப்பான். இவன் ஒருவன் மட்டுமல்ல, இவனுக்கு பின்னால் நிறைய பேர் வந்து படிக்கப் போகிறார்கள் என்றார்.

- ஓம் பிரகாஷ் வால்மீக் ஏன் தன்னுடைய வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியரால் பாரபட்சமாக நடத்தப்பட்டார் எனக் கருதுகிறீர்கள்?
- உன்னை ஓம் பிரகாஷ் வால்மீகி என்று கற்பனை செய்துக் கொண்டு, அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீ அவரை போல் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய் என்தை நான்கு வரிகளில் எழுதிக்காட்டுக.

எந்த ஒரு நபரையும் சமமின்றி பாரபட்சமாக நடத்தப்படுவதால், அவருடைய அந்தஸ்துக்கு களங்கம் ஏற்படுகிறது. ஓம் பிரகாஷ் வால்மீகியுடன் தலைமை ஆசிரியர் நடந்து கொண்ட விதத்தால் அவருடைய கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தினார் பள்ளிக்கூடம் முழுவதையும் பெருக்கிட ஓம் பிரகாஷை தேர்ந்தெடுத்ததற்கு அவரது ஜாதியே காரணமாகும். அவரை மாணவர்கள், ஆசிரியர்கள் மிக மோசமான அளவிற்கு கௌரவமின்றி நடத்தினர். அவர் தன்னை பள்ளியில் உள்ள பிற மாணவர்களை காட்டிலும் தாழ்ந்தவர் என்று நினைக்கும்படி செய்து விட்டனர். ஓம் பிரகாஷ் வால்மீகி சிறுவனாக இருந்ததால், இந்நிலையை எதிர்த்து போராட முயற்சிக்கவில்லை. அவருடைய தந்தையார் தன்னுடைய மகனை பாரபட்சமாக நடத்தி, பள்ளியை பெருக்கச் செய்த செயலுக்கு கோபம் கொண்டு எதிர்ப்பு தெரிவித்தார்.

தற்காலத்தில் பல ஆசிரியர்கள் மாணவர்களிடையே சமத்துவத்தை உறுதிபடுத்த சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. த-த் இன மாணாக்கர்களை கல்வி கற்றிட ஊக்கப்படுத்துவதுடன், பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் செய்கின்றனர். எல்லா குழந்தைகளும் ஒன்றாக அமர்ந்து மதிய உண்ணவும், உணவு மற்றும் குடிநீரை ஒருவருக்கொருவர் பரிமாறி கொள்ளவும் கற்று தருகின்றர்.

- உங்கள் பள்ளியில் (அல்லது) அருகிலுள்ள பள்ளிகளில், இப்படிப்பட்ட முயற்சிகளை நீங்கள் கண்டீர்களா? வகுப்பறையில் அந்த அனுபவங்களை குறித்து பகிர்ந்துகொள்ளுங்கள்.

### எப்போதும் இப்படியே இருக்குமா?

இல்லை, ஒரு காலத்தில் ஜாதிமுறை நடைமுறையில் இல்லை. வேட்டையாடி உணவு சேகரிப்போர், மலைவாழ், நாடோடி மக்களிடையே ஜாதிமுறை இருக்கவில்லை.

ஜாதிமுறையில் சில அம்சங்கள் வேதகாலங்களில் உருவானது. வேதங்களில் நான்கு ஜாதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் முதலியனவாகும். அதன் பிறகு தீண்டாமை, திருமணம் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகள், ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிடுவதில் கட்டுப்பாடுகள் போன்ற புதிய அம்சங்கள் தோன்றின. உயர்ஜாதி மக்களுக்கு கீழ் ஜாதி மக்கள் பணிகள் செய்து கீழ்படிந்து நடந்து கொள்ளவேண்டும் என்று கருதப்பட்டது. இப்படிப்பட்ட கருத்துக்கள் நம் ஆந்திர பிரதேசம் உட்பட்ட இந்தியா முழுவதும் பரவியது. நீங்கள் 13 மற்றும் 14 ஆம் பாடத்தில் படித்தபடி அக்காலத்திய ஆட்சி பரப்புகளில் ஜாதி முறை குறித்த கருத்துக்கள் பரவியது. இக்கருத்துகளை பலர் குறை கூறினர். புத்தர், மஹாவீரர், ராமானுஜர், பசவா, கபீர், வேமனா முதலிய சிந்தனையாளர்கள் ஜாதி முறையை குறை கூறினர். பிறப்பால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என முடிவு செய்யும் கருத்தை ஏற்கவில்லை. அவர்கள் கருத்துப்படி, பிறப்பு அல்லது செய்யும் தொழில் எதுவாயினும் மக்கள் நற்செயல்கள் செய்து மோட்சம் அடைய முடியும் என்பதாகும். அவற்றை குறித்து அடுத்து வரும் பாடங்களில் விவரமாக படித்தறிய போகிறீர்கள்.

### சமத்துவத்திற்கான போராட்டம் :

ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்பட்டது குறித்தும், அதை எதிர்த்து நடந்த போராட்டம் குறித்தும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கு நடந்த போராட்டம் பெரும்பான்மை மக்களுக்காகவும், சமத்துவத்தை அடைவதற் காகவும், நடத்தப்பட்டது. தலித்கள், பெண்கள், பழங்குடியினர் மற்றும் விவசாயிகள் போன்றோர்

SCERT TELANGANA

தங்களின் வாழ்க்கையில் சமத்துவமற்று நடத்தப்பட்ட அலுவலங்களை எதிர்த்து போராட்டம் நடத்தினர்.

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மனித கௌரவம், பொருளாதார நீதி போன்றவற்றை அடிப்படையாக கொண்ட சமுதாய அமைப்பை உருவாக்க போராட்டங்கள் நடத்தினர். அவர்களில் ஜோதிராவ் கோவிந்தராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், ஸ்ரீ நாராயணகுரு, அய்யன் காலி முதலியோர் அடங்குவர்.

**பி.எஸ்.வெங்கடராவ் (1896-1953) :**

பதுல வெங்கட ராவ் ஐதராபாத்தின் காஸ்மண்டியில் பிறந்தார். அவர் ராவ் சாஹப் என்று புகழப்பெற்றார். அவருடைய தந்தையான பதுல சாயண்ணா ஐரோப்பியரின் வளர்ப்பு ஊழியராக இருந்தார். பி.எஸ்.வெங்கடராவ் ஒன்பதாம் வகுப்பு வரை பயின்றார். ஆங்கிலம், உருது, பெர்சிய மற்றும் மராத்தி மொழிகளில் புலமை பெற்றிருந்தார். நிஜாம் அரசில் பொதுப்பணித் துறையில் அவர் இணைவதற்கு முன் புனேவில் சிற்பியாக பணியாற்றி வந்தார். விடுதலைக்கு முன் அவர் நிஜாம் அரசின் மிக உயர்ந்த பதவிக்கு முன்னேறினார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மீது தீண்டாமையின் தாக்கத்தை கண்டும் அதை அனுபவித்தும் வந்த அவர் அதை நீக்க முடிவு செய்தார். எம்.கோவிந்த ராஜுலு மற்றும் எம்.வெங்கடசாமி போன்ற மக்களின் துணையுடன் 1922ல் தீண்டாமையை ஒழிக்கும் நோக்கத்துடன் ஆதி திராவிடர் சங்கத்தை அமைத்தார். தேவதாசி முறையை ஒழிப்பதும் தலித்துகளிடையே ஒற்றுமையை கொண்டு வருவதும் இதன் முக்கிய நோக்கங்களில் அடங்கும். பிறகு 1927 ஏப்ரலில் அவர்கள் ஆதி இந்து மகா சபையை தொடங்கினர். பத்தாண்டுகளுக்கு பிறகு புனேவில் ஓர் செல்வாக்குமிக்க விவாதத்திற்கு பின் அம்பேத்கர் தொண்டர்களை கொண்டு இளைஞர் சங்கத்தை உருவாக்கினர். அவர்களின் நோக்கம் கல்வி கற்ற தலித் இளைஞர்களுக்கு சாதி அடிப்படையில் அவர்கள் ஏய்க்கப்படுவதை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இது பின்னர் ஐதராபாத் மாநில ஒடுக்கப்பட்ட வகுப்பினர் கழகம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

இந்த அமைப்பின் தலைவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சென்று சாதிக் கொடுமைகளை பற்றி வுழிப்புணர்வை ஏற்படுத்த மக்களிடையே கூட்டங்களை நடத்தினர். தலித் சாதியின் விடுதலைக்கு நாட்டில் இயக்கங்களை நடத்துதல் அவர்கள் ஒன்றுபட்டு தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ள முயற்சிகள் எடுக்க வேண்டும் எனவும் அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அவர்களில் சிலர் மத சீர்த்திருத்தத்தையும் மேம்படுத்தி தலித்துகளை சாதி மூடப்பழக்கங்களிலிருந்தும் விடுவித்தனர்.

அவர்கள் கஸ்மண்டி பகுதியில் வீடுகளையும் நூல்நிலையத்தையும் ஏற்படுத்தி அதற்கு ஓளதி நகர் என்று பெயரிட்டனர். ஐதராபாத் நகரத்தின் குறுக்கே தலித்துகளுக்காக 18 கோயில்களையும் அவர்கள் கட்டினர். ஐதராபாத்தில் தலித்தகளின் முன்னேற்றத்திற்காக பி.எஸ்.வெங்கடராவ் ஆற்றிய தொண்டு டாக்டர். பாபா சாகிப் அம்பேத்கராலும் அங்கீகரிக்கப்பட்ட பம்பாயில் 1936ல் பம்பாய் மாகாண மகர் மாநாட்டிற்கு தலைமைத் தாங்கவும் அம்பேத்கரால் அழைக்கப்பட்டார். மாநாட்டில் 10000பேர் கலந்து கொண்டு டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரால் தொடங்கப்பட்ட இயக்கத்திற்கு ஒருமனதாக ஆதரவு தர தீர்மானித்தனர்.

1947ஆம் ஆண்டு ஏப்ரல் 1ல் ஐதராபாத் சட்டசபையில் பாளையம் பிள்ளையால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தி குழுத் தலைவரிடம் மாநிலத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் மேம்பாட்டிற்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்க பரிந்துரை செய்யப்பட்டது. அந்த மானியத் தொகை ஒரு கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென்று அத்தீர்மானத்தின் மீது திருத்தத்தை கொண்ட வந்தவர் திரு வெங்கட ராவ் ஆவார். சபையானது ஒரு கோடி நிதியை ஒதுக்க பிரதம மந்திரிக்கு பரிந்துரை செய்ய ஒப்புக் கொண்டது. அதன்படி நிஜாம் அரசு ஒடுக்கப்பட்டோர் நல நிதியை ஏற்படுத்தி அதற்கு ஒரு கோடி நிதியை ஒதுக்கியது. நிஜாம் அரசு அவருக்கு தக்காணத்தின் குஸ்ரு (குஸ்ரு-இ-தக்காண்) என்னும் பட்டத்தை வழங்கி சிறப்பித்தது.

1952க்கு பின் அவர் மாநில சட்ட சபையால் ராஜ்ஜிய சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**சுதந்திரத்திற்கு பின் சமத்துவமின்மை :**

இந்திய நாடு 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தபோது, நாட்டில் நிலவிய பல்வேறு சமத்துவமின்மைகளை போக்கிட நம் தலைவர்கள் தீவிரமாக ஆலோசித்தனர். நாட்டின்

SCERT TELANGANA

நிர்வாகம் செயல்படுவதற்கான விதிமுறைகள் அடங்கிய பதிவேடு அதாவது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு, நமது நாட்டின் சமுதாயத்தில் நிலவிய பல்வேறு ஏற்றதாழ்வுகள், பாரபட்ச போக்குகள் குறித்து நன்கு தெரிந்திருந்தது. சமூக ஏற்ற தாழ்வுகளை எதிர்த்து மக்கள் எவ்வாறு போராடினர் என்பதை பற்றியும் அறிந்திருந்தனர். இப்போராட்டங்கள் நடத்திய தலைவர்களுள் டாக்டர், B.R.அம்பேத்கர் போன்றோர் தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடினர்.

எனவே, அத்தலைவர்கள் அரசியலமைப்பு சட்டத்தின் இலட்சியங்களை நிர்ணயிக்கும் போது இந்திய மக்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுமாறு ஏற்ற அம்சங்களை உருவாக்கினார். இச்சமத்துவ கொள்கை இந்திய மக்கள் அனைவரையும் பிணைக்கும் முக்கிய கொள்கையாகும் ஒவ்வொருவருக்கும் சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகள் உள்ளது. தீண்டாமை ஒரு குற்றமாக கருதப்படுகிறது. சட்டப்படி அப்பழக்கம் ஒழிக்கப்பட்டுள்ளது. மக்கள் அவர்கள் விரும்பும் வேலைகளை செய்து வாழும் உரிமை தரப்பட்டுள்ளது. அரசாங்க வேலைகள் தகுதியுள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் தரப்படுகின்றன. அரசியலமைப்பு சட்டம் ஏற்பாடு செய்தது மட்டுமின்றி, ஏழை மற்றும் பின்தங்கிய மக்களின் சமத்துவத்தை நிலை நாட்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொறுப்பையும் அரசியலமைப்பு சட்டம் அரசாங்கங்களுக்கு கொடுத்துள்ளது.

சமத்துவத்தை ஏற்படுத்த அரசாங்கம் இரண்டு விதங்களாக முயன்று வருகிறது. அவற்றுள் ஒன்று சட்டங்கள் இயற்றி நடைமுறைப்படுத்துதல். இரண்டாவது அரசாங்க திட்டங்கள் மூலமாக நலிந்த பின்தங்கிய மக்களுக்கு உதவிகள் செய்தல் போன்றவை ஆகும். இந்தியாவில் ஒவ்வொரு மனிதனும் சமமாக நடத்தப்பட பல சட்டங்கள் உள்ளன. அரசாங்கம் பல நல்வாழ்வு திட்டங்களை தீட்டி, பின்தங்கிய நலிந்த இன மக்களின் மேம்பாட்டுக்காக அமுல்படுத்தி வருகிறது. அம்மக்கள் பல நூற்றாண்டுகளாக சமத்துவமின்றி நடத்தப்பட்டு வந்தனர். இந்தநல்வாழ்வு திட்டங்கள் பெரும்பாலான மக்களுக்கு கடந்த காலத்தில் இல்லாத பெரிய வாய்ப்பாகும்.

அரசாங்கம் மேற்கொண்ட நல்வாழ்வு திட்டங்களில் மதிய உணவு திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் படி எல்லா அரசு பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவ-மாணவியருக்கு சமைத்த உணவை அளிக்கின்றனர். இந்த திட்டத்தை முதலில் தமிழ்நாடு மாநிலம் நடைமுறைபடுத்தியது. சுப்ரீம் கோர்ட் 2001 ஆம் ஆண்டு, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் மதிய உணவு திட்டத்தை ஆறு மாதங்களுக்குள் அமுல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியது.

இத்திட்டத்தில் அனுகூலமான பலன்கள் கிடைத்துள்ளது. ஏழை குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் பள்ளிகளில் சேர்ந்தனர். பள்ளிக்கு தினசரி வருதல் மேம்பட்டது. முன்பு மாணவ-மாணவியர் மதிய உணவு சாப்பிட வீடுகளுக்கு சென்றனர். அச்சமயங்களில் அவர்களுடைய பெற்றோர், உணவு உண்ண வைக்க வேண்டியிருந்தது. ஆனால் தற்போது மதிய உணவு பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படுகிறது. எனவே பெற்றோரின் வேலைகளும் தடைபடாமல் நடக்கிறது. இத்திட்டம் ஜாதி வேறுபாடுகளை குறைப்பதில் பயன்பட்டுவருகிறது. ஏனெனில், உயர்ந்த, தாழ்ந்த ஜாதிகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிடுகின்றனர்.

நம் ஆந்திர பிரதேச மாநிலத்தில் பெரும்பாலான கிராமப்புற பள்ளிக்கூடங்களில் மதிய உணவு மகளிர் சுய உதவி குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களால் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களாக உள்ளனர். ஒரு சில இடங்களில் தலித் பிரிவைச் சேர்ந்த பெண்கள் உணவை சமைத்திட வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர். மதிய உணவு திட்டம் ஏழை மாணவ-மாணவிகளின் பசியை குறைப்பதில் உதவியாக உள்ளது. முன்பு ஏழை மாணவ-மாணவியர் காலியான வயிற்றோடு வந்தனர் மற்றும் படிப்பை ஒருமித்த கவனத்துடன் கற்க முடியாமல் இருந்தது. இந்நிலை தற்போது மாறிவருகிறது.

- மதிய உணவு திட்டத்தின் மூன்று பயன்கள் பட்டியலிட்டு காட்டுக.
- இத்திட்டம் சமத்துவத்தை மேம்படுத்த எவ்வாறு உதவுகிறது?

இத்திட்டம் சமத்துவத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன. மதிய உணவு திட்டம் ஏழை குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை மற்றும் பள்ளி வருகையை அதிகரித்துள்ளது. இருப்பினும் செல்வந்தர் குடும்ப குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடங்கள் மற்றும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கும் பள்ளிகள் இடையே அதிக வித்தியாசங்கள் காணப்படுகிறது.

SCERT TELANGANA

தலித் குடும்பத்தை சேர்ந்த ஓம் பிரகாஷ் வால்மீகி போன்ற குழந்தைகள் இன்றைய நிலைகளிலும் பல்வேறு பள்ளிக்கூடங்களில் ஜாதி பாரபட்ச போக்கை எதிர்கொண்டு தான் இருக்கின்றனர். இக்குழந்தைகள் பாரட்சமான சூழ்நிலைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்களின் கௌரவம் மதிக்கப்படுவதில்லை. சட்டம் கூறினாலும் மக்கள் அவ்வகுப்பை சேர்ந்தோரை சமமாக மதித்திட மறுக்கின்றனர்.

இதன் முக்கிய காரணம், மக்களின் பாரபட்ச மனப்பாங்கு மிக மெதுவாக மாறி வருகிறது. ஜாதிப்பெயரால் பாரபட்சம் காட்டுதல் சட்டப்படி குற்றம் என்று தெரிந்தும் மக்கள் ஜாதி அடிப்படையில் தாழ்த்தி நடத்துகின்றனர்.

எந்த ஒரு நபரும் தாழ்ந்தவர் அல்ல, ஒவ்வொருவரும் கௌரவத்துடன் நடத்தப்பட தகுதி உடையவர்கள் என்றும், மக்கள் நம்பி பின்பற்றினால் மட்டும், தற்போது உள்ள ஜாதி வேற்றுமை காட்டும் மனப்பாங்கு முற்றிலும் மாறமுடியும். சமத்துவத்தை நிலை நாட்டுவது ஜனநாயக சமுதாயத்தில் உள்ள ஒரு நிரந்தரமான போராட்டம் ஆகும். இதில் தனி மனிதர்கள் மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு சமுதாயத்தினரும் பங்காற்ற வேண்டி உள்ளது.

### முக்கியச் சொற்கள்

1. தீண்டாமை
2. நலத்திட்டம்
3. அரசியலமைப்புச் சட்டம்
4. சுய சரிதம்

### செயல் திட்டங்கள் :

1. உங்கள் பகுதியில் நடைமுறையில் உள்ள அரசு திட்டம் ஒன்றை கண்டறிந்து அத்திட்டம் செய்வது என்ன? அது எப்பிரிவு மக்களின் நன்மைக்காக உருவானது என்பன குறித்து விவரங்கள் சேரிக்கவும்.

2. உங்களது பெற்றோர் (அ) அவர்களின் பெற்றோரிடம் ஜாதி வேறுபாடு அவர்கள் குழந்தை பருவ காலத்தில் எவ்வாறு இருந்தது, படிப்படியாக என்னென்ன மாற்றங்கள் உண்டாயின? எவை பின்பற்றப்பட்டு வருகின்றன? என்பவற்றை குறித்து கேட்டறிந்து ஒரு அறிக்கையை தயாரித்து உன் வகுப்பறையில் சமர்ப்பித்து பார்வைக்கு வைத்திடுக.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. தவறு செய்வதால் தண்டிக்க படுவதற்கும், ஜாதி வேறுபாடு காட்டி நடந்து கொள்வதற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது? அம்பேத்கர் சிறு வயதில் தண்டிக்கப்பட்டாரா? அல்லது ஜாதி வேறுபாட்டிற்கு ஆளானாரா?($AS_1$)
2. சமுதாயத்தில் பல்வேறு சாதிகள் இருந்தாலும் அவைகளுக்கிடையே எந்த நிகழ்வுகளின் போது சமத்துவத்தை காண்பாய்?($AS_4$)
3. நமது அரசியலமைப்புச் சட்டம் தீண்டாமையை அழித்து, அதனை ஒரு குற்றமாக அறிவித்துள்ளது. தீண்டாமை பழக்கத்தை முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்று நீ கருதுகிறாயா?($AS_4$)
4. உன்னுடைய பள்ளிக்கூடம் ஜாதி வேற்றுமையை முடிவுக்கு கொண்டு வர எவ்வாறு உதவிடும்?($AS_6$)
5. பக்கம் 170ல் உள்ள மூன்றாம் பத்தியை படித்து அதைக் குறித்து உன் கருத்தினைக் கூறு.($AS_2$)

### செயல்திட்டம்

1. உங்கள் பகுதியில் செயல்படும் அரசு திட்டத்தை கண்டறி. அத்திட்டம் செய்வது என்ன? அத்திட்டம் யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை கண்டறி.
2. உங்களுடைய பெற்றோர், மூதாதையர்களுடன் முற்காலத்தில் ஜாதி முறை எவ்வாறு செயல்பட்டது என்பதை குறித்து கலந்துரையாடி, எவை மாறின? எவை மாறவில்லை என்பதை கண்டறி. அறிக்கையை தயாரித்து அதை வகுப்பறையில் சமர்த்திடு.

SCERT TELANGANA

பாடம் 19

# நகர்புற தொழிலாளிகளின் வாழ்க்கை முறை மற்றும் போராட்டம்

நாம் இதற்கு முன் பன்னிரெண்டாவது பாடத்தில், காகித ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளைப் பற்றி படித்தோம். பெரும்பாலான காகித ஆலை தொழிலாளிகள் ஆனந்த் போல் அதிக சம்பளம், போனஸ் (கம்பெனியின் லாபத்தின் பங்கு), வருங்கால நிதி, இதர அலவென்ஸ்கள் போன்றவற்றை பெறுகின்றனர். மருத்துவ பாதுகாப்பு, வீட்டு வசதிகளும் அவர்களுக்கு உள்ளது. இந்தியாவில் உள்ள தொழிலாளிகளில் இவர்கள் சிறுபாகமே உள்ளனர். அதே காகித தொழிற்சாலையில் வேறுவகை தொழிலாளிகள் குறித்தும் நாம் படித்தோம். உமர் மற்றும் புஷ்பா போன்ற தொழிலாளிகள் குறைந்த சம்பளமே பெறுகின்றனர். அவர்கள் சீரிய வாழ்க்கை வாழ தேவையான இதர அலவன்ஸ்சுகள் மற்றும் வசதிகளை பெறவில்லை. இந்திய நாட்டில் பெரும்பாலான ஊழியர்கள் உமர் மற்றும் புஷ்பா போன்றே உள்ளனர். இந்த பாடத்தில் தொழிலாளிகள் தாங்கள் கௌரவமான வாழ்க்கை வாழ்ந்திட, தொழிலாளர் சங்கங்கள், சட்டங்கள் மூலம் எவ்வாறு அவர்களுடைய முதலாளிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களின் பிரச்சனைளை தீர்த்துக் கொள்கின்றனர் என்பனவற்றை நாம் படித்தறிய போகிறோம். சுயமாக வேலை செய்து தொழில் செய்வோரின் சங்கத்தைப் பற்றியும் படிக்கப்போகிறோம்.

அரசாங்கம், மக்களின் நலனுக்காக சட்டங்களை இயற்றுகின்றன என்பதை நாம் கற்றோம். நிலங்கள், தொழிற்சாலைகள், தனியார் மற்றும் அரசு அலுவலகங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலனை பாதுகாக்கவும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அரசாங்கத்திடம் முறையாக பதிவு செய்து கொண்ட தொழிற்சாலைகள் இச் சட்டங்களை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றில் வேலை செய்யும் போது மேம்பட்ட ஊதியங்கள் மற்றும் இதர வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அரசாங்கத்திலும் தொழிலாளர் நலத்துறைகள் உள்ளது. இவை சட்டங்கள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்று சரிபார்த்து அமுல்படுத்த வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளன. தொழிலாளர் நலச் சட்டங்கள் பின்பற்றபடாவிட்டால் தொழிலாளிகள் நீதி மன்றங்களில் வழக்கு தொடரலாம். தொழிற்சாலைகள் நிரந்தர ஊழியர்களின் நலத்தை மட்டும் பாதுகாக்கின்றன. தினசரிக்கூலிகள் ஒப்பந்த தொழிலாளிகளின் நலனை குறித்து அக்கறை எடுத்துக்கொள்வதில்லை.

அரசாங்கத்திடம் முறைப்படியான அனுமதி பெறாமல் பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளின் நிலைமைகளை நாம் பரிசீலித்து பார்த்திடுவோம்.

**தொழிற்சாலைகளில் நிரந்தர ஊழியர்களாக.**

**வேலை செய்தல் :**

மஹபூப்நகர் மாவட்டத்தில் கொத்தூர் என்னும் இடத்தில் ஒரு புதிய தொழில் நகரம் உள்ளது. இது ஐதராபாத்தில் இருந்து 30கி.மீ தூரத்தில் உள்ளது. இந்நகரிலுள்ள இரண்டு தொழிற்சாலைகள் குறித்து குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை 2002ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை ஆகும்.

பைப்ரோடெக்ஸ் (உண்மை பெயர் அல்ல) என்பது பைபர் கண்ணாடியை பெரும் அளவில் தயாரிக்கும் மிகப் பெரிய தொழிற்சாலை ஆகும். இது 1976ஆம் ஆண்டு செயல்பட தொடங்கியது. இதில் 2002ஆம் ஆண்டில் மொத்தம் 570 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். அவர்களின் 140பேர் நிரந்தர தொழிலாளர்கள். 60 தொழிலாளர்கள் தற்காலிக அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் மாற்று தொழிலாளர்கள் என்றழைக்கப்பட்டனர். (அவர்கள் நிரந்தர ஊழியர்கள் வேலைக்கு வராத போது வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆவர்)

SCERT TELANGANA

300 தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தினசரி கூலிகளாக வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தனர். (நிரந்தர தொழிலாளியை முறைப்படி நடவடிக்கைகள் இன்றி வேலையில் இருந்து நீக்க முடியாது. தகுந்த இழப்பீட்டுத் தொகை தரப்பட வேண்டும். இதர வகை தொழிலாளர்களை சுலபமாக வேலையில் இருந்து நீக்கமுடியும்.)

இத் தொழிற்சாலைக்கு ஒரு தொழிலாளர் சங்கம் உள்ளது. துவக்கத்தில் இது கம்பெனி நிர்வாகத்தின் ஊக்கத்தால் அமைக்கப்பட்டது. தொழிற்சாலை நிர்வாகம் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவாக இது செயல்படும் என எதிர்பார்த்தது. ஆனால் தொழிற்சங்கம் வலிமையான தொழிலாளர் அமைப்பாக வளர்ச்சி அடைந்தது. தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் சுறுசுறுப்புடன் பங்கேற்றனர். இச் சங்கம் தொழிற்சாலை நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஊதியங்களை நிர்ணயிக்கச் செய்தது.

தொழிற்சங்கத்துடன் நிர்வாகம் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் எல்லா தொழிலாளர்களும் உயர் ஊதியங்கள் பெற்றனர். மாநில ஊழியர் காப்பீட்டு திட்டம் மூலம் மருத்துவ வசதி பெற்றனர். தொழிலாளர் வருங்கால நிதி வசதியும் பெற்றனர். இத்தொழிலாளர் சங்கம் இதர வசதிகளையும் சாதித்தது. பெரிய தனியார் மருத்துவ மனைகளில் உடல் நல பரிசோதனை செய்து கொள்ளும் வசதி செய்து தரப்பட்டது. தொழிலாளர்கள் நோயுறும் போது விடுப்பு எடுத்துக்கொள்ளும் உரிமை தரப்பட்டது. தேவைப்படும் போது கடனுதவி பெற்றனர். தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர் வசிக்க குடியிருப்புகளை கட்டித்தந்தது. அத்துடன் அதில் நீண்ட காலம் வேலை செய்த தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பி தொழில் நுட்ப பயிற்சியை பெற்று தந்து உற்பத்தி தரத்தை மேம்படுத்தி உள்ளது. தொழிலாளர் வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பு அணிகள் வழங்கியது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. கல்விக்கான ஊக்கத் தொகைகள், பயணப்படிகள் போன்றவற்றை அளித்து வருகிறது. ஒப்பந்த தொழிலாளர்களை, ஒருகுறிப்பிட்ட வேலை நாட்களுக்கு பிறகு நிரந்தரமாக்கிட தொழிற்சாலை எஜமானர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

பைப்ரோ டெக்ஸ்கம்பனியின், தொழிலாளர் சங்கம் நகரில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

இச்சங்கம் நகரத்தில் உள்ள இதர தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சிறிய தொழிற்சங்கங்களுக்கு, அவர்களுடைய எஜமானர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி உரிய ஊதியங்கள் பெற்றிட உதவி செய்தது.

**தொழிற்சங்கம்**

தொழிலாளர்கள் தங்கள் நலனை காத்துக் கொள்ள அமைத்துக்கொண்ட அமைப்பை தொழிற்சங்கம் என்பர். ஒவ்வொரு தொழிலாளியும் தனித்தனியாக எஜமானருடன் பேச்சு வார்த்தை நடத்தினால் அவர்களின் நிலை வலுவானதாக இருக்காது. தொழிலாளர்கள் அனைவரும் நிர்வாகத்துடன் தங்கள் கோரிக்கைகளுக்காக பேச்சுவார்த்தை நடத்தும் போது அவர்களின் நிலை வலுவானதாக இருக்கும். தொழிற்சங்கங்கள் சீரான ஊதியங்கள், இதர நன்மைகள், மேன்மையான வேலை நிலைமைகள், அவற்றின் உறுப்பினர்களுக்கு பெற்றுத்தர கோருகின்றன. அத்துடன் மருத்துவ வசதிகள், வீடுகள், வருங்காலநிதி மற்றும் ஓய்வூதியம் போன்ற சமூக பாதுகாப்பு நன்மைகளை தங்கள் தொழிலாளர்கள் பெற்றிட உதவுகின்றன. தொழிலாளர் எவரேனும் துன்புறுத்தப்பட்டாலோ அல்லது உதவிதேவை என கோரினாலோ, தொழிற்சங்கங்கள் அவர்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்துதல், நீதி மன்றத்தில் வழக்குகள் தொடுத்தல், வேலை நிறுத்தம் செய்தல், உற்பத்தி செயல்களை நிறுத்துதல் போன்ற பலவகை செயல்பாடுகளை மேற்கொண்டு தங்கள் எஜமானர்களுக்கு நெருக்கடி உண்டாக்கி கோரிக்கைகளை ஏற்குமாறு செய்கின்றன.

பைப்ரோடெக்ஸ் தொழிற்சாலையில் 2002ஆம் ஆண்டில் வேலை செய்து வந்த தொழிலாளர்களின் ஊதியங்களின் விவரங்கள் பின்வருமாறு இருந்தன.

| | |
|---|---|
| *நிரந்தர தொழிலாளிகளுக்கு மாத ஊதியம்* | *ரூ.4500 - ரூ.10,000* |
| *மாற்று தொழிலாளிகளுக்கு மாத ஊதியம்* | *ரூ.3000 - ரூ.4000* |
| *ஒப்பந்த /தற்காலிக தொழிலாளிகள் 1நாள் ஊதியம்* | *ரூ.58/- (8மணி வேலை நேரம்)* |

SCERT TELANGANA

பெரும்பாலான பயன்கள் 140 நிரந்தர ஊழியர்கள் மட்டும் பெறுகின்றனர் என்பதை நீங்கள் காணமுடியும். இதர வகை தொழிலாளிகளான மாற்று தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் 360பேர் குறைவான ஊதியம் மற்றும் வருங்காலநிதி, தொழிலாளர் மருத்துவ வசதி ஆகிய சிலவற்றை மட்டும் பெறுகின்றனர்.

* நிரந்தர தொழிலாளிக்கும், மாற்றுத் தொழிலாளிக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
* எடுத்துக்காட்டாக பைப்ரோடெக்ஸ் தொழிற்சாலையில் தற்காலிக ஊழியர் ஒரு மாதத்தில் 20 நாட்கள் வேலை செய்கிறார் நிரந்தர ஊழியரின் மாத ஊதியத்திற்கும், தற்காலிக ஊழியரின் ஊதியத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை கணக்கிடு.
* மாநில ஊழியர் காப்பீடு மற்றும் வருங்கால நிதி போன்ற பயன்களைபெறும் ஒரு அல்லது இரண்டு தொழிலாளர்களை உன் வகுப்பறைக்கு வரவேற்று அதிகப்படியான விவரங்களை சேகரி. அவர் பெறும் இ.எஸ்.ஐ. மற்றும் பி.எப் பயன்கள் எவ்வாறு தரப்பட்டது? அதைப்பெற ஒரு தொழிலாளி செய்ய வேண்டியவை யாவை? என்பன குறித்து கேட்டறியவும்.

K.S.R. **மருந்துத் தொழிற்சாலை :**

*இக் கம்பெனி (உண்மை பெயர் அல்ல) மருந்துகளை கலந்து பெட்டிகளில் நிரப்பி மற்றொரு பெரிய மருந்து கம்பெனிக்கு அனுப்புகிறது. இக்கம்பெனி 118 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி உள்ளது. அவர்களுள் 104 தொழிலாளிகள் தற்காலிக தனசரி கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். அதாவது 14 தொழிலாளிகள் மட்டும் நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவர்களை மட்டும் தொழில்நுட்பம் சார்ந்த வேலைக்கு பயன்படுத்தி கொண்டது. இவர்கள் ரசாயனங்களை கலந்து மருந்து பவுடரை தயாரிப்பர். இத்தொழிலாளிகளுக்கு மாதத்திற்கு ரூ.1500 முதல் ரூ.2500 ஊதியம் தரப்பட்டது. அவர்களுக்கு வேலை பாதுகாப்பு இருந்தது. அவர்கள் இ.எஸ்.ஐ. மற்றும் பி.எப். பயன்கள் பெற்றிருந்தனர்.*

*மீதமிருந்த 104 தொழிலாளிகள் தினசரி கூலி அடிப்படையில் வேலை செய்தனர். அவர்கள் மருந்துகளை பெட்டியில் அடைப்பது லேபிள் ஒட்டுவது போன்றவற்றில் ஈடுபடுத்தபட்டனர். அவர்களில் 56பேர் பெண்கள். இத்தினசரி தொழிலாளிகள் ஒப்பந்தக்காரர் மூலம் பணியில் அமர்த்தப்பட்டனர். தினந்தோறும் தொழிற்சாலை மேலாளர் எத்தனை தொழிலாளிகள் தேவை என்பதை ஒப்பந்தகாரருக்கு தெரிவிப்பார். அதன்படி தொழிலாளர்கள் வேலைக்கு அனுப்பட்டனர். இத்தொழிலாளிகள் பெரும்பாலும் அருகிலிருந்த கிராமங்களை சேர்ந்தவர்களாகவும், கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் இருந்தனர். பெண் தொழிலாளிகள் ஒரு நாளைக்கு 12மணி நேரம் வேலை செய்ய வேண்டி இருந்தது, அவர்களுக்கு 30ரூபாய் கூலியாகவும், ஆண்களுக்கு 42 ரூபாயும் கூலியாக தரப்பட்டது. இப்படிபட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கு அரசாங்கம் நிர்ணயம் செய்துள்ள குறைந்த பட்ச ஊதியத்தை விட இது மிகவும் குறைவானதாகும். தொழிற்சாலை மேலாளர்கள் எவ்விதமான தொழிற்சங்கத்தையும் அமைத்துக் கொள்ள அனுமதிக்கவில்லை. அவ்வாறு இன்றி தொழிற்சங்கங்கள் அமைத்தால் தொழிற்சாலையை மூடிவிடுவதாக அச்சுறுத்தப்பட்டது. இக்கம்பெனி பின்பற்றிய அதே கொள்கைகள் கொண்ட கம்பெனிகள் அதிக எண்ணிக்கையில் தற்போது உள்ளன. இவை நிரந்தர தொழிலாளிகளின் எண்ணிக்கையை குறைத்து, அவர்களுக்கு பதிலாக தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படை தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றன.*

* கே.ஆர்.எஸ். மருந்து தொழிற்சாலையில் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ள ஏன் அனுமதிக்கப்படவில்லை?
* நிரந்தர தொழிலாளிகளில் இருந்ததை விட ஒப்பந்த தொழிலாளிகளில் அதிகப் பெண்கள் இருந்தனர். இது ஏன் என்று நீ கருதுகிறாய்?
* ஒரேவிதமான வேலை செய்வதற்கு ஆண்களை காட்டிலும் பெண்களுக்கு குறைவான ஊதியம் கொடுத்தது சரியானது என நீ கருதுகிறாயா?
* தொழிலாளர்கள் கல்வி கற்றவர்களாகவும், எழுத்தறிவு உடையவர்களாகவும், இருந்திருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும் என்று நீ கருதுகிறாயா?



SCERT TELANGANA

**கட்டுமான இடங்கள் மற்றும் செங்கல் சூளைகளில் வேலை செய்தல் :**



படம் 19.1 கட்டிட கட்டுமான பணி தொழிலாளிகள்

சாந்தினி, அவளுடைய கணவன் மற்றும் பத்துவயது மகளும், ரங்காரெட்டி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் உள்ள செங்கல் சூளையில் வேலை செய்கின்றனர். அவள் இக் கிராமத்தில் வசிப்பவள் அல்ல. ஒடிசா மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து வந்தவள். அங்கு அவர்களுக்கு ஒரு சிறிய நிலம் உள்ளது. அவர்கள் இருபதாயிரம் ரூபாயை கடனாக பெற்றிருந்தனர். அதை திரும்ப செலுத்த முடியவில்லை. அவர்கள் தங்கள் நிலத்தை விற்றிட நினைத்து கொண்டிருந்த சமயத்தில், ஆந்திர பிரதேசத்தில் உள்ள செங்கல் சூளைகளில் வேலை செய்ய ஆட்களை சேர்த்துக் கொள்ள ஒப்பந்தக்காரர் ஒருவர் அவர்களின் கிராமத்திற்கு வந்தார். அவர் 10,000 ரூபாயை முன்பணமாக கொடுத்தார். சாந்தினியின் குடும்பம் அதைக் கொண்டு கடனில் பாதி தொகையை திருப்பி செலுத்த முடிந்தது. அவர்கள் ஆறு மாதங்கள் செங்கல் சூளையில் வேலை செய்ய வேண்டியிருந்தது. அவர்களுக்கு கூடுதலான கூலி தரப்படும் என்றும், தங்கும் இடமாக குடிசைவீடும் தரப்படும் என்று கூறப்பட்டது. அவ்வேலை டிசம்பர் மாதம் துவங்கி ஜுன் மாதம் முடியும். கிராமத்திற்கு திரும்பி, நிலத்தை உழுது விவசாயம் செய்திடுவர். இவ்வாறாக, செல்லம்மாளும் அவளுடைய குடும்பமும், செங்கல் சூளையில் வேலை செய்திட சேர்ந்தனர். இவர்கள் மட்டுமல்ல, ஏறக்குறைய இரண்டு லட்சம் தொழிலாளர்கள் ஒடிசா மாநிலத்தில் இருந்து ஆந்திர பிரதேசத்திற்கு செங்கல் சூளைகளில் வேலை செய்திட வருகின்றனர். இதுபோன்றே ஆந்திர பிரதேச மாநிலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமிழ்நாடு மற்றும் மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுக்கு செங்கல் சூளைகளில் வேலை செய்திட செல்வதை பொதுவாக காணமுடிகிறது.

சாந்தினி அன்று காலை 4 மணிக்கு எழுந்து அவர்களின் உணவான கஞ்சியை தயாரித்தார். அவளுடைய கணவன் இன்னமும் தூங்கி கொண்டிருந்தார். அவர் நேற்றிரவு 2மணி வரை வேலை செய்திருந்தார், அவர் தன்னுடைய மகளை எழுப்பினாள். அவர்கள் இருவரும் வேலை செய்ய தயார் ஆனார்கள். அவர்கள் தண்ணீர் கொண்டு வந்து, மணலையும், களிமண்ணையும் கலந்து செங்கல் செய்திட தேவையான களிமண்ணை தயாரிக்க வேண்டும். அவர்கள் அவ்வேலையை 5 மணிக்கு தொடங்கி நிறுத்தாது 9 மணி வரை தொடர்ந்து செய்வார்கள். 9 மணிக்கு தேநீருக்காக சற்று நேரம் நிறுத்துவர். அதே சமயத்தில் அவளுடைய கணவனும் அவர்களுடன் சேர்ந்து கொள்வார். அவர் செங்கல் அச்சுகளில் களிமண்ணை நிரப்பி, செங்கல்லை வடிவம் பெறச் செய்வார். அவளுடைய மகள் அதன் மேல் பாகத்தை வழுவழுப்பாக்கி செங்கல் கம்பெனியின் பெயர் முத்திரையை பதிப்பார். பிறகு இவற்றை உலர வைப்பர். அதன் பிறகு மாட்டு வண்டிகளில் ஏற்றி, செங்கல் சூளைக்கு அனுப்பி வைப்பர். அங்கு அவை சுட்ட செங்கற்களாக்கப்படும். இவ்வேலை தொடர்ந்து இரவு 2 மணி வரை நடக்கும். சாந்தினியும், அவருடைய கணவனும் ஒரு நாளைக்கு 14 முதல் 16 மணிகள் வேலை செய்கின்றனர்.

அவர்கள் வேலையை நிறுத்த விரும்பவில்லை, ஏனென்றால், அவர்களுக்கு கூலி அவர்கள் செய்யும் செங்கற்களின் எண்ணிக்கை அடிப்படையில் செலுத்தப்படுகிறது. அவர்கள் தயாரிக்கும் ஒவ்வொரு ஆயிரம் செங்கற்களுக்கும் 108 ரூபாய்கள் கூலியாக கிடைக்கிறது. அவர்கள் இருவரும் சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 1000 செங்கற்கள் தயாரிக்கின்றனர். அவர் நோயுற்றால் பணம் சம்பாதிக்க முடியாது. இவ்வாறாக, அவர்கள் இரவும், பகலும் ஆறு மாதங்கள் வேலை செய்வர். சில நாட்களில் மிகவும் களைப்படைந்தாலோ, நோயுற்றாலோ அவர்களால் வேலை செய்ய முடியாது, அவர்கள் வழக்கமாக நொய் அரிசி மற்றும் பருப்பு சமைத்து உண்பர். சில நாட்களில் உணவில் காய்கறிகளும் பயன்படுத்திக் கொள்வர். ஆறுமாதங்கள் முடியும் தருவாயில் அவர்கள் முன்பணமாக பெற்ற பணத்திற்கு சமமாக கூலியை பெறும் நிலை இருக்கும். அச்சமயங்களில் வெறுங்கையுடன் ஊர் திரும்ப வேண்டியிருக்கும். சில சமயங்களில் அவர்கள் எப்படியோ சமாளித்து நான்கு அல்லது ஐந்து ஆயிரங்கள் ரூபாயை மீதமாக எடுத்துச்செல்வர்.

* ஒப்பந்தக்காரரிடமிருந்து, அவர்கள் பெற்ற ரூ.10,000 முன்பணத்தை திருப்பி செலுத்த அவர்களுக்கு எத்தனை நாட்கள் என்பதை கணக்கிட்டு உன்னால் கூறுமுடியுமா?
* இவ்வேலையில் ஒரு நாளைக்கு சராசரியாக கிடைக்கும் கூலி எவ்வளவு?
* செங்கல் சூளை தொழிலில் தொழிற்சங்கங்கள் இல்லை. ஏன்?
* செங்கல் சூளை தொழிலில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு என்று தொழிற்சங்கங்கள் அமைத்து கொள்ள அரசாங்கம் வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?
* செங்கல் சூளை தொழிலாளிகளின் வேலை நிலைமைகளை மேம்படுத்த அரசாங்கம் எவ்வழிகளில் உதவி செய்ய முடியும்?



படம் 19.2 பருத்தி சேகரிப்போர்

செங்கற்கள் தயாரிக்கும் தொழிலாளிகளின் நிலைமை உலகம் முழுவதும் இவ்வாறே உள்ளது. ஒப்பந்தக்காரரால் அவர்களுக்கு முன்பணம் தரப்படுகின்றது. அவர்களை மிகத் தொலைவு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அப்பகுதிகளில் பேசப்படும் மொழி அவர்களுக்கு தெரியாது. அவர்கள் அங்கு இரவும் பகலும் ஆறு மாதங்கள் குடும்பத்துடன், குழந்தைகளுடன் வேலை செய்வர். ஆனால் அவர்கள் பெறும் ஊதியம், முன்பணத்தை திருப்பி செலுத்த மட்டும் முடிகிறது. சில சமயங்களில் வேலை செய்ய முடியாத அளவிற்கு களைப்பு அடைந்தாலும், வேலை செய்யுமாறு ஒப்பந்தக்காரரால் கட்டாயப்படுத்தபடுகின்றனர். அவர்கள் கொத்தடிமைகள் போல வாழ வேண்டியிருக்கும். இவர்களை குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும் போது, அரசு அதிகாரிகள் தலையிட்டு, அத்தொழிலாளிகளை விடுவித்து, ஊர் திரும்ப நடவடிக்கை எடுப்பர். ஆனால் அவர்களுக்கு சொந்த ஊர்களில் வேலை வாய்ப்புகள் இல்லாததால், மறுபடியும் ஒப்பந்தக்காரரிடம் இருந்து முன் பணம் பெற்றுகொண்டு செங்கல் சூளைகளில் வேலையை செய்திட துவங்குகின்றனர். இவ்வகை தொழிலாளிகள் இடம் பெயர்ந்து வந்து வாழ்வதாலும், பல்வேறு இடங்களில் பிரிந்து சென்று வேலை செய்தாலும், இவர்களின் உரிமைகளை காத்திட போராடும் தொழிற் சங்கங்கள் இல்லை.

SCERT TELANGANA

* செங்கல் உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பயன்படுத்தும் சக்தி யாவை?
* இவ்வேலையை செய்திட தேவையான திறமைகள் யாவை? அவற்றை எவ்வாறு பெறலாம்?
* இவ்வேலை செய்வோர் தொலைவான மாநிலங்களுக்கு சென்று வேலை செய்வது ஏன் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**தொழிலாளர்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் - ஒரு உலகளாவிய சிந்தனை :**

தொழிற்புரட்சிகள் ஏற்பட்டதில் இருந்தே (நீங்கள் பத்தாவது பாடத்தில் ஏற்கனவே படித்தது) உலகம் முழுவதும் தொழிலாளிகள் தங்களுடைய கௌரவமான வாழ்க்கைக்காகவும், உற்பத்தி பலனில் நியாயமான பங்கு பெறுவதற்காகவும், போராடி வருகின்றனர். அவர்கள் பலவகையான பாதுகாப்புகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடினர்.

1. **உற்பத்தி திறனுக்கேற்ற வேலை மற்றும் பாதுகாப்பு பெறும் உரிமை :** இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் அவரவர் அறிவு மற்றும் திறமைக்கு ஏற்ப வேலை செய்யும், பாதுகாப்பான நிலைமைகளில், அவர்களின் உடல்நலம் பாதிக்காத வண்ணம் வேலை செய்திட முடிகிறது.
2. **ஓய்வெடுக்கும் உரிமை :** இதனால் தொழிலாளர்கள் கடின உழைப்பிற்கு பிறகு ஓய்வெடுக்கும் நேரம் பெறமுடிகிறது. அதுமட்டுமின்றி விரும்பும் சமூக, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் நேரமும் கிடைக்கிறது.
3. **வேலை பாதுகாப்பு உரிமை :** இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய வேலை, வாழ்க்கைக்கு தேவையான வருவாய் தரும் என்ற உத்திரவாதம் தருகிறது. நியாயமற்ற முறையில் வேலையில் இருந்து நீக்க முடியாது. தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு தொழிலாளி வேலையில் இருந்து நீக்கப்பட்டால், போதுமான இழப்பீட்டு தொகை தரப்பட வேண்டும்.
4. **வருவாய் பாதுகாப்பு :** இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் போதுமான, நிரந்தரமான குடும்பத்திற்கு தேவையான வருவாயை பெறமுடியும, அத்துடன் முதுமை காலத்தில் கௌரவமான வாழ்க்கை வாழ்ந்திட சேமித்து வைத்திடவும் முடியும்.
5. **வேலை பாதுகாப்பு :** இதனால் தொழிலாளர்கள் நோய்வாய்ப் படும் போதும், விபத்துகள் ஏற்படும் போதும், உரிய மருத்துவ சிகிச்சை வசதியும், நோய் காலத்திற்கான ஊதியத்தையும் பெறமுடியும்.
6. **திறமைப்பாடுக்கு உரிமை :** இதனால் ஒவ்வொரு தொழிலாளியும், சிறப்பு பயிற்சிகள் பெற்று வேலையில் இருக்கும் போதே தன் திறனை மேம்டுத்தி கொள்ளவும் முடிகிறது.
7. **கூட்டாக குரல் கொடுக்கும் உரிமை :** இதனால் தொழிலாளிகள் தொழிற்சங்கங்களை அமைத்து கொண்டு, அவர்களின் பிரச்சனைகளை தேவைகளை, அச்சமின்றி தெரியப்படுத்தி, எஜமானர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி பயன் அடைய முடியும். தனிமனிதர்களாக அணுகுவதை விட கூட்டாக குரல் கொடுப்பதால் விரைவான பலனை அடைய முடிகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக உலகம் முழுவதும் உள்ள தொழிலாளிகள் இவ்வுரிமைகளின் அங்கீகாரத்திற்காக போராடினர். இவை எல்லா பகுதிகளிலும் முழுவதுமாக நடைமுறைபடுத்தபடா விட்டாலும் பெரும்பாலான நாடுகளில் அரசாங்கங்கள் இவற்றை ஒப்புக்கொண்டுள்ளன. இவை தொழிலாளிகளின் அடிப்படை தேவைகளாக ஏற்று சட்டங்கள் மூலம் இந்த உரிமைகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளன. இப்பாடத்தின் முந்தைய பகுதிகளை படித்து, கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை கவனி. குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளிகள் பெற்றிடும் உரிமைகளை காட்டும் கட்டங்களை வண்ணமிட்டு காட்டுக. அவ்வுரிமைகள் எந்த அளவு தொழிலாளிகளுக்கு கிடைக்கிறதோ, அந்த அளவிற்கு வண்ணத்தை நிரப்புக. எந்த உரிமைகள் கிடைப்பதில்லையோ, அக்கட்டங்களில் குறியிட்டு காட்டுக.



*படம் 19.3 கத்திக்கு கூர்மை தீட்டுவோர் (சானைபிடிப்போர்)*

| உரிமைகள் | ஃபைப்ரோ டெக்ஸ் | KRS மருந்துகள் தொழிற்சாலை | செங்கல் சூளைகள் |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி திறனுக்கேற்ற வேலை மற்றும் பாதுகாப்பு உரிமை | | |
| 2. | ஓய்வெடுக்கும் உரிமை | | |
| 3. | வேலை பாதுகாப்பு உரிமை | | |
| 4. | வருவாய் பாதுகாப்புக்கு உரிமை | | |
| 5. | வேலை பாதுகாப்புக்கு உரிமை | | |
| 6. | திறன் மேம்பாடுக்கு உரிமை | | |
| 7. | கூட்டாக குரல் கொடுக்கும் உரிமை | | |

SCERT TELANGANA

**முறைசாரா வேலை மற்றும் நகர்புறங்களில் தொழிலாளிகள் :**

நம் தெலங்கானாவிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், நகரங்களும், மாநகரங்களும் பெரியனவாக வளர்ந்து கொண்டே இருக்கின்றன. கிராமங்களில் இருந்து மக்கள் விரைவாக இந்நகரங்களுக்கு குடியேறி வருகின்றனர். ஆனால் அவர்களில் பெரும்பான்மை மக்களுக்கு போதுமான நிலையான வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. இதனால் பல்வேறு சிறிய வேலைகளை செய்திடுகின்றனர். அவர்கள் காய்கறிகள் விற்றல், தின்பண்டங்கள் செய்தல்–விற்றல், தேநீர்க் கடைகளில் வேலை செய்தல், சிறு தொழிற்சாலைகளில் வேலை செய்தல், துணிகளை தைத்தல், மார்க்கெட்டுகளில் சரக்குகளை லாரிகளில் ஏற்றுதல்–இறக்குதல், வீட்டு பணிப்பெண்களாக வேலை செய்தல் முதலியவற்றை செய்கின்றனர். அவர்களில் பலர் வீடுகளில் பொருட்களை தயாரிக்கின்றனர். ஆடைகளை பின்னுதல், அப்பளங்கள் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், எம்பிராய்டரி வேலைப்பாடு செய்தல், முதலியவற்றை மேற்கொள்கின்றனர். பெரும்பாலான இச்செயல்கள் அரசாங்கத்தில் முறையாக பதிவுசெய்யப்படாதவை ஆகும். இவ்வாறன வேலைகளை செய்திடும் தொழிலாளிகளை அமைப்பு



படம் 19.4 தொலைபேசி கம்பிகளை நிலத்தில் பதிக்கும் தொழிலாளிகள்.

சாரா தொழிலாளிகள் என்பர். இவ்வகையான தொழிலை அமைப்பு சாரா தொழில் என்றும் அழைப்பர்.

இவ்வகையான தொழில்களின் அல்லது வேலைவாய்ப்புகளின் பொதுவான அம்சம் என்ன வென்றால், அவற்றை செய்திட மிக குறைந்த அளவு முதலீடு அல்லது திறமை பயிற்சி, இருந்தால் போதுமானது. ஆனால் இவ்வகை வேலைகள் நிரந்தரமற்றதாகவும், மிக குறைவான ஊதியங்களையும் கொண்டிருப்பதை காணலாம். இத் தொழிலாளிகள் மிகவும் பாதுகாப்பற்ற மோசமான நிலைகளில் வாழ்கின்றனர். நிரந்தர வேலை, ஊதியத்துடன் தொழிற்சாலைகள், அலுவலகங்களில் வேலை செய்யும் நிரந்தர ஊழியர்கள் போல் அல்லாமல், அமைப்பு சாரா வேலை செய்யும் தொழிலாளிகள் ஒரே நாளில் பல்வேறு வேலைகளை செய்கின்றனர். அதிகாலையில் செய்தித்தாள்களை விநியோகம் செய்கின்றனர். பகல் நேரங்களில் தேநீர் கடைகளில் வேலை செய்வர், இரவு நேரங்களில் சில வீடுகளில் சமையல் வேலை செய்கின்றனர். இவற்றால் நாள் முழுவதும் இத்தொழிலாளிகள் மும்மரமாக ஓய்வின்றி தொடர்ந்து செயல்படுகின்றனர். பெரும்பாலும் இவ்வேலைகள் செய்வோர் குடும்பங்களில் உள்ள எல்லா உறுப்பினர்களும், குழந்தைகளும் உட்பட பணம் சம்பாதிக்க வேலை செய்கின்றனர். எனவே, இக்குடும்பங்களின் குழந்தைகள் வழக்கமாகவே படிப்பறிவின்றி விடப்படுகின்றனர். பணப் பிரச்சனைகள் ஏற்படும் போது அவர்கள் செலவுகளை குறைத்துக் கொள்கின்றனர். குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்துதல் உணவு அல்லது மருத்துவ செலவை குறைத்து கொள்ளுதல், போன்றவற்றை செய்தாலும், அவர்களுடைய வருவாய் தேவைகளுக்கு போதுமானதாக இருப்பதில்லை. எனவே, அவர்கள் தங்கள் நண்பர்கள், உறவினர்கள், வட்டி வியாபாகளிடம் சிறு கடன்களை வாங்க வேண்டிய கட்டாயமான நிலைக்கு உள்ளாகின்றனர். அமைப்பு சாரா தொழில்கள் செய்திடும் பெரும்பாலோர் அதிக அளவு வட்டி வியாபாரிகளிடம் கடனாளி ஆகின்றனர். பல சமயங்களில் அவர்களிடம் வேலை செய்யும்படியாகவும் நேரிடுகிறது.

பெரும்பான்மையோருக்கு அவர்களின் உரிமைகளை பாதுகாத்திட தொழிற்சங்கங்கள் இல்லை. இதற்கு முன் குறிப்பிட்டு சொன்னபடி அப்படிபட்ட தொழிலாளிகளின் எண்ணிக்கை நிலையாக அதிகமாகி வருகிறது. கிராமங்களில் இருந்து மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதாலும், பழமையான பெரிய தொழிற்சாலைகள், மில்கள், மூடப்பட்டு வருவதாலும், தொழிற்சங்கங்ள இல்லாத தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி கொண்டே இருக்கிறது. இத்தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் தற்போது தற்காலிக தொழிலாளிகளாக சேர வேண்டி உள்ளது.

இப்பிரச்சனைகளை கருத்தில் கொண்டு. குஜராத்தை சேர்ந்த சில தொழிற்சங்கங்கள். அமைப்பு சாரா தொழிலாளர் சங்கத்தை உருவாக்கின இது உலகிலேயே மிகப்பெரும் அமைப்பு சாரா தொழிலாளிகள் சங்கமாக கருதப்படுகிறது. இதைப்பற்றி விவரமாக தெரிந்து கொள்வோம்.



*படம் 19.5 சாலை செப்பனிடுதல் பணி*

**சுய தொழில் செய்யும் பெண்களின் சங்கம் (SEWA) :**

1971ஆம் ஆண்டு அகமதாபாத் துணிச் சந்தையில், இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்த வண்டி இழுக்கும் தொழில் செய்து வந்த ஒரு சிறு பெண் குழுவினர். துணி ஆலை தொழிலாளர் சங்கத்தை அணுகி அவர்களின் வீட்டுவசதிகளை பெருக்கிக்கொள்ள உதவுமாறு கேட்டுக் கொண்டனர். துணி ஆலை தொழிலாளர் சங்கம் மிகப்பழமையான, பெரிய துணி ஆலை தொழிலாளிகளின் சங்கம் ஆகும். இச்சங்கத்துடன் மஹாத்மா காந்தி நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். இச்சங்கம் அப்பெண்களுக்கு SEWA என்னும் அமைப்பை

SCERT TELANGANA

1971ஆம் ஆண்டு ஏற்படுத்தி உதவியது. அதுவே பிறகு 1972 தொழிற்சங்கமாக உருவெடுத்தது.

SEWA அமைப்பு தொடர்ந்து பல்வேறு தொழில்களில் வேலை செய்யும் பெண்கள் உறுப்பினர்களாக சேர்ந்ததால் வளர்ச்சி அடைந்தது. SEWA அமைப்பின் உறுப்பினர்களுக்கு நிரந்தரமான ஊழியர், எஜமானர் தொடர்பு கிடையாது. ஜீவித்திருக்க அவர்களுடைய சொந்த உழைப்பை சார்ந்திருப்பர்.

அவர்களுக்கு எவ்விதமான சொத்துக்களோ (அல்லது) செயல் மூலதனமோ இருக்காது. அனைத்து சுயதொழில் செய்யும் பெண்கள் SEWA அமைப்பில் உறுப்பினராக முடியும். அதற்கு கட்டணமாக ரூ.5/- செலுத்தினால் போதுமானது. SEWA அமைப்பு, சுய தொழில் செய்யும் பெண்கள் குறைகள் கேட்டறிந்து தீர்வு காணவும், அவர்களின் வேலை கலாச்சாரத்தை மேம்படுத்திகொள்ளவும், அவர்களின் வியாபாரத்தை நடத்தி போதுமான நிதி நிலையில் சுயசார்பு அடையவும் உதவி செய்கிறது. காய்கறிகள், பழங்கள், மீன், முட்டைகள், மற்றும் உணவுப் பொருட்கள், வீட்டுச் சாமான்கள் மற்றும் பழைய, புதிய ஆடைகள் போன்றவற்றை கடைக்காரர்கள், தெருவியாபாரிகள், விற்கின்றனர். வீடுகளில் இருந்து வேலை செய்யும் தொழிலாளி நெசவாளிகள், குயவர்கள், பீடி மற்றும் அகர்பத்தி தயாரிப்பவர்கள், அப்பளம் தயாரிப்போர், ஆயத்த ஆடைகள் செய்வோர், கைவினை தொழிலாளிகள் உடலுழைப்பு செய்வோர், விவசாய கூலிகள், கட்டிடத்தொழிலாளிகள், ஒப்பந்த தொழிலாளிகள் கைவண்டி இழுப்போர், சுமை தூக்கிகள், வீட்டு வேலை செய்வோர், சலவை தொழிலாளிகள், கால்நடை வளர்ப்போர், உப்பு தயாரிப்போர், கோந்து சேகரிப்போர், முதலியோர் SEWA அமைப்பின் உறுப்பினர் ஆகலாம்.

இந்தியாவில் ஒன்பது மாநிலங்களில் தற்போது SEWA அமைப்பில் 13 லட்சம் தொழிலாளிகள் உறுப்பினர்களாக உள்ளனர். SEWA அமைப்பு தன்னுடைய உறுப்பினர்களுக்காக கூட்டுறவு வங்கிகளை நடத்துகிறது. உடல் ஆராக்கியத்திற்காக காப்பீடு வசதிகளையும் செய்து தருகிறது. இந்த SEWA அமைப்பு தன் உறுப்பினர்கள் தயாரிக்கும் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும், நல்ல ஊதியங்கள் பெறவும் உதவி செய்கிறது. இது போன்ற நிறுவனங்கள் ஆந்திர பிரதேசத்தில் சுய வேலை செய்திடும் தெருவோரங்கள், சந்தைகள், மற்றும் தெருக்களில் காய்கறி விற்போருக்கு உதவிகரமாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**முக்கியச் சொற்கள்**

1. இழப்பீட்டுத்தொகை5.சாதாரண தொழிலாளி
2. வருங்காலவைப்புநிதி 6. நிரந்தரபணியாளர்
3. மாற்றுத் தொழிலாளி. 7. ESI
4. கூ-

## உனது கற்றலை மேம்படுத்துக

1. செங்கல் சூளை, தொழிற்சாலையில் வேலை செய்யும் நிரந்தர ஊழியர் மற்றும் ஒப்பந்த ஊழியர் இவர்களது நிலைமைகளை ஒப்பிட்டு எழுதி காட்டுக.(AS1)
2. உங்கள் பகுதியில் மற்றும் சுய தொழில் செய்வோர் செய்யும் வேலைகளை பட்டியலிட்டு காட்டுக.(AS3)
3. இப்பாடத்தில் எடுத்துரைக்கபட்ட பல்றே வகையான சங்கங்கள் குறித்து ஒரு பட்டியல் தயார் செய்திடு. கீழ்கண்ட பட்டியலை நிரப்புக.(AS3)

| சங்கம் வேலை செய்திடும் | தொழிலாளியின் வகை | முக்கியமான பிரச்சனைகள் | அறிவுறுத்தபடும் தீர்வு |
|---|---|---|---|
| தொழிற்சாலை | | | |
| | | | |
| | | | |

4. தொழிலாளர் சங்க உறுப்பினர் அல்லது தலைவருடன் கலந்துரையாடு. அல்லது உன் வகுப்பறைக்கு அவரை வரவேற்று அவருடைய வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்க. குறிப்பாக சங்கத்தில் ஏன் சேர்ந்தார் என்பதை கண்டறியவும். தொழிலாளர் சங்க உறுப்பினராக அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை?(AS3)
5. உங்கள் பகுதி பணியாளர் நலத்துறை அதிகாரிக்கு உங்கள் பகுதி தொழிலாளர்களின் நிலையை தெரிவிக்க ஒரு கடிதம் எழுது..(AS6)

SCERT TELANGANA

பாடம் 20

# நாட்டுப்புறம் – மதம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு வகுப்பறையில் விவாதித்து பதில் எழுதுக :**

1. நீங்கள் வாழும் பகுதியில் எந்தெந்த பெண்தெய்வங்களை வணங்குகிறீர்கள்?
2. நீங்கள் வாழும் பகுதியில் எந்தெந்த கடவுள்களை வழிபடுகிறீர்கள்?
3. துறவிகளையும், பாபாக்களையும், பீடாதிபதிகளையும் உனது குடும்பம் கௌரவிப்பதை நீங்கள் கவனித்தீர்களா? விவரிக்கவும்?
4. மக்கள் எந்தெந்த விலங்குகளையும், செடிகளையும் வணங்குகிறார்கள் என்பதை கவனித்தீர்களா?
5. நதிகள் மற்றும் மலைகளை மக்கள் எவ்வாறு வணங்குகிறார்கள் என உங்களுக்குத் தெரியுமா?
6. தெய்வங்களை யார், யார் எவ்வாறு வணங்குகிறார்கள்?
7. கடவுள்களை எந்தெந்த மொழியில் வழிபடுகின்றனர்?

நீங்கள் சாதாரணமாக இவ்வாறான உரையாடல்களை கேட்டிருப்பீர்கள் :

*இலட்சுமி : சில மாதங்களாக என் பிள்ளைகளுக்கு காய்ச்சல், உடல் நலமின்மை ஏற்பட்டன.*

*சம்மக்கா : என் கணவர் உடல் நிலைகூட கடந்த ஒரு மாத காலமாக சரியில்லை.*

*எல்லம்மா : முத்யாலம்மா சாமிக்கு கோபம் வந்துள்ளது. நாம், அந்த பெண் தெய்வத்தை வணங்க வேண்டும். பொங்கலிட்டு கோழியை சாமிக்கு பலியிட வேண்டும்.*

***

*இராமராஜ் : என் மகள் மிகவும் சோர்வுடன் காணப்படுகிறாள். எதையும் சாப்பிடுவதுமில்லை.*

*சுரேஷ் : நீங்கள் பீர்பாபா தர்காவுக்கு போகலாம் அல்லவா. அங்கு சென்று தாயத்து கட்டினால் உன் மகனின் உடல் நலம் பெறலாம்.*

நம் நாட்டில் உள்ள பல மக்கள் கோயில்களில் அநேக தேவதைகளை வழிபடுகின்றனர். மாதா கோயில், மசூதிகளில் ஆராதனை செய்வர். அதுவே அல்லாமல் பல கிராம தெய்வங்களை கூட வழிபடுகின்றனர். இவர்களில் புகழ்பெற்ற தெய்வங்கள் யார்? நீங்கள் எவ்வாறு, எப்பொழுது வணங்குவீர்கள்?

நமக்கு கிராம தேவதைகள் எத்தனை பேர் உள்ளனர்? அவர்களில் சிலர், சில கிராமங்களுக்கு, குடும்பங்களுக்கு சேர்ந்தவராக உள்ளது. சாதாரணமாக வழிபடும் சில தெய்வங்களை குறித்து படிப்போம்.

**போச்சம்மா**

ஆந்திர மாநிலத்தில் மிகவும் புகழ்வாழ்ந்த தேவதை போச்சம்மா ஆகும். ஒவ்வொரு ஊரிலும் இத் தேவதைக்கு கோயில்கள் உள்ளன. இந்த கோவில்கல் இராமர், சிவன் கோவில்களுக்கு வேறுபட்டு இருக்கும். இவ்வகையான கோவில்கள் சாதாரணமாக வேப்பமரத்திற்கு அருகில் இருக்கும். தேவதை கல் வடிவில் இருக்கும். சில நகரங்கல் இவ்வகையான கோவில்களில் சிற்ப வடிவில் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

SCERT TELANGANA




*படம் 20.1 & 20.2 போச்சம்மாவின் இரண்டு சிலைகள்*

வருடத்தில் பல நாட்களில், மக்கள் அபிஷேகப் பொருட்களை எடுத்துக் கொண்டு கோவில்களுக்கு செல்வர். கோவிலை சுத்தப்படுத்தி வழிபடுவர். இவ்வித கோவில்களில், தனி பூஜைகள் இருக்காது. மக்கள் தங்களின் பழக்க வழக்கத்திற்கேற்ப வழிபடுவர்.

தாயே என் விலை நிலத்தை பாதுகாத்து

நல்ல விளைச்சலை தா!

என் பிள்ளையின் உடல் நலம் சரியில்லாமல் உள்ளது. அதை பாதுகாக்கவும் தாயே, என பலவாறு வேண்டி வழிபடுவர்.

சிலர் அபிஷேகம் செய்வர். சிலர் கோழிகளை, ஆடுகளை பலியிட்டு வழிபடுவர்.

**மைசம்மா** : கால்நடைகளை காக்கும் தெய்வமாக மைசம்மாவை வழிபடுவர். கால்நடைகளான, பசு, எருது போன்ற கால்நடைகளை காக்க மைசம்மாவை வணங்குவர். விழா தினத்தன்று, வசிக்கும் குடிசைகளுக்கு வெள்ளையடித்து, குங்குமத்துடன் அலங்கரித்து அதை மைசம்மா குடில் என அழைப்பர். பல இடங்களில் நீர்வளம் உள்ள குட்டைகள், ஏரிகளுக்கு மைசம்மாமேடு என அழைத்து சில கற்களை ஏரிகளின் மேட்டில் வைத்து வழிபடுவர்.

இவ்வாறு ஏரிகளின் மேட்டில் கற்பாறை வைத்து வழிபட்டால், நல்ல மழைவளம் பெற்று



*படம் 20.3 மைசம்மா*

ஏரி, குளம், குட்டைகள் நிரம்பும் என்பது இவர்களின் நம்பிக்கை ஆகும்.

**கங்கம்மா** : இவரை நீர் தெய்வம் என அழைத்து வழிபடுவர். கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு கடல் தேவதையாக இருப்பார். ஏழை, எளியவர்களை பாதுகாக்கும் தேவதையாக வழிபடுவர்.

SCERT TELANGANA



படம் 20.4 எல்லம்மா



படம் 20.5 போதுராஜ்

**எல்லையம்மா** : எல்லையம்மா தெய்வத்தை, போலேரம்மா, மரிடம்மா, ரேணுகா, மஹங்காலி, போகம்மா, கோலம்மா, என பலவாறு அழைப்பர். கிராம எல்லையில் அமர்ந்து, கிராம மக்களை பாதுகாப்பதாக இவர்கள் நம்புகின்றனர். கிராம மக்களை தொற்றுநோயில் இருந்தும் தீய சக்தியிலிருந்தும், காலரா போன்ற வியாதிகளில் இருந்தும் காக்க மக்கள் வழிபடுவர்.

**போதுராஜ்** : தம் விவசாய பூமிகளை பயிர்களை பயங்கரமான தொத்து நோயில் இருந்தும், திருடர்களிடமிருந்தும், கால்நடைகளிடமிருந்தும் பாதுகாக்க கோரி போது ராஜ்வை மக்கள் வேண்டுவர். விவசாயிகள் தம் விளைநிலங்களில் ஒரு திசையில் வெள்ளை கற்பாறைக்கு சுண்ணமிட்டு வைப்பர். சாதாரணமாக பயிர் அறுவடைகாலத்தில் இவ்வாறான கடவுளை வணங்குவர்.

**பீரப்பா மற்றும் காடமராஜ்** : பீரப்பா, காடமராஜ் போன்ற தெய்வங்களை செம்மறி ஆடுகள், பசுக்களை வளர்ப்பவர்கள் வணங்குவர். செம்பறி ஆடுகள், பசுக்களுக்கு தொற்று நோய் பரவாமல் பாதுகாக்கவும் வழிபடுவர்.

பீரப்பா என்ற ஏழை, ஆடுகளை வளர்பவர் காமரதியை மணம் புரிய எவ்வாறு போராடினார் என்ற கதை உமக்கு தெரியுமா? அதற்காக அவரின் அக்கா எவ்வாறு துணைபுரிந்தார் என்பதையும் அறிந்துக் கொள்ளவும்.

கால்நடைகளான ஆடு, மாடுகளை, மேய பசும்புல் வளர்ப்பு அவசியம் என்பதை உணர்த்த நெல்லூர் அரசருடன் காடமராஜ் எவ்வாறு போரிட்டாரோ உமக்கு தெரியுமா?

* நாட்டுப்புற பண்டிகையில் கிராம தேவதை பூஜை சமயங்களில் நீங்கள் பங்கு பெற்று இருப்பீர். அவ்வாறே சிவன், விஷ்ணு, போன்ற கோயில்களுக்கும் சென்றிருப்பீர், இவ்வித வழிபாட்டு முறைகளை ஒப்பிடுவீர்கள் அல்லவா? இவற்றினிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை வகுப்பு அறைகளில் விவாதிக்கவும்.

நாட்டுப்புற பண்டிகைகளில் பலியிடுதல் என்பது சாதாரணம். இதனால் பல ஆயிரக் கணக்கான பசுக்கள் பலியாகின்றன. இதை நோக்கில் கொண்டு, நமது அரசாங்கம் மத அடிப்படையான செயல்களில் கால் நடைகள் பலியிடுதலை தடை செய்துள்ளது.

**சமுகத்தில் நாட்டுப்புற தெய்வங்களின் வழிபாடு** :

பலர், நாட்டுப்புற கடவுள், தேவதைகள், மக்களை காப்பாற்றும் என்ற நம்பிக்கையில், போராடி பலர் மரணமடைந்தனர். மக்களை காப்பாற்ற தனிசக்தி, இவ்வித கடவுள்கள், தேவதைகளுக்கு உள்ளன என்ற நம்பிக்கையில் வழிபட்டு வருகின்றனர். மலைவாழ் மக்களின் சிக்கல்களை தீர்க்க நாட்டுப்புற தலைவர்களுடன் போராடிய சம்மக்கா, சாரக்கா ஆகியோருக்கும், பண்டிகை செய்து வழிபட்டும் வருகின்றனர்.

SCERT TELANGANA

**சம்மக்கா, சாராக்கா (மேடாரம்) ஜாத்திரை :**

வரங்கல் மாவட்டம், தாட்வாய் மண்டலம் மேடாரம் கிராமத்தில், மலை வாழ் மக்கள் இந்த விழாவை நடத்துவர். ஆந்திரப்பிரதேசம், மஹாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ஒடிசா, சதீஸ்கர், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் இருந்து மக்கள் திரளாக கூடி இந்த விழாவை நடத்துவர். மலைவாழ்மக்களும், மலைவாழ்மக்கள் அல்லாதவரும், கூடி இவ்விழாவை நடத்துவர். இந்த விழாவுக்கு சுமார் ஒரு கோடி மக்கள் பங்கு கொள்வர்.

**கதை :**

காகதீய அரசர், ஆட்சி காலத்தில் 'மேடராஜு' என்ற மலைவாழ் அரசர் வாழ்ந்து வந்தார். அவரின் மனைவி சம்மக்கா, மகள் சாரக்காவின் மகன் 'ஜம்பன்னா', அவரின் மருமகள் 'பகிடித்தராஜு' என்பவர் ஆவார். ஒரு சமயம் அந்த இடத்தில் வறட்சி ஏற்பட்டதால் காகதீய அரசருக்கு கப்பம் கட்ட தவறினர். அதனால் காகதீய அரசர், தம் போர்ப் படையை போரிட அனுப்பினார். அந்த போரில் மேடராஜி, தன் குடும்பம், நம் நாட்டில் வாழ்ந்த ஆண், பெண் அனைவரும் பங்கு கொண்டு மாண்டனர்.



*படம் 20.6 பீடத்தின் மீது சம்மக்கா எனும் பெண் தெய்வ சிலையை நிறுவுதல்*



*படம் 20.7 மேடாரம் ஜாத்திரை காட்சி*

காகதீய போர் வீரர்களை 'சம்பெங்க' கால்வாய்யை கடக்க செய்யாமல் போராடி வீரமரணம் அடைந்தனர். அதனால் அக்கால்வாயிக்கு 'சம்பன்ன வாகு' என பெயர் வந்தது. அவ்வழியே சம்மக்க, சாரக்க ஆகியோர் காகதிய போர் வீரர்களுடன் போராடி தன் இனத்தை காப்பாற்ற உயிர் தியாகம் செய்தனர்.

அவர்களின் வீரத்தையும், தியாகச் செயல்களையும் மறக்காமல் மேடாரம் விழாவை மலைவாழ் மக்கள் நடத்தி வருகின்றனர். இவ்விழாவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தி வருகின்றனர். இவ்விழா மூன்று நாட்களுக்கு நடைபெறும். சம்மக்கா, சாரக்கா, வடிவம் இல்லாத தேவதையாக அலங்கரித்து விழா எடுப்பர்.

முதல் நாள், காட்டிலிருந்து பெரிய அளவில் மக்கள் கூடி சம்மக்கா, சாரக்காகவை அலங்கரித்து கொண்டுவருவர். இவர்களை மரத்தின் கீழ் வைத்து பூஜை செய்வர். மக்கள் திரளாக கூடி கத்தியுடன் வழிபடுவர். மக்கள் பலர் வெல்லக்கட்டிகளை தேவதைக்கு அளிப்பர். இதை வெல்லத்தங்கம் என அழைப்பர்.

**மொஹரம் மற்றும் உருஸ் :**

கெடுதலுக்கு எதிர்ப்பாக போராடி மரணம் அடைந்தவர்களின் சின்னமாக முஸ்லீம்கள் வழிபாடு செய்வர். ஈராக்கில் நடந்த கர்பலா போரில் முகமது நபியின் பேரப்பிள்ளை மரணம் அடைந்தார். அவரின் நினைவாக மொஹரம் பண்டிகையை கொண்டாடுவர்.



படம் 20.8 அஜ்மீர் தர்கா




படம் 20.9 ஜஹாங்கீர் பீர் தர்கா

அவ்வாறே முஸ்லீம்கள் உள்ள இடங்களில் முஸ்லீம்களின் மட அதிபதிகள் இறந்த உடலை அடக்கம் செய்து சமாதியை வணங்குவர். மக்கள் தர்காவிக்கு சென்று மலர்களையும், பூச்செண்டுகளையும் வைத்து வணங்குவர், இவ்வித தர்காக்களில் 'கவாலிஸ்' இசையை பாடி வழிபடுவர். இவ்வாறு வழிபடுவதால் நபிகளின் ஆசி பெற்றதாக கருதுவர். சிலர் தமக்கு குழந்தை பாக்கியம் பெறவும், வேலை தொடர்பான கோரிக்கையை முன்வைத்தும் வணங்கி வழிபடுவர்.

சூபி தத்துவத்தை பரப்பிய குருக்களின் சமாதிகள் மீது தர்காவை கட்டி வணங்குவர். சூபி குருக்களின் சமாதிகள் தர்கா ஆகும். இவ்வித தர்காவை அனைத்து மதத்தவரும் மதித்து வழிபடுவர். சூபி குருக்களின் தனி சக்தி இருப்பதாக நம்பி, தர்காவை வழிபடுவர்.

**ஜஹாங்கீர் பீர்தர்கா - மதசகிப்புதன்மைக்கு ஒரு சின்னம்**

ஜஹாங்கீர் பீர் தர்கா ரங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள கோதூர் மண்டலத்தில் உள்ளது. இது ஈராக்கில் இருந்து வந்து இப்பகுதியில் மாண்ட இரண்டு சகோதரர்கள் சையத் கௌசுதீன் மற்றும் சையத் புரனோதின் என்பவர்களின் பெயரால் அவர்களின் சீடர்களால் 15வது நூற்றாண்டில் அவர்களின் சமாதியின் மீது கட்டப்பட்ட மசூதி ஆகும். முகலாய மன்னரான ஔரங்கசீப் 17வது நூற்றாண்டில் இம்மசூதியை பார்வையிட்டபோது குவாஜி என்பவரை இம்மசூதியை பராமரிக்க நியமித்தார். குவாஜி இப்பகுதியை வழிபடும் புனித இடமாக மேம்படுத்தினார்.

ஒவ்வொரு நாளும் ஐதராபாத் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் இந்த மசூதியை பார்வையிடுகின்றனர். வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்வதால் அண்டை மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் இம்மசூதிக்கு வந்து வழிபடுகின்றனர். ஊர்ஸ் விழாவின்போது இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து, அயல்நாடுகளிலிருந்தும் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் மதவேறுபாடின்றி பங்கேற்கின்றனர். இந்த மசூதி மதசகிப்புத் தன்மைக்கு ஓர் சின்னமாக திகழ்கிறது.

**போனாலு பண்டிகை :**

தெலுங்கானா பகுதியில் போனாலு என்பது மிகவும் புகழ் பெற்றதாகும். இத் திருவிழாவில் பெண் தெய்வங்களுக்கு பொங்கலிட்டு வழிபடுவர். பின்பு குடும்ப நண்பர்கள் அனைவரும் கூடி உணவை உண்டு மகிழ்வர்.

போனாலு விழாவின் பகுதியாக பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மண் குடங்களை தலைமீது வைத்துக் கொண்டு ஊரை சுற்றி வந்து தேவதைக்கு வைப்பர். இதையே கடம் என்பர்.

SCERT TELANGANA



செம்பு, குடம் அல்லது மண்பாண்டத்தின் பொங்கலை நிரப்பி, தலைமீது வைத்துக் கொண்டு ஊர்வலத்தில் பங்கு கொள்வர். போதுராஜுவாக அழைக்கப்படும் ஆண்கள், நடன நிகழ்ச்சிகளை நடத்தி ஊர்வலம் வருவர். இவர்கள் வேப்பிலையை கையில் வைத்துக் கொண்டு சவுக்கடி பிரம்பை கையில் ஏந்தி ஊர்வலம் வருவர்.

* நீங்கள் எப்பொழுதாவது ஜாத்திரை (அ) உர்ஸ் (அ) போனாலு பண்டிகையில் கலந்து கொண்டு இருந்தால், அதை வகுப்பறையில் விவாதிக்கவும்.

* கிராம தேவதையின் பூசை முறைக்கும்; கோவில்கள், மசூதிகளில் நடைபெறும் வழிபாட்டு முறைக்கும் உள்ள வேறுபாடுகளை அறியவும்.

**நாட்டுப்புற பழக்கவழக்கம் - அதன் பழமை நிலைகள் :**

நாட்டுப்புற பழக்க வழக்கங்களை ஆய்வு செய்த போது, வரலாற்று நூல்களின் வாயிலாக மக்கள் பல பழக்க வழக்கங்களை பின்பற்றி உள்ளனர் என தெரிகிறது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் மக்கள், நாகபாம்பு, மரங்கள், நெருப்பு, நீர் போன்றவற்றை வழிபட்டதாக வரலாறு மூலம் தெரிகிறது.

ஸ்ரீநாதர் 1450ல் எழுதிய பாலநாட்டு வீரர்களின் கதை எனும் நூலில் போது ராஜுவை கிராம மக்கள் வழிபட்டதாக கூறியுள்ளார். வல்லபராயர், இயற்றிய கிரீதாபி ராமம் என்னும் நூலில் பல்நாட்டிவீரர், வரங்களில் மைலார தேவதை மற்றும் பல தேவதைகள் குறித்து தெரிவித்து உள்ளனர்.

கோவில்கள், மாதா கோவில்கள், மசூதிகளில் நடைபெறும் விழா-முறைகள் ஒன்றுக் கொன்று மாறுபட்டு இருப்பதை கவனிக்கலாம்.

குலம், மதம் பொருளாதார நிலையை பொருட்படுத்தாமல் மக்கள் கிராம தேவதைகளை வழிபடுவர். எடுத்துக்காட்டாக முஸ்லீம் விவசாயிகள் கூட நாட்டுப்புற தேவதைகளின் வழிபாட்டில் கலந்துக் கொள்வர். அவ்வாறே அனைத்து மதத்தவரும் தர்காவுக்கு சென்று குருக்களின் ஆசியை பெறுவர். சிலர் தர்காவுக்கு சென்று பக்தியுடன் செடிகளுக்கும், சுவர்களுக்கும் நூல் கயிறுகளை கட்டி தம் கஷ்டங்களை தீர்க்க வழிபடுவர். சிலர் தர்காவுக்கு சென்று தீயசக்திகளால் தாம் பல இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக கூறி தாயத்தும் கட்டிக் கொள்ள செல்வர்.

**கிராம தெய்வங்கள் மற்றும் உயர்ந்த மத பழக்க வழக்கங்களின் சங்கமம் :**

இந்திய நாட்டில் பல தரப்பட்ட மக்கள், தம் மதங்களிடையே நெருங்கிய தொடர்பு கொண்டு இருப்பர், இதனால், மதம், பழக்க வழக்கத்தினிடையே பல ஒற்றுமைகள் கூட இருக்கும்.

உயர்ந்த மதத்தவரின் சில கொள்கைகளை கிராமிய மக்களும் பின்பற்றுவர்.

இவ்வாறு உயர்ந்த மதத்தவர்கள் கூட, ஆலமரம், நாகாலம்மா, குலதெய்வங்களை வணங்குவர், நாகம், கால்நடைகள், செடிகள் பறவைகள் போன்றவை உயர்ந்த மதத்தில் வந்து சேர்ந்துள்ளன. கிராமிய மக்கள் கூட புத்தர் சிவன், விஷ்ணு போன்ற கடவுள்களை தேவதைகளின் பூசையில் சேர்த்து வழிடுகின்றனர். நாகம், சிங்கம், நந்தி, செடிகளைக் கூட வணங்க ஆரம்பித்தனர்.

இஸ்லாமிய மதத்தவர் கடவுள் ஒருவரே 'அவரே அல்லா' என்ற நம்பிக்கையை பரப்பி வருகின்றனர். ஆனால் கிராமிய நிலையில் சில முஸ்லீம்கள் தர்கா, சுபி முனிவர்களிடம் சென்று தரிசிப்பதால் தங்களுடைய கஷ்டங்கள் தீரும் என நம்புகின்றனர். இதனால் அனைத்து மத மக்களும் தர்காவுக்கும், உர்ஸ்க்கும் சென்று மத வேறுபாடின்றி வழிபடுகின்றனர்.

SCERT TELANGANA

**கிராமிய ஞானமும் உயர்ந்த மதமும் :**

சாதாரண மக்களிடமிருந்து வந்த கபீர், யோகி வேமனா மற்றும் பல சுபி மத குருக்களிடையே மதம் தொடர்பான வலுவான கொள்கைகள் ஏற்பட்டன. அவர்களின் நோக்கங்களையும், கருத்துக்களையும் மக்களிடையே பரப்பினர். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தெலுங்கில் எழுதிய யோகி வேமன்னாவின் படைப்புக்களை படித்து தெரிந்துக் கொள்ளவும்.

> தனியாள் அனுபவம் இல்லாமல் பழமையை பின்பற்றினால் பயம் என்பது நீங்காது.அறியாமை என்ற இருட்டை சுவரில் தீட்டப்பட்ட தீப்பிழம்பு நீக்காது. அறுசுவைகள் வேறு, வேறானது, ஆனால் சுவை ஒன்றே. உண்மையை தெரிவிக்கும் பழக்க வழக்கம் பல. ஆனால் உண்மை என்பது ஒன்றே!
>
> முனிவர்களிடையே வேறுபட்ட கருத்துண்டு. ஆனால் அவர்கள் அனைவரும் செய்யும் தியானம் ஒன்றே.
>
> வழுக்கைதலை, முடிஉள்ள தலை, சாம்பல் பூசிய முகம், மந்திரங்களை ஓதுவது, மத அடிப்படையான உடைகள் அணிவது மட்டும் போதாது. சுத்தமான மனது இல்லாதவர்கள் தூயவர்கள் அல்ல. இவர்கள் அளிக்கும் கூற்றுகளை மக்கள் நம்புவது அவர்களின் செயல்களின் மீது ஆதாரப்பட்டுள்ளது.

**முக்கியச் சொற்கள் :**

1. நாட்டுப்புற தெய்வங்கள்
2. ஜாத்திரை 3. உருஸ் 4. பீரி
5. போனாலு 6. ஊர்வலம்

**செயல் திட்டம் :**

1. உங்கள் ஊரில் ஏதாவது ஒரு ஊர்திருவிழா குறித்து உன் தாத்தா பாட்டியிடமிருந்து சேகரித்து ஒரு பட்டியலை தயாரிக்கவும்.
2. உங்கள் ஊரில் கிராமிய தேவதை குறித்து கதைகளை சேகரித்து அதன் மூலம் ஒரு சிறு புத்தகத்தை தயார் செய்.

## உமது கற்றலை மேம்படுத்துக

1. கிராம தேவதையை வழிபடுவதனால் சாதாரணமாக காணப்படும் அம்சங்கள் யாவை?(AS1)
2. மக்கள் கிராமத்திலிருந்து நகரங்களுக்கு சென்றாலும் தம் கிராம தேவதைளை வணங்குவதை தொடர்வர்? எவ்வாறு?(AS1)
3. வெவ்வேறு தேவதைகளை வணங்கும் போது வெவ்வேறு மொழிகளை எதற்காக உபயோகிப்பர்?(AS4)
4. தெலங்கானா வரைபடத்தில் ஜாத்திரைகள் மற்றும் உர்ஸ் நடக்கும் இடங்களை குறிக்கவும்.(AS5)
5. பக்கம் 186ல் உள்ள நான்காம் பத்தியை படித்து, அது குறித்து உன் கருத்தினைக் கூறு.(AS2)
6. உன் பகுதியில் வாழும் பல்வேறு மதங்களை சேர்ந்த மக்களுடன் கலந்துரையாடி கீழ்காணும் அட்டவணையை நிரப்பு.(AS3)

| வ.எண் | பெயர் | கடைபிடிக்கும் மதம் | வழிபடும் மதம் | கொண்டாடும் பண்டிகைகள் |
|---|---|---|---|---|
| | | | | |

SCERT TELANGANA

பாடம் 21

# கடவுளை வழிபட பக்தி வழிகள்

தெய்வ ஆராதனை பாகமாக பூசாரிகள், பூசை செய்தல், பஜனை செய்தல், கீர்த்தனைகளை பாடுதல் ஆகியவற்றை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலர் மௌனமாக இறைவனை வழிபடுவர். சிலர் ஆரவாரத்துடன் பாட்டுகளை பாடி வழிபடுவதும் உண்டு. இவை அனைத்தும் எட்டாம் நூற்றாண்டுக்கு பிறகு ஏற்பட்ட பக்தி இயக்க வழிகளே ஆகும். ஆறாம் வகுப்பில் விஷ்ணு பக்திபாடல்கள் சிவபக்தி பாடல்களை படித்தீர்கள். அரசர்கள், பேரரசர்கள் கோயில்களை கட்டிவந்தனர், அதற்கு வழிபாடுகள் தொடர, நிலங்களயையும் இதர பரிசுகளையும் பூசாரிகளுக்கு வழங்கி தெய்வ ஆராதனை தொடர வழி வகுத்தனர். பயிற்சி பெற்ற பூசாரிகள் மட்டுமே சிலைகளுக்கு பூசைகளை செய்வர். சில குலமக்களை கோயில்களுக்கு வரதடையும் விதித்தனர். இதனால் மக்களிடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு பல எதிர்ப்புகள் ஆரம்பமானது. கடவுளின் மீது பக்தி மற்றும் புதிய கருத்துக்கள் ஏற்பட்டன. இவற்றை முழுமையாக அறிய இப்பாடத்தை படியுங்கள்.

SCERT TELANGANA

**வேதாந்தம் - பக்தி :**

மிகவும் உயர்ந்த திறன் கொண்ட வேதாந்திகளில் ஒருவரான சங்கராச்சாரியர், கி.பி.8ஆம் நூற்றாண்டில் கேரளாவில் பிறந்தார். இவர் தெய்வ வழிப்பாட்டை மக்களுக்கு கூறினார் ஆத்மா, பரமாத்மா இரண்டும் ஒன்றே எனவும் பிரம்மம், மட்டுமே இவ்வுலகில் மிகவும் உண்மையானது என போதித்தார். உண்மைக்கு உருவடிவம் இல்லை எனவும் கூறினார். உலக சுகத்தை அனைவரும் அடைய பிரம்மம் ஒன்றே போதுமானது எனவும், பிரம்மம் ஒன்றே உண்மை வடிவை தெரிந்துக் கொள்ள உதவும் எனவும், மோட்சம் அடைய தியானம் ஒன்றே மிகச் சிறந்தது எனக் கூறினார்.

பதினோராம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் பிறந்த இராமனுஜர் மீது ஆழ்வார்களின் ஆதிக்கம் ஆழமாக விழுந்தது. மோட்சம் அடைய விஷ்ணுவை பக்தியுடன் வழிபட்டால் அடையலாம் எனக்கூறினார். விஷ்ணு இரக்க குணம் உள்ளவர். அனைவரையும் மன்னித்து அருள்புரிந்து மோட்ச வழி அளிப்பர் எனக் கூறினர். இராமனுஜர் உயர்குலமக்களுக்கு கோவில் ஆராதனையில் முக்கியத்துவம் தந்தார். இவரின் கருத்துப்படி ஆத்மா, பரமாத்மாவுடன் கலந்தால் தனித்தன்மை பெறலாம் என கூறினார். பக்தி செயலுக்கு இராமனுஜ கொள்கைகள் ஒருவாறு உதவியது.

**பசவன்னா – வீரசைவம் :**

பக்தி செயலுக்கு, கோவில்களில் பூசைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு என தெரிந்துக் கொண்டோம். இதற்கு எதிராக வீரசைவ போராட்டம் ஆரம்பமானது. இதனை பசவன்னா துவங்கினார். இவரின் உதவியாளர் அல்லமபிரபு அக்கா மஹாதேவி ஆகியோர் உதவினர்.

இந்த போராட்டம் 12ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்தில் ஆரம்பமானது. மக்களிடையே சமத்துவம் இருக்க வேண்டுமென வீரசைவர் வலுவாக வாதித்தார். குலமத வேறுபாடு, பெண்களின் ஏற்றத்தாழ்வு குறிதது கருத்து உள்ளதை எதிர்த்தனர். இவர்கள் மந்திரம் ஓதுவதையும் சிலை வழிபாட்டையும் கடுமையாக எதிர்த்தனர்.

பசவன்னா கூறிய சொற்கள் இவ்வாறு உள்ளன

*பணக்காரர்கள்*
*சிவனுக்கு கோயில் கட்டுவர்*
*வேதம் ஓதுபவனோ*
*நான் என்ன செய்யமுடியும்*
*என் கால்கள்*
*என் உடல் தேவாலயம்*
*என் தலை*
*கோவிலின் தங்க கலசம்*
*கேள்! ஒரு நதி சங்கமமானால்*
*கோயில்கள் தரைமட்டமாகும். ஆனால்*
*என்றும் நிலைத்திருக்கும் நீர் ஓடைகள்.*

- * பசவன்னா தெரிவித்த கருத்துக்கள் யாவை?
- * பசவன்னா காணிக்கை கடவுளுக்கு அளிக்கும் கோயில் எது?

**மஹா ராஷ்டிர பக்தி சாதுக்கள் :**

13ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டுகள் வரை மஹாராஷ்டிராவில் பல பக்தி கவிஞர் இருந்தனர். எளிமையான மராட்டிய மொழியில் அவர்கள் எழுதிய பாடல்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. மஹாராஷ்டிர பக்தி கவிஞர்களில், ஞானேஸ்வர், நாம்தேவ், ஏகநாத், துகாராம் போன்றவர்கள் முக்கியமானவர்கள. பக்திஇயக்க பெண்கவிஞர்கள் சக்குபாய் முக்கியமானவர்.

தீண்டாமை குலமாக மஹர் இனத்தவர்கள் சோகாமேலு குடும்பத்தினரும் முக்கியமானவர்கள், இவ்வித பக்தி திசை பண்டரிபுர கோவில்களில் வீற்றிருக்கும் விட்டல் (மற்றொரு உருவில் உள்ள விஷ்ணு) மீது பல பக்தி பாடல்களை இயற்றி பாடினர்.



*படம் 21.1 மரத்தடியில் அமர்ந்துள்ள சாதுக்கள்*

SCERT TELANGANA

இவ்வகையான துறவிகள் செயல்கள் தர்ம நிபந்தனைகள், வெளி தோற்றம் போன்றவற்றை எதிர்த்தனர். உண்மையான கடவுளை காண, குடும்பமாக இருந்து, குடும்ப நண்பர்கள் நல்லமுறையில் ஒவ்வொருவரும் கவனித்தால் மோட்சம் கிடைக்கும் என்பது இவர்களின் கருத்து. மற்றவர்களின் கஷ்டத்தில் பங்கு கொண்டு உணர்ந்தாலே சமூகத்தில் மேன்மை ஏற்படும் மற்றவர்களின் கஷ்டங்களை புரிந்துக் கொள்பவர்களே வைஷ்ணவர்கள் என்பர்.

சந்த்துகாரம் எழுதிய ஒரு வகை பக்தி பாடலில் கீழ்கண்டவாறு உள்ளன.

*அதிகமாக பின் தள்ளப்பட்டவனை*
*பிறரால் அடித்து உதைத்தவனை*
*முழுமையாக வெளியேற்றப்பட்டவனை*
*தானே அவனாக ஊகித்து, பிறர் படும் கஷ்டத்தை உணர்ந்தவனே துறவி.*
*உன்னை ஒவ்வொரு நொடியும் நினைப்பவனை அவன் சாதுவாக இருந்தாலும்*
*கடவுளுக்கு நெருக்கத்தில் இருப்பவன்*
*என விட்டு விடாமல் அனைவரையும்*
*தன்னுடன் சேர்த்துக் கொண்டு*
*தன்மகனாக கருத்தில் கொண்டு*
*செயல்படுவான்.*
*அடிமைகள் போன்றவர்களை*
*கடவுள்கள் என கருதி மனிதனுக்கு*
*சமமான உரிமை நட்பு கொள்பவர்*
*சிறந்தவர் என துகாராம் கருதுகிறார்.*

* ஏழைகளும், துன்பப்படுவர்களுமே இறைவனின் உண்மையான பக்தர்கள் என துக்காராம் ஏன் கூறுகிறார் என நீ கருதுகிறார்?

சோகாமேலாவின் மகன் எழுதிய அபாங்கபாடலில் உள்ள கருத்து கீழ்கண்டவாறு உள்ளன.

எங்களை தாழ்ந்த குலத்தில் இணைத்தது நீ
அந்த உண்மைக்கு மாறாக எதற்காக நிற்கிறாய், மகாராஜா?
நீ இதற்காக வெட்கப்பட வேண்டும்
எங்கள் வீட்டில் சாப்பிட்டாய் அல்லவா
அவற்றை நீ எவ்வாறு மறுப்பாய்?
எனக்கு எதற்காக கொடுத்தாய் இப்பிறவியை?
கேட்கின்றான், சோகாவின் (மகன்) கார்மேலன்

* இந்த அபங்க பாடலில் சமூக வாழ்க்கை பற்றி வெளிப்படுத்திய கருத்துக்களை விவாதியுங்கள்.

**நாதபண்டிதர்கள், சித்தர்கள் யோகிகள் :**

கலாச்சார பழக்கமாக வருகின்றசில மத விதிகளை, சமூக வாழ்க்கையை இக்காலத்தில் ஏற்பட்ட மாளிகைகளை சிலர் சரளமான தர்க்க வாதத்தில் விமர்சித்தலை தொடர்ந்தனர். அவர்களில் நாதபாண்டிதர்கள், சித்தர்கள், யோகிகள் உள்ளதை அவர்கள் உலக ஆசையை கைவிட சொல்கிறார்கள்.

இவற்றை சாதிப்பதற்கு யோகா, ஆசனங்கள், தியானம் போன்றவற்றை கற்றுக் கொண்டு பௌத்த அம்சங்களின் மீது கடினமான பயிற்சி பெற வேண்டுமென்று போதித்தார்கள். இவர்களின் போதனைகள் முக்கியமாக தாழ்ந்த குலத்தவர்களிடம் பரவியது. மரபுரீதியாக மதத்தை பற்றி இவர்கள் செய்த விமர்சனம், வட இந்தியாவில் பக்தியுடன் கூடிய மதம் பரவியதற்கு வழி வகுத்தது.

**இஸ்லாம் - சூபீசதத்துவம் :**

பக்தி இயக்க வாதிகளுக்கும், சுபீக்களுக்கும் இடையே நிறைய கருத்துக்கள் ஒரே மாதிரியாக இருந்தது. அதனால் ஒருவரின் கருத்துக்களை மற்றொருவர் பரிமாறிக்கொண்டனர். சூபீக்கள்



SCERT TELANGANA

முஸ்லீம் மதவாதிகள். அவர்கள் வெளிப்படையான தோற்றத்தை எதிர்த்தனர். கடவுளின் மீது அன்பு, பக்தி மற்றும் மனிதர்கள் அனைவரின் மீதும் இரக்கம், கருணை இருக்க வேண்டுமென்று ஆழமாக சொன்னார்கள். ஒரே கடவுள் முறையை கண்டிப்பாக பின்பற்றவேண்டு மென்றும் அதாவது ஒரே தெய்வத்திற்கே கட்டுப்பட்டு இருக்க வேண்டுமென்றும் இஸ்லாம் போதித்தது. சிலை வழிப்பாட்டை எதிர்த்தது. அதே சமயத்தில் முஸ்லீம் பண்டிதர்கள் ஷரியத் என்ற புனித சட்டத்தை உருவாக்கினர். முஸ்லீம் மத பண்டிதர்கள் வகுத்த பரந்த செயல்களை நடத்தை முறைகளை சூபீக்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். உலகத்தை ஆசையை மறந்து அவர்கள் கடவுளிடம் ஒற்றுமையை வேண்டினர். பக்தி கவிஞர்களை போன்று சுபீக்கள் கூட தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி கவிதைகளை எழுதினர். வெவ்வேறு நிகழ்ச்சிகளுடனும், நீதி கதைகளுடனும் இணைந்த வசன இலக்கியம் புகழ்பெற்றது. கஜலீ, ரூமி, சாதி ஆகியோர் மத்திய ஆசியாவின் சிறந்த சுபீக்கள் ஆகும். நாதர்கள், சித்தர்கள் யோகிகள் போன்றவர்களை போன்றே சுபீக்கள் கூட உலகத்தை வேறு விதமாக பார்ப்பதற்கு இதயத்திறகு பயிற்சி அளிக்கலாம் என்று கூறினர். இந்த பயிற்சிக்கு அவர்கள் ஜிக்ர் (ஒரு நாமத்தை அல்லது சூத்திரத்தை பற்றி வழிபடுதல்) சாம (பாடுதல்) ரக்ஸ் செய்தல் நீதிக்கதைகளை விவாதித்ல், போன்றவற்றை ஒரு குரு அல்லது பீர் வழிகாட்டியில் செய்யம்படும் முறைகளை உருவாக்கினர். அவ்வாறு சூபீ குருக்களின் பரம்பரை (சில்சிலா) ஏற்பட்டது. அவர்களில் ஒவ்வொருவரும். போதனையிலும் சாதனை செயல்களிலும் சிறிது சிறிதாக மாறுபட்ட முறையை பின்பற்றி வந்தனர்.



படம் 21.2 மகிழ்ச்சியில் துறவிகள்

பதினொன்றாம் நூற்றாண்டு முதல் மத்திய ஆசியாவிலிருந்து வந்த சூபீக்கள் நிறைய பேர் ஹிந்துஸ்தானில் தங்கினர். டில்லி சுல்தான்களின் ஆட்சி ஆரம்பமான முதல் பாரதம் முழுவதும் ஏராளமான சூபி ஆரம்பமையங்கள் ஏற்பட்டு இந்த செயல் வலுப்பட்டது. மிகவும் புகழ்பெற்ற சமூகத்தில் சிஷ்டீ பரம்பரை ஒன்று. இதில் பக்தி இயக்க வாதிகள் நிறைய பேர் வந்தனர். அவர்கள் அஜ்மீரிலுள்ள குவாஜா மொயினுத்தீன் சிஷ்டி, டில்லியில் குதுபுதின் பக்தியார் காகி, பஞ்சாபில் பாபாபரீத் டில்லியில் குவாஜா நிஜாமுதீன் ஔலியா, குல்பர்க்கர் பந்தனவாஜ், கிசுதராஜ் முக்கியமானவர்கள்.

சூபி குருக்கள் தர்மசாலாவில் ஒன்று கூடி விவாதிப்பர். இராஜவம்சம், ஜமீன்தார்கள், சாதாரணமக்கள் அனைவரும் இந்த தர்மசாலைக்கு வருவர் பக்தி, தொடர்பான விஷயங்களை விவாதிப்பர். தங்களின் சாதாரண கோரிக்கைகளையும் தீர்த்துக் கொள்ள சாதுக்களின் ஆசியை கோருவர். சூபி குருக்கள் தனியான சக்தியை பெற்று, தம்மை நாடி வரும் பக்தர்களின் நோய்களையும், இடையூறுகளையும் தீர்த்து வைப்பர். சூபி சாதுக்களின்

சமாதிகளை புன்னிய இடமாக மாற்றி அனைத்து மதத்தவரும் கண்டுகளிக்கும் வகையில் அலங்கரித்து வைத்தனர். இதை தர்கா என்பர்.

* நீங்கள் எப்பொழுதாகிலும் தர்காவுக்கு சென்று அவற்றை கவனித்தது உண்டா? மற்றும் பீர்சாதுக்களை எவ்வாறு மதிப்பார்கள் மற்றும் எவ்வாறு வழிபடுவார்கள் என்பதை உன் வகுப்பறையில் நண்பர்களிடம் தெரிவிக்கவும்.

**இந்தியாவில் புதிய மதங்களின் வளர்ச்சி** :

பதிமூன்றாம் நூற்றாண்டுக்கு பிறகு வட இந்தியாவில் பக்தி இயக்கம் எனும் புதிய முறை உருவாயின. இஸ்லாம், இந்துமதம், சூபிதத்துவம், மற்றும் நாதபண்டிதர், சித்தர்கள், கோகிகள் ஒருவரின் மீது மற்றொருவர் செல்வாக்கை ஏற்படுத்தி புதிய நகரங்கள், இராஜ்ஜியங்கள் ஏற்படுவதை கவனித்தோம். மக்கள் புதிய தொழில்களை தெரிந்துக் கொண்டு பின்பற்றிவந்தனர். புதியனவற்றை கண்டு கொண்டு அதன்படி செயல்பட்டு வந்தனர். முக்கியமாக கைத்தொழில்கள் செய்பவர்கள் விவசாயிகள் வனிகர்கள் ஆகியோர் சாதுக்கள் கூறும் அறிவுரையை கேட்டு பின்பற்றி வந்தனர். கபீர், பாபா குருநானக் போன்றறோர் சில மூட நம்பிக்கைகளை வெறுத்தனர்.

பம்மெர போதனா, அன்னமாச்சாரியா சைதன்ய மகாபிரபு, துளசிதாஸ் போன்றவர்களின் கருத்துக்களை மக்கள் பின்பற்றினர். வரங்கல் அருகில் உள்ள பம்மெர கிராமத்தில் வாழ்ந்த போதனா புகழ்பெற்ற மகாபாகவதத்தை எழுதி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். போதனர் இயற்கை கவிஞர் என அனைவராலும் போற்றப்பட்டார். அவர் தன் இயற்கையான பக்தி கருத்துக்களை தெரிவிக்க பாடுபட்டார்.

**தால்லபாக அன்னமாச்சாரியா** : (கி.பி.1408-1503)

ஆந்திரபிரதேசத்தை சார்ந்தவர் இவர் பாடல் மற்றும் கவிதையின் பிதாமகன் என அழைக்கப்பட்டார். அன்னமாச்சரியா திருபதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்வாமி மீது அவரின் புகழை கீர்த்தனை வடிவில் எழுதுவதற்கும் பாடுவதற்கும், தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர். அவரின் பாடல்கள் அனைத்தும் அனைவராலும் மிக எளிதில் புரிந்துக்கொள்ளும் வழியில் இருந்ததால், மக்கள் இவருடைய பாடல்களை மிகவும் விரும்பி பாடினர்.

அன்னமய்யா ஸ்ரீ வெங்கடேச பெருமாள் மீது சுமார் முப்பத்தி இரண்டாயிரம் பாடல்களை பாடினார் என அன்னமாச்சாரியார் வரலாறு மூலம் நமக்கு தெரிகிறது.

இவரின் பாடல்களில், நீதி, தர்மம், உண்மை போன்ற குணங்கள் இருந்ததால், அனைவரும் போற்றிபாடி மகிழ்ந்தனர்.

இவருடைய காலத்தில் தீண்டாமை என்ற சமூக செயல்அதிகமாக இருந்தன. இதனை இவர் எதிர்த்து போராடினார்.

பிரம்பம் ஒகடே பர பிரம்மம் ஒகடே

ஏ குலஜுடைனா நேமி, எவ்வடைனானேமி

என்ற கீர்த்தனைகள் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி மக்களிடையே ஜாதி, இனம், குலம் பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகள், ஏற்படாமல் கடவுளை வழிபட இவரின் கீர்த்தனைகள் உதவின.

பிரம்மமொகட்டே பரபிரம்மமொகட்டே பர

பிரம்மமொகட்டே பரபிரம்மமொகட்டே

நின்டார ராஜு, நித்திரின்சு நித்தர ஒக்கடே

அன்டனே பண்ட்டு நித்ர அதியு ஒக்கடே

மென்டைன பிராம்மனடு-மெட்டு பூமி ஒக்கடே

சன்டாலுடுன்டேடி - சரிபூமி ஒக்கடே

-அன்னமாச்சார்யா கீர்த்தனை





SCERT TELANGANA

**சைதன்ய மஹாபிரபு** : (1486-1534)

சைதன்ய மஹாபிரபு கிழக்கு இந்தியாவை சேர்ந்தவர். (தற்போதய வங்காளதேசம் மற்றும் மே. வங்காள மாநிலம்) இவர் வைஷ்ணவ துறவியாவார். சமூக சீர்திருத்தத்திற்காக இவர் மிகவும் பாடுபட்டார். இவர் பகவத் கீதை, பாகவத புராணங்களின் ஆதாரமாக பக்தியை மக்களுக்கு புகட்டினார். சமூக பஜனை மூலம், பக்தியை பரவச் செய்யலாம் என்பது இவரின் கருத்து. இவரின் முயற்சியால் ஹரே ராமா மந்திரத்தை உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார்.

**கஞ்சர்லா கோபன்னா** (1620-1680)

17ஆம் நூற்றாண்டை சார்ந்தவர். இவர் பக்த இராமதாஸ் காலத்தவர். கஞ்சர்ல கோபன்னா இராம பக்தர். இவர் கர்நாடக சங்கீதத்தின் பல கீர்த்தனைகளுக்கு இசை அமைத்து பாடினார். தெலுங்கு மொழியில் புகழ் பெற்ற வாக்கேய காருடு (சுயமாக எழுதி பாடுபவர்)ஆவார். இவர் பத்ராசலத்தில் உள்ள ஸ்ரீராமர் கோயிலை புதுப்பித்தார். இவர் இராமபிரான் மீது இராமதாஸ் பக்தி பாடல்கள் எனும் பாடல்களை பாடினார். இவர் தசரதி சதகம் என்ற நூலை 108 பாடலுடன் ஸ்ரீராமருக்கு அர்ப்பணித்தார்.

என் மீது ஏன் இரக்கம் காட்டினாயோ
நீ கூறு இராமா!
வம்சத்தின் உத்தமனான இராமனே
உம்மைப்பற்றி வர்ணிக்க
என் தலைமுறையாலேயே இயலாது இராமா
ஸ்ரீ ரகுநந்தனே சீதாரமணா
என்றும் எம்மை காப்பவனே
கருணைக் கடவுளே
இரக்கமே உன் பிறப்பா?
நீ சொல் இராமா

-இராமதாஸ் கீர்த்தனை

* வேறுசில வாக்கேய காரர்கள் பற்றியும் அவர்களின் கீர்த்தனைகளைப் பற்றியும் தெரியுமா?

துளசிதாஸ் இராமரை வழிபடும் வகையில் இறைவனைக்கண்டார். இவர் இராமசரிதமனஸ் காவியத்தை கிழக்கு உத்திரபிரதேசத்தில் நடைமுறையில் உள்ள அவாதி எனும் மொழியில் எழுதினார். இவர் (15ஆம் நூற்றாண்டு இறுதி காலத்தவர்) அஸ்ஸாம் மாநிலத்தை சேர்ந்தவர் சங்கர தேவர் விஷ்ணு வைப்பற்றிய பக்தி பாடலை காவிய வடிவில் எழுதி பரப்பினார். இவர் நாம்கர் என்ற பெயரில் பலதுதிபாடல்களை கோவில்களில் பாடினார். இது இந்நாள் வரை நடைமுறையில் இருந்து வருகின்றன.


*படம் 21.3 மீராபாய் வடிவ ஓவியம்*

தாது தயாலு, ரவிதாஸ், மீராபாய், போன்ற பக்தர்கள் மேற்கூறிய வர்கத்தை சேர்ந்தவர்களே. மீராபாய் இராஜ வம்ச பெண்மணி. மேவரி இராஜவம்ச மருமகளாவாள். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தீண்டாமை பெருகியிருந்த குலத்தில் பிறந்த ரவிதாஸ் எனும் குருவின் சீடராக சிறந்த பெண் சாதுவாக மீராபாய் விளங்கினார்.

இவர் கிருஷ்ணனின் பக்தையாவார். இவர் பல கீர்த்தனைகளை எழுதியுள்ளார்.


SCERT TELANGANA

பல பக்தி சாதுக்கள் தம் கீர்த்தனைகளை தம் வட்டார மொழிகளில் எழுதி, பாடி வந்தனர். அதனால் அவை மற்ற இடங்களுக்கு பரவவில்லை சில காலத்தில் இவை காலப்போக்கில் மறைந்து விட்டன. சிலர் சில கீர்த்தனைகளை ஏழைகளின் நிலைக்கேற்ப பாடி ஆடி வந்தனர்.

* நீங்கள் எப்பொழுதாவது உங்களுடைய தாய் மொழியில் பஜனை பாடல்களை கேட்டீர்களா? அதை எவர் எழுதினர் என்பதை கேட்டு சில பஜனை பாடல்களை வகுப்பறையில் பாடி மகிழுங்கள்.

**கபீர் :**

பதினைந்தாம் நூற்றாண்டில் இடையில் வாழ்ந்த சாதுக்களில் கபீர் சிறந்தவர். இவர் நெசவுத்தொழில் நெய்யும் முஸ்லீம் குடும்பத்தில் வளர்ந்தவர். இவர் காசி (வரணாசி) நகரத்திலோ அல்லது அதற்கு அருகிலோ வாழ்ந்ததாக கூறுவர் வரலாறு முழுமையாக கிடைக்கவில்லை.



படம் 21.4 கபீர் நெசவு வேலை செய்வதைப்போன்ற ஒரு ஓவியம்

கபீரின் போதனைகள், முக்கியமாக மதச்சம்பந்தமானவையாகும். இவை இந்து முஸ்லீம் மதத்தை ஒன்று சேர்க்கும் நிலையில் அமைந்திருந்தன. இவர் பூஜாரி, பூசை செய்வதை எதிர்த்தார். இவர் எழுதிய கவிதைகள் யாவும் ஏழை எளிய மக்களுக்கு புரியும் நிலையில் அமைந்திருந்தன. முக்கியமான இந்திய நடைமுறை மொழியில் எழுதியிருந்தார்.

பக்தி இருந்தால் முக்தி அடையலாம் என்பது இவரின் கருத்தாகும். இவர் எழுதிய ஒரு பாடலின் கருத்து இவ்வாறு உள்ளன.

கபீரின் கவிதைத் தொகுப்பு :

அனைத்து ஜீவிகளிடம் உள்ள அல்லா ராம்
உன் ஊழியர்களான எங்கள் மீது கருணை
காட்டுவீராக - கடவுளே
பூமிமீது தலையை ஏன் அடித்துக் கொள்கிறாய்?
உடலைக்கொண்டு நீரில் ஏன் நீராடுகிறாய்?
நீ-மக்களை மரணமடைய செய்கிறாய்,
ஆனால் வரமளிப்பவர் என்று கூறுகிறாய்
24முறை பிராமணர்கள் உன் குற்றங்களை மூடி மறைக்கிறாய் ஏகாதசி விரதம் இருக்கிறார்கள்
காஜீ ரம்லான் மாதத்தில் நோன்பு இருக்கிறான்.
எனக்கு தெரியாமல் கேட்கிறேன்
மிஞ்சிய பதினோறு மாதத்தை
பின் தள்ளி விடுகிறார் எதற்காக?
பக்தியின் படிப்பினை தெரிந்துக் கொள்ள
பனிரெண்டாம் மாசமா?
ஹரி கிழக்கில் இருக்கிறார் என்கிறார்கள்
அல்லா மேற்கில் இருக்கிறார் என்கிறார்கள்
இதை உன் மனதில் தேடிப்பார் அவன் எங்கு இருக்கிறான் என்று
உன் மனதிற்கு அப்பால் உள்ள மனதில்
இருப்பான் ரஹீம்-ராமன்

**பாபா குருநானக் :**

நமக்கு கபீரைவிட குருநானக் குறித்து (1469-1539) அதிகமாக தெரியும். இவர் தல்வண்டி (பாகிஸ்தானில் உள்ள நன்கானா சாஹிப் பகுதியில்) பிறந்தார். இவர் பல இடங்களுக்கு சென்று பக்தி வழியை பரப்பினார். இவர் கர்தர்பூரில் ஒரு மையத்தை (டேரா பாபா நானக் - ராவி நதிக் கரையில்) அமைத்தார் மதத்தின் மீது உள்ள நம்பிக்கையாலும், குலம், ஆண், பெண் வேறுபாடுகள் இன்றி அவருடைய சீடர்கள் ஒரே சமையலறையில் சமைத்து உண்டனர்.



படம் 21.5 பாபா குருநானக் சிறுவயதில் துறவிகளுடன் உரையாடுதல்

இவரின் கொள்கைபடி சமத்துவ உணவு உண்டு அனைவரும் மகிழவேண்டும் எனக்கூறினார். இதனால் இவர் ஆரம்பித்த நிலையத்திற்கு தர்மசாலை என பெயர் வந்தது. குருநானக்கின் சீடர்களின் எண்ணிக்கை 16ஆம் நூற்றாண்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இவர் அமைத்த நிலையத்தில் அனைத்து குலத்தவரும் பங்கு பெற்றிருந்தனர். இவர்களில் வணிகர்கள், விவசாயிகள் கைத்தொழில் புரிபவர்கள் மிக அதிகம். இதற்கு காரணம் குருநானக் தன் சீடர்கள் அவசியம் குடும்பத்தினராக இருக்க வேண்டும் என கட்டுப்பாடு விதித்தார். மற்றும் இவர்கள் குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆனதால், நன்கொடைகள் கூட மிக அதிக அளவில் வசூலாகியது.

குருநானக் முதலிலிருந்தே எதையும் சாதிக்க முடியும் என கூறியதால், மக்களின் விருப்பங்களை கூட அறிய வாய்ப்பு ஏற்பட்டது. மக்கள் மோட்சம் அடைய, நிறம், ஜாதி, மதம், ஆண்,பெண் என்ற பேறுபாடு இல்லாமல் செயல்பட்டால் வாய்ப்பு உண்டு எனக்கூறினார். அனைவருக்கும் சமுகத்தின் மீது நிலையான நம்பிக்கை வேண்டும். சரியான வழிபாடு, மற்றவர் நலன், சுத்தமான நடத்தை இவை மூன்றும் ஒவ்வொருவரிடம் இருந்தால் பக்தி மூலம் மோட்சம் அடையலாம், எனக் கூறினார்.

இதன்படி முறையான நம்பிக்கை, ஆராதனை, நேர்மை அடங்கிய வாழ்க்கை அவசியம் என்பது இவரின் கருத்தாகும். அனைவரும் சமம் என்பதன் கருத்தை குருநானக் மிக அழுத்தமாக விளக்கினர். குருநானக்கின் காலத்திற்கும் கபீர், ரவிதாஸ் தாது போன்றவர்களின் கருத்துக்கும் சில வேறுபாடுகள் உள்ளன என்று விவரிக்கிறது.

**முக்கிய சொற்கள் :**

1. *அத்வைதம்*
2. மோட்சம்
3. *ஆழ்வார்கள்*
4. *நாயன்மார்கள்*
5. *பக்தி*
6. *பக்திப்பாடல்*
7. *யோகாசனங்கள்*
8. அபாங்

**செயல் திட்டம் :**

1. உன் ஊருக்கு அருகாமையில் ஏதாவது தர்கா, குருத்துவார், பக்திபழக்கமான சாதுக்கள், தொடர்புடைய கோவில்கள் உள்ளதா என தெரிந்துக் கொள்? இதில் ஏதாவது ஒரு இடத்திற்கு சென்று அங்கு என்ன நடக்கிறது என விவரி.
2. இப்பாடத்தில் உள்ள கவிஞர்கள் மற்றும் மத குருமார்களின் விவரங்களை சேகரித்து தெரிந்துக் கொள்ளுங்கள். பக்திபாடல்களை எழுதியவர்கள் குறித்து தெரிந்துக் கொள்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பண்டிதர்கள், சித்தர்கள் மற்றும் யோகிகளின் பழக்க வழக்கங்களை விவரி.(AS1)
2. கபீர் கூறிய முக்கிய கருத்துக்கள் யாவை? இதை எவ்வாறு கூறினார்.(AS1)
3. சுபீர்களின் முக்கியமான நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் என்ன?(AS1)
4. மதங்களில் உள்ள பல கடுமையான சடங்குகளை ஆசிரியர்கள் எதிர்கின்றனர் ஏன்?(AS1)
5. பாபா, குரு நானக்கின் முக்கியமான போதனைகள் யாவை?(AS1)
6. குலம் குறித்து வீரசைவர்கள், மஹாராஷ்ர சாதுக்களிடையே உள்ள கருத்தை விவாதிக்கவும்.(AS1)
7. சாதாரண மக்கள் மீராபாயை நினைவில் வைத்துக் கொள்வர். ஏன்?(AS6)
8. பக்கம் 194ல் உள்ள கபீரின் கவிதைத் தொகுப்பு என்னும் தலைப்பில் உள்ள பத்தியை படித்து அது குறித்து உன் கருத்தை தெரிவி.(AS2)
9. உங்கள் பகுதி மக்களால் கொண்டாடப்படும் ஏதேனும் ஒரு பண்டிகையை குறித்து எழுது.(AS6)


SCERT TELANGANA

பாடம் 22

# அரசர்களும் கட்டிடங்களும்

படம் 24.1ல் குதுப்மினார் கோபுரத்தின் முதல் அடுக்கு காட்டப்பட்டுள்ளது. இதனை குத்புதீன் ஐபக் 1199-ஆம் ஆண்டில் கட்டினார். அடுக்கினில் அமைந்துள்ள சிறு வடிவங்களையும் வடிவியல் அமைப்புகளையும் கவனியுங்கள். அடுக்கினில் அமைந்துள்ள இருவகை கல்வெட்டு அமைப்புகளை கவனித்தீர்களா? அவைகளெல்லாம் அரேபிய வடிவமைப்புகள். மேல்பாகம் கோணவடிவில் வளைந்துள்ளது. அதுபோன்று அமைப்புகளை மேல்புறங்களில் அமைப்பது சிறந்தது. திறமை வாய்ந்த வல்லுநர்களால் மட்டுமே இவ்வாறு அமைக்க முடியும். 800 வருடங்களுக்கு முன்பு கற்களால் அல்லது செங்கற்களால் வடிவமைக்கப்பெற்ற கட்டிடங்களை நினைவுக்கூறுங்கள். 13-ம் நூற்றாண்டின் வல்லுநர்களின் நோக்கம் குதுப்மினார் மீது எவ்விதம் இருந்திருக்கும்.

8 மற்றும் 18-ம் நூற்றாண்டில் மன்னர்களும், அவர்களின் அதிகாரிகளும் இருவகையான வடிவமைப்புகளை அமைத்துள்ளனர். அவற்றுள் கோட்டைகளும், அரண்மனைகளும் மற்றும் நினைவிடங்களும் முதல் வகையை சார்ந்தவை. பாதுகாப்பான, பாதுகாப்பு தரக்கூடிய பகுதிகள் மற்றும் கோவில்கள், மசூதிகள், கிணறுகள் நீர் தேக்கங்கள், அங்காடிகள் இரண்டாம் வகையை சார்ந்தவை. மன்னர்கள் மக்களின் பாதுகாப்பு வேண்டியும், அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறும் ஆண்டதினால் அவர்களின் நம்பிக்கையை பெற்றனர். வடிவமைப்பு செயல்பாடுகள் கற்றவர்களாலும் குறிப்பாக வணிகர்களாலும் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் கோவில்கள், மசூதிகள் மற்றும் கிணறுகளை அமைத்தனர். இவ்வாறு உள்நாட்டு கலைகள், வணிகர்களின் கட்டிடங்கள் அனைத்தும் 18-ம் நூற்றாண்டின் கலைகளை சார்ந்தவையே சிறந்த விளங்குகின்றன.




படம் 22.1

*படம் 24.1 குதுப்மினார் ஐந்து அடுக்குகளைக் கொண்டுள்ளது. நீங்கள் பார்ப்பவை யாவும் அதன் முதல் அடுக்கை சார்ந்தவையே. அதன் முதல் தளம் குதுப்தின் ஐபக் மன்னாலும் மற்றவை இல்டுமிசாலும் 1229-ல் கட்டப்பட்டவை. அதன் பிறகு இடிகளாலும், நில அதிர்வாலும் இக்கோபுரம் சேதமுற்றது. அதன் பிறகு பதவியேற்ற மன்னர்கள் இதை சீரமைத்தனர்.*

SCERT TELANGANA



படம் : 22.2$a$ டில்லியில் உள்ள குவாத்-அல்-இஸ்லாம் மசூதியின் முன் வடிவம்



படம் : 22.2$b$ வளைவு நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட நுழைவு வாயில்

**பொறியியல் திறன்களும் வடிவமைப்புகளும் :**

கட்டிட அமைப்புகள் கட்டுமான பணிகளில் பயன்படுத்திய நுணுக்கங்களை எடுத்துக்காட்டுகின்றன. கூரை வடிவை எடுத்துக்காட்டாக கொள்வோம். நாம் இது போன்ற அமைப்பை மரத்தாங்கிகளாலும் அல்லது கற்பலகைகளாலும் நான்கு சுவர்களிடையே உருவாக்கலாம். ஆனால் பெரும் கட்டிட அமைப்பை அறைகளைக் கொண்டு வடிவமைப்பது கடினமான செயலாகும். இதற்கு நுட்பத்துடன் கூடிய அறிவுத் திறன் அவசியம். 7ஆம் மற்றும் 10ஆம் நூற்றாண்டின் இடையே கலை வல்லுநர்கள் கட்டிடங்களை அதிகமான அறைகளுடன், சாளரங்களுடன் வடிவமைத்தனர். கூரைகள், கதவுகள் மற்றும் சாளரங்கள் எல்லாம் உயர்ந்த தூண்கள் மீது அமைக்கப்பட்டுள்ளன.

8 முதல் 13-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே கட்டப்பட்ட கோயில்கள், மசூதிகள், சமாதிகள் அனைத்தும் வளைந்த, உயர்ந்த கோபுரங்களுடன் கூடியதாக இருந்தது.

* உங்கள் அருகாமையில் கட்டப்பட்டுள்ள பழைய கோயில்களையும், மசூதிகளையும் உற்றுநோக்குங்கள். மற்றும் அவை கட்டப்பட்ட வளைவான அமைப்புகளையும் பாருங்கள்.

* இது போன்ற கூரைகள் தூண்களுடன் திறந்த வெளியில் அமைக்கமுடியாது. ஏன் அமைக்கமுடியாது என்று உங்களால் கூற முடியுமா?

**11-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் கோயில் கட்டமைப்பு :**

கி.பி.999ல் தங்கதேவன் மன்னனால் கட்டப்பட்ட காந்தாரிய மகாதேவர் கோயில் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.


படம் 24.3$b$ ல் காட்டப்பட்டுள்ள கோவில் கட்டமைப்பு சந்தோர் வம்சத்தினருடையது. கலைகளுடன் கூடிய நுழைவுவாயில், ஒரு முகவாயில் மற்றும் பெரும் மண்டபம் நோக்கி அமைக்கப்பட்டு, அங்கே நாட்டியங்கள் நடத்தப்பட்டன. முக்கிய கடவுளின் சிலை மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது மத சடங்குகள் செய்வதற்காக மன்னர்கள் அவரது



படம் : 22.3$a$

கஜுராஹோவில் உள்ள கந்தரீய மகாதேவர் என்னும் சிவன் கோவில்

SCERT TELANGANA




படம் : 22.3b

கந்தரீய மகாதேவர் என்னும் சிவன் கோவி-ன் தரைதிட்டம்

குடும்பத்தினர் மற்றும் மத சான்றோர்களுக்கு மட்டுமே கட்டப்பட்டது.

கஜுராஹோ கட்டிடங்களில் அரச பரம்பரையினர்க்கான கோயில்கள் உள்ளன. அப்பகுதிகளில் சாதாரண மக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அக் கோயில்கள் சிற்பக்கலைகளோடு அலங்கரிக்கப் பட்டுள்ளன.



படம் 22.5a இந்த வளைவின் மத்தியில் உள்ள முக்கிய கற்கள் மற்ற கற்களின் எடையை அடிபாகத்தினின்று தாங்கி நிற்கிறது.



படம் 22.5b அலாய் தர் வாசாவிலிருந்து (14-ம் நூற்றாண்டு குவாத்-அல்-இஸ்லாம் மசூதி டெல்லி

தஞ்சாவூரில் உள்ள பிரகதீஸ்வரர் கோயில் இக்காலத்தை சார்ந்த கோயில்களில் மிக உயர்ந்த கோபுரம் கொண்டுள்ளது. இது போன்ற கோபுரம் அக்காலத்திலே எந்த வகையான எடைத்தூக்கி இயந்திரங்களும் இன்றி கட்டப்பட்டுள்ளது. 90டன் எடை கொண்ட கல்தூண்கள், கோபுர உச்சிக்கு மனிதர்களாலும் எடுத்துச் செல்லப்பட்டு கட்டப்பட்டது அரிதான ஒன்று. ஆதலால் கட்டிட வல்லுநர்கள் கோபுர உச்சி நோக்கி ஒரு சாய்வகத்தை உருவாக்கினர். பெரும் தூண்களை உருளைகள் மீது வைத்து உச்சிக்கு நகர்த்தினர். அவ்வழி உருவாக்க சுமார் 4கிலோமீட்டர் தூரம் வரை அமைக்கப்பட்டதால் அது செங்குத்தாக இல்லாது அமைந்திருந்தது. இச்சாய்வகம் கோயில் அமைக்கப்பட்ட பிறகு அகற்றப்பட்டது.



படம் : 22.4 பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர்

**புதுவகை கட்டிட அமைப்பு**

12ம் நூற்றாண்டில் இரு வகையான தொழில்நுட்ப மற்றும் நுணுக்கங்கள் கூடிய வளர்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை (a) பெரும் கட்டிட கதவுகள் மற்றும் பெரிய அளவு ஜன்னல்கள் மீது சில நேரங்களில் எடையேற்ற வளைவுகள் அமைக்கப்பட்டன. கூரைகள் அமைக்கக் கூட இம்முறை பயன்படுத்தப்பட்டது. இவையே தூண்களாகவும் சிகரங்களாகவும் மாற்றப்பட்டன. இதனை வளைவு சாரல் என்பர்.

SCERT TELANGANA

* 24.2a, 24.2b, 24.5a, 24.5b உடன் மேற்கண்ட படங்களை ஒப்பிட்டு பாருங்கள்.

(2) சுண்ணாம்பு கற்கள் கட்டிட அமைப்புகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. இது மிக உயர்வகை கலவையாகும். இவை கூழாங்கற்களோடு கலக்கப்பட்டு கடினமான அமைப்பாக உருவானது. இதனால் கட்டிட வேலைகள் மிகவும் எளிதாகவும், துரிதமாகவும் நடந்தன. வளைவுகள், சிகரங்கள் மற்றும் சுண்ணாம்புக் கற்கள் கட்டிடங்களில் கி.பி.1190ஆம் ஆண்டு பிற்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. படம் 24.6ஐ சற்று உற்று நோக்குங்கள்.

* கூலியாட்கள் என்ன செய்கின்றனர்? காட்டப்பட்ட பொருட்கள் மற்றும் கற்கள் கொண்டு செல்லப்படும் முறை பற்றி விவரிக்கவும்.



*படம் : 22.6 டில்லியில் செங்கோட்டையில் நீர் வழி கதவு கட்டப்படுவதை காட்டும் அக்பர் நாமா எனும் ஓவியத் தொகுப்பின் ஒன்று.*

* நவீன தொழில்நுட்பங்கள் மிக உயரிய கட்டிடங்கள் கட்ட பயன்படுகின்றது என நினைக்கின்றீர்களா?


**கோயில்கள் மசூதிகள் மற்றும் நீர்தேக்கங்களின் கட்டமைப்பு :**

கோவில்களும், மசூதிகளும் மிகவும் அலங்கரிக்கப்பட்டு கட்டப்பட்டன. அது மட்டுமின்றி அவை சக்தியையும், செல்வத்தையும் மற்றும் பக்தியையும் பரவச்செய்யும் இடங்களாக இருந்தன. எடுத்துக்காட்டாக ராஜராஜேஸ்வரர் கோவிலை எடுத்துக்கொள்வோம். ராஜராஜேஸ்வரர் என்னும் தெய்வத்தை வணங்க ராஜராஜ தேவரால் இக்கோயில் கட்டப்பட்டதாக ஒரு கல்வெட்டு எடுத்துரைக்கின்றது.

கவனித்தீர்களா! மன்னரின் பெயரும் கடவுளின் பெயரும் எவ்வளவு ஒத்துள்ளது என்று. மன்னரும் கடவுளின் பெயர் பெறுவதை பெரும்பாக்கியமாக நினைத்தார் மற்றும் கடவுள் போன்று தோற்றமளிக்கவும் நினைத்தார். மத சடங்குகள் மூலம் ஒரு கடவுள் (ராஜராஜதேவர்) இன்னொரு கடவுளை (ராஜராஜேஸ்வரர்) பெருமைக்குரியவராக்கினார்.

காகதீய தலைநகர் ஒரு கல்லு சுயம்பு சிவன் கோவிலை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டதென்பதை நினைவு கூறுங்கள். இது காகதீயர்களால் சுதந்திர அரசர்களாக உருவாகவும், ஆட்சிபுரியவும் கட்டப்பட்டது. பெரும்பாலான கோவில்களையும் மன்னர்களால் கட்டப்பட்டவையே. மற்ற சிறுதெய்வங்கள், தேவர், தேவியர் எல்லாம் அவர்களது கூட்டாளிகள் அமைச்சர்களால் நிறுவப்பட்டவையாகும். இதே தெய்வங்கள் அவர்களது ஆட்சியில் தெய்வ, நீதிநெறிகளை வெளிப்படுத்தியதால் அரச கோயில்களிலேயே அவற்றை நிறுவினர். மன்னர்கள், நிலச்சுவாந்தர்கள் ஆகியோர் கோவில்களுக்கு தேவையான நிலபுலன்கள் அணிகலன்களை தந்து உதவினர். ஆதலால் தெய்வ வழிபாடு பெரிய அளவில் செய்யமுடிந்தது.

TELANGANA




*படம் : 22.7 1650-1656 இடையே புதிய தலைநகரம் ஷாஜஹானபாத்தில் ஷாஜஹானால் கட்டப்பட்ட ஜாமி மசூதி*

கி.பி.1200-ம் காலகட்டத்தில் கோயில்களும் மற்ற அமைப்புகளும் முக்கிய பங்கு வகித்தன. ஏனென்றால் இவை கலைஞர்களுக்கும், நடன கலைஞர்களுக்கும், இசை மேதைகளுக்கும், மத சான்றோர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இருப்பிடமாக திகழ்ந்தது. அவர்கள் மக்களிடமிருந்து வரிகள் வசூலித்து வர்த்தகர்களுக்கு வட்டிக்கு பண உதவி செய்தனர். விழாக்கள் நடத்தினர் மற்றும் அங்காடிகள் அமைத்து வாங்குவோருக்கும், விற்போருக்கும் ஒன்றுகூடும் வாய்ப்பளித்தனர். இக்கோயில்கள் சுற்றி ஏராளமான சைவ, வைணவ மடங்கள் நிறுவப்பட்டன. இக்கோயில்களே அரசியல் மற்றும் பொருளாதார மையங்களாகவும் உருவாகின. மன்னர்களும், ஆட்சியாளர்களுக்கும் அவர்கள் கட்டிய கோவில்களிலேயே அவர்களது பதவிபிரமாண விழாக்களை நடத்தினர். மற்றும் அக்கோயில்களுக்கு ஏராளமான நன்கொடைகளை தந்து உதவினர்.

முஸ்லீம் சுல்தான்கள் மற்றும் பாதுஷாக்கள் தாங்கள் இறைவனின் அவதாரம் என கூறிக்கொள்ளவில்லை. ஆனால் பாரசீக வரலாறு, சுல்தானை இறைவனின் நிழலென வர்ணித்தது. டில்லி மசூதியில் உள்ள கல்வெட்டுகள் இறைவனே அலாவுதீனை அரசானாக நியமித்தாரெனவும் முற்காலத்தில் சிறந்த நீதிமான்களாக பெயர் பெற்ற மோசஸ் மற்றும் சாலமன் போன்றோர்க்கு இருந்த குணநலன்கள் இவர்களுக்கும் உள்ளதென பல இடர்பாடுகளில் உள்ள உலகத்தை அமைதியானதாக ஆக்கினர் எனக் கூறுகின்றன.

புதுவகை பேரரசுகள் ஏற்பட்டவாறே மன்னர்களும் அவர்கள் நீதி நெறிகளை ஆட்சியாளர்கள் மீது செயலாக்கினர். கோவில்கள் போன்ற தலங்களை கட்டியதால் அரசர்களும் அவர்களை கடவுளுடன் தொடர்பு கொள்வதை பெருமையாக நினைத்தனர். முக்கியமாக அரசியல் மாற்றத்தில் பெரும் பங்கு வகித்தனர். அரசர்களும், கற்றவர்கள் மற்றும் ஞானிகளுக்கு அடைக்கலம் அளித்தனர். மற்றும் அவர்கள் தலை நகரங்களை சிறந்த கலைக்கூடங்களாக உருவாக்கி புகழ்பெற முயற்சித்தனர்.

வானில் மழையில்லாத காலங்களில் கூட நீதிநெறியுடன் ஆண்ட அரசர்களின் ஆட்சிக்காலத்தை நிறைந்த காலம் என நினைத்தனர். அதே நேரத்தில் நீர் தேக்கங்கள், நீர்த்தொட்டிகள் மூலம் நீர் பெறச் செய்தது சால சிறந்த ஒன்று. சுல்தான் இல்துமிஷ் டெல்லி-இ-குன்னா-எனும் ஒரு பெரிய நீர் தேக்கத்தை கட்டியதால் உலக புகழ்பெற்றார். இதனை ஹாஜிசுல்தானி அல்லது மன்னரின் நீர்தேக்கம் என்பர்.

அரசர்கள் பொது மக்கள் நலனுக்காக அவ்வப்போது பெரிய மற்றும் சிறிய நீர்தேக்கங்களை கட்டினர்.



*படம் 22.8 : அமிர்தசரஸில் உள்ள ஹர்மந்திர்சாகிப் என்னும் பொற்கோவில்*

SCERT TELANGANA

* நீங்கள் கிராம சிறு தேவதைகளின் சிலைகள் குறித்து படித்தீர்களல்லவா, மற்றும் பெருங்கோவில்கள் மசூதிகள் குறித்தும் விவரமாக தெரிந்துக் கொண்டீர்கள். கிராமிய சிலைகள் கோயில்கள் ஆகியவற்றை மசூதிகளுடன் ஒப்பிடுகையில் ஏன் வேறுப்பட்டு இருந்தன?

**கோயில்கள் ஏன் அழிக்கப்பட்டன?**

அரசர்கள் தங்கள் அதிகாரம், செல்வாக்கு மற்றும் தெய்வீக தன்மையை வெளிபடுத்த கோயில்களைக் கட்டினர். அதே சமயம் மற்றொரு நாட்டு அரசன் இந்நாட்டின் மீது படையெடுக்கும் போது அவர்கள் கட்டிடங்கள் மீது குறிவைத்தது ஆச்சரியமானதல்ல. 9ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமார ஸ்ரீ வல்லபன் இலங்கையின் மீது படையெடுத்து சேனா-I(831-851) மன்னனை தோற்கடித்தான். இதனை புத்த மதகுரு மற்றும் வரலாற்று வல்லுநர் தம்மாகிட்டி என்பவர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்ம், "விலை மதிப்பானவற்றை கொள்ளையடித்தான். வைர மாளிகையின் பொன்னாலான புத்தர் சிலை மற்றும் பல்வேறு மடாலயங்களில் இருந்த பொற்சிலைகளையும் கொள்ளையடித்தான். சிங்கள மன்னருக்கு ஏற்பட்ட இந்த இழப்பை தீர்க்க, பிறகு ஆட்சிக்கு வந்த சேனா II அவனது அமைச்சர்களை பாண்டிய தலைநகர் மதுரை மீது படையெடுக்க தூண்டினான். புத்தர் வரலாற்று வல்லுநர் குறிப்பிடுவது என்னனென்றால் இந்த படையெடுப்பு புத்தரின் பொற்சிலைக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பை தேடித்தந்தது," என்றார்.

அவ்வாறே 11-ம் நூற்றாண்டிலும் சோழ மன்னன் ராஜேந்திரன்-I ஒரு சிவன் கோயிலைக் கட்டி அதனுள் அவனால் கொள்ளையடிக்கப்பட்ட விலையுயர்ந்த சிலைகளை வைத்தான். சாளுக்கியர்களின் சூர்ய பல்லக்கு வினாயகர் சிலை மற்றும் துர்கையின் ஏராளமான சிலைகள், கிழக்கு சாளுக்கியர்களின் நந்தி சிலை, பைரவ சிலை கலிங்கர்களின் பைரவி சிலை மற்றும் வங்களா பாலர்களின் காளிசிலை ஆகியனவும் கொள்ளையடிக்கப்பட்டதாகும். சுல்தான் கஜினி முகம்மது முதலாம் ராஜேந்திரனின் சமகாலத்தவர். அவரது படையெடுப்பின் போது அவனிடம் தோற்ற மன்னர்களின் கோயில்களை தாக்கி ஏராளமான சிலைகள், செல்வங்களை கொள்ளையடித்தான். இருந்தாலும் கஜினி அக்காலத்தில் மிகவும் முக்கியமான அரசன் அல்ல. ஆனால் கோயில்களை அழித்ததால், குறிப்பாக சோமநாத கோயிலில் கொள்ளையடித்தால் இஸ்லாமிய நாயகனாக தலையெடுக்க முயற்சி செய்தான்.

மத்திய காலத்தின் அரசியல் நிலையில் அரசர்கள் அவர்களது அரசியல் அதிகாரத்தை படைபலத்தால் தாக்கியும் மற்றும் கொள்ளையடித்தும் விளம்பரப்படுத்தினர்.

* முதலாம் ராஜேந்திரன் மற்றும் முகமது கஜினி ஆகியோரது அக்காலத்து நோக்கம் என்னவென்று நினைக்கிறீர்கள்? அவர்கள் இருவரும் எவ்வாறு வேறுபட்டுள்ளனர்?

**விஜயநகர அரசின் அரசியலமைப்பு :**

விஜய நகரம் ராயர் அரசர்களால் வளர்ச்சியடைந்தது. இது தென்னிந்திய அரசியல் தலைநகரமாக விளங்கியது. ஆதலால் அவர்களின் அனைத்து கட்டிடங்களும் தன்னாட்சி கலைக்கூடங்களாக பிரதிபலித்தன.



படம் 22.9 ஹம்பியிலுள்ள விருபாக்ஷா கோவில்

SCERT TELANGANA



படம் *22.10a* தாமரைக்கோயில்



படம் *22.10b* இராணியின் குளியல் குளம்

மற்றும் விட்டல சுவாமிக்காக பெரும் கோவில்களை தமிழக சோழ, பாண்டிய அரசர்களின் கட்டிட கலையை பின்பற்றி உருவாக்கினர். இவை விமானங்கள் மற்றும் கோபுரங்களை கொண்டிருந்தன. ராயர்கள் கோபுர கலைகளில் முக்கிய ஈடுபாடு கொண்டிருந்ததால் இதற்கு முன் இல்லாத வகையில் உயர்ந்தனவாக கட்டினர். இதன் முதல் நிலை கருஞ்சலவை கற்களால் அமைக்கப்பட்டு மேல் நிலைகள் செங்கற்கள் மற்றும் சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டிருந்தன. ராஜ கோபுரங்களை மிக உயர்வாக, கர்பகிருகங்கள் மீது உள்ள கோபுரங்ளை சிறியனவாக கட்டினர். ஏனென்றால் மிக தூரத்தில் இருந்து பார்ப்போருக்கு அங்கொரு கோவில் உள்ளதென தெரிந்துக் கொள்வதற்காக கட்டப்பட்டது. இவை அரச அதிகாரத்திற்கு ஊன்று கோளாக மட்டுமல்லாமல் தொழில்நுட்ப அளவிற்கு சான்றாக விளங்கின. சிறப்பு வாய்ந்த மற்ற கட்டிடங்களில் முக்கிய மண்டபங்களை, மைதானங்களை மிக உயரமான தூண்களுடன் கூடியுள்ளவாறு கர்ப கிரகநிலை சுற்றி கட்டப்பட்டன. விருபாக்ஷா கோவில் அமைப்பை பரிசீலிப்போம்.

விருபாக்ஷா கோவில் முன்னோரு காலத்தில் கட்டப்பட்டது. ஆனால், முதல் சிலை வைக்கப்பட்டது கி.பி. 9-10ம் நூற்றாண்டின் மத்தியில் என கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. விஜய நகர அரசு ஏற்பட்ட பிறகு இக்கோயில் விரிவாக்கிக் கட்டப்பட்டுள்ளது.

மூலவர் முன் அமைந்துள்ள மூல மண்டபம் கிருஷ்ண தேவராயரால் அவர் பதவியேற்பு விழாவினை ஒட்டி கட்டப்பட்டதென தெரிகிறது. இந்த மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பட்டு செதுக்கப்பட்ட தூண்களோடு கட்டப்பட்டள்ளது. கிழக்கு கோபுர அமைப்பு அவர்களின் கலை நயத்தை வெளிப்படுத்துகிறது. இவற்றை சுற்றி மற்ற கட்டிடங்களோடு மூல ஆலயம் மையப்பகுதிலேயே அமைக்கப்பட்டதென கூறலாம்.

இந்த கோயில்களின் பரந்த அறைகளை வெவ்வேறான நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தினார்கள். சில இடங்களில் உற்சவ மூர்த்தியை வைத்து இசை, நாட்டிய, நடனங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினர். சில இடங்களில் சுவாமி சிலைகளுக்கு திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளது. மற்ற மண்டபங்கள் தெய்வங்களின் மேன்மையை வெளிப்படுத்தினாலும் மூலவரைக் காட்டிலும் மாறுபட்டு இருந்தன.

விஜய நகர அரசர்கள் தங்கள் கோயில்களை தமிழக கோவில்களின் சாயலில் கட்டினர். அதுமட்டுமின்றி அவர்கள் மதசார்பற்ற கட்டிடங்களையும் கட்டினர். அவை யாவும் சுல்தானின் கலைகளை வெளிப்படுத்துகின்றன. புகழ்பெற்ற தாமரை மகால் (ஆங்கில பிரபுக்களால் பெயரிடப்பட்டது) மகாராணி குளியலறை மற்றும் யானை கல்வெட்டு போன்ற அனைத்தும் இவர்கள் கலைக்கு எடுத்துக்காட்டாகும். நீங்களும் இந்த வளைவுகள் மற்றும் குன்றுகளின் பயனை அறியலாம். இவை யாவும் சுண்ணாம்பு பூச்சால் பூசப்பட்டும் மற்றும் மலர்கள், பறவைகள் அலங்காரத்துடன் அமைக்கப்பட்டு உள்ளன.

SCERT TELANGANA

இந்த வகையான மாளிகைகளில் அரசர்கள், அதிகாரிகள் வாழ்ந்து அவர்களின் செல்வாக்கு மற்றும் அலங்கார அமைப்பை வெளிப்படுத்தினர். எதுவாகினும் இம் மாளிகைகள் யாவும் சுல்தானிய கட்டிட அமைப்பை சார்ந்தவகையானதாக இல்லை. அவர்கள் தென்னாட்டு சிற்பக்கலை அலங்காரங்களுடன், வளைவுகளுடன் மற்றும் குன்று அமைப்புடன் அமைந்தனர். இவ்வகையான தோற்றத்தை நாம் தாமரை மகாலில் காணலாம். இம்மாளிகையிலேயே அரசர்கள் தங்கள் கூட்டங்களை நடத்துவர்.



படம் 22.10c யானைகளை கட்டுமிடம்

விஜயநகர அரசர்களின் சிறந்த கட்டிடங்களில் மகாநவமி திப்பா என்பது ஒன்று. 11 ஆயிரம் சதுர பரப்பில் 55அடி கட்டிடத்தை விடப் பெரியது. இருநூறு ஆண்டு காலத்தில் இதன் உயரம் மூன்று மடங்கு உயர்த்தப்பட்டது. இந்த மேடையின் ஓரங்களில் சிறந்த சிற்ப வேலைபாடுகள் செய்யப்பட்டன. இதன் உச்சியில் எந்தவிதமான கட்டிடமும் அமைக்கப்படவில்லை. இந்த மேடையின் மீது மரத்தூண்களால் அமைக்கப்பட்ட பந்தல் ஒன்றுள்ளது. இந்த மேடையின் மீது விஜயநகர அரசர்கள் நவராத்திரி பூஜை மற்றும் தசரா பூஜைகளை நடத்தினர். இந்த பூஜையில் அவர்களின் தளபதிகள், அமைச்சர்கள். அவர்களது பரிசுத்தொகையை அன்பளிப்பாக அரசர்க்கும், வெளிநாட்டு தூதர்களுக்கும் மற்றும் இதர சுல்தானியர்களுக்கும் அளிப்பர்.

பேரரசுகளின் அரசர்களுடைய வேறுபட்ட கலைநயங்களையுடைய கட்டிடங்களைப் பற்றி உன் கருத்து என்ன?

**தோட்டங்கள், சமாதிகள் மற்றும் கோட்டைகள் :**

முகலாயர்கள் காலத்தில் சிற்பக்கலை மிகவும் புகழ்பெற்றிருந்தது. முகலாய அரசர்கள் இலக்கிய இசை, நாட்டிய சிற்பக்கலைகளில் தன்னார்வம் கொண்டிருந்தனர். பாபர் தனது சுயசரிதையில் தோட்டக்கலை வளர்ச்சி பற்றி விவரித்துள்ளார். பூங்காக்களை செவ்வக வடிவத்தில் செயற்கை கால்வாய் மூலமாக நான்கு பாகங்களாக பிரித்து அவற்றை சுற்றி தடுப்பு சுவர்கள் அமைக்க வேண்டுமென விவரித்துள்ளார்.

இவ்வகை பூங்காக்களை "சாகர்பாக்" என்பர். இவை நான்கு சமபாகங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அக்பரால் துவக்கப்பட்ட சில அழகிய தோட்டங்கள் காஷ்மீர், டெல்லி, ஆக்ராவில் உள்ளன. ஜஹாங்கீர், ஔரங்கசீப் ஆகியோரும் தோட்டங்களை உருவாக்கினர். (படம் 24.11)

அக்பர் காலத்தில் முக்கிய, புதிய சிற்பகலைகள் உருவாக்கப்பட்டன. அக்பரின் கட்டிடக்கலை நிபுணர்கள் சமாதிகளை, மத்திய ஆசிய மூதாதையர் தைமூரின் சமாதியை ஒத்து அமைத்தனர். முகலாயர்களின் கட்டிடங்களில் மத்திய கோபுர உருளை வடிவ கூரைகள் மற்றும் உயர் நுழைவாயில் முக்கிய பங்கு வகித்தது.




படம் : 22.10d மகாநவமி மேடை

SCERT TELANGANA

இவை ஹுமாயூன் சமாதியில் வெளிபடுகிறது. இது பெரும் பூங்காவின் மத்தியில் கட்டப்பட்டுள்ளது. மற்றும் எட்டு சொர்க்கம் அல்லது அஷ்ட பிஹிஷ்ட் எனும் அமைய வாசல் எட்டு பக்கங்களில் அறைகளை கொண்டிருந்தது. இந்த கட்டிடம் சிவப்பு சலவை கற்களால், வெள்ளை சலவை கற்களை ஓரங்களில் கொண்டிருந்தது.

ஹாஜஹான் காலத்தில் முகலாய கட்டிடக்கலை தொழில்நுட்ப அடிப்படையில் ஒன்று சேர்ந்த கலை வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டது. ஆக்ராவிலும் டில்லியிலும், இக்காலத்தில் கட்டிடக்கலை மிகவும் மேலோங்கி இருந்தது. பொது மக்களின்



*படம் : 22.11 1590 காலத்து பாபரின் ஓவியம், கண்காணிப்பாளர்கள் காபூலில் சாகர்பாக் யை உருவாக்கியது. பெரும்தோட்டம் பல வழிகளை கொண்டுள்ளதாக உருவாக்கப்பட்டதை கவனியுங்கள்.*


விழாக்கால மாளிகை, தனிப்பட்ட மாளிகைகள் மிக நுணுக்கத்துடன் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த மாளிகையை சிகில் சதுன் அல்லது 40கால் மண்டபம் எனவும் அழைப்பர். ஏனென்றால் இம் மாளிகை பெரும் வளாகத்தை கொண்டிருந்தது.

ஷாஜஹானின் பொது மக்கள் அவை மசூதியைப் போன்றே கட்டப்பட்டிருந்தது. அரச சிம்மாசனம் அமைந்த மேடை "கிப்லா" என அழைக்கப்பட்டது. முகமதியர்கள் தொழுகை நடத்தும், பொழுது பார்க்கும் திசை மெக்கா நோக்கி இருந்தது. ஏனென்றால் கிப்லாவும் அந்த திசையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. இது அரசன் மக்களின் பிரதிநிதியாக கடவுளால் அனுப்பப்பட்டவன் என வெளிப்படுத்துவதாக அமைக்கப்பட்டிருந்தது.

அரச நீதிக்கும் நீதிமன்றத்திற்கும் இடையேயான தொடர்பிற்கு ஷாஜஹானால் டெல்லியில் கட்டப்பட்ட செங்கோட்டை சான்றாக இருந்தது. மாளிகையில் சிம்மாசனத்தின் பின் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்று கிரேக்க கடவுளான ஆர்பியல் புல்லாங்குழல் வாசிப்பது போல் இருந்தது. ஆர்பியசின் இசை கொடூர விலங்குகளின் ஆவேசத்தை அமைதியாக்கும் வல்லமை பெற்றிருந்தது. ஷாஜஹானின் பொதுமக்கள் அவை கட்டப்பட்ட விதம், மன்னர் ஏழை பணக்காரரிடையே சமூக நீதியை காட்டுவதாக அமைந்துள்ளது.



*படம் 22.12 ஹீமாயூன் சமாதி, 1562-*



*படம் 22.14 ஆக்ராவில் நதிமுன் தோட்டத்தை வெளிப்படுத்தும் படம் ராஜ அதிகாரிகளின் மாளிகைகள், யமுனை நதிக்கரை ஓரங்களில் எவ்விதம் கட்டப்பட்டிருந்தது என்பதை கவனியுங்கள். தாஜ்மஹால் யமுனை நதியின் இடப்புறம் அமைந்துள்ளது.*



SCERT TELANGANA




படம் 22.14 ஆக்ராவில் தாஜ்மஹால்

ஷாஜஹானின் ஆரம்பகால ஆட்சியில், தலைநகரமான ஆக்ராவில் அரச குடும்பம், அமைச்சர்களின் குடும்பம், போன்றோரின் மாளிகைகள் யாவும் யமுனை நதிக்கரை யோரமாக கட்டப்பட்டது. இவை யாவும் பெரும்பூங்காக்கள் மத்தியில் அமையும் வண்ணம் கட்டப்பட்டிருந்தது. வரலாற்று ஆசிரியர்கள் பெரும் பூங்காக்களை நதியோர பூங்காக்களாக வர்ணித்துள்ளனர். மாளிகைகள் பெரும்பூங்காக்கள் மத்தியில் அல்லது நதியோர பூங்காக்கள் அருகிலும் அமைக்கப்பட்டிருந்தன.

உலக புகழ்பெற்ற தாஜ்மகாலை ஷாஜஹான் யமுனை நதியின் எதிரில் உள்ள பூங்காவில் கட்டினான். இங்கு நதியோரத்தில் உயரமான மேடை மீது வெள்ளை சலவை கற்களால் உருவாக்கப்பட்ட சமாதி உள்ளது. இது தான் இன்றைய உலகபுகழ்பெற்ற, உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் ஆகும். பெரும் பூங்கா அமைப்பு இதற்கு தெற்காக அமைந்தள்ளது. டெல்லியில் புதியதாக கட்டப்பட்ட ஷாஜஹானாபாத் நகரத்தில் கூட அரச மாளிகைகள் நதிக்கு முன்பாக கட்டப்பட்டுள்ளது.

ஷாஜஹானின் மூத்த மகனான தாராசுகோ போன்ற உயர்ந்த பதவியில் இருந்த அரச குடும்பத்தாருக்கு மட்டுமே நதி அருகாமையில் மாளிகை இருந்தது. மற்றவர்கள் எல்லாம் தங்களது வீடுகளை யமுனை நதிக்கு தொலைவிலுள்ள நகரங்களில் கட்டினர்.

* நீ ஒரு கட்டிட கலைவல்லுநர் என நினைக்கவும். நீ ஒரு 50 மீட்டர்கள் உயரத்தில் மூங்கிலால் கட்டப்பட்ட பலகை மீது நின்று வேலை செய்கிறாய். நீ ஒரு கல்வெட்டை குதுப்மினாரின் முதல் மாடியில் வைக்க வேண்டும். எவ்வாறு வைப்பாய்?



படம் : 22.15 ஜோத்பாய் அரண்மனை, பதேபூர்சிக்ரி தூண்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது குஜராத்தி கட்டிக்கலையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

முகலாயர்களின் ஆட்சிக் காலத்திலேயே, கோல்கொண்டா ஆட்சியாளர்கள் (ஐதராபாத்) விரிவான முறையில் கட்டிடங்களை அமைப்பதில் ஈடுபட்டிருந்தன. ஹுசேன் சாகர் ஏரி, கோல்கொண்டா கோட்டை கட்டுதல், பெரும் எண்ணிக்கையிலான நீர்வழிகள் மற்றும் நீரூற்றுகள் கொண்ட தோட்டங்கள் மற்றும் தங்களுக்கான கல்லறைகள் அமைத்து கொண்டதும் அவற்றில் அடங்கும் புகழ்பெற்ற





SCERT TELANGANA


சார்மினார் மற்றும் மெக்கா மசூதி அவர்கள் காலத்தில் கட்டப்பட்டன. அவர்கள் தங்கள் கட்டுமானங்களில் பெர்சியன், முகலாய மற்றும் தக்கான கட்டிட கலைகளை கலந்து பின்பற்றினர்.



படம் 22.16 குதுப்ஷா சமாதி



படம் 22.16a ஹயத் பக்ஷி பெக்வீர் சமாதி



படம் 22.16 b குதுப்ஷா சமாதியிலுள்ள கட்டிடவாயில்கள்

## முக்கிய சொற்கள்

1. கல்வெட்டுகள்
2. நினைவு கட்டிடங்கள்
3. அரசவம்சம்
4. கட்டிடக்கலை
5. பதவியேற்பு விழா

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வளைவற்ற கட்டிடகலை வில்வளைவு கொண்ட கட்டிட கலையோடு ஒப்பிடும்போது எவ்வாறு வேறுபட்டது?($AS_1$)
2. சிகரம் என்பது யாது?($AS_1$)
3. முகலாயரின் சாகர்பாக் தோட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை? ($AS_1$)
4. ஒரு மன்னனின் முக்கியத்துவத்தை கோவில்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன?($AS_2$)
5. பக்கம் 198ல் உள்ள முன்னுரையின் இரண்டாம் பத்தியை படித்து அது குறித்து உன் கருத்தை எழுதுக.($AS_2$)
6. உங்கள் கிராமம் (அ) பட்டினத்தில் ஏதேனும் ஒரு சிலை அல்லது நினைவுச் சின்னம் உள்ளதா? அது அவ்விடத்தில் ஏன் அமைக்கப்பட்டது? அதன் நோக்கம் யாது?($AS_6$)
7. உங்கள் பகுதிக்கு அருகிலுள்ள ஏதேனும் ஒரு பூங்கா அல்லது தோட்டத்திற்கு சென்று பார்த்திடு. அது குறித்து வர்ணித்திடு. அது எவ்வகையில் முகலாய தோட்டங்களுடன் ஒத்துள்ளது அல்லது வேறுபட்டுள்ளது.($AS_1$)
8. கீழ்காணபவற்றை இந்திய வரைபடத்தில் குறித்திடு ($AS_5$)

   (a) டில்லி (b) ஆக்ரா (c) அமிர்தசரஸ் (d) தஞ்சாபூர் (d) ஹம்பி (e) யமுனை நதி

SCERT TELANGANA

## கல்வித்தரங்கள்

வகுப்பறைச் செயல் :- வகுப்பறையில் மாணவர்கள் பாடக்கருத்தை புரிந்துகொள்ளச் செய்யவேண்டும். பகுத்தல், காரணம் விளைவு அறிதல், மனவரைபடம், உற்றுநோக்கல், சிந்தனை, கற்பனை, கலந்தாய்தல் ஆகியவற்றை பாடக்கருத்துடன் இணைத்து கற்பிக்கவேண்டும். முக்கிய வார்த்தைகளை அமைக்க பாடக்கருத்தை விவரிக்கவேண்டும்.

1) பாடக்கருத்தை புரிந்துகொள்ள :- கலந்துரையாடல், உற்றுநோக்கல் ஆகியவற்றின் மூலம் பாடக்கருத்தை புரிந்துகொள்ளச் செய்தல்

2) கற்றல், புரிந்துகொள்ளல் மற்றும் பாடக்கருத்தை ஆய்தல் :- விவசாயிகள், தொழிலாளர்கள் பற்றிய கருத்துக்களை, மாணவர்கள் கற்று தங்களின் முக்கிய தேவைகளை பூர்த்திசெய்தல்.

3) தகவல் திறன்கள் :- சமூக அறிவியலின் கற்பித்தல் பாடநூல்கள் மட்டுமே அனைத்து கருத்தையும் வழங்காது. நகர்புறங்களில் வாழும் மாணவர்கள் மக்கள் பிரதிநிதிகளைப்பற்றியும், கிராமப்புற மாணவர்கள் ஏரி, குளம், காடு, மலை ஆகியவற்றைப் பற்றியும் விவரிப்பர். பாடநூலில் இல்லாவிடினும், மாணவர்கள் சார்ந்த பகுதிகளுக்கு ஏற்ப செயல் திட்டங்களை வழங்கவேண்டும். அவர்களின் பகுதிகளுக்கு ஏற்ப ஓவியம் தீட்டும் செல்களையும் வழங்கவேண்டும். மேலும், வீடுகளின் வகைகள், பயிர் வகைகள், தொழில்கள் ஆகியவற்றையும் பற்றியும் செயல்களை வழங்கவேண்டும்.

4) ஆய்வுக்கருத்திற்கு காரண விளக்கம் அளித்தல் :- மாணவர் தங்கள் பகுதிகளில் பல்வேறு தொழில் செய்யும் மக்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை விவரிக்கவேண்டும். காரணம் அறிதலுக்கு ஒரு காரணம் இருக்காது. பல காரணங்களை வழங்கவேண்டும்.

5) வரைபடம் மற்றும் ஓவியம் வரைதல்/படித்தல் திறங்கள் :- பாடநூலில் பல்வேறு படங்களும், வரைப்படங்களும் வழங்கப்பட்டுள்ளன. வரைபடத்தில் முக்கிய இடங்களை குறிக்கும் திறனை வளர்க்க வேண்டும். வகுப்பறையின் உயரம், நீளம், பள்ளிக்கும் வீட்டுக்கும் உள்ள தூரம் ஆகியவற்றை குறிக்கும் திறனை வளர்க்க வேண்டும். கட்டிடக்கலையைப் பற்றி விளக்கும் திறனும் அதிகரிக்க வேண்டும்.


6) பாராட்டுதல் :- நமது நாட்டில் மொழி, கலாச்சாரம், ஜாதி, மதம், பாலினம் என பல்வேறு வேற்றுமைகள் உள்ளன. இத்தனை வேற்றுமைகள் இருப்பினும் நாம் அனைவரும் இந்தியரே எனும் எண்ணத்துடன் மாணவர்கள், வாழ சமூக அறிவியல் ஆசிரியர் ஆறு மற்றும் ஏழாம் வகுப்பின் துவக்கம் முதல் இதை வெளிப்படுத்த வேண்டும்.

SCERT TELANGANA

# Appendix


This additional Information and the maps are to be used wherever necessary.

**World Political Map**





SCERT TELANGANA

# India Physical Map




SCERT TELANGANA




SCERT TELANGANA

# World Outline Map



SCERT TELANGANA

## Telangana Political Map



SCERT TELANGANA

# Telangana State Symbols

| Sl. No. | State Symbol | Common Name | Telugu Name |
|---|---|---|---|
| 1. | State Animal | Spotted Deer | Jinka |
| 2. | State Bird | Indian Roller | Pala Pitta |
| 3. | State Tree | Jammi Chettu | Jammi |
| 4. | State Flower | Tangedu | Tangedu |


State Animal


State Bird


State Tree


State Flower

State Logo

# National Symbols of India

**National Flag :** Designed by Sri Pingali Venkaiah



**National Symbol :** Lion Capital - Adopted from the Emperor Asoka's dharma stupa established at Saranath.



**National Tree :** Banyan tree

**National Flower :** Lotus



**National Language :** Hindi






**National Fruit :** Mango



**National River :** Ganges

**National Animal :** Royal Bengal Tiger



**National Anthem :** Written by Sri Ravindranath Tagore.

Jana gana mana...





**National Bird :** Peacock




**National Song :** Vande Mataram Written by Sri Bamkim Chandra Chaterji

**National Aquatic Animal :** Dolphin



**National Calendar :** Based on Shaka Samvatsara ( Chaitra masam to Phalguna masam). We follow the Gregorian Calendar officially.

Indian National Calendar (Saka calendar)

| S. No. | Month | Length | Start date (Gregorian calendar) | Ritu | Season |
|---|---|---|---|---|---|
| 1 | Chaitra | 30/31 | March 22 | Vasanta | Spring |
| 2 | Vaishākh | 31 | April 21 | | |
| 3 | Jyaishtha | 31 | May 22 | Grishma | Summer |
| 4 | Āshādha | 31 | June 22 | | |
| 5 | Shrāvana | 31 | July 23 | Varsha | Monsoon |
| 6 | Bhādrapad | 31 | August 23 | | |
| 7 | Āshwin | 30 | September 23 | Sharat | Autumn |
| 8 | Kārtik | 30 | October 23 | | |
| 9 | Agrahayana | 30 | November 22 | Hemant | Winter |
| 10 | Paush | 30 | December 22 | | |
| 11 | Māgh | 30 | January 21 | Sishira | Cold & dewy season |
| 12 | Phālgun | 30 | February 20 | | |



**National Heritage Animal :** Elephant

**Indian Standard Time (IST) :** Based on 82 1/2 degrees East Longitude. Our local time is 5hrs.30min. ahead of Greenwich mean time(GMT).




SCERT TELANGANA

## Timeline of Satavahana Kings
**(230 B.C. - 225 A.D.)**

| | |
|---|---|
| Srimukha | 271 B.C. - 248 B.C. |
| Krishna | 248 B.C. - 230 B.C. |
| Satakarni - I | 230 B.C. - 220 B.C. |
| Satakarni - II | 184 B.C. - 128 B.C. |
| Hala | 42 A.D. - 51 A.D. |
| Goutamiputra Satakarni | 62 A.D. - 86 A.D. |
| Vasishtaputra Pulomavi | 86 A.D. - 114 A.D. |
| Sivasri Satakarni | 114 A.D. - 128 A.D. |
| Yagyasri Satakarni | 128 A.D. - 157 A.D. |

## Timeline of Chola Kings
**(900 A.D. - 1279 A.D.)**

| | |
|---|---|
| Vijayalaya | 850 A.D. - 871 A.D. |
| Aditya Chola | 871 A.D. - 905 A.D. |
| Parantaka - I | 905 A.D. - 907 A.D. |
| Rajaraja - I | 985 A.D. - 1016 A.D. |
| Rajaraja Chola | 1016 A.D. - 1044 A.D. |
| Rajadhi Raja | 1044 A.D. - 1052 A.D. |
| Veera Rajendra | 1064 A.D. - 1069 A.D. |
| Kuluthonga Chola | 1070 A.D. - 1121 A.D. |
| Rajaraja - II | 1173 A.D. - 1178 A.D. |
| Kuluthonga Chola -III | 1178 A.D. - 1219 A.D. |
| Rajendra - III | 1256 A.D. - 1270 A.D. |

## Telangana Fact Sheet

- Country : India
- Region : South India
- Formed on : June 2nd, 2014
- Capital : Hyderabad
- No. of Districts : 10 (Mahabubnagar, Rangareddy, Hyderabad, Nalgonda, Medak, Warangal, Nizamabad, Karim-nagar, Khammam, Adilabad)
- Official Languages : Telugu, Urdu
- No.of Assembly seats : 119
- No.of Council seats : 40
- No.of Lok sabha seats : 17
- No.of Rajya sabha seats : 7
- Important Rivers : Godavari, Krishna, Manjira, Musi
- No. of Zilla Praja Parishats : 9
- No. of Mandal Praja Parishats : 443
- No. of Municipal Corporations : 6
- No. of Municipalities : 38
- No. of Revenue Mandals : 464
- No. of Gram Panchayats : 8778
- Total Population (as per 2011 census) : 351.94 Lakhs
- No. of Males : 177.04 Lakhs
- No. of Females : 174.90 Lakhs
- Sex Ratio (No. of Females per 1000 Males) : 988
- Density of Population (per Sq.k.m.) : 307
- Literacy Rate : 66.46%
- Male Literacy Rate : 74.95%
- Female Literacy Rate : 57.92%

SCERT TELANGANA

# LEARNING OUTCOMES

**SOCIAL STUDIES**
**CLASS 7**

## The learner....

- Explains preventive actions to be undertaken in the event of disasters like floods and explains the reasons of the disasters.
- Explains the military strategies and administration of Kakatiyas, Mughals and Vijayanagara Kings.
- Describes distinctive developments in style and technology, uses for construction of temples, tombs and Mosques.
- Analyses the reasons for emergence of various religious movements.
- Locates their constituency in the state map.
- Classifies the maps and explains the uses of it.
- Makes a table showing the particulars of differences between the people living in high lands and shallow lands.
- Explains Hydrocycle (water cycle)
- Reflects on living conditions of Fishermen.
- Collects the details of European rivers and makes a table.
- Locates the African desert in Africa Map and explains about it.
- Prepares a pamphlet for Child Llabour system.
- Analyses the changes that came in production due to industrialisation.
- Analyses the reasons for 1857 revolt.
- Explains the process of making laws in Assembly.
- Explains the conditions of labourers working in Brick kilns.
- Reflects on demolition of temples.

SCERT TELANGANA